கழக வெளியீடு : கஙஙரு

மனோன்மணீயம்

[நவீன நாடகம்]

சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினராயும்
திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில்
அறிவுநூற்புலவராயு மிருந்து காலஞ்சென்ற
ராய்பகதூர்

P. சுந்தரம்பிள்ளை யவர்கள்

M.A., F.M.U., F.R.H.S., M.R.A.S.

இயற்றியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

Sixth Edition: May, 1948.
Reprints: June, 1950., July, 1954., March, 1956.

MANONMANEEYAM

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1.—C. 1250.

பதிப்புரை

"மனோன்மணீயம்" என்னும் தமிழ் நாடக நூல் திருவாளர் P. சுந்தரம் பிள்ளை, எம்.ஏ. அவர்களால் 1891-ஆம் ஆண்டு (கொல்லம் ஆண்டு 1066) முதற் பதிப்பாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. அது வெளியிடப்பட்ட பின் அந்நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் எப். ஏ. வகுப்புகட்குச் சில ஆண்டுகளிற் பாடமாக அமைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அது பி. ஏ. வகுப்புகட்குப் பாடமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்நூல் மிக்க சொற்சுவையும் பொருட்செறிவும் வாய்ந்துள்ளது. அதன் செந்தமிழ் நடை யாற்றொழுக்குப்போல் இயற்கை நலமும் இன்னோசையும் வாய்ந்து கற்பவர் உள்ளத்தைக் கவருந்தன்மையது. அதிற் காணப்படும் அறிவுரைகளும் தத்துவநூற் கருத்துக்களும், அறிவுநூற் கருத்துக்களும் கற்கும் அறிஞர்க்குக் களிப்பினைத் தந்து அவர்கள் உள்ளத்தைப் பண்படுத்தும் பான்மையது.

இந் நூலின் இரண்டாவது பதிப்பு 1922-ஆம் ஆண்டு திருவனந்தபுரம் உயர்நிலை நீதிமன்றத்து வழக்கறிஞராயிருந்த திருவாளர், S. வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., (இப்பொழுது சென்னைத் தமிழகராதிக் கழகத் தலைவர்) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அந்நூல் விலைக்குக் கிடைக்கப் பெறாததாயிருப்பதால் இம்மூன்றாவது பதிப்பு எங்களால் வெளியிடப்படுகின்றது.

இந் நூலாசிரியர் திருவாசகத்திலிருந்தும், திருக்குறள், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய சங்கநூல்களிலிருந்தும், கம்பராமாயணத்திலிருந்தும், உலக வழக்குப் பழமொழிகளிலிருந்தும் பல வசனங்களையும் கருத்துக்களையும் நூலிற் கையாண்டு வழங்கியிருக்கின்றனர். இந்நூலைக் கற்கும் கல்லூரி மாணவர்க்கும் ஏனையோர்க்கும் பயன்படுமாறு நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம் நூல் முகப்பில் சேர்க்கப் பெற்றிருப்பதோடு நூல்வரிசையி லெழுதப்பட்ட விளக்கச் சிற்றுரை ஒன்றும், அருஞ்சொற் பொரு

ளகராதி யொன்றும், மேற்கோள் விளக்கமொன்றும் இறுதியில் எங்களாற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூற்கு ஆசிரியர் வரலாற்றுச் சுருக்கம் எழுதித் தந்த கழகத்தலைவர் திருவாளர், மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ., அவர்களுக்கும், விளக்கச்சிற்றுரை, அருஞ்சொற்பொருளகராதி, மேற்கோள் விளக்கம் ஆகிய இவைகளை எழுதித்தந்த பாளையங் கோட்டை, செயிண்ட்சேவியர் கல்லூரித் தமிழ் விரிவுரை யாளர், வித்துவான் திருவாளர், பு. சி. புன்னைவனநாத முதலி யாரவர்கட்கும் இக் கழகத்தார் தங்கள் நன்றியை உரிமையாக்கு கின்றார்கள்.

இப்பதிப்பினை எங்கள் கழகவழி வெளிப்படுத்த உரிமை யளித்த நூலாசிரியர் அருமைப் புதல்வர் திருவாளர், P. S. நடராச பிள்ளையவர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகின்றது.

திருநெல்வேலி,
7-12-33.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

ஒன்பதாம் பதிப்பு

இப் பதிப்பு புதிய எழுத்தில் சிறிய அளவில் நூல் நிலையங்கட்கும் பரிசுகட்கும் பயன்படும் வகையில் கவர்ச்சியாக வெளியிடப் பெற்றிருக்கிறது.

15-3-1956.

கழகம்.

Dedicated to

R. HARVEY, Esq.,

M.A., L.L.D., F.M.U.,

Late Principal of the H. H. Maharaja's College, Trivandrum

AS A HUMBLE TOKEN OF ESTEEM AND REVERENCE

BY

His affectionate pupil

THE AUTHOR

"Dear friend, far off, my lost desire,
So far, so near in woe and weal;
O loved the most, when most I feel
There is a lower and a higher."

—*Tennyson*

பொருளடக்கம்



ராய் பகதூர் P. சுந்தரம் பிள்ளை, எம். ஏ.

ஆசிரியர் வரலாற்றுச் சுருக்கம்

நீர்வளம் நிலவளஞ் செறிந்த சேரநாடாகிய திருவிதாங்கூரைச்சேர்ந்தது துறைமுகப் பட்டினமாகிய ஆலப்புழை என்னும் ஊர். இவ்வூரில், வேளாளர் மரபில் திருவாளர் சுந்தரம் பிள்ளை யவர்கள் கி. பி. 1855-ஆம் ஆண்டு (1030 M. E.) பங்குனித் திங்கள் 28-ஆம் நாள் பிறந்தனர். இவர் தந்தையார், பெருமாள் பிள்ளை என்னும் இயற்பெயர் வாய்ந்தவர். ஒரு பெரிய துணி வணிகர். இவர் மிகுந்த கடவுட்பற்றும் நுட்பமான அறிவும் அமையப்பெற்றவர்; தேவாரம், திருவாசகம், திருக்குறள், திருவிளையாடற் புராணம் முதலிய அருட்பெரு நூல்களை நெட்டுருச் செய்து சொல்லுந் திறமுடையவர். மாடத்தி என்பது இவர் தம் மனைவியார் பெயர். தங்கட்கு நெடுங்காலம் பிள்ளைப்பேறில்லா திருந்தமையால், தாய் தந்தையரிருவரும் மிக வருந்தினார்கள். மதுரைமா நகரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் தம் குல தெய்வமாகிய சோமசுந்தரக் கடவுளை நோக்கித் தவங் கிடந்தனர். அத் தவத்தின் பயனாகச் சில காலத்தில் ஓர் அழகான ஆண்மகவு இவர்கட்குப் பிறந்தது. இம்மகவுக்குச் சுந்தரம் என்னும் அப்பிரானது திருப்பெயரை அவர்கள் இட்டு வழங்கி வந்தனர்.

பெற்றோர்கள் இச் சிறு மகவை மிக அருமையாகப் பாராட்டி வளர்த்தார்கள். குழவிப் பருவம் நீங்கிப் பிள்ளைமைப் பருவம் அடைந்து ஐந்து ஆண்டு நிரம்பியதும், இவரை, இவர் தந்தையார் தமிழ்க் கல்வி கற்க ஆலப்புழையில் உள்ள ஒரு பள்ளியில் வைத்தனர். பள்ளிக்கூடத்திற் பயிலும்போதே, இவர் தந்தையார் இவருக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய நீதிநூல்களையும், தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாடல்களையும், திருக்குறள் முதலிய அறிவுப் பெருநூல்களையும் ஒழுங்காகக் கற்பித்து வந்தனர். இதன் பயனாக இவர் தமது பன்னிரண்டாம் ஆண்டிலேயே தாய்மொழியாகிய தமிழ்மொழியிற் பேசவும் எழுதவும் வல்லுநராயினர். பின், ஆலப்புழையிற் புதிதாக அமைக்கப்பட்ட ஆங்கிலக் கல்விச்சாலையில் ஆங்கிலங் கற்கத் தொடங்கி (Pre-Entrance) பிரவேசத் தேர்ச்சிப் படிப்புவரை கல்வி கற்றனர். அக்காலத்தில் அக்கல்விச்சாலைத் தலைவராயிருந்த மிஸ்டர் பீல் (Mr. Peel) என்னுந் துரைமகனார் திரு. பிள்ளையவர்களுடைய அறிவுநுட்பத்தையுஞ் சுறுசுறுப்பையும் ஆராய்ச்சியறிவையுங் கண்டு வியந்து, இவர் பின் வாழ்க்கையில் பெரும் புகழ் எய்துவர் என்று பலமுறையும் பலரிடத்துங் கூறியுள்ளார்.

அதன் பின்னர், இவர் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியிற் சேர்ந்து உயர்நிலைக் கல்விபயிலப் புகுந்தனர். அவ்வாண்டில் பத்தாவது வகுப்பில இவர் முதல்வகுப்பில் முதலாவதாகத் தேர்வுபெற்றனர். அதனால் அரசியலார் இவருக்குத் திங்கள் தோறும் எட்டு ரூபா உதவிப்பணங் கொடுத்துவந்தனர். இவ்வுதவித் தொகை இவருக்கு (B.A.) பி.ஏ., தேர்வுமுடிவுவரை கொடுக்கப்பெற்று வந்தது. இவர் ஒவ்வொரு வகுப்பிலுந் திறமையாகக் கல்விகற்று வந்தனர். இவருடைய கல்வித்திறமையினையும், கூர்த்த மதியினையுங் கண்ட கல்லூரியாசிரியர்கள் இவர்பாற் பேரன்பு பூண்டனர்.

இவர், 1876-ஆம் ஆண்டில், திருவனந்தபுரத்தில் முதன்மையாகவும், சென்னை மாகாணத்தில் நான்காவதாகவும் பி.ஏ., தேர்வு தேறினார். இவர் மாணவராயிருந்தபொழுது, தம் தாய் மொழியாகிய தமிழ்மொழியைப் பயில்வதிலும், அறிவு நூல்களை ஆராய்வதிலும் அவாமிக்குடையராய் விளங்கினார். பி.ஏ., தேறியதும், இவர் கல்வித்திறமை யறிந்த (Mr. Ross) மிஸ்டர் ராஸ் என்னுங் கல்லூரித் தலைவர், இவரை அக் கல்லூரியிலேயே எப். ஏ., பி. ஏ., வகுப்புகளுக்கு (History) வரலாற்று நூலும், பி. ஏ., முதல் வகுப்புக்கு (Philosophy) அறிவு நூலுங் கற்பிக்கும் ஆசிரியராக அமர்த்தினார். இவர் மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் திறமைமிக்கவராக விளங்கினார். இவர் கல்வி கற்பிக்கும்பொழுது, மாணவர்கள் அவரது விரிவுரையிற் பெரிதும் ஈடுபட்டிருந்து கேட்டு மகிழ்வார்கள். ஆசிரியர் வேலையில் அமர்ந்தபின், இவர் தம் இருபத்தோராம் ஆண்டில் (1877-ஆம் ஆண்டு, தைத்திங்கள்) நற்பண்புகள் நிரம்பிய சிவகாமி என்னும் பெண்ணரசியை மணந்து இல்லற வாழ்க்கை நடத்திவந்தனர்.

அக்காலத்தில், சென்னைக் கல்வித்துறைத் தலைவராயிருந்த (Dr. Duncan) டாக்டர் டன்கன் என்னுந் துரைமகனார் திருவனந்தபுரம் அரசர் கல்லூரித் தலைவர் (Mr. Ross) மிஸ்டர் ராஸ் துரையவர்களைத் திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச்சாலைக்குத் தக்க ஒரு தலைவரைத் தெரிந்து அறிவிக்கும்படி கூறினார். இது கேட்ட ராஸ் துரையவர்கள் சுந்தரம் பிள்ளை யவர்களே அவ் வேலைக்குத் தக்கவரெனக் குறிப்பிட்டனர். அவ்வாறு அவர் குறிப்பிடவும், கல்வித்துறைத் தலைவர்கள் 1877-ஆம் ஆண்டிறுதியில், திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச்சாலைக்குச் சுந்தரம் பிள்ளை யவர்களைத் தலைவராக அமர்த்தினார்கள். இவர் தலைவரா யமர்ந்து அக் கல்விச் சாலையை மிக்க திறமையுடன் நடத்திவந்தார். இவர் அங்குச் செய்த பெருமுயற்சியின் பயனாகப் பத்தாவது வகுப்புவரை யிருந்த அக்கல்விச்சாலை (F. A.)

எப். ஏ., வகுப்பமைந்த இரண்டாவது வகுப்புக் கல்லூரி (Hindu College)யாக மாறியது.

இவர் திருநெல்வேலியிலிருந்தபொழுது, கோடகநல்லூர் உயர்திரு. சுந்தர சுவாமிகளென்னும் பெரியோரைக் கண்டு, அவரோடு பழகி அவரது தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு அவருக்கு மாணவராயினர். இன்னும், பிள்ளையவர்கள் தம் ஆசிரியரிடம் சமய நூல்கள் பலகற்று, அவைகளில் அறிவு நிரம்பப்பெற்றார். இக்காலத்திற்றான் இவர், மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் என்னும் அரிய நூல்களை எழுதத்தொடங்கினர். இவர் மனோன்மணீயம் என்னும் அரிய தமிழ் நாடக நூலை யியற்றி, அந்நூலின் சிறப்புப்பாயிரத்தில் "தமிழ்த் தெய்வ வணக்க"ங் கூறி, அதில் தமிழ்மொழியின் சிறப்பை மிக அழகு பெற எடுத்துக் காட்டியிருக்கின்றார். இவர் பாடியிருக்கின்ற அச் சில பாக்களினாலேயே இவர் செய்யுளமைக்குந் திறமை மிக்கவரென்பது நன்கு புலனாகும். தமிழ்த் தெய்வ வணக்கப் பாக்கள் சிலவேயாயினும், அவை பொருட்செறிவும் இன்சுவையும் பொருந்தி மிளிர்கின்றன. இவர் தம் ஆசிரியரிடத்து வைத்திருந்த பெரும் பற்றையுஞ் செய்ந்நன்றி யறிதலையுங் காட்டும் பொருட்டு மனோன்மணீயத்தில் தம் ஆசிரியர் சுந்தரமுனிவரை ஒரு சிறந்த நாடக உறுப்பாக அமைத்திருக்கின்றார். இவருடைய கல்வித் திறமையை யறிய விரும்புவோர் இவரது அரும்பெரு நூலாகிய மனோன்மணீயத்தைப் பயின்றறிதல் ஒன்றே போதும். இக்காலத்தில் இவர்தம் ஆசிரியர் சுந்தரமுனிவரியற்றிய "நிஜானந்த விலாசம்" என்னும் நூலை இவரும், இவர்தம் நண்பர் திரு. மாவடி சிதம்பரம்பிள்ளை யவர்களுமாக அச்சிட்டு வெளியிட்டார்கள்.

1878-ஆம் ஆண்டு மாசித் திங்கள், இவர்தம் அருமை அன்னையார் திருநெல்வேலியில் சிவபிரான் றிருவடி நீழ லெய்தினர். ஆதலால், இவர் தம் தந்தையாரைப் பேணும் பொறுப்பு இவருக்கு இயல்பாகவே அமைந்து விட்டது. 'தந்தை தாய்ப் பேண்' என்று ஔவைப் பிராட்டியார் கூறிய முதுமொழிக் கிணங்க, இவர் தம் பெற்றோரிடத்தில் பேரன்பு வைத்து ஒழுகி வந்தனர். புறக்கண்ணாற் காணப்படுந் தாய் தந்தையரிடத்து வைக்கும் அன்பே, அகக்கண்ணாற் காணப்படும் கடவுளிடத்துக் காட்டும் அன்புக்கு அடிப்படை யென்பதை இவர் நன்குணர்ந்தவர். தம் ஆசிரியர் தொழிலிலிருந்து வரும் ஊதியம் முழுவதையுமே, தம் அருமைத் தந்தையிடங்கொடுத்துத் தம் சிறு செலவுகளுக்குக் கூடத் தந்தையிடங் கேட்டுத் தொகை பெறுவது இவர் வழக்கம். இவருடைய ஆங்கிலப் படிப்பானது, பண்டைத் தமிழர் வழக்கத்திற் கிணங்க, இவர் தம் பெற்றோரிடங் காட்டி வந்த வணக்கத்

தையும் பணிவையும் ஒரு சிறிதுங் குறைக்கக் காரணமாயிருக்க வில்லை.

1879-ஆம் ஆண்டில், திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் சிறந்த அறிவுநூற்புலவராயிருந்த டாக்டர் ஹார்வி (Dr. Harvey) துரையவர்கள் தம் தாய்நாடு செல்லும்போது, நம் சுந்தரம்பிள்ளையவர்களைத் தாமிருந்த வேலையில் அமர்த்திச் சென்றனர். அதன் பின், 1880-ஆம் ஆண்டில், இவர் (M.A.) எம். ஏ. தேர்வு பெற்றார். இக்காலத்தில் இவர் தம் ஆசிரியத் தொழிலைச் செவ்வனே நடத்தி வந்ததுமன்றி, தமிழிலக்கிய வளர்ச்சிக்கான உழைப்பிலும் தலைசிறந்து நின்றார். இவர் திருநெல்வேலியிலிருந்தகாலை, எழுதத் தொடங்கிய மனோன்மணீயம், நூற்றொகை விளக்கம் என்னும் நூல்களைச் செவ்வனே எழுதி முடித்தனர். திருவிதாங்கோட்டின் பகுதிகளிலுமுள்ள பழைய திருக்கோயில்களில் பாழடைந்து பாதுகாப்பற்றுக் கிடந்த கல்வெட்டுக்களைப் பிள்ளையவர்கள் தமது பொருட்செலவிலேயே ஆராயத்தொடங்கினர்.

இங்ஙனமிருக்குங்கால், 1882-ஆம் ஆண்டு இறுதியில் மாட்சிமைமிக்க விசாகத் திருநாள் மகாராசா அவர்கள் இவரது கல்விப்பெருமையை நன்குணர்ந்து தம் அரண்மனையில் பிறவகை சிரஸ்தார் (Commissioner of Separate Revenue) என்னும் உயர்ந்த வேலையில் இவரை அமர்த்தினர். இவர்தம் பெருங் கல்விக்கும் மனநிலைமைக்கும் மடிமிக்க அவ்வேலை பொருந்தியதாயில்லை. ஆனால், அவ்வேலையில் அமர்ந்திருக்கும்பொழுது இவர் சட்டக் கல்லூரியில் சட்ட நூல் பயின்றுவந்தார். அத்தருணத்தில் அரசர் கல்லூரித் தலைவர் (Principal) மிஸ்டர் ராஸ் துரை யவர்கள் தாய்நாடு செல்ல நேர்ந்தமையின், அத் தலைமையாசிரியர் பதவியில் அமர்ந்த திரு. டாக்டர் ஹார்வி துரையவர்கள் தாம் முன் பார்த்து வந்த அறிவுநூற் புலவர் வேலைக்குச் சுந்தரம்பிள்ளை யவர்களே தக்கார் என்று கண்டு அவரை அவ்வேலையில் 1885-ஆம் ஆண்டில் அமர்த்தினர். பிள்ளையவர்கள் அக்கால முதல் தம் இறுதிக்காலம் வரை அப்பேராசிரியர் வேலையிலேயேயிருந்து அறிவுநூற் பொருள்களை மாணவர்கட்கு அவாவுண்டாகும்படி பெருந்திறமையுடன் கற்பித்துவந்தனர். அவருடைய விரிந்த எண்ணங்களும், நகைச்சுவை தோன்றப் பேசுந் திறனும், யாற்றொழுக்குப்போற் சொற்களமைக்கும் ஆற்றலும், சொல்வன்மையும், இயற்கை நுண்ணறிபும், கல்லூரி யாசிரியர்களாலும், மாணவர்களாலும் ஏனையோராலும் பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டன.

1884-ஆம் ஆண்டு, பிள்ளையவர்கள், வழக்கறிஞர் சாமிநாத பிள்ளையவர்கள், இசைப் புலவர் திரு. டி. இலக்குமண பிள்ளையவர்கள் தந்தையார் வலிய மேலெழுத்து திரவியம் பிள்ளையவர்கள்,

(உண்டியற் கடை) சு. கணபதிப் பிள்ளையவர்கள் தந்தையார் சுப்பிரமணிய பிள்ளையவர்கள் முதலியவர்களுடன் சேர்ந்து, சைவ சமய விளக்கத்தையும் தமிழ்மொழி வளர்ச்சியையுங் குறியாகக் கொண்டு, 'சைவப்பிரகாசசபை' என்னும் ஒரு பெரிய சபையை நிறுவி அதன் வாயிலாகப் பணிசெய்து வந்தார்கள். அச்சபைக்கு ஒரு கட்டிடம் அமைப்பதற்கு எல்லோருஞ் சேர்ந்து ஓர் இடம் வாங்கி, அதில் 1885-ஆம் ஆண்டில் ஒரு கட்டிடமுங் கட்டி முடித்தார்கள். அதற்குச் சுந்தரம்பிள்ளை யவர்கள் ரூ. 500 நன்கொடையளித்திருக்கிறார்கள். அச்சபைக் கட்டிடம் இன்றும் திருவனந்தபுரத்தில் நிலவி விளங்குகின்றது. கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் நடைபெற்றுவந்த பரிசளிப்புகட்கு அவர்கள் நன்கொடை வழங்கி வந்ததாகத் திருவிதாங்கூர் அரசியல் கல்வி இலாகா அறிக்கைகள் பகருகின்றன. 1886-ஆம் ஆண்டு, அவர் தந்தையார் பெருமாள்பிள்ளையவர்கள் மண்ணுலகு நீத்து விண்ணுல கெய்தினர்.

பிள்ளையவர்கள் தமிழிலக்கிய வரலாற்றாராய்ச்சியிலும் சமய நூலாராய்ச்சியிலும், திருவிதாங்கூர் பண்டை அரசர்கால ஆராய்ச்சியிலும் பெரிதும் உழைத்து, அவ்வப் பொருள்கள் பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத் திங்கள் இதழ்களில் எழுதி வந்தார்கள். தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், அறிவு வளர்ச்சிக்காகவும் பிள்ளையவர்கள் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கின்றார்கள். இதுவுமன்றி, திருவுதாங்கூர் அரசியலாரால் அமைக்கப்பட்ட பொதுமக்கள் சொற்பொழிவு சங்கத் (Public Lecture Committee) தில் அமைச்சரா யமர்ந்து, அதிலும் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்கள். பிள்ளையவர்கள் தம் மேனாட்டு அறிவுநூலாராய்ச்சித் திறத்தினாலே, மேனாட்டுப் பெரியாருடைய விழுமிய கருத்துக்களை நம் நாட்டாருக்கும் நம் நாட்டு அறிவுநூலாராய்ச்சித் திறத்தினாலே நம் நாட்டு முன்னோருடைய சிறந்த கருத்துக்களை மேனாட்டு அறிஞர்கட்கும் அறிவுறுத்தக் காரணரா யிருந்திருக்கிறார்கள். இவரெழுதிய நூற்றொகை விளக்கம் 1888-ஆம் ஆண்டு மேத்திங்கள் அச்சியற்றி வெளியிடப்பட்டது. அந்நூல் முகவுரையில் ஆசிரியரவர்கள் கீழ் வருமாறு கூறி யிருக்கிறார்கள். 'தற்கால நிலைமைக் கேற்பச் சாத்திரங்களை எத்தனை வகுப்பாய் வகுக்கலா மென்பதும், அவற்றின் முக்கிய முறைமையையும் பொருளும் என்ன வென்பதும் ஆம் வகை எடுத்து விளக்குவதே இந்நூல் பொதுவியலின் தலைமையான உத்தேசம். இது திருவிதாங்கோட்டு கவர்ன்மெண்டாருடைய நூதன பிரசங்க ஏற்பாட்டின்படி திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் வாசிக்கப்பட்டது' என்பதாகும். தமிழ் உரைநடை நூலுக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந் 'நூற்றொகை விளக்கம்' வெளிவந்த மூன்றாவ தாண்டாகிய 1891-ஆம்ஆண்டு மார்ச்சுத் திங்களில், மனோன்மணீயம் வெளிவரலாயிற்று. அக்காலத்தில் வெளிவந்த தமிழ் நூல்களில் மனோன்மணீயம் முன் அணியில் வைக்குந் தகுதியுடையதென்பதற்கு டாக்டர் ஜி. யு. போப் (Rev. Dr. G. U. Pope. M. A., D. D.) துரையவர்கள், ஆசிரியர் P. அரங்கநாத முதலியாரவர்கள், M. A., சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், B. A., B. L. முதலானவர்கள் தந்த மதிப்புரைகளே தக்க சான்றாகும். இக் காலத்தில் பிள்ளையவர்கள் (Madras Christian Collage Magazine) சென்னைக் கிறித்துவ கலாசாலைத் திங்கள் இதழில் பத்துப் பாட்டு என்னும் பொருள்பற்றியும், ஞானசம்பந்தர் காலவாராய்ச்சி (The age of Gnanasambandar) என்னும் பொருள்பற்றியும் ஆங்கிலத்திற் சில கட்டுரைகள் எழுதிவந்திருக்கிறார்கள். பின் 1894-ஆம் ஆண்டில் திருவிதாங்கூர் பண்டை மன்னர் காலவாராய்ச்சிக் கட்டுரைகளும் மேற்குறித்த திங்கள் இதழில் வெளியிடப்பட்டுப் பின் புத்தக உருவிலும் வெளிவந்தன. 1895-ஆம் ஆண்டில் திருஞான சம்பந்தர் காலவாராய்ச்சியும் புத்தக வடிவில் வெளிவந்தது. பிள்ளையவர்கள் செய்த ஞானசம்பந்தர் காலவரையறை, பின்னால் அதனைப்பற்றிப் பலரால் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளால் வலுப் பட்டதேயன்றி, ஒரு சிறிதும் மாறுதலடையாதிருந்தது பிள்ளையவர்களின் ஆராய்ச்சித் திறனுக்குச் சான்றாகும். இந்தியாவிலும், மேனாட்டிலும் மேற்குறித்த இரு ஆங்கில நூல்களையும் கற்ற அறிஞர்கள் அவைகளின் மேன்மை கண்டு புகழ்ந்து பாராட்டி எழுதியிருக்கிறார்கள். இந் நூல்களின் வழியாக அவர்களெல்லாரும் இவர் தம் நட்பிற்கு உரியரானார்கள். இவர் கல்வித்திறமையினையறிந்த செர்மனியிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தார் (Gottingham University) இவர் ஆறு திங்கள் அங்குப் போந்து அக் கலாசாலையில் தங்கியிருப்பாரானால் அறிவுநூற் பெரும்புலவர் (Doctor of Philosophy) என்ற பெரும் பட்டம் வழங்குவதாக வாக்களித்ததனாலேயே இவர்பால் மேற்கு நாட்டார் கொண்டிருந்த நன்மதிப்பு தெள்ளிதிற் புலனாம்.

சர் எம். இ. கிராண்ட் டப் (Sir M. E. Grant Duff) என்ற சென்னை மாகாண அரசியற்றலைவர் (Governor of Madras) அவர்கள் தூண்டுதலின்மேல் இலண்டனிலுள்ள வரலாற்றாராய்ச்சிக் கழகத்தார் (Royal Historical Society) இவருக்கு F. R. H. S. என்னும் பட்டத்தையும், ஆசியாத் தொடர்பான ஆராய்ச்சிக் கழகத்தார் Royal Asiatic Society) M. R. A. S என்னும் பட்டத்தையும் வழங்கி இவரைப் பெருமைப்படுத்தினர். இவர் செய்த தென்னிந்திய வரலாற்றாராய்ச்சியின் திறமையைக்கண்ட சென்னை அரசியலார், 1896-ஆம் ஆண்டில் "ராய்பகதூர்" என்னும் பட்

டத்தை இவருக்கு அளித்தனர். 1891-ஆம் ஆண்டில் இவரைச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் பல்கலைக்கழக உறுப்பினர(F.M.U.) ராக அமைத்துக்கொண்டனர். அது முதல் இவரைப் பல்கலைக் கழகத்தார் பல ஆண்டுகளில் **தமிழ், வரலாறு** (History), **அறிவு நூல்** (Philosophy) இவைகட்குத் தேர்வாளராக அமைத்துச், சிறப் பெய்துவித்தனர். திருவிதாங்கூர் பண்டை யரசர் காலவாராய்ச்சி எழுதும் பொருட்டுப் பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட பேருழைப்பை நன்குணர்ந்த மாட்சிமிக்க திருவிதாங்கூர் அரசர் பெருமான் அக்கால முதற்கொண்டே பிள்ளையவர்களின் ஒரே புதல்வரான திருவாளர் **நடராசப் பிள்ளை** அவர்கட்குத் திங்கள் தோறும் ரூபாய் இருபது நன்கொடையாக அளித்துவருகிறார்கள்.

*சுந்தரம்பிள்ளை யவர்கள், தம் இளமைக்காலத்தில், நாகப் பட்டினம் இயற்றமிழ் ஆசிரியராகிய, புத்தகக்கடை திருவாளர் **நாராயணசாமிப் பிள்ளை** அவர்களிடந் தமிழ்க் கல்வி பயின்றவர். **நாகை R. S. வேதாசலம் பிள்ளை** (இப்பொழுது சுவாமி வேதா சலம் என்னும் மறைமலையடிகள்) அவர்களும் அவ்வாசிரியரிடத்தே தம் இளமைக்காலத்தில் தமிழ்க்கல்வி பயின்றவர்கள். சுந்தரம் பிள்ளையவர்களியற்றிய 'மனோன்மணீயம்' என்னும் நாடகக் காப்பியத்தை, திருவாளர் வேதாசலம்பிள்ளையவர்கள் கண் ணுற்று, சுந்தரம்பிள்ளை யவர்கட்குத் தம்மைப் பற்றியும், தம் ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளை யவர்களைப் பற்றியும் 1895-ஆம் ஆண்டில் ஒரு கடிதம் அகவற்பாவில் வரைந்து விடுத்தார்கள். அதனைக் கண்டு இறும்பூதுற்ற சுந்தரம்பிள்ளை யவர்கள், ஆசிரியர் நாராயணசாமிப் பிள்ளையவர்களையும், திருவாளர் வேதாசலம் பிள்ளை யவர்களையும் திருவனந்தபுரத்திற்குத் தம்பால் வரும்படி விரும்பி யழைத்தனர். அவ் வழைப்பினுக்கு மிக மகிழ்ந்து திரு வாளர் வேதாசலம்பிள்ளை யவர்கள் தம் ஆசிரியருடன் 1895-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இறுதியில் திருவனந்தபுரத்துக்குச் சென்று சுந்தரம் பிள்ளையவர்களைக் கண்டார்கள். சுந்தரம்பிள்ளை யவர்கள், திருவாளர் வேதாசலம் பிள்ளையவர்கள் அகவற்பாவில் எழுதிய கடிதத்தைக் கண்டு அவர்களை ஆண்டில் முதியராகவே எண்ணியிருந்தனர். ஆனால், திருவாளர் வேதாசலம்பிள்ளையவர் கள் மிக இளைஞரா யிருத்தலைச் சுந்தரம்பிள்ளை யவர்கள் நேரிற் கண்ட அளவானே பெரிதும் வியப்புற்றுத் தாம் முன் எண்ணிய தனை அவரிடங் கூறினார்கள். சிலநாள் சுந்தரம்பிள்ளை யவர்கள், திருவாளர் வேதாசலம்பிள்ளையவர்களோடு நட்பினால் அளவளாவி யிருக்கையில், அவர்கள் பழைய சங்கத் தமிழிலக்கண இலக்கியங் களிலும் பழந்தமிழ்க் காப்பியங்களிலும் வல்லுநராயிருத்தலை

*மறைத்திரு சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதிய சிந்தனைக் கட்டுரையினின்றும் எடுக்கப்பட்டது.

ஆராய்ந்து பார்த்து, அவர்களின் அறிவின் நுட்பத்திற்கும், நிறைந்த கல்விக்கும், சிறந்த ஆராய்ச்சிக்கும், அவர்களை மிக வியந்து பாராட்டி அதற்கு அடையாளமாக ஒரு நற்சான்று இதழ் எழுதித் தந்தனர். திரும்பவும் 1896-ஆம் ஆண்டில் சுந்தரம் பிள்ளையவர்கள், திருவாளர் வேதாசலம்பிள்ளை யவர்களைத் திருவனந்தபுரத்துக்கு அழைத்து, அப்போது மார்த்தாண்டன் தம்பி என்பவரால் வைத்து நடத்தப்பட்ட ஓர் ஆங்கிலக் கல்விச்சாலையில் அவரைத் தமிழாசிரியராக அமர்த்தி வைத்தார்கள். திருவாளர் வேதாசலம் பிள்ளையவர்கள் திருவனந்தபுரத்திலிருந்த இரண்டரைத் திங்களுக்கிடையில், செப்டம்பர் 12-ஆம் நாள், திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் சுந்தரம்பிள்ளை யவர்கள் வேண்டுகோட்கிணங்கி, அவர்கள் தலைமையின்கீழ் "நாடகத் தமிழ்" என்னும் சிறந்த பொருளைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர். அவ்விரிவுரையின் சிறந்த அறிவாராய்ச்சி நுட்பங்களைச் சுந்தரம்பிள்ளை யவர்கள் மிகவும் வியந்து பேசினர். அதன்பின் திருவாளர் வேதாசலம் பிள்ளை அவர்கள் தம் இருபதாம் ஆண்டிற் சுந்தரம்பிள்ளை யவர்களிடமிருந்து பரிசுபெற்று நாகை மீண்டனர். சுந்தரம் பிள்ளையவர்கள் அளித்த நற்சான்றிதழே திருவாளர் வேதாசலம் பிள்ளை யவர்கட்கு அக்காலத்தில் கிறித்தவ கலாசாலைத் தமிழாசிரிய வேலையைப் பெறப் பெருந்துணை புரிந்தது.

சுந்தரம்பிள்ளையவர்கள் தமது பிள்ளைமைக்காலத்திலேயே மிகுந்த கடவுட்பற்றுடையவர். ஆதலால், இவர் நாடோறும் புலரிக்காலையில் பிள்ளையார் பெருமானுக்கு வழிபாடு செய்தே பள்ளிக்குச் செல்வர். பள்ளியிலும் இவர் அங்கிருந்த பிள்ளையார்ப் பெருமானுக்கு அன்புடன் வழிபாடு செய்த பின்பே கல்விகற்கத் தொடங்குவது வழக்கம். இன்னும் இவர், தம் இளமைக் காலத்திருந்தே கடவுட்பற்றிலும் தாய்மொழிக் கல்வியிலும் ஆடம்பரமில்லா வாழ்க்கையிலும் பற்றுடையவராய் வளர்க்கப்பட்டு வந்தாராதலின், ஆங்கிலக் கல்வியில் ஒப்பற்ற பெரும்புலவராய காலத்தும், தம் சமயக் கொள்கையையும், தாய்மொழிக் கல்வியையும் ஒருசிறிதும் மறவாது அவைகளின் முன்னேற்றத்திற்காகத் தம் இறுதிக்காலம்வரை பெரும்பாடுபட்டனர். இவர் வீண் ஆரவாரமான செலவுகள் செய்யமாட்டார். ஆனால், கல்வி கற்பதிற் பெருவிருப்பும் பேரவாவுமுடைய ஏழை மாணவர் எவர்க்கும் இவர் பொருளுதவி செய்வர். அவ்வாறு சிலர்க்குப் பெரும் புலமைப் பட்டம் எய்தும்வரை பொருளுதவி புரிந்துவந்திருக்கின்றனர். பொதுவாக இவர், மக்களைப் பொருட்செல்வநிலை யுன்னி மதிப்பவரல்லர். செல்வராயினும் எளியவராயினும் அவரவரிடத்துக் காணப்படும் திருவருள் விளக்கத்தையும், நற்பண்புகளையுமே பாராட்டும் இயல்பினர். இவர் நாடோறும் பத்து அல்லது பன்

விரண்டு மணி நேரத்திற்குக் குறையாமல் உழைக்கும் இயல்பி னர். கல்லூரிப் பேராசிரிய வேலையோடு அறிவு நூலாராய்ச்சி, தென்னிந்திய வரலாற் ருராய்ச்சி, கல்வெட்டாராய்ச்சி முதலியவை களிற் றம் காலத்தைப் பொதுநலத்துக்குப் பயன்படக் கழித்து வந்தனர். இவர் ஆண்டுதோறும் வரும் கோடை விடுமுறைக் காலங்களில் பெரும்பாலும் பாடல்பெற்ற திருக்கோயில்களுக்குச் சென்று கடவுளை வழிபடுவர். இதுவுமன்றி அக்கோயிற்சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களையும் ஆராய்ச்சி செய்தே திரும்புவர்.

இத்தகைய பேருழைப்புமிக்க பிள்ளையவர்கள் நாளடைவில் உழைப்பின் காரணத்தால் உடல் வலிமை குன்றியே வந்தார். அதன் பின்னர் நோய்மிகுதியால் திடீரெனத் தமது இளமைக் காலமாகிய 42-ஆம் ஆண்டிலேயே (அதாவது 1897-ஆம் ஆண்டு ஏப்பிரல் 26-ஆம் நாள், கொல்லம் ஆண்டு 1072 சித்திரை 14-ஆம் நாள்) திங்கட்கிழமை காலை 8-மணிக்கு நவமி திதியில் பெரும் புலவரான சுந்தரம்பிள்ளை யவர்கள் இம்மண்ணுலக வாழ்வை நீத்து என்று மழியா விண்ணுலக வாழ்வெய்தினர்.

இவர் தமது 23-ஆவது ஆண்டில், கோடகநல்லூர் உயர்திரு. சுந்தரசுவாமிகளை நட்புக்கொண்டதுமுதல் காலையில் முழுகித், தேவார முதலிய தமிழ்மறைகள் ஒதி வழிபாடு செய்தபின்னரே உணவருந்தி வேலைமேற் செல்வது வழக்கம். இவ்வழக்கத்தை அவர் தமது இறுதிக்காலம்வரை கைநெகிழ விடவில்லை. மேனாட்டு அறிவுநூற் பயிற்சியும் நாகரிகமும் அவர்களுடைய கடவுட்பற் றையும், மொழிப்பற்றையும் நல்லொழுக்கத்தையும் வலுப்படுத்தி யனவே யன்றிச் சிறிதுங் குறைக்கவில்லை. இவர் எவர்க்கும் காட்சிக்கெளியராய், அவரவர்க்குத் தம்மால் இயன்ற உதவி செய்துவரும் எளிமையும் விழுமையும் செழுமையும் உடைய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

இவர் தமக்கு எத்தகைய சிறுநன்றி செய்தாரையும் மறவாது நன்றி பாராட்டும் இயல்புடையவர். தமக்கு உதவிபுரிந்த தம் ஆங்கில அறிவுநூற் புலவர் டாக்டர் ஹார்வி துரையவர்கட்கு நன்றி பாராட்டும் அறிகுறியாகத், தாம் குடியிருந்துவந்த மனைத் தோட்டத்திற்கு இவர் ஹார்விபுரம் என்று பெயரிட்டு வழங்கி னர். அப்பெயர் இன்றும் நிலவிவருகிறது. இதுவுமன்றித், தாமியற்றிய 'மனோன்மணீயத்தைத்' தம் ஆசிரியர் ஹார்வி துரை யவர்கட்கே உரிமைப்படுத்தி வெளியிட்டிருக்கிறார்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற முது மொழிக்கு இணங்க, இவர் தம் வாழ்நாள் முழுமையுங் கழித்து

வந்தனர். வாழ்க்கையின் வெற்றியானது மிக்க பொருள்தேடி ஆடம்பரமாய் வாழ்தலினாலாவதன்று; கடவுட்பற்றுடன் நல்லறிவு, நல்லொழுக்கம், பிறர்க்குப் பயன்பட வாழ்தலாகிய இவைகளாலேயே ஆவது. பிள்ளையவர்களுடைய இத்தகைய வெற்றி வாழ்க்கைக்கு அவர்களுடைய கடவுட்பற்றே காரணமாயிருந்தது. உலகத்தினுடைய முன்னேற்றமானது பிள்ளையவர்களைப் போன்ற பெரியார்களுடைய சிறந்த வாழ்க்கையின் பயனாலேயே யுண்டாகின்றது. இவ்வரலாறு அதனைக் கற்கிறவர்களுக்கு இவர்தம் வாழ்க்கையைப் போன்ற தூயவாழ்க்கையை நடத்த வழிகாட்டியா யிருக்குமென்பது திண்ணம். இப்பெரியாருடைய உலக வாழ்க்கை நலம், எல்லாம் வல்ல இறைவனருளால் இந்நூலைக் கற்கும் மாணவர்கட்கும் பிறர்க்கும் உண்டாவதாக.

பா. வே. நெல்லையப்ப பிள்ளை.

PREFACE

Among the rich and varied forms of Poetic composition extant in the Tamil language, the Dramatic type so conspicuous in Sanscrit and English, does not seem to find a place. The play here submitted to the Public is a humble attempt to see whether the defect may not be easily removed. Written during intervals of business and amidst diverse distractions the work falls indeed much beneath the author's own ideal, but it is nevertheless published in the hope, that though it may not be a success in itself, it may incite more scholarly and more fortunate attempts in the same direction. In the present condition of neglect into which the vernacular languages of this Presidency have fallen, the hope here expressed may appear to many altogether visionary. It may be said 'There is no demand even for what literature there exists. The School-going population care for nothing but what is prescribed each year by the University or other educational authorities and the inevitable annotations on what is so prescribed. The English-educated elders have no time or inclination to read anything but what is placed before them in easy English, and the purely native Pandit is already so rare a bird that the country will have to be congratulated, if in the course of the next two or three generations, he be not counted among the extinct species.' No doubt there is much truth in such melancholy representations of the immediate prospects of the Tamil language; but Love is given to hope. No labour of love waits for demand or is hampered by considerations of its own fruitlessness, and perhaps, in this reflection will be found the best justification for the present publication.

The play here submitted, it is needless to say, is meant for the study room and not the stage, and it is therefore written in the literary and not altogether the colloquial dialect. In aiming however at grammatical accuracy, the author trusts he has not fallen into the opposite vice of classical obscurity. Every endeavour has been made so to regulate the style, as to enable on average Matriculate, not guilty of having altogether neglected his Tamil, to follow the work with ease and interest, provided he has a good Tamil Dictionary. It will be also observed that the metre used is the simplest in the

language and the nearest approach to the English Blank verse, which not only saves the distortions and obscurities that rhyme often brings in its train but is also specially favourable to that continuity of thought and expression so needful in dialogues.

The plot of the play is based on one of Lord Lytton's *Lost Tales of Miletus* called *THE SECREAT WAY*, and for the sake of easy understanding the outline of that Scythian story as enlarged and adapted in this Dravidian play may be thus presented.

Jivaka, the King of Madura falls on the evil influence of his wicked minister Kudila, who to strengthen his hold upon his master, leads him to quit his capital with all its old associations and to take up his abode permanently at Tinnevelly, where in due course, a suitable palace and fortress are erected. His family priest Sundara—a saintly Guru out of tender affection and pity for the misguided monarch, joins him soon after the completion of the new Capital. It is with the reception of Sundara in Jivaka's court that the play opens. When the sage is shown over the new fortifications, he admires not their strength but talks only of possible ruin. He secures, however, before departing to his hermitage, now put up in the suburbs of Tinnevelly, the key of a room in the palace, under the pretence of having to perform certain sacred rites there for the safety of the royal family.—(*Act I: Scene:* 1). That evening, Manonmani the only daughter of the King, spends her times as usual with her favourite maid Vani, a strong willed young woman, and chides her in her own inexperience, for passionately preferring her lover Nataraja (a hand - some young man of a contemplative turn of a mind but with no apparent wealth of position) to Paladeva, the dissolute son of Kudila chosen for her by her avaricious father—(*Act I: Scene* 2) But that very night a change comes over Manonmani. In her sleep she sees the vision of a divinely beautiful person and falls in love with him. The report of her consequent indisposition is brought to the King the next morning, as he sits in court attending to the complaint brought against Vani by her father, for perversely rejecting a bridegroom duly selected for her by her parents.—(*Act I: Scene* 3) Surprised at the sudden illness of his daughter, the king goes into her private room and accidentally meets there Sundara on his

morning visit to his cell, and understands from him not only the nature of his daughter's disease, but also the remedy for it—viz., the marriage of Manonmani with Purushothama Varma, the youthful and chivalrous Sovereign of Travancore, the very person in fact of whose image she has become enamoured in her dream. He recommends at the same time Nataraja to be despatched to Travancore to arrange the match. But Jivaka sets aside this part of his preceptor's directions and sends at once a communication to his minister seeking his advice on the point, and before leaving the room, interdicts Vani's marriage with Nataraja in the way of a reprisal upon true Love found so universally troublesome to parents—(*Act I: Scene* 4). The royal communication reaches Kudila just when he is most absorbed in hatching further schemes of self-aggrandisement. He deliberates deeply over the situation and determines to frustrate the proposed alliance with a view to gain the hand of Manonmani and her future throne for his own son Paladeva—(*Act I*: *Scene* 5).

Accordingly, when he meets Jivaka the following morning, he suggests the impropriety of the bride's party taking the initiative in marriage negotiations and recommends the despatch of an embassy ostensibly for settling certain boundary disputes but really to sound the Prince's mind with regard to matrimonial matters. The *ruse* succeeds, and the credulous Pandia swallowing the bait, chooses of all men Paladeva himself as the ambassador for the purpose.—(*Act II*: *Scene* 1). That very night with secret instructions from his father to prick the pride of the Travancore Sovereign and to provoke a war if possible, so that not only might the marriage be thwarted but fresh opportunities might also be presented for securing further ascendency in the state, if not the crown itself. But the messenger spends the night in a house of ill-fame, and Nataraja sees him the next morning, trying to soothe one of the victims of his lust, a poor rustic girl, with the offer of a golden bangle stolen from the Palace. The insight that Nataraja thus obtains into the character of this influential rival for the heart of his own Vani, fills him with indignation—(*Act II*: *Scene* 2). Paladeva proceeds to Trivandrum, and there by laying claims to all South Travancore, fulfils his father's directions to the very letter; and the

enraged Purushothama, already troubled by a persistent dream, analogous to Manonmani's, declares immediate war in consequence.—(*Act II: Scene* 3).

The next day as Kudila is preparing his master's mind for evil tidings from Travancore, report comes of the result of the embassy; but all undaunted, the disappointed monarch prepares at once for the defence of the city—(*Act III: Scene* 1). Nor is it too soon. For that very evening, Nataraja in one of his dreamy excursions, observes the Travancore forces marching on to Tinnevelly.—(*Act III: Scene* 2). And by midnight, the tumult in and around the town rises so high that it reaches the ears of Manonmani. It completely bruises her unselfish heart to understand the extent of the complications that have arisen from her innocent dream—(*Act III Scene* 3). But a possible solution of those complications is also in full progress. For in the course of a religious debate conducted much about the same time, between two disciples of Sundara in his hermitage, mention is made of a secret sub terranean passage that the good priest is opening from his room in the palace to the plain outside the fort.—(*Act III: Scene* 4).

The dawn brings with it a bloody battle: and Kudila sends away on garrison duty all suspected to be too faithful to the king and among them one Narayana, a valiant keen-sighted attendant, thoroughly devoted to Jivaka though only despised in return. Meantime he so disposes the army that the king is exposed to the brunt of the attack.—(*Act IV: Scene* 1). But an unexpected event in a different quarter throws the whole army into hopeless confusion. A soldier in the wing commanded by Paladeva pushes himself up to his general, and then stepping forward with a golden bangle in his hand, fells him down with a stroke of his spear exclaiming "thus do I avenge my sister's disgrace." Though the mutineer is soon despatched and the general revives from the effects of the blow, the confusion caused by the incident proves irremediable, and the day is irrecoverably lost. In the dreadful carnage that ensues, Jivaka's life is every moment in danger. But Narayana is on his watch from the turrets of the Fort and noticing the first appearance of disorder, he throws himself in a twinkling with the pick of the cavalry into the thickest of the strife, and safely conducts the King and his shattered

army back to the Fort—(*Act IV*: *Scene* 2). Stung with shame, the proud Pandia prepares for suicide; but Narayana opportunely reminds him of his helpless daughter and rescues him from self-immolation. Meantime, the chivalrous Sovereign of Travancore sends a messenger to offer Peace, on condition of Jivaka's paying an annual tribute of a pot of the Tambrapurni water and a garland of Margosa flowers (the national flower of the Pandian Dynasty). But encouraged by Kudila and in the natural reaction of feelings following his previous despair, Jivaka spurns the offer—(*Act IV*: *Scene* 3). Facts, however, cannot be long disguised; and the King comes soon to realize the extent of his defeat and feels all the more exasperated Kudila now uses all his sophistry to turn the monarch's rage upon Narayana at whose doors he lays all the disasters of the day. The mutinous attack upon Paladeva, the prime source of all the confusion, is itself attributed to his jealous instigation, prompted by his not having been made a wing officer; and since the golden bangle found on the person of that soldier bears the Palace mark, it is accepted as affording conclusive evidence of Narayana's complicity. Arraigned on diverse charges of theft, abetment of murder and disobedience of military orders; faithful Narayana makes no defence and he is forth with sentenced to be executed. The unjust sentence raises a mutiny in the ranks of the army which is, however, quelled by an opportune address from Narayana, explaining the circumstances of the situation,—(*Act IV*: *Scene* 4). But Narayana's execution is nevertheless delayed by the King being called away to a private consultation with Sundara who having completed his secret way now visits the King to solicit him to retire through it to his own hermitage and thence to Madura, leaving his new fortress to its inevitable destruction. But Jivaka prefers to die in defence of his town and consents only to send his daughter to the hermitage. The sage then departs promising to return at midnight to take charge of the Princess but without revealing in spite of repeated inquiries, the whereabouts of his secret way. This rouses the suspicion of the foolish King who once more calls in Kudila to help him in the matter. The wicked minister, seeing in the Juncture of affairs a golden opportunity to realize his long clerished ambition, approves of Manonmani being sent away, but throws strong hints against the propriety of her going as a maiden to

a house of strangers; and he so plays upon the poor King's fears and affections, that before they part Jivaka resolves to marry his daughter that very night to Paladeva, so that she might go to the sage's retreat not alone but in company with her husband.—(*Act IV*: *Scene* 5).

But Kudila is still ill at ease with himself. Though a great point in his ambition is secured; the recollection of what took place in the morning with regard to his own son and the mutinous spirit in the army consequent upon his conduct towards Narayana are too much for his cowardly soul; and therefore casting about for a clue to the secret way and wisely connecting it with Sundara's room, he discovers the underground passage and gains the plain outside the Fort. The Travancore camp is now within sight and the thought occurs to him that by promising, not only the trifling tribute demanded, but heavy subsidies in addition, he might pacify the victor and rule as his feudatory, betraying, if need be, the town, his Sovereign and the whole company of Narayana and his mutineers, by revealing the secret way into the Fort. Charmed by the tempting scheme, he moves on and meets Purushothama idly loitering about, alone, love-sick and melancholy. The scheme is then unfolded. Flattered into hope by the attention paid to his overtures, the traitor mentions the secret way and points to the facility it affords for the capture of Jivaka. Purushothama then calls out for a company of his best soldiers and orders also a pair of the strongest fetters. Interpreting the order by the light of his own scheme, Kudila is simply in raptures. But the delusion lasts not long. For, when the soldiers arrive, Kudila is fettered as a prisoner of war, and is told that Travancore will never steal even a victory, but that she feels in honour bound on the other hand, to open the eyes of a deluded Sovereign, foe though he be, to the treachery of his own minister, and accordingly, he is asked at the risk of being flayed alive, to lead the way through the secret path, to the presence of his own royal master. Overreached and crushed in spirit, the traitor finds no escape and urged by the swords of the Travancore soldiers, he silently guides Purushothama through the secret way to the palace.—(*Act V*: *Scene* 1). Meanwhile, Manonmani is informed of the proposed marriage, and though

at first she faints with revulsion, her dutiful soul consents to the self-sacrifice for the sake of her father feeling her duty to those about her, she prays her father to remove the interdict on Vani's marriage, now no longer necessary, and to pardon Narayana on the ground of his past services.—(*Act V : Scene* 2). The requests are of course granted; and preparations are hurried through for a simple wedding. At the appointed time, the sage arrives with Nataraja and his two disciples, and though shocked to hor the proposed marriage, he finds it useless to protest and falls in with the arrangement. The room fitted up for the purpose happens to be the one adjoining the cell from which the secret path springs, and there the nobles of the court and the knights of the army assemble to be present at the marriage and to bid adieu to their beloved Princess. But more persons are destined to witness the occasion than those present in the room. For, Purushothama, now at the end of his sub-terranean journey, is surprised at the splendour of the scene in a palace doomed to so near a destruction, and he stays in the adjoining cell to see what it means. Jivaka then commences the proceeding by explaining the dangers of the situation and the necessity for the hurried marriage and the arranged flight of his daughter, and after obtaining the sanction of the assembly he calls upon Manonmani to throw her bridal garland around the neck of Paladeva. The noble Princess, crushed by the weight of her sorrows, now summons up strength to offer herself up as a sacrifice at the altar of Duty, automatically moves out of her screen and advances to Paladeva, when *lo*! her eyes alight on the figure of Purushothama, who recognizing in Manonmani the image of his own enchanting dreams, has already glided unnoticed to the front ranks of the assembly, sitting spell-bound in pity. Darting with the speed of lightning, Manonmani decks the neck of Purushothama with her garland and swoons away. Attention is now called to the stranger, and confusion follows. But order is soon restored by the commanding personality of Sundara; and Purushothama then introduces Kudila in fetters, explains his business and prepares to retreat with his long-sought bride. All in the assembly, with perhaps the exception of Jivaka shed tears of joy at the mercy of God; and the play ends with the blessings of the King on his beloved daughter and her miraculously discovered bridegroom.

ம. சு..

Such is the oultine of the story; but as it is not intended for acting, it has not been thought necessary to exclude altogether such reflections, descriptions and minor incidents and details, as were found auxiliary to the moral and artistic effects of the play. To the spiritually inclined, some of the incidents may appear capable of allegorical interpretation, and the stanza at the end of each act will perhaps be found helpful in that direction. But in these busy times the charge is apt to be, not that too little of such food for reflection has been Introduced, but by far too much, and in partial extenuation of the offence, it can only be said that the pruning knife has not been left idle, and that several pages of manuscript have been bodily discarded, in consideration of the growing size of the volume. If the hasty reader is still unsatisfied, further condensation must be left to his own discretion, and the fact, that the main thread of the story will not be seriously damaged by the omission of such parts as the following may help him in that process;—description after the classical style of South Travancore in Scene I of Act II, the reflections of Nataraja in the 2nd Shene of Act II and also of Act III. *The Indian Hermit*, introduced in Scene III of Act III, the debate on religious ideals in the last Scene of the same Act, &c. But the author would fain trust, that readers that condescend to look into this volume would not all be hasty or even if hasty, would care for something more than the bare thread of a story.

It remains now only to apologize to the critical reader for the errors and oversights of grammar and expression which perhaps greater vigilance in revising the final proofs (and manuscripts too) might have avoided. The more important of them will be found in the errata at the end of the volume and others of equal consequence, if pointed out, will be mostgratefully acknowledged.

In conclusion, it may be added, that if the work here submitted to the Public, should succeed ever so little in helping the cause of Tamil Literature, the labours spent upon it would not be regarded as taken in vain.

TRIVANDRUM, *March*, 1891. P. S.

முகவுரை

"மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை உண்ணினைந் தேத்தல் செய்வாம்."

" இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவரே தழீஇனார் என்றாலிவ்
விருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ."

" கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மன்னி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ."

என்றெடுத்த ஆன்ரோர் வசனங்கள் உபசாரமல்ல, உண்மையே யென்பது பரத கண்டம் என்னும் இந்தியா தேசத்திலுள்ள பற்பல பாஷைகளைச் சற்றேனும் ஆராய்ந்து ஒப்பிட்டு நோக்கும் யாவர்க்கும் திண்ணிதிற் றுணியத் தக்கதே. பழமையிலும், இலக்கண நுண்மையிலும், இலக்கிய விரிவிலும் ஏனைய சிறப்புக்களிலும் மற்றக் கண்டங்களிலுள்ள எப்பாஷைக்கும் தமிழ் மொழி சிறிதும் தலை கவிழ்க்கும் தன்மையன்று. இவ்வண்ணம் எவ்விதத்திலும் பெருமைசான்ற இத் தமிழ்மொழி பற்பல காரணச் செறிவால், சில காலமாக நன்கு பாராட்டிப் பயில்வார் தொகை சுருங்க, மாசடைந்து நிலை தளர்ந்து, நேற்றுதித்த தெலுங்கு முதலிய பாஷைகளுக்கும் சமமோ தாழ்வோ என்று அறியாதார் பலரும் ஐயமுறும்படி அபிவிருத்தியற்று நிற்கின்றது. இக்குறைவு நீங்கத் தங்கள் தங்களுக் கியன்றவழி முயற்சிப்பது, தங்களை மேம்படுத்தும் தமிழ்மொழியைத் தம்மொழியாக வழங்கும் தமிழர் யாவரும் தலைக்கொள்ள வேண்டிய தவறாக் கடன்பாடன்றோ!

மேற்கூறிய முயற்சிக்கேற்ற வழிகள் பலவுளவேனும் அவற்றுள் இரண்டு தலைமையானவை. முதலாவது முன்னோரால் பொருட்சுவையும் சொற்சுவையும் பொலிய இயற்றப்பட்டிருக்கிற அருமையான நூல்களுள் இறந்தவை யொழிய இனியும் இறவாது மறைந்து கிடப்பனவற்றை வெளிக்கொணர்ந்து நிலைபெறச் செய்தலேயாம். இவ்வழியில் பெரிதும் உழைத்துப் பெரும்புகழ் படைத்த திருவாளர் தாமோதரம் பிள்ளையவர்கள், திரு. வே. சாமிநாதய்யர் அவர்கள் முதலிய வித்துவ சிரோமணிகளுடைய நன்

முயற்சிக்கு ஈடு கூறத்தக்கது யாது? தம் மக்கட்கு எய்ப்பில் வைப்பாக இலக்கற்ற திரவியங்களைப் பூர்விகர்கள் வருந்திச் சம்பாதித்து வைத்திருக்க அம்மக்கள், அவை இருக்குமிடந்தேடி எடுத்தநுபவியாது இரந்துண்ணும் ஏழைமைபோலன்றோ ஆகும், ஈடு மெடுப்பு மற்ற நுண்ணிய மதியும் புண்ணிய சரிதமுமுடைய முன்னோர் ஆயிரக்கணக்கான ஆண்டு உழைத்து ஏற்படுத்தியிருக்கும் அரிய பெரிய நூல்களை நாம் ஆராய்ந்து அறிந்து அநுபவியாது வாளா நொந்து காலம் போக்கல்! ஆதலால் முற்கூறிய உத்தம வித்துவான்களைப் பின்றொடர்ந்து நம் முன்னோர் ஈட்டிய பொக்கிஷங்களைச் சோதனைசெய்து தமிழராகப் பிறந்த யார்க்கும் உரிய பூர்வார்ஜித கல்விப் பொருளை க்ஷேமப்படுத்தி யநுபவிக்க முயல்வது முக்கியமான முதற் கடமையாம்.

பூர்வார்ஜித தனம் எவ்வளவு பெரிதாக இருப்பினும் அதனைப் பாதுகாப்பதோடு ஒவ்வொருவரும் தத்தமக்கியன்ற அளவு உழைத்துச் சொற்பமாயினும் புதுவரும்படியைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்பது பொதுவாக உலக நோக்கமாக இருப்பதால், முற்கூறிய முயற்சியோடு இரண்டாவதொரு கடன்பாடும் தமிழர் யாவர்க்கும் விட்டு விலகத் தகாததாகவே ஏற்படும். பூர்வார்ஜிதச் சிறப்பெல்லாம் பூர்விகர்கள் சிறப்பு; அந்த அந்தத் தலைமுறையார்களுக்கு அவரவர்கள் தாமே ஈட்டிய பொருளளவும் சிறப்பேயொழிய வேறில்லை. அத்தலைமுறையாரைப் பின் சந்ததியார் பேணுவதற்கும் அதுவே யொழிய வேறு குறியுமில்லை. ஆனதினால் எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் பூர்விகர்களால் தங்களுக்குச் சித்தித்திருப்பவற்றை ஒவ்வொரு தலைமுறையாரும் பாதுகாப்பதுமன்றித் தங்களாற் கூடிய அளவும் அபிவிருத்தி பண்ணவும் கடமை பூண்டவர்களாகின்றார்கள். 'பூர்வார்ஜிதம் மிகவும் பெரியதாயிருக்கின்றதே! நம் முயற்சியால் எத்தனைதான் சம்பாதிப்பினும் நமது பூர்வார்ஜிதத்தின்முன் அது ஒரு பொருளாகத் தோற்றுமா' என மனந்தளர்ந்து கைசோர்வார்க்கு அவர் பூர்வார்ஜிதப் பெருமை கேடு விளைவிப்பதாகவன்றோ முடியும்? அந்தோ! இக்கேட்டிற்கோ நம் முன்னோர் நமக்காக வருந்தியுழைத்துப் பொருளீட்டி வைக்கின்றார்கள்! பிதிர்களாய் நிற்கும் அம் முன்னோர் இவ் விபரீத விளைவைக் கண்டால் நம்மை எங்ஙனம் வாழ்த்துவர்! இக் கூறிய உண்மை செல்வப் பொருளுக்கன்றிக் கல்விப் பொருளுக்கும் ஒரு குடும்பத்துள் வந்த ஒருவனுக்கன்றி ஒரு தேசத்திற் பிறந்த ஒவ்வொரு தலைமுறையாருக்கும் ஒன்றுபோலவே பொருத்தமுடையதாதலால்,

" குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

என்னும் திருக்குறளை நம்பி முன்னோர் யாதேனும் ஒரு வழியில் அபரிமிதமான சிறப்படைந்தாராயின் நாமும் அவர்போலவே இயன்ற அளவும் முயன்று பெருமை பெறக் கருதுவதன்றோ அம் முன்னோர்க்குரிய மக்கள் நாமென முன்னிற்றற்கேற்ற முறைமை!

"தீங்கரும் பீன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்றம் இழந்தாஅங்கு—ஓங்கும்
உயர்குடி யுட்பிறப்பின் என்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை."

ஆதலால் அருமையாகிய பூருவ நூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற்கடமையோடு அவ்வழியே முயன்று அந்த அந்தக் காலநிலைக் கேற்றவாறே புதுநூல்களை இயற்ற முயலுதல் தமிழ் நாடென்னும் உயர்குடியிற் பிறக்கும் ஒவ்வொரு தலைமுறை யாருக்கும் உரித்தான இரண்டாம் கடமையாய் ஏற்படுகின்றது.

மேற்கூறிய இரண்டாம் கடமையைச் சிரமேற்கொண்டு தமிழோர் என்னும் பெரிய குடும்பத்துள்ளே தற்காலத்துள்ள தலைமுறையாருட் கல்வி கேள்வி அறிவு முதலிய யாவற்றுள்ளும் கனிஷ்டனாகிய சிறியேன்,

"இசையா தெனினும் இயற்றியோ ராற்றல்
அசையாது நிற்பதாம் ஆண்மை

என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து நவீனமான பல வழிக ளுள்ளும் என் சிறுமதிக் கேற்றதோர் சிறுவழியிற் சிலகாலம் முயன்று வடமொழி முதலிய பாஷைகளிலுள்ள நாடக ரீதியைப் பின்தொடர்ந்து இயற்றிய 'மனோன்மணீயம்' என்னும் இந்நாடகம், பூர்வீக இலக்கியங்களுடன் சற்றேனும் உவமிக்க இயையாதெனி னும், ஆஞ்சனேயராதி வானர வீரர்கள் சேதுபந்தனஞ் செய்யுங் காலத்தில் கடனீரிலே தோய்ந்து மணலிற் புரண்டு அம்மணலைக் கடலில் உகுத்த சிறு அணிற்பிள்ளையின் நன்முயற்சி அங்கீகரிக் கப்பட்டவாறே, கல்வி கேள்வியால் நிறைந்த இத் தலைமுறைச் சிரேஷ்டர் அங்கீகரித்து எனது இச்சிறு முயற்சியும் தமிழ் மாதா வுக்கு அற்பிதமாம்படி அருள்புரியாதொழியார் என நம்பிப் பிரக டனம் செய்யப்படுகின்றது.

இந்நாடகம் வடமொழி ஆங்கிலேயம் முதலிய பாஷைகளில் உள்ள நாடக வழக்கிற் கிசையச் செய்திருப்பதால் இதனுள்ளடங் கிய கதை அங்கங்கே நடந்தேறும் சம்பாஷணைகளாலும் அவாய் நிலைகளாலும் கோவைப்படுத்தி அறிந்துகொள்ள வேண்டியதா யிருக்கின்றது. இக்கதை புதிதாக இருப்பதினால் அவ்விதம் கோவைப்படுத்தி அறிந்துகொள்ளுவோர்க்கு அநுகூலமாகச் சுருக்கி ஈண்டுக் கூறப்படுகிறது.

கதைச் சுருக்கம்

முற்காலத்தில் மதுரைமாநகரில் ஜீவகன் என ஒரு பாண்டியன் அரசு புரிந்துவந்தான். அவன் பளிங்குபோலக் களங்கமில்லாத நெஞ்சினன். அவன் மந்திரி குடிலன் என்பவன், ஒப்பற்ற சூழ்ச்சித்திறமை யுடையவனாயினும், முற்றும் தன்னயமொன்றே கருதும் தன்மையனா யிருந்தான். அதனால் அரசனுக்கு மிகவும் உண்மையுடையவன்போல நடித்து அவனை எளிதிலே தன் வசப்படுத்திக்கொண்டான். அங்ஙனம் சுவாதீனப்படுத்திய பின்பு தன் மனம் போனபடியெல்லாம் அரசனை யாட்டித் தன் செல்வமும் செல்வாக்கும் வளர்த்துக்கொள்ளத் தொன்னகராகிய மதுரை இடங்கொடாதென உட்கொண்டு அந்நகரின்மேற் பாண்டியனுக்கு வெறுப்பு பிறப்பித்து, திருநெல்வேலி என்னும் பதியிற் கோட்டை கொத்தளம் முதலியன இயற்றுவித்து, அவ்விடமே தலைநகராக அரசன் இருந்து அரசாளும்படி செய்தான். முதுநகராகிய மதுரை துறந்து கெடுமதியாளனாகிய குடிலன் கைப்பட்டு நிற்கும் நிலைமையால் ஜீவகனுக்கு யாது விளையுமோ என இரக்கமுற்று அவனுடைய குலகுருவாகிய சுந்தர முனிவர் அவனுக்குத் தோன்றாத் துணையாயிருந்து ஆதரிக்க எண்ணித் திருநெல்வேலிக் கருகிலுள்ள ஓர் ஆச்சிரமம் வந்தமர்ந்தருளினர். முனிவர் வந்து சேர்ந்தபின் நிகழ்ந்த கதையே இந் நாடகத்துட் கூறப்படுவது.

முனிவர் எழுந்தருளியிருப்பதை யுணர்ந்து ஜீவகன் அவரைத் தன் சபைக் கழைப்பித்து, தனது அரண்மனைக் கோட்டை முதலியனவற்றைக் காட்டி அவை சாசுவதம் என மதித்து வியந்து கொள்ள, அவ்விறுமாப்பைக் கண்ணுற்ற முனிவர், அவற்றின் நிலையாமையைக் குறிப்பாகக் கூறியும் அறியாதொழிய, அவன் குடும்பத்திற்கும் கோட்டை முதலியவற்றுக்கும் க்ஷேமகரமாகச் சில கிரியா விசேஷம் செய்யும் பொருட்டு அவன் அரண்மனையில் ஓரறை தம் சுவாதீனத்து விடும்படி கேட்டு, அதன் திறவுகோலை வாங்கிக்கொண்டு தம் ஆச்சிரமம் போயினர். ஜீவக வழுதிக்குச் சந்ததியாக மனோன்மணி என்னும் ஒரே புத்திரிதான் இருந்தனள். அவள் அழகிலும் நற்குண நற்செய்கைகளிலும் ஒப்புயர்வற்றவள். அவளுக்கு அப்போது வயது பதினாறாக இருந்தும், அவள் உள்ளம் குழந்தையர் கருத்தும் துறந்தோர் நெஞ்சம் போல யாதொரு பற்றும் களங்கமுமற்று நின்மலமாகவே யிருந்தது. அவளுக்கு உற்ற தோழியாக இருந்தவள் வாணி. இவள் ஒழுக்கம் தவறா உளத்தள்; தனக்கு நன்றெனத் தெள்ளிதில் தெளிந்தவையே நம்புந் திறத்தள். அல்லனவற்றை அகற்றும் துணிபுமுடையவள். இவ் வாணி நடராஜனென்ற ஓர் அழகமைந்த ஆனந்த புருஷனை யறிய, அவர்களிருவர் உள்ளமும் ஒருவழிப்படர்ந்து காதல் நேர்ந்தது. அதற்கு மாறாக இவ் வாணி

யினது பிதா மிகப் பொருளாசை யுடையோனுதலால், குடில னுடைய மகன் பலதேவன் என்னும் ஒரு துன்மார்க்கனுக்குத் தன் மகளை மணம்புரியில் தனக்குச் செல்வமும் கௌரவமும் உண்டாமென்ற பேராசை கொண்டு அவ்வாறே அரசன் அநுமதி பெற்று விவாகம் நடத்தத் துணிந்தனன். அதனுல் வாணிக்கு விளைந்த சோகம் அளவற்றதா யிருந்தது. இச்சோகம் நீங்க மனோன்மணி பலவாறு ஆறுதல் கூறும் வழக்கமுடையவளா யிருந் தாள். இவ்வாறிருக்கும்போது முனிவர் கோட்டை காணவந்த நாளிரவில் ஈடுமெடுப்புமற்ற சேரதேசத் தரசனுகிய புருடோத் தமவர்மனைப் பூருவகரும பரிபாகத்தால் மனோன்மணி கனுக்கண்டு மோஹம் கொள்ள அவட்குக் காமசுரம் நிகழ்ந்தது. அச் சுரம் இன்ன தன்மையதென்றுணராது வருந்தும் ஜீவகனுக்குத் தெய்வ கதியாய்த் தம் அறைக்கு மறுநாட்காலமே வந்த முனிவர் மனோன் மணி நிலைமை காமசுரமே எனக் குறிப்பாலுணர்ந்து அவள் நோய் நீங்கு மருந்து மணவினையே எனவும், அதற்கு எவ்விதத்திலும் பொருத்த முடையோன் சேர தேசத்துப் புருடோத்தமனேயென வும் அவ்வரசனது கருத்தினை நன்குணர்ந்து இம்மணவினை எளிதில் முடிக்க வல்லோன் நடராஜனே யெனவும் உபதேசித்தகன்முர். வாணியினது காதலனுகிய நடராஜன்மேல் அவள் பிதா ஆரோ பித்திருந்த அபராகங்களால் வெறுப்புக் கொண்டிருந்த பாண்டி யன் அக்குருமொழியை உட்கொள்ளாதவனுய்க் குடிலனுடைய துன்மந்திரத்தை விரும்பினன். குடிலனோ தன்னயமே கருதுவோ னுதலால், சேர தேசத்தரசன் மருமகனுக வருங்காலத்தில் தன் சுவாதந்தரியத்திற்கு எங்ஙனம் கெடுதி வருமோ என்ற அச்சத்தா லும், ஒரு பால் தன் மகனுகிய பலதேவனுக்கே மனோன்மணியும் அவட்குரிய அரசாட்சியும் சித்திக்கலாகாதா என்ற பேராசையா லும் முனிவர் கூறிய மணத்தைத் தடுப்பதற்குத் துணிந்து,தொடக் கத்திற்பெண்வீட்டார் மணம் பேசிப்போதல் இழிவென்னும் வழக் கத்தைப் பாராட்டிப் புருடோத்தமன் மனக்கோள் அறிந்தே அதற்கு யத்தனிக்கவேண்டுமென்றும், அப்படியறிதற்குப் பழைய சில விவாதங்களை மேற்கொண்டு ஒரு தூது அனுப்பவேண்டுமென் றும், அப்போது கலியாணத்திற்குரிய சங்கதிகளையும் விசாரித்து விடலாமென்றும் ஒரு சூதுகூற அதனை அரசன் நம்பி, குடிலன் மகன் பலதேவனையே இவ்விஷயத்திற்குத் தூதனுக அனுப் பினன்.

சேரதேசத்திலோ புருடோத்தமன் தனக்குச் சிலநாளாக நிகழ்ந்துவரும் கனுக்களில் மனோன்மணியைக் கண்டு காமுற்று அவள் இன்னுளென வெளிப்படாமையால் மனம் புழுங்கி யாருட னேனும் போர் நேர்ந்தால் அவ்வாரவாரத்திலாயினும் தன் மனத் தைக் கொள்ளைகொள்ளும் கனுவொழியாதாவென்ற நோக்க

முடனிருக்கும் சந்தியாக இருந்தது. அதனுற் பலதேவன் சென்று தன் பிதா தனக்கு இரகசியமாகக் கற்பித்தனுப்பியபடி சேரன் சபையில் அகௌரவமான துர்வாதம் சொல்லவே புருடோத்தமன் கோபம் கொண்டு போர்க்கோலம் பூண்டு பாண்டி நாட்டின்மேற் படையெடுத்துப் புறப்பட்டான். அச்செய்தி அறிந்து ஜீவகனும் போருக்கு ஆயத்தமாகவே இருபடையும் திருநெல்வேலிக்கெதிரிலே கைகலந்தன. அப்படிப் போர் நடக்கும்போது பாண்டியன் சேனையின் ஒரு வியூகத்திற்குத் தலைவனுக இருந்த பலதேவனை அவன் கீழிருந்த ஒரு சேவகன் தன் வேலாலே தாக்க, அதனுல் அவன் மூர்ச்சிக்கவும் படைமுழுதும் குழம்பவும் சங்கதி ஆயிற்று. அப்படித் தாக்கநேரிட்ட காரணமேதென்றுல், பலதேவன் களவு வழிக் காமம் துய்க்கும் துன்மார்க்கனுதலால் அப்படைஞனது சகோதரியைக் கற்பழித்துக் கெடுத்துவிட்டதுபற்றி யுண்டான வைரமே என்பது, படைஞன் வேலாற் பலதேவனைத் தாக்கிய பொழுது கூறிய வன்மொழியாலும் அவன் தங்கைக்கு அரண் மனையினின்றும் பலதேவன் திருடிப் பரிசாக அளித்த ஒரு பொற் றெுடி அவன்கையில் அக்காலம் இருந்தமையாலும் வெளிப்படுகின்றது. படை நியதி கடந்த அச்சேவகனை அருகுநின்ற வீரர் அக்கணமே கொன்றுவிட்டார்கள். பலதேவனும் மூர்ச்சை தெளிந்துகொண்டான். ஆயினும் படையிற் பிறந்த குழப்பம் தணியாது பெருகிவிட்டதனுல் பாண்டியன்சேனை சின்னபின்னப் பட்டுச் சிதறுண்டு ஜீவகன் உயிர் தப்புவதும் அரிதாகும்படி தோல்வி நேர்ந்தது. சத்தியவாதியாகிய நாராயணன் என்னும் ஒரு சுத்தவீரன் அக்காலம் வந்து உதவி செய்யாவிடில் அப்போர்க் களத்தில் ஜீவகன் மாண்டே யிருப்பன்.

இந் நாராயணன் யாரென்றுல், நடராஜனுடைய நண்பன். இவன் குடிலனுடைய சூதுகள் தெரிந்தவன். அரசன் நிந்தித்துத் தள்ளினும் அவனைக் காப்பாற்றும் பொருட்டு அவனை விட்டு நீங்காது மதுரையினின்றும் அவனோடு தொடர்ந்து வந்த பரோபகாரி. குடிலன் இவன் திறமும் மெய்ம்மையும் அறிந்துளானுதலால், இந் நாராயணன் போர் முகத்திருக்கில் தான் எண்ணியபடி ஜீவகனுயிருக்குக் கேடுவரவொட்டான் எனக் கருதிச் சண்டை ஆரம்பிக்கும் முன்னமே அவனைக் கோட்டைக் காவலுக்காக நியமித்தனுப்பினுன். ஆயினும் போர்க்களமே கண்ணுக இருந்த நாராயணன் சேனையிற் குழப்பம் பிறந்தது கண்டு சில குதிரைப் படைகளைத் திரட்டிக் கொண்டு திடீரென்று பாய்ந்து சென்று அரசனையும் எஞ்சின சேவகரையும் காப்பாற்றிக் கோட்டைக்குட் கொண்டுவந்து விடுத்தான். சுத்தவீரனுகிய அரசன் இங்ஙனம் தான் பகைவருக்கு முதுகிட்ட இழிவை நினைந்து நினைந்து துக்கமும் வெட்கமும் தூண்டவே தற்கொலை புரிய யத்னிக்குதம்

எல்லை நாராயணன் மனோன்மணியினது ஆதரவின்மையை அரச னுக்கு நினைப்பூட்டி அக் கொடுந்தொழிலிலிருந்து விலக்கிக் காத்தான். அவனது நயவுரையால் அரசன் ஒருவாறு தெளிவடைந்திருக்கும்போது சேரன் விடுத்த ஒரு தூதுவன் வந்து, ஒரு குடத் தாமிரவர்ணி நீரும் ஒரு வேப்பந்தாரும் போரிலே தோற்றதற்கு அறிகுறியாகக் கொடுத்தால் சமர் நிறுத்துவதாகவும், அன்றேல் மறுநாட் காலையிற் கோட்டை முதலிய யாவும் வெற்றிடமாம்படி தும்பை சூடிப் போர் முடிப்பதாகவும் கூறினன். போரில் ஒரு முறை தான் புறங்கொடுத்த புகழ்கெடுதியை உயிர் விடுத்தேனும் நீக்கத் துணிவுகொண்ட ஜீவகன் அதற்குடன்படாமல் மறுத்து விட்டு, பின்னும் சமருக்கே யத்தனித்துத் தன் அரண்களைச் சோதித்து நோக்குங்கால் அவை ஒருநாள் முற்றுகைக்கேனும் தகுதியற்று அழிந்திருப்பதைக் கண்ணுற்று, அவ்வளவாகத் தன் படைமுற்றும் தோற்க நேரிட்ட காரணம் வினவலாயினன். தன் கருத்திற் கெதிராக அரசனைக் காப்பாற்றி வரும் நாராயணன்மேற் றனக்குள்ள பழம்பகை முடிக்க இதுவே தருணம் எனக் கண்டு அரண் காவலுக்கு நியமிக்கப்பட்ட நாராயணன் காவல் விடுத்துக் கடமைமீறி யுத்தகளம் வந்ததே காரணமாகக் காட்டிக் கோப மூட்டிப் படையிற் பிறந்த குழப்பத்திற்கு ஏதுவாக பலதேவனை ஒரு சேவகன் வேலாற் றுக்கினதும் தெரிவித்து, அதுவும் வியூகத் தலைவனாக ஆக்கப் பெறாத பொறாமையால் நாராயணன் ஏவிவிட்ட காரியமே எனவும் அத்தொழிலுக்குப் பரிசாக அவன் அரண்மனை யினின்றும் திருடிக்கொடுத்ததே அவன் கையிலிருந்த அரண்மனை முத்திரை பொறித்த பொற்றொடி எனவும் குடிலன் ஒரு பொய்க் கதை கட்டி அதனை அவன் நம்பும்படி செய்தான். அவ்வாறே களவு கொலை ஆஞ்ஞாலங்கனம் முதலிய குற்றங்களை நாராயணன் மேற் சுமத்தி அவற்றிற்காக அவனைக் கழுவேற்றும்படி விதியும் பிறந்தது.

இத்தருணத்தில் சுந்தர முனிவர் அத்தியந்த ஆவசிகமான ஓரிரகசியாலோசனைக்கு அரசனை யழைப்பதாகச் செய்தி வந்தமை யால் நாராயணனை அவ்விதிப்படி கழுவேற்றவில்லை. முனிவர் இப்போது வந்த காரணம் என்னவென்றால், ஜீவகன் குடிலன் வசத்தனாய், நெல்வேலிக் கோட்டையே சாசுவதமென இறுமாந்திருந்தமை கண்டு பரிதாபம் கொண்டு, தமக்கென இரந்து வேண்டிக்கொண்ட அறைமுதல், தமதாச்சிரம வெளிவரையும், ஆபத்காலோப யோகமாக அதிரகசியமான ஒரு சுருங்கை உழைத்துச் சமைத்துக்கொண்டு, பற்றுக்கோடற்று நின்ற ஜீவகனையும் அவன் மகளையும் கேடுற்ற கோட்டையினின்றும் தமது ஆச்சிரமத்திற்கு அச் சுருங்கை வழி யழைத்துச் செல்ல வுன்னியே சுந்தரர் இத்தருணம் எழுந்தருளினர். கோட்டையின் நிலையாமையுணர்ந்

தும் அதின்மேல் வைத்த அபிமானம் ஒழியாமையால் அஃதுடன் தான் முடியினும் இன்னும் ஒருமுறைப் போருக்கஞ்சிப் புறங் கொடுத்தல் தகாதெனா ஜீவகன் துணிந்து மறுக்க, மனோன்மணி, பாண்டியர் குலத்திற்கு ஏக சந்ததியாக இருப்பதனால் மற்றையர் எக்கேடுறினும் அவளையேனும் காப்பாற்றுதல் தம் கடமையென ஒரு தலையா உறுத்து முனிவர் கூற, மன்னவன் அங்ஙனம் இயைந்து நடுநிசியில் முனிவரோடு தன் மகளை ஆச்சிரமம் அனுப் புவதாக ஒப்புக்கொண்டான். முனிவரும் சம்மதித்து அகன்றார்; உடனே நிசாமும் தோன்றிற்று. தன் அருமை மகளைப் பிரியும் வருத்தம் ஒருபுறமும் பிரியாதிருக்கில் அவட்குண்டாகும் கெடுதி யைக் குறித்த அச்சம் மற்றொரு புறமாக ஜீவகன் சித்தத்தைப் பிடித்தலைக்கக் கலக்கமுற்று, குருமொழியிலும் ஐயம் பிறந்து, குடிலனை வரவழைத்து, முனிவர் அதிரகசியமாகக் கூறிய சுருங்கை முதல் சகல சங்கதியும் தெரிவித்து அவனது அபிப் பிராயம் உசாவுவானாயினன். அதற்கு அப்பாதகன் இதுவே தன் மனக்கோள் நிறைவேற்றற்குரிய காலமெனத் துணிந்துகொண்டு மனோன்மணியை இடம்பெயர்ப்பது தற்கால நிலைமைக்கு எவ் விஷயத்திலும் உத்தம மெனவும், ஆயினும் மணவினை முடியா முன்னம் அனுப்புதலால், கன்னியாகிய அவளுக்குப் பழிப்புரைக் கிடமாவதே யல்லால் அரசனுக்குச் சற்றும் சித்த சமாதானத்திற் கிடமில்லையெனவும் அவன் நெஞ்சில் சஞ்சலம் விளைவித்து, ஜீவ கன் தானாகவே பலதேவனுக்கு மனோன்மணியை அன்றிரவே கலி யாணம் செய்துகொடுத்து முனிவர் ஆச்சிரமத்திற்கு மகளையும் மருமகனையும் சேர்த்து அனுப்புவதாகத் துணியும்படி தூண்டி விட்டுத் தான் நெடுங்காலமாகக் கொண்டிருந்த அபிலாஷத்தைப் பூர்த்திப்படுத்திக் கொண்டான்.

ஆயினும் அவ்வளவோடு நில்லாமல், தன்னை யறியாமல் முனி வர் வகுத்த கள்ள வழியைக் கண்டறிய வேண்டுமென்று விருப் புற்று, அது அவர் வந்த அன்றே தமக்காகப் பெற்றுக்கொண்ட அறைக்குச் சம்பந்தப் பட்டிருப்பதே இயல்பென ஊகித்து, அவ் வறையிற் சென்று நோக்கி அச் சுருங்கையைக் கண்டுபிடித்து அவ் வழியே போய் வெளியேறிப் பார்க்குங்கால், சத்துரு பாசறை அருகே தோன்றிற்று. அன்று பகலில் தன் மகனுக்குச் சண்டை யில் நேரிட்ட மோசடிபோலத் தனக்கும் இனி வரக்கிடக்கும் போரில் உட்பகையாலோ வெளிப்பகையாலோ யாதேனும் அபா யம் நேரிட்டுவிடலாமென்ற பயத்தாலும், மனோன்மணி விவாகம் எப்படியும் அன்றிரவே நடந்தேறுமென்ற துணிவாலும், நடந் தேறில் ஜீவகனது பிரீதியால் சித்திக்கத்தக்கது வேறொன்றுமில்லை யென்ற உறுதியாலும், கோட்டைக்குத் திரும்ப வேண்டுமென்ற எண்ணம் விடுபட, தான் வருந்திக் கண்டுபிடித்த கற்படையைச்

சேரனுக்குக் காட்டி அவ்வழியே அவனை அழைத்துச்சென்று யாதொரு உயிர் சேதத்திற்கு மிடமில்லாமல், பாண்டியனையும் அவன் கோட்டையினையும் சுலபமாகப் பகைவன் கையில் ஒப் பித்துவிட்டால், ஒரு குடம் ஜலத்திற்கும் ஒரு பூமாலைக்குமாகச் சமரை நிறுத்தித் தன்னூருக்குத் திரும்ப எண்ணின சேரன், தன் னையே முடிசூட்டிச் சிங்காதனம் சேர்க்காதொழிவனோ என்ற பேராசை பிடர்பிடித்துந்தவும் ஊழ்வலியொத்து நிற்கவும் செய்த தினால் அத் துரோகியாகிய குடிலன் மெள்ள மெள்ளப் பாசறை நோக்கிப் போகவே கனவில் மனோன்மணியினது உருவங்கண்டு காமுற்றநாள் முதலாக யாதொன்றிலும் மனஞ் செல்லாதவனாய் இரவெல்லாம் நித்திரை யற்றுத் தனியே திரிந்து வருந்தும் புரு டோத்தமனை நடுவழியிற் சந்தித்துக்கொண்டான். அதுவும் தனது பாக்கியக் குறியாகவே மதித்து மகிழ்ந்த குடிலன், எதிர்ப்பட்ட சேரனிடம் தனது துரோகசிந்தனையை வெளிப்படுத்த, தன்னயங் கருதாச் சதுரனாகிய புருடோத்தமன் தன் சேவகரைக் கூவிக் குடிலன் காலிலும் கையிலும் விலங்கிடுவித்து, "வீரமே உயிராக வுடைய வஞ்சி வேந்தருக்கு வெற்றி யன்று விருப்பு, இவ்வித இராஜ துரோகிகளைக் காட்டிக் கொடுத்து, மாற்றலராகிய மன்ன வரையும் இரட்சித்துப் பின்பு வேண்டுமேற் பொருது தமது வீரம் நாட்டலேயாம்" என அவனுக்கு விடைகூறி, அவன் கூறிய சுருங்கை வழியே ஜீவகன் சபைக்கு வழிகாட்டி வரும்படி கட்டளை யிட்டான். இம்மொழிக் கேட்ட பாவி இடியொலி கேட்ட பாம்பு போலத் திடுக்கிட்டுத் திகைத்து நின்றான். ஆயினும் தானிட்ட கட்டளை மீறில் சித்திரவதையே சிக்ஷையாமென்று சேரன் சினந்து கூற, அதற்கு அஞ்சி அவ்வாறே கற்படைக்கு வழிகாட்டி நடப்பா னாயினன்.

இப்பால் ஜீவகன் தன் மகளைப் பலதேவனுக்கு மணஞ்செய் வித்து இருவரையும் முனிவர் ஆச்சிரமம் அனுப்புவதே தகுதி யெனத் தெளிந்தவாறே அச்செய்தியை மனோன்மணிக் கறிவிக்க அது அவள் செவிக்குக் காய்ச்சின நாராசம்போ லிருந்ததாயினும் தன் பிதாவுக்கு நேர்ந்த ஆபத்துக் காலத்தை நன்குணர்ந்து அவ னுக்கேற்றபடி நடந்து அவனைத் தேற்றுவதே தற்கால நிலைக் கேற்ற தனது கடமைப்பாடெனத் தெளிந்து அங்ஙனம் ஒப்புக் கொண்டதுமன்றி, தன்பாடு எங்ஙனம் ஆயினும் தன்னைச் சார்ந்தவர் சுகத்தைப் பாராட்டும் பெருங் குணத்தால், காதல் கொண்டிருக்கும் வாணி, தன் கருத்திற்கிசைய நடராஜனை மணஞ் செய்து கொள்ளவும், நெடுங்காலமாகத் தன் குடும்ப ஊழியம் தலைக்கொண்டு நின்ற நாராயணன் செய்த தவறு யாதேயாயினும் அதனைப் பொறுத்து அவனைச் சிறை விடவும் தன் பிதாவினிடம் விரும்பிக் கேட்டு கொண்டனள். அப்படியே ஜீவகன் அனுமதி

கொடுத்து அகமகிழ்ந்து மணவினைக்கு ஆயத்தம் செய்யவே, நடுநிசி சமீபிக்க முனிவரும் நடராஜனும் வந்து சேர்ந்தார்கள். தாம் போய் மீளுவதற்குள்ளாக குடிலன் செய்த துராலோசனையும், அதற்குடன்பட்ட மன்னவனுடைய ஏழைமையும், கருணைவிலாசம் இருந்தமையும் கண்டு வியந்து, அரசன் நிச்சயித்தவண்ணமே நடத்த சுந்தரர் இசைந்தார்.

கற்படைக் கருகில் உள்ள மணவறையை விவாக முகூர்த்தத் திற்கிசைந்தவாறு அலங்கரித்து, அதில் குடிலன் ஒழிய மற்ற மந்திரிப் பிரதானிகளுடன் முனிவர் ஜீவகன் நடராஜன் பலதேவன் நாராயணன் முதலிய அனைவரும் கூடிக் குடிலன் வரவிற்குச் சற்று எதிர்ப்பார்த்திருந்தும் வரக்காணாமையால் மணவினைச் சடங்குகள் தொடங்கி, பலதேவனுக்கு மாலைசூட்ட மனோன்மணியை வரவழைக்கும் எல்லை, குடிலன் வழிகாட்ட கற்படை வழிவந்த புருடோத்தமனும் முனிவ ரறையில் வந்து சேர்ந்து அடுத்த அறையாகிய மணவறையில் நடக்கும் ஆகோஷம் என்ன 'வென்று நோக்கவே, தன் திரைவிட்டு, வெளிவந்து பலதேவனெதிரே மணமாலையும் கையுமாய்ச் சித்திரப் பிரதிமைபோல உணர்வற்றுச் செயலற்று நின்ற தன் காதலியாகிய மனோன்மணியைக் கண்ணிரண்டும் களிக்கக் காணலும், பள்ளத்துட் பாயும் பெருவெள்ளம்போல் அவாப்பெருகியீர்த்தெழ, திடீரென்று கடிதிற் குதித்து யாரும் அறியாது சபையுட் புகுந்து கையற்ற சோகத்தால் மனமிறந்து நின்ற மனோன்மணிதன் கண்முன் சென்று நின்றனன். தன்னுள்ளத்திருந்த தலைவன் இங்ஙனம் பிரத்தியக்ஷப்படலும் அக்கணமே ஆனந்தப் பரவசப்பட்டு மனோன்மணி, தான் கைக்கொண்ட மணமாலையை அவன் கழுத்தோடு சேர்த்துத் தற்போத மிழந்து அவன் தோண்மேல் வீழ்ந்து மூர்ச்சை யாயினள். இங்ஙனம் அயலான் ஒருவன் சபையுட் புகுந்ததும், மனோன்மணி அவனுக்கு மாலைசூட்டி மூர்ச்சித்ததும் கண்டு ஜீவகனுதியர் திடுக்கிட்டுச் சூதெனக் கருதிப் பொருதற்கெழுங்கால், சுந்தர முனிவர் கையமைத்துச் சமாதானம் பிறப்பிக்கப் புருடோத்தமன், குடிலன் தன்னிடத்தில் வந்து கூறிய துரோகச் சிந்தனையும் தான் அதற்கிசையாது அவனையே கால் யாப்பிட்டு ஜீவகனுடன் ஒப்புவிக்கக் கொணர்ந்தமையும் கூறிக் குடிலனை விலங்கும் காலுமாகச் சபைமுன் நிறுத்திவிட்டு, தனக் குயிர்நிலையாநின்ற மனோன்மணியுடன் தன் பாசறைக்கு மீள யத்தனிக்குமளவில், சுந்தர முனிவர் ஆஞ்ஞையால் ஜீவகன் மனந்தெளிந்து மகளையும் மருமகனையும் வாழ்த்த அதுகண்ட யாவரும் கண்படைத்த பெரும் பயனடைந்து அருட்டிறம் புகழ்ந்து ஆனந்தம் அடைந்தனர்.

இதுவே இந்நாடகத்துள் வரும் கதையின் சுருக்கம். இக்கதையை வேண்டுழி வேண்டுழி விரித்து ஆங்கிலேய நாடகரீதி

யாம் ஜீவகனுதியராகிய கதாபுருஷர்களுடைய குணுதிசயங்கள் அவர் அவர் வாய்மொழிகளால் வெளிப்படும்படி செய்திருப்பது மன்றி, "வாழ்த்து வணக்கத்துடன்" தொடங்கி, "நாற் பொருள் பயக்கும் நடை "யினைக் கூடிய அளவும்தழுவி, "தன்னிகரில்லாத் தலைவனையும்" தலைவியையும் உடைத்தாய், "மலைகடனாடு வள நகர் பருவம் இருசுடர்த் தோற்றம்" என்றின்னவும் பிறவும் ஏற் புழிப் புனைந்து, "நன்மணம் புணர்தலே" முடிவாகக் கொண்டு. "மந்திரம் தூது செலவிகல் வென்றி" எனச் சந்தியிற் றொடர்ந்து "அங்கம் களம்" என்னும் பாகுபாடுடைத்தாய் நிற்கும் இந்நாட கத்தில் தமிழ்க்காவிய வுறுப்புக்கள் பற்பல ஆங்காங்கு வருவித் திருப்பதும் அன்பொடு பார்ப்போர் கண்ணுக்குப் புலப்படலாம்.

இல்லறம் துறவறம் பத்தி ஞான முதலிய மோக்ஷ சாதனங் கள் பொருத்தமுடைய சந்திகளில் வெளிப்படையாக அமைந் திருப்பதுமல்லாமல் இக்கதையினையே ரூபகமாலாலங்காரமாகக் கருதில், தத்துவ சோதனை செய்யும் முமுக்ஷுக்களுக்கு அனுகூல மாகப் பலிக்கவும் கூடும். அப்படி உருவக மாலையாகக் கொள்ளுங் கால், ஜீவகனைச் சார்போதமான ஜீவாத்மா ஆகவும், அவனைத் தன் வசப்படுத்தி யாட்டுவித்த குடிலனை மாயாசத்தியாகவும் மனோன்மணியை ஜீவாத்மாவின் பரிபக்குவகாலத்துதிக்கும் முத் திக்குரிய உத்தம பாகமான சுத்ததத்துவமாகவும், அவள் தோழி வாணியைப் புத்தித்தத்துவமாகவும், அவள் காதலனாகிய நட ராஜனை ஞானதாதாவான உபாசனா மூர்த்தியாகவும், புருடோத்த மனை அனுக்கிரக சத்தியாகவும், சுந்தர முனிவரைக் கருணாநிதி யாகிய ஞானசாரியராகவும், ஜீவகனுக்குத் தலைநகராகக்கூறிய முத்திபுரம் என்னும் மதுரையை ஜீவாத்மா வுதித்தொடுங்கும் மூலத்தானமாகவும், அவனும் குடிலனும் சேர்ந்து கட்டிய நெல் வேலிக் கோட்டையை மாயாகாரியமான அன்னமயாதி பஞ்ச கோசத்தாலமைந்த சரீரமாகவும், அதிலிருந்து மனோன்மணி கண்ட கனவைச் சுத்தாந்தக்கரண ஜநிதமான பரோக்ஷ ஞானமாகவும், சரதேசத்தில் புருஷோத்தமன் கண்ட கனவைப் பரமபசுபதியான ஈசுவரனது அருளின் நிறைவாகவும், மனோன்மணியும் புரு டோத்தமனும் சந்திக்கக் காரணமாக முடிந்த முனிவர் கட்டிய சுருங்கையைப் பிரத்தியக்ஷானுபூதிக் கேதுவான பாச விமோசன பந்தாவாகவும், பிறவும் இம்முறையே பாவித்து உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியது.

ஏறக்குறைய வாசக நடைக்குச் சமமான அகவற்பாவால் இந் நாடகம் பெரும்பாலும் ஆக்கப்பட்டிருக்கிறதினால் ஒருவர் மொழி யாக வரும் ஒரு வரியில் அகவல் அடி முடியாவிடங்களில் அடுத்த வரியில் வரும் சீரோடு சேர்த்து ஆசிரிய அளவடி யாக்கி முடித்துக் கொள்க.

பலவேறு தொழில்களிடையிலும் பிணி கவலையாதிகள் நடுவிலும் ஆங்காங்கு அகப்பட்ட அவகாசங்களிற் செய்யப்பட்டமையால் இந்நாடகத்துட் பல பாகங்கள் என் சிற்றறிவிற்கே திருப்தி தருவன அல்ல. ஆயினும், கல்வி கேள்விகளிற் சிறந்த கனவான்கள் இக் கூறிய குறைவுகளைப் பாராட்டாது என்னை இம்முயற்சிக்குத் தூண்டிவிட்ட நன்னோக்கத்தையே கருதி இந் நவீன நாடகத்தை அநாதரவு செய்யாது கடைக்கணித்து அருள்புரியப் பலமுறை பிரார்த்திக்கின்றேன்.

"பொறியின்மை யார்க்கும் பழியன்(று) அறிவறிந்
தாள்வினை யின்மை பழி."

குரு சுந்தர சரணாலயம்.

களத்திற் கழறிய பொருள்கள்

அங். களம்.

I. க. காவியங்களுக்குரிய மலை நதி அரண் இவற்றின் வருணனை.

உ. மன்மதோ பாலம்பனமும் கேசாதிபாத வருணனையும்.

ங. கணுக்கண்டு காமங்கொண்ட மனோன்மணியின் காமசுர வருணனை.

ச. காதல் நிலைமை வாணியின் வாசகத்தால் வருணிக்கப் படுகிறது.

ரு. குடிலன் துர்க்குணம் அவனது மொழிகளாலேயே விளக்கப்படுகிறது.

II. க. நாட்டுவளம் - திணைமயக்கம் - தூதிலக்கணம் - செங் கோன்மை-அமைச்சு முதலியன.

உ. சூரியோதய வருணனையும் இல்லற இயல்பும்.

ங. பலதேவன் தூதும், புருஷோத்தமன் போருக்கு எழு தலும்.

III. க. புருஷோத்தமன் தூதும், அதனைப் பற்றிய ஜீவக குடிலர் சம்பாஷணையும்.

உ. சூரியாத்தமனமும், சராசரங்களில் தோற்றும் திரு வருள் வைபவமும்.

ங. சந்தியா வருணனையும் மனோன்மணியின் சோக நிலையும், பத்தியின் சுபாவமும், உபயார்த்தமுடைய சிவ காமி சரிதமும்.

ச. சுந்தரமுனிவர் சீடர்கள் போரைப்பற்றியும், மற்றும் உலகியல்களைப் பற்றியும் உரையாடல்.

IV. க. நாற்படை வருணனையும், நாட்டபிமான விளக்கமும், வீரரசமும்.

உ. தரும யுத்தத்தின் நீதியும், படைக்குள் குழப்பம் பிறக்க அரசனுக் கபாயம் நேர்ந்தவழி நாராயணன் காக் கச்சென்ற கதையும்.

அங். களம்.

IV. க. ஜீவகன் சோகமும், குடிலனுடைய தந்திர நடபடியும் பலதேவனுடைய ஒழுப்படியாத் துர்க்குணமும்.

உ. குடிலன் நாராயணன்மேல் பொய்க்குற்றம் காட்டி நிலை நிறுத்திய தந்திரமும் ராஜபத்தியின் இயல்பும்.

ங. அரசர் கடமையும் ஆண்மையும், ஜீவகனது ஏழைமை யும் குடிலனுடைய சமயோசித சாமர்த்தியமும்.

V. க. புருஷோத்தமனுடைய காம நிலைமையும், குடிலன் அகப்பட்டுக் கொண்ட கதையும்.

உ. மனோன்மணியின் பரிபக்குவ நிலைமையும், உத்தம தப சின் இலக்கணமும்.

ங. மனோன்மணி தெய்வ அருளால் புருடோத்தமனைச் சந் தித்து மாலை சூட்டினமை.

உ

மனோன்மணீயம்

பாயிரம்

கடவுள் வணக்கம்

(நேரிசை வெண்பா)

வேத சிகையும் விரிதலையும் மெய்யன்பர்
போதமும் போய்த்தீண்டாப் பூரணமே—பேதமற
வந்தெனை நீ கூடுங்கால் வாழ்த்துவர்யார் வாராக்கால்
சிந்தனையான் செய்ம்முறையென் செப்பு.

தமிழ்த்தெய்வ வணக்கம்

(பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா)

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே. (1)

பல்லுயிரும்பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (2)

இவையிரண்டும் ஆறடித்தரவு

கடல்குடித்த குடமுனியுன் கரைகாணக் குருநாடில்
தொடுகடலை யுனக்குவமை சொல்லுவதும் புகழாமே. (1)

ஒருபிழைக்கா அரனார்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே. (2)

சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே. (3)

வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தி னறிகுறியே. (4)

கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தி லொருபிரதி கருதினதே. (5)

தக்கவழி விரிந்திலகுஞ் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலஞ் சிறந்தவுன்றன் மெய்ச்சரித வியஞ்சனமே. (6)

வடமொழிதென் மொழியெனவே வந்தவிரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடுமேற் குணராரே. (7)

வீறுடைய கலைமகட்கு விழியிரண்டு மொழியானால்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசையறியார். (8)

கலைமகடன் பூர்வதிசை காணுங்கா லவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார். (9)

பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே. (10)

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி. (11)

மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ. (12)

இவை பன்னிரண்டும் தாழிசை

எனவாங்கு

தனிச்சொல்

நிற்புகழ்ந் தேத்துநின் நெடுந்தகை மைந்தர்
பற்பலர் நின்பெரும் பழம்பணி புதுக்கியும்
பொற்புடை நாற்கவிப் புதுப்பணி குயிற்றியும்
நிற்பவர் நிற்க நீபெறும் புதல்வரில்

அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்
ஆயினும் நீயே தாயெனுந் தன்மையின்
மேயபே ராசையென் மீக்கொள ஓர்வழி
உழைத்தலே தகுநியென் றிழைத்தவிந் நாடகம்
வெள்ளிய தெனினும் விளங்குநின் கணைக்காற்கு
ஒள்ளிய சிறுவிர லணியாக்
கொள்மதி யன்பே குறியெனக் குறித்தே.

ஆசிரியச் சுரிதகம்

அவையஞ்சின நெஞ்சோடு கிளத்தல்

(நேரிசை வெண்பா)

அமைய அருளனைத்தும் ஆட்டுமேல் நெஞ்சே
சுமைநீ பொறுப்பதெவன் சொல்லாய்—நமையுமிந்த
நாடகமே செய்ய நயந்தால் அதற்கிசைய
ஆடுவம்வா நாணம் அவம்.

பாயிரம் முற்றிற்று.

வெண்பா	உ-க்கு அடி	8
கலிப்பா	க-க்கு அடி	49
ஆகப் பாயிரம் க-க்கு அடி		57

நாடக உறுப்பினர்கள்

ஜீவகவழுதி : பாண்டி நாட்டரசன்.
குடிலன் : ஜீவகனின் முதல்மந்திரி.
சுந்தரமுனிவர் : ஜீவகவழுதியின் குலகுரு.
நிஷ்டாபரர் :
கருணாகரர் : } சுந்தரமுனிவரின் குலகுரு.
நடராஜன் : வாணியின் காதலன்.
நாராயணன் : ஜீவகனின் துணைவன்.
பலதேவன் : குடிலன் மகன்
சகடன் : வாணியின் தந்தை.
முருகன் : ஜீவகனின் படைவீரருள் ஒருவன்
புருடோத்தமவர்மன் : சேரதேசத் தரசன்.
அருள்வரதன் : சேரதேசத்துச் சேனாதிபதி.
மனோன்மணி : ஜீவகன் மகள்.
வாணி : மனோன்மணியின் தோழி.

சேவகர், படைவீரர், ஒற்றர், உழவர், செவிலித்தாய்,
தோழியர், நகரவாசிகள் முதலியோர்.

நாடக நிகழ்ச்சி:
திருநெல்வேலியிலும் திருவனந்தபுரத்திலும்.

மனோன்மணீயம்

முதல் அங்கம்

முதற் களம்

இடம்: பாண்டியன் கொலுமண்டபம்.
காலம்: காலை.

[சேவகர்கள் கொலுமண்டபம் அலங்கரித்து நிற்க]

(நேரிசை ஆசிரியப்பா)

க-ம் சேவகன்: புகழ்மிக அமைதரு பொற்சிங் காதனந்
திகழ்தர இவ்விடஞ் சேர்மின். சீரிதே.
உ-ம் சேவ: அடியிணை யருச்சனைக் காகுங் கடிமலர்
எவ்விடம் வைத்தனை?
ங-ம் சேவ: ஈதோ! நோக்குதி.
ச-ம் சேவ: அவ்விடத் திருப்பதென்?
ங-ம் சேவ: ஆரம். பொறு! பொறு!
விழவரு வீதியில் மழையொலி யென்னக்
கழைகறி களிறுகள் பிளிறுபே ரொலியும்,
கொய்யுளைப் புரவியின் குரத்தெழும் ஓதையும்,
மொய்திரண் முரசின் முழக்கும் அவித்துச்
'சுந்தர முனிவா! வந்தனம் வந்தனம்'
எனுமொலி யேசிறந் தெழுந்தது. கேண்மின்!
உ-ம் சேவ: முனிவரர் என்றிடிற் கனிவுறுங் கல்லும்!
ச-ம் சேவ: எத்தனை பத்தி! எத்தனை கூட்டம்!
எள்விழற் கிடமிலை. யான்போய்க் கண்டேன்!
ங-ம் சேவ: உனக்கென் கவலை? நினைக்குமுன் ஓடலாம்.
க-ம் சேவ: அரசனும் ஈதோ அணைந்தனன். காணீர்!
ஒருசார் ஒதுங்குமின். ஒருபுறம்! ஒருபுறம்!
[ஜீவகன் வர]

யாவரும்: (தொழுது)
ஜய! ஜய! விஜயீ! பவரா ஜேந்திரா!!
[சுந்தர முனிவர், கருணாகரர், குடிலன், நகரவாசிகள் முதலியோர் வர]
ஜய! ஜய! விஜய! தவரா ஜேந்திரா!!

ஜீவகன்: வருக! வருக! குருபிரு பாதிதே!!
திருவடி தீண்டப் பெற்றவிச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ ஆலநன் னிழலோ
குருகுல விஜயன் கொடிநேர்ப் பீடமோ
யாதென ஓதுவன்? நீதற வாதனத்து
இருந்தருள் இறைவ! என்பவ பாசம்
இரிந்திட நின்பதம் இறைஞ்சுவல் அடியேன்
[ஜீவகன் பாதபூசை செய்ய]

சுந்தரமுனிவர்: வாழ்க! வாழ்க! மன்னவ! வருதுயர்
சூழ்பிணி யாவுந் தொலைந்து வாழ்க!
சுகமே போலும், மனோன்மணி?

ஜீவ: சுகம். சுகம்.

சுந்தர: இந்நக ருளாரும் யாவரும் க்ஷேமம்?
உன்னரு ளுடையோர்க் கென்குறை? க்ஷேமம்.

ஜீவ: கூடல் மாநகர் குடிவிட் டிப்பால்
பீடுயர் நெல்லையில் வந்தபின் பேணி
அமைத்தன னிவ்வரண். இமைப்பறு தேவருங்
கடக்கரும் இதன்றிறம் கடைக்கண் சாத்தி
ஆசிநீ யருள நேசித் தேன்நனி.
எத்தனை புரிதான் இருக்கினும் எமக்கெலாம்
அத்த! நின் அருள்போல் அரணெது? குடில!
இவ்வழி யெழுந்தநம் இறைவர், கடிபுரி
செவ்விதின் நோக்கக் காட்டுக தெரிந்தே.

குடிலன்: ஊன்வரு பெருநோய் தான்விட அடைந்த
அன்பரின் புறஇவ் வருளுருத் தாங்கி
வந்தருள் கிருபா சுந்தர மூர்த்தி!
நீயறி யாததொன் றில்லை; ஆயினும்,
உன்னடி பரவி யுரைப்பது கேண்மோ:
தென்பாண்டி நாடே சிவலோக மாமென
முன்வாத வூரர் மொழிந்தனர். அன்றியுந்

தரணியே பசுவெனச் சாற்றலும் மற்றதிற்
பரதமே மடியெனப் பகர்வதுஞ் சரதமேல்,
பால்சொரி சுரைதென் பாண்டி யென்பது
மேல்வினம் பாதே விளங்கும். ஒருகால்
எல்லா மாகிய கண்ணுதல் இறைவனும்
பல்லா யிரத்த தேவரும் பிறரும்
நிலைபெற நின்ற பனிவரை துலையின்
ஒருதலை யாக, உருவஞ் சிறிய
குருமுனி தனியா யுறுமலை மற்றோர்
தலையாச் சமமாய் நின்றதேல், மலைகளில்
மலையமோ அலதுபொன் வரையோ பெரிது?
சந்நு செவிவழித் தந்த கங்கையும்,
பின்னொரு வாயசங் கவிழ்த்த பொன்னியும்,
வருந்திய தேவரோ டருந்தவர் வேண்ட,
அமிழ்திலுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலையம்நின் றிழிந்து, விலையுயர் முத்தும்
வேழவெண் மருப்பும் வீசிக் காழகிற்
சந்தன டவியுஞ் சாடி வந்துயர்
குங்கும முறித்துச் சங்கின மலறுந்
தடம்பணை தவழ்ந்து, மடமயில் நடம்பயில்
வளம்பொழில் கடந்து குளம்பல நிரப்பி,
இருகரை வாரமுந் திருமக ளுறையுளாப்
பண்ணுமிப் புண்ணிய தாமிர வர்ணியும்,
எண்ணிடி லேயுமென் றிசைக்கவும் படுமோ?
இந்நதி வலம்வர விருந்தநம் தொன்னகர்
பொன்னகர் தன்னிலும் பொலிவுறல் கண்டனை
தொடுகட லோவெனத் துணுக்குறும் அடையலர்
கலக்கத் தெல்லையுங் கட்செவிச் சுடிகையும்
புலப்பட வகன்றாழ் புதுவக ழுடுத்த
மஞ்சுகண் துஞ்சுநம் இஞ்சி யுரிஞ்சி
உதயனு முடல்சிவந் தனனே! அதன்புறம்
நாட்டிய பதாகையில் தீட்டிய மீனம்,
உவாமதிக் குறுமா சவாவொடு நக்கும்.
வெயில்விரி யெயிலினங் காக்க இயற்றிய

எந்திரப் படைகளுந் தந்திரக் கருவியும்
பொறிகளும் வெறிகொளுங் கிறிகளு மெண்ணில

சுந்தர: (எழுந்து)
சம்போ! சங்கர! அம்பிகா பதேஎ!
நன்று மன்னவ! உன்றன் றொல்குலங்
காக்கநீ யாக்கிய இவையெலாங் கண்டுளேம்.
அல்லா துறுதி யுளதோ? சொல்லுதி!

ஜீவ: என்னை! என்னை! எமக்கருள் குரவ!
இன்னும் வேண்டிய தியாதோ? துன்னலர்
வெருவுவர் கேட்கினும்; பொருநிவை வென்றுகைக்
கொள்ளுவ ரென்பதும் உள்ளற் பாற்றோ?
ஆயினும் அரணி னுளபுரை நோக்கி
நீயினி இயம்பிடில் நீக்குவன் நொடியே

சுந்தர: காலம் என்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாக் கீழது மேலாய்
மாற்றிடுந் தோற்ற மென்பது மறந்தனை.
வினைதெரிந் தாற்றும் வேந்தன் முனமுனம்,
ஆயற் பாற்ற தறிவும் அஃதொழி
வாயிலு மாமென வையகம் புகலும்.
உன்னையு முன்குலத் துதித்தநம் மனோன்மணி
தன்னையுஞ் சங்கரன் காக்க! தயாநிதே!
அன்பும் அறமுமே யாக்கையாகக் கொண்ட
நின்புதல் வியையான் காணநே சித்தேன்,
அத்திரு வுறையும் அப்புறம் போதற்
கொத்ததா மோஇக் காலம்? உணர்த்தாய்.

ஜீவ: ஆம்! ஆம்! சேவக! அறைதி சென்று
தேமொழிக் கன்னிதன் சேடியர் தமக்கு
நங்குல முனிவர் இங்குள ரெனவே.
[அரசனும், முனிவரும், சீடரும் அப்புறம் போக]

குடிலன்: (தனதுள்)
நங்கா ரியம்ஜயம் எங்கா கினுஞ்செல!
(சேவகனை நோக்கி)
சேவகா! முனிவர் சிவிகையுஞ் சின்னமும்
யாவுமவ் வாயிலிற் கொணர்தி.

சேவ: சுவாமி,
[குடிலன் முதலியோர் போக]

முதல் நகர்வாசி: கடன்மடை விண்டெனக் குடிலன் கழறிய
நயப்புரை ! ஆ ! ஆ ! வியப்பே மிகவும்
நாட்டைச் சிறப்பித் துரைத்தது கேட்டியோ ?
உ-ம் நக : கேட்டோம்; கேட்டோம். நாட்டிற் கென்குறை
விடு ! விடு ! புராணம் விளம்பினன் வீணாய்.
க-ம் நக : குடிலன் செய்யும் படிறுகள் முனிவர்
அறியா தவரோ ? சிறிதா யினுமவன்
உரைத்தது கருத்திடைக் கொண்டிலர்உவர்த்தே
ச-ம் நக : ஆம் ! ஆம் ! அவன்முகம் ஏமா றினதே.
விரசமா யரசனும் வியர்த்தனன் கண்டேன்.
உ-ம் நக : முனிவரங் கோதிய தென்னை ? முற்றுந்
துனிபடு நெருக்கிற் கேட்டிலன்.
க-ம் நக : யாதோ—
மனோன்மணி எனப்பெயர் வழங்கினர்,அறிவைகொல்?
ரு-ம் நக: வாழ்த்தினர் போலும், மற்றென் ?
உ-ம் நக : பாழ்த்த இத்
தந்தையிற் பரிவுளர் மனோன்மணி தன்மேல்.
க-ம் நக: ஐயமற் றதற்கென் ? யார்பரி வுறார்கள் ?
வையகத் தவள்போல் மங்கைய ருளரோ ?
அன்பே யுயிரா அழகே யாக்கையா
மன்பே ருலகுசெய் மாதவம் அதனுன்
மலைமகள் கருணையுங் கலைமக ளுணர்வுங்
கமலையி னெழிலும் அமையவோ ருருவாய்ப்
பாண்டியன் தொல்குல மாகிய பாற்கடல்
ஈன்றெழு மதியென ஈண்டவ தரித்த
மனோன்மணி யன்னையை வாழ்த்தார் யாரே ?
உ-ம் நக : அன்றியும் முனிகட் கவள்மேல் வாஞ்சை
இன்றுமற் றன்றே, இமையவர்க் காக
முன்னொரு வேள்வி முயன்றுழி வன்னி
தவசிகள் தனித்தனி யவிசு சொரிந்துந்
தழையா தவிதல் கண்டுளந் தளர்ந்து
மன்னனுங் குடிலனுந் துன்னிய யாவரும்
வெய்துயிர்த் திருக்க, விளையாட் டாக
மைதிகழ் கண்ணி பேதை மனோன்மணி

நெய்பெய் போழ்தில் நெடுஞ்சுழி சுழித்து
மங்கிய அங்கி வலமாய்ப் பொங்கிப்
புங்கவர் மகிழ்ச்சியைப் பொறித்தது முதலா
முனிவர் யாவரும் மணியென மொழியில்
தங்கள் தலைமிசைக் கொள்வர், தரணியில்
எங்குள தவட்கொப் பியம்புதற் கென்றே.
சூ-ம் நக: ஒக்கும்! ஒக்கும்! இக்குங் கைக்கு
மென்னும் இன்மொழிக் கன்னிக் கெங்கே
ஒப்புள துரைக்க! ஓ! ஓ! முனிவர்
அவ்வழி யேகுநர் போலும்.
இவ்வழி வம்மின் காண்குதும் இனிதே.

[நகர்வாசிகள் போக]

முதல் அங்கம் : முதற் களம்

முற்றிற்று.

இரண்டாம் களம்

இடம் : கன்னிமாடம்.

காலம் : எற்பாடு.

[மனோன்மணியும் வாணியும் கழல் விளையாடி இருக்க]

(ஆசிரியத் தாழிசை)

மனோன்மணி : (கழல்விளையாடிப்பாட)
துணையறும் மகளிர்மேற் சுடுகணை தூர்ப்பவன்
அணைகில னரன்முன்னென் றூடாய் கழல்
அணைந்துநீ றானனென் றூடாய் கழல். (1)

வாணி : (ஷ)
நீறாயி னானென்னை நேர்மலர் பட்டபுண்
ஆறா வடுவேயென் றூடாய் கழல்
அழலாடுந் தேவர்க்கென் றூடாய் கழல். (2)

மனோ :
இருளில் தனித்துறை ஏழையர் தங்கள்மேற்
பொருதலோ வீரமென் றூடாய் கழல்
போயெரிந் தான்பண்டென் றூடாய் கழல். ()

வாணி :
எரிந்தன னாயினென் என்றென்றுந் தம்முடல்
கரிந்தது பாதியென் றூடாய் கழல்
கடுவுண்ட கண்டர்க்கென் றூடாய் கழல். (4)

மனோ :
தெருவிற் பலிகொண்டு திரிதரும் அம்பலத்
தொருவர்க் குடைந்தானென் றூடாய் கழல்
உருவங் கரந்தானென் றூடாய் கழல். (5)

வாணி :
உருவங் கரந்தாலென் ஓர்மல ரம்பினால்
அரையுரு வானாரென் றூடாய் கழல்
(அந்நட ராஜரென்) றூடாய் கழல். (6)
[பெருமூச்செறிய]

(நேரிசை ஆசிரியப்பா)

மனோ: (சிரித்து)ஏதடி வாணி! ஓதிய பாட்டில்
ஒருபெய ரொளித்தனை பெருமூச் செறிந்து
நன்று! நன்று! நின் நாணம்.
மன்றலு மானது போலும்வார் குழலே! (1)

வாணி: ஏதம் மாநீ சூது நினைத்தனை?
ஒருபொரு ளும்யான் கருதினே னல்லேன்.
இச்சகத் தெவரே பாடினும்,
உச்சத் தொனியி லுயிர்ப்பெழல் இயல்பே. (2)

மனோ: மறையேல்! மறையேல்! பிறைபழி நுதலாய்!
திங்கள் கண்டு பொங்கிய கடலெனச்
செம்புனல் பரக்கச் செந்தா மரைபோற்
சிவந்தவுன் கபோல நுவன்று நின்மனக்
களவெலாம் வெளியாக் கக்கிய பின்னர்
ஏதுநீ யொளிக்குதல்? இயம்பாய்
காதலன் நேற்றுனக் கோதிய தெனக்கே. (3)

வாணி: ஐயோ கொடுமை! அம்ம! அதிசயம்
ஒருநின் றெனுமுனம் என்னகன் றென்று
திரிபவ ரொப்பநீ செப்பினை!
நான்கண் டேநாள் நாலைந் தாமே. (4)

மனோ: ஏதடி! நுமது காதல் கழிந்ததோ?
காணா தொருபோ திரேமெனுங் கட்டுரை
வீணா யினதோ? பிழைத்தவர் யாவர்?
காதள வோடிய கண்ணாய்!
ஓதுவாய் என்பா லுரைக்கற் பாற்றே. (5)

வாணி: ஏதனையான் இயம்புகோ! என்றலை விதியே
(கண்ணீர் சிந்தி)

வா: விளை யாடுவோம் வாராய்.
யார்முறை யாடுதல்? வார்குழற் றிருவே! (6)

மனோ: எளிது! எளிது வாணீ! எட்பூ
ஏசிய நாசியாய்! இயம்புக.
மனத்திடை யடக்கலை! வழங்குதி வகுத்தே. ()

வாணி: எப்படி யுனக்கியான் செப்புவே னம்மா?
தலைவிதி தடுக்கற் பாற்றோ? தொலைய
அனுபவித் தன்றோ அகலும்? மனையில்
தந்தையுங் கொடியன்; தாயுங் கொடியள்!
சிந்தியார் சிறிதும் யான்படும் இடும்பை.
என்னுயிர்க் குயிராம் என்கா தலர்க்கும்
இன்ன லிழைத்தனர். எண்ணரிய வெண்ணம்

முதலையின் பிடிபோல் முடிக்கத் துணிந்தனர்.
யாரொடு நோவேன்? யார்க்கெடுத் துரைப்பேன்?
வார்கடல் உலகில் வாழ்கிலன்.
மாளுவன் திண்ணம். மாளுவன் வறிதே. (8)

மனோன் : முல்லையின் முகையும் முருக்கின் இதழுங்
காட்டுங் கைரவ வாயாய்! உனக்கும்
முரண்டேன்? பலதேவனுக்கே மாலை
சூடிடற் கேடென்? காதல்
வள்ளையி னழகெலாங் கொள்ளைகொ ளணங்கே!

வாணி : அம்மொழி வெம்மொழி. அம்ம! ஒழிதி.
நஞ்சும் அஞ்சிலேன்; நின்சொல் அஞ்சினேன்.
இறக்கினும் இசையேன். தாமே துறக்கினும்
மறப்பனோ என்னுளம் மன்னிய ஒருவரை?
ஆடவ ராகமற் றெவரையும்
நாடுமோ நானுள வளவுமென் உளமே? (10)

மனோன் : வலம்புரிப் புறத்தெழு கலந்திகழ் மதியென
வதியும் வதன மங்காய்! வாணீ!
பேய்கொண் டனையோ? பித்தே றினையோ?
நீயென் நினைத்தனை? நிகரில் குடிலன்
தன்மக னாகிச் சாலவும் வலியனாய்
மன்னனுக் கினியனாய் மன்பல தேவனும்
உன்னுளங் கவர்ந்த ஒருவனும் ஒப்போ?
பேய்கொண் டனையோ? பேதாய்!
வேய்கொள் தோளி விளம்பா யெனக்கே. (11)

வாணி : அறியா யொன்றும், அம்ம! அரிவையர்
நிறையழி காதல் நேருந் தன்மை.
ஒன்றுங் கருதி யன்றவ ருள்ளஞ்
சென்று பாய்ந்து சேருதல். திரியுங்
காற்றும் பெட்புங் காரணம் இன்மையின்
ஆற்றவும் ஒக்குமென் றறைவர்.
மாற்றமென்? நீயே மதிமனோன் மணியே! (12)

மனோன் : புதுமைநீ புகன்றது. பூவைமார் காதல்
இதுவே யாமெனில் இகழ்தற் பாற்றே!
காதல் கொள்ளுதற் கேதுவும் இலையாம்!

தானறி யாப்பே யாட்டந் தானும்!
ஆயினும் அமைந்துநீ ஆய்ந்துணர்ந்தோதுதி
உண்டோ இவர்தமி லொப்பு?
கண்டோர் மறுமொழிக் காரிகை யணங்கே!

வாணி: ஒப்புயா ரெப்படிச் செப்புவன்? அம்ம!
என்றுளம் போயிறந் ததுவே
மன்னிய ஒருவன் வடிவுடன் பண்டே. (14)

மனோன்: பித்தே பிதற்றினை. எத்திற மாயினுந்
தாந்த முளத்தைத் தடைசெயில் எங்ஙனம்,
காந்தள் காட்டுங் கையாய்!
தவிர்ந்தது சாடி யோடிடும் வகையே? (15)

வாணி: ஈதெலாம் உனக்குயா ரோதுதற் கறிவர்!
மாதர்க் குரியதிக் காதல்,
என்பதொன் றறியும் மன்பதை யுலகே. (16)

மனோன்: மின்புரை யிடையாய்! என்கருத் துண்மையின்
வனத்தி லெய்தி வற்கலை புனைந்து
மனத்தை யடக்கி மாதவஞ் செயற்கே.
சுந்தர முனிவன் சிந்துர அடியும்,
வாரிசம் போல மலர்ந்த வதனமும்,
கருணை யலையெறிந் தொழுகுங் கண்ணும்,
பரிவுடன் முகிழ்க்கு முறுவலும், பால்போல்
நரைதரு தலையும், புரையறும் உரையும்,
சாந்தமுந் தயையும் தங்கிய உடலும்,
மாந்தளிர் வாட்டு மேனி வாணி
எண்ணுந் தோறுங் குதித்து
தண்ணு மென்னுளம் மன்னிய தவத்தே. (17)

வாணி: சின்னாட் செலுமுனந் தேர்குவன் நீசொல்
கட்டுரைத் திண்ணம். மட்டல வின்றிக்
காதல் கதுவுங் காலை
ஒதுவை நீயே யுறுமதன் சுவையே. (18)

மனோன்: வேண்டுமேற் காண்டி. அவையெலாம் வீண். வீண்.
காதலென் பதுவென்? பூதமோ? பேயோ?
வெருட்டினால் நாய்போ லோடிடும்; வெருவில்

துரந்துங் குரைக்குந் தொடரும் வெகுநேரம்.
அடிக்கடி முனிவரிங் கணுகுவர். அஃதோ
அடுத்தவவ் வறையில் யாதோ சக்கரம்
இருத்திடத் திறவுகோல் வாங்கினர்; கண்டனை!
படர்சுழி யோடு பாய்திரை காட்டும்
வடதள வுதர வாணீ! மங்காய்!
வரும்பொழு தரும்பொருள் கேட்போம்
வாசிட் டாதிவை ராக்கிய நூற்கே. (19)

வாணி : நூறுக் கேட்கினும் நூலறி வென்செயும்?
நீறு கின்றதென் நெஞ்சம். நானே
என்னுயிர் தாங்குவ தெவ்விதம்?
மன்னவன் கட்டளை மறுப்பதெவ் விதமே? (20)

மனோன் : உன்றன் சிந்தையும் உந்தைதன் கருத்தும்,
மன்றல் வழுதிக் குரைக்க வருவதும்,
ஆமையின் புறச்சார் பலவ னொதுங்குவது
ஏயு மெழிற்கால் வாணீ!
நீயுரைத் தனையோ நின்னே சனுக்கே? (21)

வாணி : அதுவே யம்ம! என் உளநின் றறுப்பது.
வதுவையும் வேண்டிலர். வாழ்க்கையும் வேண்டிலர்!
ஒருமொழி வேண்டினர்; உரைத்திலேன் பாவி.
நச்சினே னெனுமொழிக் கேயவர்க் கிச்சை.
பிச்சியான், ஓகோ! பேசினே னிலையே!
இனியென் செய்வேன்? என் நினைப் பாரேச?
மனைவரா வண்ணமென் னனையு முரைத்தான்.
ஊர்வரா வண்ணங் குடிலனும் ஒட்டினன்.
யார்பா லுரைப்பன்? யார்போ யுரைப்பர்?
உயிரே யெனக்கிங் கொருதுணை.
அயிரா வதத்தனும் அறியா வழுதே! (அழ) ()

மனோன் : அழுங்கலை! அழுங்கலை! அனிச்சமும் நெரிஞ்சிலா
அஞ்சிய அடியாய்! அழுங்கலை! அழுதுகண்
அஞ்சனங் கரைந்துநின் கஞ்சனக் கதுப்புங்
கருத்ததே! ஏனிது! கருணைக் கடவுள்நின்
கருத்தே முடிப்பக் காண்டி. அஃதோ

மணங்கமழ் கோதையர் வந்தனர்.
அணங்குறல் பொன்னிகர் சுணங்கா ரணங்கே!

[செவிலியும் தோழிப் பெண்களும் வர]

செவிலி: தாயே! வந்துபார்! நீயே வளர்த்த
முல்லையு நறுமுகை முகிழ்த்தது. வல்லை
காதலிற் கவிழ்வை போலும்!
போதுநீத் தெம்மனை புகுந்தநற் றிருவே! (24)

மனோன்: போடி! நீ யாது புகன்றனை? தவத்தை
நாடிநா னிருக்க நணுகுமோ என்மனந்
துச்சமாம் இச்சையாற் சோர்வு?
நெருப்பையுங் கறையான் அரிக்குமோ நேர்ந்தே!

முதற்றோழி: பொய்யன் றம்ம! மையுண் கண்ணால்
வந்துநீ நோக்கு சந்தமார் முல்லை
நிரம்ப அரும்பி நிற்குந் தன்மை
இன்றிரா வலரு மெல்லாம்,
துன்றிரா நிகர்குழற் றோகாய்! வருகவே. (26)

[எல்லோரும் போக]

முதல் அங்கம்: இரண்டாம் களம்

முற்றிற்று.

மூன்றாம் களம்

இடம் : கொலுமண்டபம்.
காலம் : காலை.

[ஜீவகன், குடிலன், நாராயணன் சம்பாஷித்திருக்க.]

(நிலமண்டில ஆசிரியப்பா)

ஜீவகன்
நமக்கத னாலென்? நன்றே யாமெனத்
தமக்குச் சரியா மிடத்திற் றங்குக.
எங்கே யாகினுந் தங்குக நமக்கென்?
ஆவலோ டமைத்தநம் புரிசையை யவர்மிகக்
கேவலம் ஆக்கினர். அதற்குள கேடென்?
குறையென்? குடில? கூறாய் குறித்தே.

குடிலன் :
குறையா னென்றுங் கண்டிலன். கொற்றவ!
நறையார் வேப்பந் தாராய்! நமதிடங்
கூட லன்றெனுங் குறையொன் றுளது
நாடி லஃதலா னொன்றறியேன்.
மேலுந் தவசிகள் வேடந் தாங்கினோர்
ஆலயம் ஒன்றையே அறிவர் முன்னொரு
கோவி லமைத்ததிற் குறைவிலா உற்சவம்
ஓவ லிலாதே உஞற்றுமி னென்றவர்
ஏவினர். அஃதொழித் தியற்றின மிப்புரி.
ஆதலா லிங்ஙனம் ஓதினர். அதனை
அழுக்கா றென்றுநா மையமற் றறைதல்
ஒழுக்க மன்றே, குருவன் றோவவர்?

ஜீவ :
ஐயரும் அழுக்கா றடைந்தார். மெய்ம்மை
கோயில் தானா காவலர் கடமை?
கேவலம்! கேவலம்! முனிவரும்! ஆ! ஆ!

குடில :
அதிசய மன்றுபூ பதியே! இதுவும்.
துறந்தார் முற்றுந் துறந்தவ ரல்லர்.
மறந்தார் சிற்சில. வறிதே தமக்கு
மனோகர மாகிய சினகர மொன்றில்
உலகுள பொருளெலாம் உய்ப்பினும் பின்னும்
நிலைபெற நிரம்பா தவர்க்குள வாசை.

வசிட்டர் முன்னர் வாளாப் புகைத்தனர்
முசிப்பிலா மன்னர் நிரவிய முற்றும்.
கௌசிகன் இரக்கவோர் மௌலி வேந்தன்
பட்டபா டுலகில் யாவரே பட்டுளர் ?
சிட்ட முனிவர்கள் செயலாற் பலகால்
புரந்தரன் தன துருக் கரந்து திரிந்தனன்.
முனிவரே யாயினும் மனிதரே மீண்டும்.
இச்சை யற்றவர் இச்சகத்து யாவர் ?

ஜீவ: ஒவ்வும் ! ஒவ்வு நீ உரைத்தது முற்றும்.

நாராயணன்: (தனதுள்) ஐயோ ! பாவி ! அருந்தவ முனிவரைப்
பொய்யன் ஆக்குவன். புரவல னேவெனில்
எடுப்பார் கைப்பிள்ளை, தடுப்பார் யாரே ?

(நேரிசை வெண்பா)

நாரா: (அரசனை நோக்கி)
கொல்லா யெனப்பகைஞர் கோற்றொடியார் கும்பிட்டுப்
பல்லிளிக்கக் கண்சிவக்கும் பார்த்திபனே—பொல்லா
வெறுமெலும்பை நாய்கௌவும் வேளை நீ செல்ல
உறுமுவதென் நீயே யுரை. [சேவகன் வர]

(நிலைமண்டில ஆசிரியப்பா தொடர்ச்சி)

சேவகன்: மன்னிய கலைதேர் சகடர் வந்தனர்.

ஜீவ: (நாராயணனை நோக்கி)
வரச்சொல் சேவக ! உரைத்தநின் உவமையிற்
சற்றே குற்ற முள்ளது நாரண !

குடில: (தனதுள் அரசனை நோக்கி)
அரசன் மாறாய்ப் பொருள்கிர கித்தனன்.
வெற்றுரை வினாய் விளம்பினன். அதனிற்
குற்றங் காணக் குறுகுதல் முற்றும்
மணற்சோற் றிற்கல் தேடுதல் மானும்.

ஜீவ: (சகடரை நோக்கி) [சகடர் வர]
சுகமோ யாவரும் முதிய சகடரே!
மகிழ்வுற வும்மை நோக்கி வெகுநாள்
ஆயின தன்றே?

சகடர் : ஆம்! ஆம்! அடியேன்.
ஜீவ : மேயின விசேடமென்? விளம்புதிர். என்குறை?
சகட : அறத்தா றகலா தகலிடங் காத்துப்
பொறுத்தோட் புரவல! உன்குடை நீழற்
பொருந்து மெங்கட் கரந்தையு முளதோ?
சுகமிது காறும். அகமகிழ் வுற்றுன்
மந்திரத் தலைவன் குடிலன் மகற்கே
எந்தன் புதல்வி வாணியை வதுவையிற்
கொடுக்கவோ ராசை கொற்றவ! மற்றது
முடிக்கநின் கருணையே முற்றும்வேண் டுவனே.
ஜீவ : சிலந் சிந்தை கோல மனைத்துஞ்
சாலவும் பொருந்தும் சகடரே! அதனால்
களித்தோம் மெத்த. ஏ! ஏ! குடில!
ஒளித்த தென்நீ உரையா தெமக்கே?
குடில : ஆவ தாயின் அறிவியா தொழிவனோ?
ஜீவ : இடையூ றென்கொல்? இடியே றன்ன
படையடு பலதே வன்றான் ஏதோ
விரும்பினன் போலும் வேறோர் கரும்பே!
குடில : இல்லையெம் இறைவ! எங்ஙனம் உரைக்கேன்!
சொல்லிற் பழிப்பாம். சகடரே சொல்லுக.
ஜீவ : என்னை? சகடரே! இடையூ றென்னை?
சகட : பரம்பரை யாயுன் தொழும்புபூண் டொழுகும்
அடியனேன் சொல்பழு தாயின தில்லை.
முடிவிலாப் பரிவுடன் வளர்த்தவென் மொய்குழல்
ஒருத்தியே யென்சொல் வியர்த்தம் ஆக்குவள்.
ஒருதலை யாயிம் மணத்திற் குடன்படாள்.
விரிதலைப் பேய்போல் வேண்டிய விளம்பியும்,
ஓரா ளொன்றும்; உணராள் தன்னயம்;
தேரா ளொருவழி; பாராள் நெறிமுறை;
என்னயான் செய்கேன்? இதன்மே லெனக்கும்
இன்னல் தருவதொன் றில்லை, தாதையர்
மாற்றங் கேளா மக்கள் கூற்றுவர்
எனுமொழி யெனக்கே யநுபவம் இறைவ!
உரைத்தவென் கட்டுரை பிழைத்திடப் பின்னுயிர்

தரித்திருந் தென்பயன்? சாவோ சமீபம்.
நரைத்த தென்சிரம்; திரைத்த தென்னுடல்
தள்ளருங் காலம்; பிள்ளையும் வேறிலை.
என்னுரை காத்துநீ யிம்மண முடிக்க
மன்னவ! கிருபையேல் வாழ்து மிவ்வயின்,
இல்லையேல் முதியவென் னில்லா ளுடனினிச்
[கண்ணீர் துளிக்க]
செல்ல விடையளி செல்லுதுங் காசி

ஜீவ: ஏனிது சகடரே! என்கா ரியமிது!
தேன்மொழி வாணி செவ்விய குணத்தாள்
காணி லுரைப்பாம். வீணிவ் வழுகை.

நாராயணன்: (தனதுள்)
பாதகன் கிழவன் பணத்திற் காக
ஏதுஞ் செய்வன், இறைவனோ அறியான்,
ஓதுவங் குறிப்பாய். உணரி னுணர்க.

(நேரிசை வெண்பா)

(அரசனை நோக்கி)
மாற்றலர்தம் மங்கையர்க்கு மங்கலநா ணங்கவிழ
ஏற்றியநான் விற்பூட்டு மேந்தலே—சோற்றதற்காய்த்
தன்மகவை விற்றவரிச் சந்திரனு முன்னவையில்
என்மகிமை யுள்ளா ரினி.

(நிலைமண்டில ஆசிரியப்பா தொடர்ச்சி)

ஜீவ: தனிமொழி யென்னை?
நாரா: சற்றும் பிசகிலை.
நீட்டல் விகாரமாய் நினையினும் அமையும்.
ஜீவ: காட்டுவ தெல்லாம் விகாரமே. காணாய்
கிழவரின் அழுகை.
நாரா: சிலவரு டந்தான்
நெடுநாள் நிற்கும் இளையவ ரழுகை.
ஜீவ: விடு, விடு. நின்மொழி யெல்லாம் விகடம்.
(சகடரை நோக்கி) [நாராயணன் போக]
அறிவிர்கொல் அவளுளம்?
சகட: சிறிதியா னறிவன்;

திருநட ராசனென் றொருவனிங் குள்ளான்;
பொருவரும் புருடன்மற் றவனே யென்றவன்
சொல்வது கேட்டுளர் சிற்சில தோழியர்.

குடில: (அரசனை நோக்கி)
நல்லதப் படியே நடக்கிலென்? இவர்க்கும்
பொல்லா முரண்டேன்??

சகட: (குடிலனை நோக்கி) போம்! போம்! உமது
குழந்தையேல் இங்ஙனங் கூறீர்! முற்றும்,
இழந்திட வோவெனக் கித்தனை பாடு?
பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ?
(அரசனை நோக்கி)
காவலா! அவனைப் போலயான் கண்டிலன்;
சுத்தமே பித்தன்; சொல்லுக் கடங்கான்;
தனியே யுரைப்பன்; தனியே சிரிப்பன்;
எங்கேனு மொருபூ இலைகனி யகப்படில்
அங்கங் கதனையே நோக்கி நோக்கித்
தங்கா மகிழ்ச்சியில் தலைதடு மாறுவன்;
பரற்கலும் அவனுக் ககப்படாத் திரவியம்
ஆயிரந் தடவை யாயினும் நோக்குவன்;
பேயனுக் களிக்கவோ பெற்றனம் பெண்ணை?

ஜீவ: ஆமாம்! யாமுங் கண்டுளேஞ் சிலகால்
நின்றால் நின்ற படியே; அன்றி
இருக்கினும் இருப்பன் எண்ணிலாக் காலம்;
சிரிக்கினும் விழிக்கினும் நலமிலை தியதே.
அவனன் றோமுன் அஞ்சைக் களத்தில்......

குடில: அவன்றான்! அவன்றான்! அழகன்! ஆனந்தன்

ஜீவ: அழகிருந் தென்பயன்? தொழிலெலாம் அழிவே;
எங்கவன் இப்போது?

குடில: இங்குளன் என்றனர்.
சிதம்பரத் தனுப்பினேன்; சென்றிலன் நின்றான்;
இதந்தரு நின்கட் டளையெப் படியோ?

ஜீவ: மெத்தவும் நன்மை; அப்படி யேசெய்

குடில: சித்தம்; ஆயினுஞ் செல்கிலன்; முனிவர்
பிரியனா தலினாற் பெயர்ந்திலன் போலும்.

சரியல ; இராச்சிய தந்திரத் தவர்க்கென் ?

ஜீவ : (சகடரை நோக்கி)

நல்லது சகடரே ! சொல்லிய படியே
மொழிகுவம் வாணிபால் ! மொய்குழற் சிறுமி
அழகனில் மயங்கினள் ; அதற்கென் ? நும்மனம்
படியிது நடத்துவம் விடுமினித் துயரம் ;

சகட : இவ்வுரை யொன்றுமே என்னுயிர்க் குறுதி ;
திவ்விய திருவடி வாழ்க சிறந்தே !

[சகடர் போக, செவிலி வர.]

ஜீவ : (செவிலியின் முக நோக்கி)

என்னே இவள்முகம் இப்படி யிருப்பது ?
தோற்றம்நன் றன்றே !

செவிலி : நேற்றிரா முதலா—

ஜீவ : பிணியோ என் கண் மணிக்கு ?

செவிலி : பிணியா
யாதுமொன் றில்லை ; ஏதோ சிறுசுரம்.

ஜீவ : சுரம் ! சுரம் ! ஓ ! ஓ ! சொல்லுதி யாவும்
அரந்தையொன் றறியாள் ! ஐயோ ! விளைந்தவை
உரையாய் விரைவில் ; ஒளிக்கலை யொன்றும் ;
வந்தவா றென்னை ? நடந்தவா றென்னை ?

செவிலி : அறியேம் யாங்கள், ஐய ! அம் மாயம்
நறவுமிழ் நளினம் பொலிவிழந் திருப்ப
நர்மனை புகுந்த செல்வி, எம்முடன்
மாலையி லிலைச் சோலை யுலாவி
அமுதமூற் றிருக்குங் குமுதவாய் விண்டு
நயவுரை பலவுங் குயிலின் மிழற்றி
மலைய மாருதம் வந்துவந் துந்த
நிலவொளி நீந்தி நந் நெடுமுற் றத்துப்
பந்துவந் தாடிமேன் மந்திர மடைந்தே
துணைபுண ரன்னத் தூவி யணைமிசைக்
கண்படு மெல்லை—கனவோ நினைவோ,—
'நண்ப ! என்னுயிர் நாதவென் றேங்கிப்
புண்படு மவள்போற் புலம்புறல் கேட்டுத்
துண்ணென யாந்துயி லகற்றப் புக்குழி,

குழலுஞ் சரியும்; கழலும் வளையும்;
மாலையுங் கரியும்; நாலியும் பொரியும்;
விழியும் பிறழும்; மொழியுங் குழறும்;
கட்டழ லெரியும்; நெட்டுயிர்ப் பெறியும்;
நயனநீர் மல்கும்; சயனமே லொல்கும்;
இவ்வழி யவ்வயிற் கண்டுகை நெரியா,
தெய்வம் நொந்தேம்; செய்கட னோர்ந்தேம்;
அயினிநீர் சுழற்றி அணிந்தேம் பூதி;
மயிலினை மற்றோ ரமளியிற் சேர்த்துப்
பனிநீர் சொரிந்து நளிசேர் சாந்தம்
பூசினேம்; சாமரை வீசினேம்; அவையெலாம்,
எரிமே லிட்ட இழுதா யவட்கு
வரவர மம்மர் வளர்க்கக் கண்டு
நொந்தியா மிருக்க, வந்தன வாயசம்
'கா கா இவளைக் கா' வெனக் கரைந்த;
சேவலுந் திகைத்துத் திசைதிசை கூவின;
கங்குல் விடிந்தும் அங்கவள் துயரஞ்
சற்றுஞ் சாந்த முற்றில ததனால்
அரச! நீ அறியிலெஞ் சிரசிரா வென்றே
வெருவி யாங்கள் விளைவ துரைக்கும்
நிமித்திகர்க் கூஉய்க் கேட்டோம் நிமித்தம்;
பெண்ணை யந்தார் சூடிட னுந்தம்
பெண்ணை யந்தார் சூட்டெனப் பேசினர்;
என்னாம் மற்றவர்க் கியாதோ அறியேம்;
பனம்பூச் சூடியும் முனம்போ லவேசுரம்;
ஏது மறியாப் பேதை! நேற்றுத்
தவஞ்செய ஆசை யென்றவள் தனக்குக்
காதனோய் காணவோ ரேதுவு மில்லை.
எந்தாய் இருக்கு நிலைமை இனி நீ
வந்தே காண்குதி மன்னவ ரேறே!

ஜீவ: ஆ! ஆ! நோவிது காறுமொன் றறிகிலன்.
இதுவென் புதுமை? என்செய் கோயான்?

குடி: தவஞ்செய ஆசை யென்றுதாய் நவின்ற
வாக்கு நோக்கின் முனிவர் மந்திரச்

செய்கையோ என்றோர் ஐயம் ஜனிக்கும்;
தோற்றங் கவட்கவர் சாற்றிய மாற்றம்
அறியலாந் தகைத்தோ?

ஜீவ: வறிதவ் ஐயம்.
பொழியொரு சிறிதும் மொழிந்திலர்; கண்டுழி
அழுதனர்; அழுதாள் உடன்நம் மழுதும்;
ஆபி பேசியங் ககலுங் காலை
ஏதோ யந்திரம் எழுதிவைத் திடவோர்
அறையுட லங்கணந் திறவுகோ லோடு
தமக்கென வேண்டிலர்; அளித்தன முடனே.
நமக்கறி னாலென்? நாமறி யாததோ?
என்னோ அறியேன் இந்நோய் விளைவு?
[ஜீவகனும் செவிலியும் போக.]

குடில: (தனதுள்)
யந்திரத் தாபன மோவவ ரெண்ணினர்?
அவ்வள வறிவி லாரோ முனிவர்?
அவ்வள வேதான்; அன்றியென்? ஆயினும்;
எத்தனை பித்தனிவ் வரசன்! பேதையின்
இத்திறங் காமம் என்பதிங் கறியான்;
உரைக்குமுன் கருதுவம் நமக்குறு நலமே.
[குடிலன் போக.]

முதல் அங்கம்: மூன்றாம் களம்

முற்றிற்று.

நான்காம் களம்

இடம் : கன்னிமாடம்.
காலம் : மாலை.

[மனோன்மணி சயனித்திருக்க, ஜீவகன், வாணி, செவிலி சுற்றி நிற்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

ஜீவகன் : உள்ளமி துவோ ? என்னுயி ரமிர்தே !
உனக்குறு துயரம் எனக்குரை யாததென் ?
விரும்பிய தென்னென் றுரைக்கில் விசும்பில்
அரும்பிய அம்புலி யாயினுங் கொணர்வன் ;
வருத்துவ தென்னென வழங்கின் மாய்ப்பன்
உறுத்துங் கூற்றுவ னாயினும் ஒறுத்தே.
தாய்க்கு மொளித்த சூலோ ? தையால் !
வாய்க்கு மொளித்த உணவோ ? மங்காய் !
ஏதா யினுமெனக் கோதா துளதோ ?
பளிங்கும் பழித்த நெஞ்சாய் ! உனக்குங்
களங்கம் வந்த காரண மெதுவோ ?
பஞ்ச வனக்கிளி செஞ்சொல் மிழற்றி
இசையது விசித்தோர் பிசித மரமேல்
இருந்து பாடு மெல்லை, ஓர் வானவன்
திருந்திய இன்னிசை யமுதிற் செப்பிப்
போயது கண்டு, சேய தோர் போந்தையில்
தனியே பறந்துபோய்த் தங்கி, அங்கவன்
பாடிய இசையே கூவிட உன்னி
நாடி நாடிப் பாடியும் வராது,
வாடி வாயது மூடி, மௌனமாய்
வருந்தி யிருந்ததாய்க் கண்ட கனவும்
நேற்றன் றுரைவெனக் கியம்பினை ! நெஞ்சில்
தோற்றிய தெல்லாம் இங்ஙனஞ் சொல்லும்
பேதாய் ! இன்றெனக் கென்னோ
ஓதா யுன்றன் உளமுறு துயரே ! (1)

செவிலி : உன்பிதா உலகாள் வேந்தன் அன்பாய்ச்
சொல்லா யென்னில் துப்பிதழ் துடித்துச்
சொல்ல உன்னியுஞ் சொல்லா தடக்கில்

யாம்படுந் துயரம் அறிந்தும்,
காம்படு தோளி! கருதாய் போன்மே. (2)

ஜீவ: ஐயோ! இதற்கென் செய்வேன்? ஆ ஆ!
பொய்யோ பண்ணிய புண்ணிய மனைத்தும்?
பிள்ளை யில்லாச் செல்வங் கள்ளியிற்
சொறே போலப் பேரே யன்றி
வேறே யென்பயன் விளைக்கு மென்றுனி
நெடுநாள் நைந்து நொந்து கெடுவேன்!
பட்டபா டெல்லாங் கெட்டுப் பரிதி
வந்துழி யகலும் பனியெனச் சுந்தர
முனிவன் முயன்ற வேள்வியாற் பிள்ளைக்
கனியென வுனையான் கண்டநாள் தொட்டு,
நின்முக நோக்கியும் நின்சொற் கேட்டும்
என்மிகை நீக்கி இன்ப மெய்தி,
உன்மன மகிழ்ச்சிக் குதவுவ உஞற்ற
உயிர்தரித் திருந்தேன்; செயிர்தீ ரறமும்
வாய்மையும் மாறு நேசமுந் தூய்மையுந்
தங்கிய உன்னுளம் என்னுளந் தன்னுடன்
எங்குங் கலந்த இயல்பா லன்றோ
மறந்தே னுன்தாய் இறந்த பிரிவும்!
உன்னை யன்றி யென்னுயிர்க் குலகில்,
எதுவோ வுறுதி யியம்பாய்?
மதிகுலம் விளங்க வருமனோன் மணியே! (3)

மனோன்மணி: (கண்ணீர் துளும்பி)
எந்தையே! எனதன் பினுக்கோ ரிழுக்கு
வந்த தன்று; மேல் வருவது மில்லை; இல்லை;
உரைக்கற் பாற்றதொன் றில்லை;
உரைப்பதெப் படியான் உணரா தொழியிலே?

ஜீவ: குழந்தாய்! என்குலக் கொழுந்தே! அழாய்நீ;
அழுவையே லாற்றேன்; நீயழல் இதுவரை
கண்டது மில்லை; யான் கேட்டது மில்லையே;
பெண்களின் பேதைமை யென்னே! தங்களைப்
பெற்றா ருற்றார் களுக்குந் தமக்கும்,
விழுமம் விளைத்துத் தாமே யழுவர்.

(வாணியை நோக்கி)

என்னே யவர்தம் ஏழைமை! மின்னேய்!
மருங்குல் வாணீ! வாராய் இப்புறம்.
அருங்கலை யாய்ந்தநின் தந்தைசொன் மதியும்,
உன்புத் தியுமுகுத் துழல்வதென் வம்பில்?
நலமே சிறந்த குலமே பிறந்த
பலதே வனொரு பாக்கிய சிலாக்கியன்
தன்னை நீ விடுத்துப் பின்னையோர் பித்தனை
நச்சிய தென்னை? சீச்சீ!
நகையே யாகும் நீசெயும் வகையே. (5)

வாணி: அகலிடந் தனிபுரந் தாளும் வேந்தே
நிகழுமென் சிறிய நினைவெலாம் விரித்து
விநயமாய் நின்பால் விளம்ப எனது
நாணம் நாவெழா தடக்கு மாயினும்
பேணி யொருமொழி பேசுவன்,
நேசமில் வதுவை நாசகா ரணமே. (6)

ஜீவ: புதுமைநீ புகன்றாய்! வதுவைமங் கையர்க்குப்
பெற்றா ராற்றுவர்; ஆற்றிய வழியே
தையலார் மையலாய் நேயம் பூண்டு
வாழ்வது கடமை; அதனில்
தாழ்வது தகுதியோ தருமமோ சாற்றே. (7)

வாணி: கற்பனைக் கெதிராய் அற்பமும் மொழியேன்;
ஆயினும் ஐயமொன் றுண்டு; நேயமும்
ஆக்கப் படும்பொரு ளாமோ? நோக்கில்
துன்பே நிறையும் மன்பே ருலகாம்
எரியுங் கானல் விரியும் பாலையில்
திரியும் மனிதர் நெஞ்சஞ் சிறிது
தங்கி அங்கவர் அங்கங் குளிரத்
தாருவாய்த் தழைத்தும், ஓயாத் தொழிலின்
நேருந் தாகம் நீக்குவான் நிமல
ஊற்றா யிருந்தவ ருள்ளம் ஆற்றியும்,
ஆறலை கள்வர் அறுபகை மீறில்
உறுதுணை யாயவர் நெறிமுறை காத்தும்,
முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரிடில்

ஊன்றுகோ லாயவர் ஊக்க முயர்த்தியும்,
இவ்விதம் யாரையுஞ் செவ்விதிற் படுத்தி,
இகத்துள சுகத்திற்கு அளவுகோ லாகி,
பரத்துள சுகத்தை வரித்தசித் திரமாய்;
இல்லற மென்பதன் நல்லுயி ரேயாய்,
நின்ற காதலின் நிலைமை, நினையில்,
இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மைபோல்
இருவர் சிந்தையும் இயல்பா யுருகி
ஒன்றுந் தன்மை யன்றி, ஒருவரால்
ஆக்கப் படும்பொரு ளாமோ?
விக்கிரம சுழற்கால் வேந்தர் வேந்தே! (8)

ஜீவ: ஆமோ அன்றோ யாமஃ தறியேம்;
பிஞ்சிற் பழுத்த பேச்சொழி; மிஞ்சலை;
மங்கைய ரென்றுஞ் சுதந்தர பங்கர்;
பேதையர்; எளிதிற் பிறழ்ந்திடு முளத்தர்;
முதியவென் தந்தை மதியினுன் மதியோ
பெரிது? மற் றவர்தமில் உன்னையும் பேண
உரியவர் யாவர்? ஓதிய படியே
பலதே வனுக்கே உடன்படல் கடமை.

வாணி: இலையெனில்?—

ஜீவ: கன்னியா யிருப்பாய் என்றும்.

வாணி: சம்மதம்.

ஜீவ: கிணற்றிலோர் மதிகொடு சாடில்
எம்மதி கொண்டுநீ யெழுவாய்? பேதாய்!
கன்னியா யிருக்கில் உன்னழ கென்னாம்?
அரைக்கி லன்றோ சந்தனங் கமழும்?

வாணி: விரைதரு மோசிறு கறையான் அரிக்கில்?

ஜீவ: நானே பிடித்த முயற்கு மூன்றுகால்
ஆனால் எங்ஙனம்?

வாணி: அரிவையர் பிழைப்பர்? [சேடி வர]

சேடி: சுந்தர முனிவர் வந்தனர் வாயிலில்;
கால நோக்கினர்.

ஜீவ: சாலவு மினிதே;
ஆசனங் கொணர்தி.

(வாணியை நோக்கி)　　　　யோசனை வேண்டாம்;
எப்படி யாயினுஞ் சகடர் சொற்படி
நடத்துவம் மன்றல்; நன்குநீ யுணர்தி;
ஆயினுந் தந்தனம் ஐந்துநாள்;
ஆய்ந்தறி விப்பாய் வாய்ந்தவுன் கருத்தே. (9)

வாணி: இறக்கினும் இறைவ! அதற்கியா னிசையேன்;
பொறுத்தருள் யானிவண் புகன்ற
மறுத்துரை யனைத்தும் மாற்றல ரேறே. (10)

[சுந்தர முனிவர் வர]

ஜீவ: (முனிவரைத் தொழுது)
வணங்குது முன்றன் மணங்கமழ் சேவடி;
இருந்தரு ளுதியெம் இறைவ!
பரிந்துநீ வந்ததெம் பாக்கியப் பயனே. (11)

சுந்தர: (மனோன்மணியை நோக்கி)
தீதிலை யாதும்? க்ஷேமமே போலும்
ஏதோ மனோன்மணி! ஓதாய்
வேறுபா டாய்நீ விளங்கு மாறே. (12)

மனோன்மணி: (வணங்கி)
கருணையே யுருவாய் வருமுனி சுரரே
எல்லா மறியும் உம்பாற்
சொல்ல வல்லதொன் றில்லை சுகமே. (13

செவிலி: (மனோன்மணியை நோக்கி)
கரும்பே, யாங்கள் விரும்புங் கனியே!
முனிவர் பாலுநீ யொளிப்பையே லினியிங்கு
யார்வயி னுரைப்பாய்! ஐயோ! இதுவென்?
(முனிவரை நோக்கி)
ஆர்வமும் ஞானமும் அணிகல னாக்கொள்
தேசிக வடிவே! செப்புமா றறிகிலம்
மாசறு மனோன்மணி தன்னுரு மாறி
நேற்றிரா முதலாத் தோற்றுந் தோற்றம்.
மண்ணாள் மேனியும்; உண்ணாள் அமுதும்;
நண்ணாள் ஊசலும்! எண்ணாள் பந்தும்;
முடியாள் குழலும்; படியாள் இசையும்;
தடவாள் யாழும்; நடவாள் பொழிலும்;

அளியாள் பணியும்; பலியாள் ஏவலும்;
மறந்தாள் கிளியும்; துறந்தாள் அனமும்;
தூங்குவள் போன்றே ஏங்குவள்; எளியை
நோக்குவள் போன்றே நோக்குவள் வெளியை;
கேட்டுங் கேட்கிலள்: பார்த்தும் பார்க்கிலள்;
மீட்டுங் கேட்பள்; மீட்டும் பார்ப்பள்;
தனியே யிருப்பள்; தனியே சிரிப்பள்!
விழிநீர் பொழிவள்; மெய்விதிர்த் தழுவள்;
இங்ஙன மிருக்கில் எங்ஙன மாமோ?
வாலியும் யானும் வருந்திக் கேட்டும்
பேணி யிதுவரை ஒருமொழி பேசிலள்.
அரசன் கேட்டும் உரைத்திலள். அன்பார்
முனிவ! நீ வினவியும் மொழியா ளாயின்
எவருடன் இனிமேல் இசைப்பள்?
தவவுரு வாய்வரு தனிமுதற் சுடரே! (14)

(ஜீவகனை நோக்கி)

சுந்தர:
குழவிப் பருவம் நழுவுங் காலை
களிமிகு கன்னிய ருளமும் வாக்கும்
புளியம் பழமுந் தோடும் போலாம்.
காதல் வெள்ளங் கதித்துப் பரந்து
மாதருள் ளம் வாக்கெனும் நீண்ட
இருகரை புரண்டு பெருகுஞ் செறியில்,
எண்ண மெங்ஙனம் நண்ணும் நாவினை?
தாதா அன்பு போதா தாகுங்
காலங் கன்னியர்க் குளதெனும் பெற்றி
சாலவும் மறந்தனை போலும்; தழைத்துப்
படர்கொடி பருவம் அணையில், நட்ட
இடமது துறந்துநல் லின்ப மெய்த
அருகுள தருவை யாவாவும் அடையின்
முருகவிழ் முகையுஞ் சுவைதரு கனியும்
அகமகிழ்ந் தளித்து மிகவளர்ந் தோங்கும்;
இலையெனில் நலமிழந் தொல்கும்; அதனால்
நிசிதவே லரசா டவியில்
உசிதமா மொருதரு விரைந்துநீ யுணரே. (15)

ஜீவ: எங்குல குருவே! இயம்பிய தொவ்வும்;
எங்குள திக்கொடிக் கிசைந்த
பொங்கெழில் பொலியும் புரையறு தருவே.
சுந்தர: உலகுள மற்றை யரசெலாம் நலமில்
கள்ளியுங் கருவேற் காடுமா யொழிய,
சகமெலாந் தங்க நிழலது பரப்பித்
தொலைவிலாத் துன்னலர் வரினும் அவர்தலை
யிலையெனும் விரமே இலையாய்த் தழைத்து,
புகழ்மணங் கமழுங் குணம்பல பூத்து,
துனிவரு முயிர்க்குள துன்பந் துடைப்பான்
கனியுங் கருணையே கனியாக் காய்த்து;
தருமநா டென்னும் ஒருநா மங்கொள்
திருவாழ் கோடாஞ் சேரதே சத்துப்
புருடோத் தமனெனும் பொருவிலாப் புருடன்,
நீங்கி லில்லை நினது
பூங்கொடி படரப் பாங்காந் தருவே. (17)
ஜீவ: நல்லது! தேவரீர் சொல்லிய படியே,
இடுக்கண் களைந்த இறைவ!
நடத்துவன் யோசனை பண்ணி நன்றே (18)
சுந்தர: யோசனை வேண்டிய தன்று நடேசன்
என்றுள னொருவன்; ஏவில்;
சென்றவன் முடிப்பன் மன்றல் சிறக்கவே (19)
ஜீவ: கெடலறு சூழ்ச்சிக் குடிலனோ டொவி.........
சுந்தர: அரகர! குருபர! கிருபா நிதியே!
(எழுந்து) காவாய் காவலன் ஈன்ற
பாவையை நீயே காவாய் பசுபதே! (20)

[சுந்தர முனிவர் போக]

ஜீவ: தொழுதோம்; தொழுதோம்: செவிலி யவ்வறைக்
கெழுதுங் கருவிகள் கொணராய்
பழுதிலாக் குடிலற் குணர்த்துவம் பரிந்தே.

[ஜீவகன் முதலியோர் போக]

முதல் அங்கம்: நான்காம் களம்

முற்றிற்று.

ஐந்தாம் களம்

இடம்: குடிலன் மனை.

காலம்: மாலை.

[குடிலன் உலாவ.]

(இணைக்குறள் ஆசிரியப்பா)

குடிலன்: (தனிமொழி)

புத்தியே சகல சக்தியும்! இதுவரை
நினைத்தவை யனைத்தும் நிறைவே றினவே.
உட்பகை மூட்டிப் பெட்புற் றிருந்த
மதுரையாம் முதுநகர் விடுத்து மன்னனை—
புதியதோர் பதிக்குக் கொணர்ந்து புரிசையுங்
கட்டுவித் தோம்நம் இட்டமாம் வகையே;
நாமே யரசும் நாமே யாவும்;
மன்னவன் நமது நிழலின் மறைந்தான்;
பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம்;
மதுரையை நெல்லை இனிமேல் வணங்குமோ?
இதுதனக் கிறைவன் இறக்கில் யாரே
அரச ராகுவர்?— [மௌனம்]
புரவலன் கிளைஞர் புரிசையைக் கேட்கினும்
வெருளுவர். வெல்லார். ஆயினும்—
முழுதும் நம்மையே தொழும்வகை யிலையோ?
கருவியுங் காலமும் அறியில் அரியதென்?
ஆ! ஆ! அயர்த்தோம் அயர்த்தோம்!
மயக்கம் மனோன்மணி கொண்டதை முற்றும்
அயர்த்தோம்! ஆ! ஆ! ஆயிழை யொருவனைக்
கண்டு காமங் கொண்டவ ளல்லள்;
பருவம் வருதலாற் பற்றல் விழைந்தனள்,
அருகுள தெட்டியே யாயினும் முல்லைப்
படர்கொடி படரும் பலதே வனையவள்
இடமே பலமுறை யேவி னுடன்படல்

கூடும். கூடினென் கூடா ?
யாவன் அஃதோ வருமொரு சேவகன் ?
[சேவகன் வர]

சேவகன் : ஜய ! ஜய ! விஜயீ பவகுடி லேந்திரா ?
[திருமுகம் கொடுக்க]

குடில : (வாசித்து நோக்கி)
நல்ல தப்புறம் நில்லாய் ; ஓ ! ஓ !
சொல்லிய தார்கொல் ? சுந்தர னேயாம்.
[சேவகன் ஒருசாரிருந்து தூங்க]
அடுத்தது போலும் இம்மணம். அவசியம்
நடக்கும். நடக்கினென் ? நமக்கது நன்றே
அரசர்கட் காயுள் அற்பமென் றறைவர் ;
பிரியமாந் தன்மகட் பிரிந்து வெகுநாள்
வாழான் வழுதி. வஞ்சிநாட் டார்க்குத்
தாழார் இந்நாட் டுள்ள ஜனங்களும்.
அதுவும் நன்றே—ஆயினுங்
கால தாமதஞ் சாலவு மாகும் ;
வேறொரு தந்திரம் வேண்டும் ; ஆ ! ஆ !
மாறன் மாண்டான் ; மன்றலும் போனது ;
சேரன் இறுமாப் புடையதோர் வீரன்
ஆமெனப் பலரும் அறைவர். அதனால்
நாமவன் பால்விடுந் தூதுவர் நலம்போன்
மெள்ள அவன்றன் செருக்கினைக் கிள்ளிற்
படைகொடு வருவன் ; திண்ணம் ; பாண்டியன்
அடைவதப் போதியாம் அறிவம்.
போர்வந் திடிலிவண் நேர்வந் திடுமெலாம்
யார்இற வார்கள் ! யார்அறி வார்கள் ?
முடிதன் அடிவிழில் யாரெடுத் தணியார் ?
அரச வமிசக் கிரமம் ஒரில்
இப்படி யேமுத லுற்பவம் இருக்கும்
சிலதலை முறையாப் பலவரு டஞ்செலின்
இந்துவில் இரவியில் வந்தோ ரெனவே,
மூட உலகம் மொழியும். யாரே
நாடுவர் ஆதியை ? நன்று நன்றிது !

தோடம்!—சுடு! சுடு!
இது நன்றென ஓதுவ வெல்லாம்
அறியார் கரையும் வெறுமொழி யலவோ?
பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி என்பது போலாம்;
மன்னரை உலகம் வணங்கவும் பார்ப்பார்க்
கன்னங் கிடைக்கவும் அங்ஙன மறைந்து
மதியி லாரை மயக்குவர் வஞ்சமாய்;
அதினால் நமக்கென்? அப்படி நினைக்கில்
இதுவரை இத்தனை நன்மையெப் படிவரும்?
பார்க்குதும் ஒருகை. சுந்தரன் யந்திரங்
காக்கும் வகையுங் காண்போம்; சுவான
சக்கரங் குக்கனைத் தடுத்திடும் வகையே
யந்திரத் தந்திரம் இருப்பதென் றறியான்.
பித்தன் மெத்தவும்! நமக்கினி இதுவே
உத்தம உபாயம் ஓகோ! சேவக!
சித்தம் மெத்தக் களித்தோம் இந்த
மணவுரை கேட்டென மன்னன் துணியப்
பாவனை பண்ணுவோம் ஏ! ஏ! சேவக!
[சேவகன் எழுந்துவர]
இன்றுநாம் உற்றஇவ் வின்பம் போல
என்றும் பெற்றிலம். இனையறு மாலை
இந்தா! தந்தோம். இயம்பாய்,
வந்தோம் விடியுமுன் மன்னவைக் கென்றே. (1)

(நேரிசை ஆசிரியப்பா)

சேவகன்: வாழ்க! வள்ளால்! நின்உதா ரம்போல்
ஏழுல கெவற்றிலும் உண்டோ?
வாழ்க! எப் போதும் மங்கலம் வரவே. (2)

குடில: (தனிமொழி)
நல்லது; விரைந்து செல்வாய்! கொடியில்
[சேவகன் போக]
மதியிலி! என்னே மனிதர் மடமை!
இதுவும் உதாரமாய் எண்ணினன்; இங்ஙனம்
தருமத் தானம் என்றுல கறியுங்

கருமம் அனைத்துஞ் செய்பவன் கருத்தைக்
காணின் நாணமாம்; அவரவர் தமக்கா
எண்ணிய எண்ணம் எய்துவான் பலவும்
பண்ணுவர் புண்ணியம் போல எல்லாந்
தந்நயங் கருதி யன்றித் தமைப்போற்
பின்னொரு வனையெண்ணிப் பேணுவ ருளரோ?
புண்ணியஞ் சீவகா ருண்ணிய மெனப்பல
பிதற்றுதல் முற்றும் பித்தே, அலதேல்
யாத்திரை போன நூற்றுவர், சோறடு
பாத்திரந் தன்னிற் பங்கு பங்காக
ஒருவரை யொருவர் ஒளித்துப் பருமணல்
இட்ட கதையா யிருக்குமோ? அவ்வளவு
எட்டுமோ உலகின் கட்டைச் சிறுமதி?—
ஆயினும், அரசனைப் போலிலை
பேயர் பெரிய மேதினி யெங்குமே. (3)

முதல் அங்கம் : ஐந்தாம் களம்
முற்றிற்று.

(கலித்துறை)

சீரும் வதுவையுஞ் சேர்முறை செப்பியுஞ் சீவகன்றன்
போரும் நிதனமும் புந்திசெய் மந்திரம் போற்றினனே
சாருந் தனுகர ணங்களைத் தானெனுந் தன்மைவந்தால்
யாரும் அருள்வழி நிற்கிலர் மாயை யடைவிதுவே.

முதல் அங்கம்
முற்றிற்று.

ஆசிரியப்பா	52-க்கு	அடி	830
ஆசிரியத் தாழிசை	6-க்கு	,,	18
வெண்பா	2-க்கு	,,	8
கலித்துறை	1-க்கு	,,	4
ஆக, அங்கம் 1-க்கு :	பா. 61-க்கு	,,	860

இரண்டாம் அங்கம்

முதற் களம்

இடம்: அரண்மனை.

காலம்: வைகறை.

[ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை.]

(நேரிசை ஆசிரியப்பா)

ஜீவகன்:
சொல்லிய தெல்லாஞ் சுந்தர முனிவரே!
புருடோத் தமனெனும் பொறையனே நமக்கு
மருமா னாக மதித்ததும் அவரே;
என்றுங் குழந்தை யன்றே; மன்றல்
விரைவில் ஆற்ற வேண்டும்; நாம்இது
வரையும் மறதியா யிருந்தது தவறே.
யாம்இனித் தாமத மின்றியிம் மணமே
கருமமாய்க் கருதி முடிப்பாம்;
வருமுன் கருதும் மந்திர வமைச்சே! (1)

குடிலன்:
இறைவ! இதுகேட் டெனக்குள இன்பம்
அறைவதெப் படியான்? அநேக நாளாப்
பலமுறை நினைந்த துண்டிப் பரிசே;
நலமுறப் புரிசை நன்கு முடியும்
அற்றம் நோக்கி யிருந்தே னன்றிச்
சற்றும் மறந்தே னன்று; தனியே
கட்டளை பிறந்துங் கடிமணந் தன்னை
விட்டுள தோஇனி வேறொரு காரியம்?
புருடோத் தமனெனும் பொருநைத் துறைவன்
காண்டகும் ஆண்டகை யென்றும் ஞானம்
மாண்ட சிந்தைய னென்றும், யாண்டுந்
திரியுந் தவசிகள் உரைசெய யானுங்
கேட்ட துண்டு; மற்றவன் நாட்டிற்கு
இன்றே தூதுவ ரேவின், மங்கையை
மன்றல் செய்வான் மனதோ வன்றோ
என்றியாம் அறியலாம் எளிதில்; அறியார்

பலவும் பழிப்பர் ; நமக்கதி லொன்றும்
இலை. இன்றோதா தேவுவம்
பனந்தார் வேய்ந்தோன் அனந்தைப் பதிக்கே.

ஜீவ : பழிப்ப ரென்ற மொழிப்பய னென்னை ?
பகருதி வெளிப்படப் பண்பாய்
நிகரிலாச் சூழ்ச்சி நெடுந்தகை யோனே ! (3)

குடில : என்னுதற் கில்லை இறைவ ! அவையெலாம் ;
கண்ணகன் ஞாலங் கழறும் பலவிதம்.
மணஞ்செய முதன்முதற் பேசி வருதல்,
இணங்கிய ஆடவ ரில்லுள் ளாரே ;
அன்றி யாடவர்த் தேடி மன்றல்
சாற்றுதல் நகாதெனப் போற்றுமிவ் வுலகம் ;
முன்னை வழக்கும் அன்னதே ; ஆயினும்,
ஆத்திரந் தனக்குச் சாத்திர மென்னை ?

ஜீவ : கூடா தஃதொரு காலும் ; குடில !
கேடாம் நமது கீர்த்திக் கென்றும் ;
மாசறு மனோன்மணி தனக்கும் மாசாம் ;
என்னே ஆத்திரம் ? நமது
கன்னியை விழையும் மன்னருங் குறைவோ ? ()

குடில : குறைவோ அதற்கும் இறைவ ! ஓஹோ !
மூவருந் தேவரும் யாவரும் விரும்புநங்
கொழுந்தை விழைந்து வந்த வேந்தரைக்
கணக்கிட லாமோ ? கலிங்கன், சோழன்,
கன்னடன் வடிவில் ஒவ்வார் ; காந்தர்
மன்னவன் வயதிற் கிசையான் ; மச்சன்
குலத்திற் பொருந்தான் ; கோசலன் பலத்திற்
கிணங்கான் ; விதர்ப்பன் வீர மில்லான் ;
வணங்கலில் நிடதன் ; மராடன் கல்வியில்
நேரான் ; மகதன் தீராத் தரித்திரன் ;
இன்னம் பலரும் இங்ஙனம் நமது
கன்னியை விழைந்துங் கல்வி வடிவு
குணம்பலங் குலம்பொரு ளென்றிவை பலவும்
இணங்கா ரேமாந் திருந்தார். அரசருள்
கொங்கன் றனக்கே இங்கிவை யாவும்

பொருந்த மாயினும் இதுவரைப் பாலியன்
ஆகையில் இவ்வயின் அணைந்திலன். எங்ஙனந்
திருத்தமா யவன்கருத் தறிந்திடு முன்னம்
ஏவுதுந் தூதரை? ஏதில வன்றே.

ஜீவ: படுமோ அஃதொரு காலும்? குடில
மற்றவன் கருத்தினை யுணர
உற்றதோ ருபாயம் என்னுள துரையே. (5)

குடில: உண்டு பலவும் உபாயம்; பண்டே
இதனைக் கருதியே யிருந்தேன்; புதிய
கடிபுரி முடியும் முன்னர்க் கழறல்
தகுதி யன்றெனக் கருதிச்
சாற்று தொழிந்தேன் மாற்றல ரேறே. (6)

ஜீவ: நல்லது! குடில! இல்லை யுனைப்போல்
எங்குஞ் சூழ்ச்சித் துணைவர்
பங்கமி லுபாயம் என்கொல்? பகரே. (7)

குடில: வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன் றுளது அதன்
அந்தமில் பெருவளம் அறியார் யாரே?
மருதமும் நெய்தலும் மயங்கியங் கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும்;
மழலைவண் டானம் புலர்மீன் கவர,
ஓம்புபு நுளைச்சியர் எறிகுழை, தேன்பொழி
புன்னைநுண் தாதாற் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருந் திருஞ்சிறை புலர்த்தும்
அலைகடற் காக்கைக் கலக்கண் விளைக்கும்;
கேதகை மலர்நிழல் இனமெனக் கருதித்
தாராத் தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடும் கோங்கலர்த் தாதே;
வால்வளை சூலுளைந் தீன்றவெண் முத்தம்
ஒதிமக் குடம்பையென் றுன்னுபு காலாற்
பருந்தினங் கவர்ந்துசென் றடம்பிடைப் புதைக்கும்
கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தற் பூந்தளிர் குளிர
மேய்ந்தகல் காரா திம்பால் துளிக்கும்;

அலமுகந் தாக்குழி யலமரும் ஆமை
நுளைச்சியர் கணவரோ டிழைத்திடும் ஊடலின்
வழித்தெறி குங்குமச் சேற்றிடை யொளிக்கும்;
பூஞ்சினை மருநிடை வாழ்ந்திடும் அன்றில்
நளிமீன் கோட்பறை விளிகேட் டுறங்கா;
வேயென வளர்ந்த சாய்குலைச் சாலியில்,
உப்பார் பஃறி யொருநிரை பிணிப்பர்.
இப்பெருந் தேயத் தெங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறு.
கொண்மூ வென்னுங் கொள்கலங் கொண்ட
அமிழ்தினை யவ்வயிற் கவிழ்த்தபின் செல்புழி
வடியும்நீ ரேநம் இடிநீர் சாரல்
நன்னீர்ப் பெருக்கும் முந்நீர் நீத்தமும்
எய்யா தென்றும் எதிர்த்திடும் பிணக்கில்
நடுக்கடல் நன்னீர் சுவைத்திடு மொருகால்;
மரக்கலம் வந்திடும் வயற்கரை யொருகால்;
வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம்
ஓமென வோஇறந் தொலிக்கப் பிரணவ
நாதமே தொனிக்குமந் நாட்டிடை யொருசார்;
நறுமலர்க் குவளையும் நானிறத் திரணமும்
படர்தரும் பழனக் கம்பளம் பரப்பித்
தாமரைத் தாமுகை தாமமில் விளக்கா,
நிலவொளி முத்துங் கவடியும் பணமா,
அலவன் பலவிர லாலாய்ந் தெண்ண,
துகிர்க்கா லன்னமும் புகர்க்கால் கொக்குஞ்
செங்கட் போத்துங் கம்புட் கோழியுங்
கனைகுரல் நாரையுஞ் சினமிகு காடையும்
பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
என்றிவை பலவும் எண்ணில் குழீஇச்
சிறுஞ்சிறி தசைத்துஞ் சிறகை யடித்தும்,
அந்நியங் காடியின் சந்தங் காட்டித்
தந்தங் குழூஉக்குரல் தமைவிரித் தெழுப்பும்
பேரொலி யொன்றுமே யார்தரு மொருசார்;
விறுடை யெருத்தினம் வரிவரி நிறுத்தி

ஈறிலாச் சகரர் எண்ணில ராமெனப்
பொன்னேர் பூட்டி நின்றவர் தம்மைப்
போற்றிய நரவையே பொலிதரு மொருசார்;
சேற்றிடை யடர்ந்த நாற்றடைத் தெடுக்குநர்
நாறுகூ றுக்குநர் வேறுபுலம் படுக்குநர்
நடுவர் களைப்பகை யடுபவ ராதியாக்
கள்ளுண் கடைசியர் பள்ளும் பாட்டும்
தருமொலி பரந்தே தங்குவ தொருசார்;
குன்றென அரிந்து குவித்திடுஞ் செந்நெற்
போர்மிசைக் காரா காரெனப் பொலியக்
கறங்குங் கிணைப்பறை முழவுடன் பிறங்கும்
மங்கல வொலியே மல்குவ தொருசார்;
தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்குஞ்
சிறுமிய ரென்னஅச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல்குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்,
எனிலினி யானிங் கியம்புவ தென்னை ?
அனையவந் நாடெலாம் அரச! மற் றுனக்கே
உரித்தென அங்குள பாடையே உரைக்கும்.
சின்னா ளாகச் சேரனுண் டிடினும்
இந்நாள் வரையும் அந்நாட் டுரிமை
கொடுத்தது மில்லை, நாம் விடுத்தது மில்லை.
பண்டைநம் உரிமைபா ராட்டிட வென்றே
கண்டனன் இப்புரி, ஆயினும் அதுஇம்
மணத்திற் குதவியாய் வந்தது நன்றே.
ஆதலின் அவன்பால் தூதரை விடுத்துக்
கிழமையும் பழமையும் எடுத்துக் கிளத்தில்,
நாட்டிய நமது நகர்வலி கருதி
மீட்டும் விடுப்பினும் விடுப்பன். அன்றி
வாதமே பலவும் ஓதினும் ஒருவிதம்
ஒப்புர வாகா தொழியான். பின்னர்,
அந்நியோந் நியசமா தானச் சின்னம்
ஆகவோர் விவாக மாயின் நன்றெனக்

குறிப்பாற் பொதுவாய்க் கூறிடின்,
மறுத்திடா னுடன்மனை முடிக்குதும் நன்றே. (1)

ஜீவ : மெத்தவுங் களித்தோம்! உத்தமோ பாயம்
இதுவே! குடில! இதனால்
வதுவையும் நடந்தநா மகிழ்ந்தேநம் மனத்தே. ()

குடில : அப்படி யன்றே செப்பிய உபாயம்
போது மாயினும் ஏகுந் தூதுவர்
திறத்தாற் சித்தி யாகவேண் டியதே.
வினைதெரிந் துரைத்தல் பெரிதல. அஃது
தனைநன் காற்றலே யாற்றல். அதனால்,
அன்புங் குடிமைப் பிறப்பும் அரசவாம்
பண்பும் அறிவும் பரவுநா வுணர்வும்
தூய்மையும் மன்னவை யஞ்சாத் திண்மையும்
வாய்மையுஞ் சொல்லில் வழுவா வன்மையுந்
துணிவுங் காலமுங் களமுந் துணியுங்
குணமும், மந்திரத் தலைவர் துணைமையும்
உடையனே வினையாள் தூதனென் றோதினர்.
அன்ன தூதரை யனுப்பின் மன்னவ!
உன்ன தெண்ண முறுமே யுறுதி;
அன்றெனி லன்றே; அதனால்
வென்றிவை வேலாய் விடுவாய் தெரிந்தே. (10)

ஜீவ : அத்திறம் முற்றும் ஒத்தவ னாய்நமக்
குரிமை பூண்டநின் அருமை மகன்பல
தேவனே யுள்ளான். மேவலர் பலர்பால்
முன்னம் பன்முறை தூதிலும் முயன்றனன்.
அன்னவன் றன்னை அமைச்ச!
ஏவிடத் தயையா யிசைவாய் நீயே. (11)

குடில : ஐய மதற்கென்? ஐய என்னுடல்
ஆவியும் பொருளும் மேவிய சுற்றமும்
நினதே யன்றோ! உனதே வலுக்கியான்
இசையா தொழிவதென்! வசையறு புதல்வன்
பாலியன் மிகவும்; காரியம் பெரிது.

ஜீவ : பெரிதென்? அங்கவன் பேசவேண் டியவெலாம்
விரிவா யெடுத்துநீ விளம்பி விடுக்கில்,

நலமா யுரைப்பன் நம்பல தேவன்.
வருத்தம் இவையெலாங் கருத்தி லுணராது
உரைத்தனர் முனிவர். உறிய னவைக்கே
யோசனை யின்றி நடேசனை யேவில்
நன்றாய் முடிப்பனிம் மன்றல்
என்றார். அவர்கருத் திருந்த வாறே! (12)

குடில: குற்றமோ அதுவுங் கொற்றவ! முனிவர்
அறிந்ததவ் வளவே யாகும். ஏழை!
துறந்தா ரறிவரோ தாநின் தன்மை?
இகழ்ச்சியும் புகழ்ச்சியு மின்பமுந் துன்பமும்
எல்லா மில்லை; ஆதலால் எவருங்
கட்டுக கோவில், வெட்டுக ஏரி,
என்று திரிதரும் இவர்களோ நமது
நன்றுந் தீதும் நாடி யுரைப்பர்?
இராச்சிய பாண சூத்திரம் யார்க்கும்
நீச்சே யன்றி நிலையோ? நடேசன்!
யோசனை நன்று! நடேசன்! ஆ! ஆ!
ஏதோ இவ்வயிற் சூதாப் பேதையர்
உள்ளம் மென்ன உண்டு மற்றவர்
அம்மை யப்பரை அனுகா தகன்று
தம்மையும் மறந்தே தலைதடு மாறச்
செய்யுமோர் சேவக முண்டுமற் றவன்பால்.
ஐயமொன் றில்லை. அதனால் மொய்குழல்
மாதர்பாற் றூதுசெல் வல்லமை கூடும்.
பித்த னெப்படிச் சுந்தரர்க்கு
ஒத்த தோழனா யுற்றனன்! வியப்பே! (13)
முனிவரும் வரவர மதியிழந் தனரே.

ஜீவ: இருக்கும், இருக்கும். இணையறு குடில!
பொருக்கெனப் போயுன் புதல்வற் குணர்த்தி
விடுத்திடு தூது விரைந்து;
கால விளம்பனஞ் சாலவுந் தீதே. (14)

குடில: ஈதோ அனுப்பினேன்; இன்றிம் மாலையில்
தூது செல்வான் தொழுதுன் அநுமதி

பெறவரு வான்நீ காண்டி.;
இறைவ! மங்கல மென்றுமுன் னடிக்கே! (15)
[குடிலன் போக]

ஜீவ:(தனதுள்) நல்லது! ஆ! ஆ! நமது பாக்கியம்
அல்லவோ இவனைநாம் அமைச்சனாய்ப் பெற்றதும்?
என்னே! இவன்மதி முன்னிற் பவையெவை?
[சில பிரபுக்களும் நாராயணனும் வந்து வணங்க]
(பிரபுக்களை நோக்கி) வம்மின், வம்மின், வந்து சிறிது
காலமானது போலும். தமது
மந்திரி யுடன்சில சிந்தனை செய்திங்கு
இருந்தோம் இதுவரை, குடிலன் மிகவும்
அருந்திறற் சூழ்ச்சியன்.

முதற் பிரபு: அதற்கெனையம்?
சுரகுரு பிரசுரன் முதலவர் சூழ்ச்சி
இரவலா யிவன்சிறி தீந்தாற் பெறுவர்.
எல்லை யுளதோ இவன்மதிக் கிறைவ!
வல்லவன் யாதிலும்.

நாராயணன்: (தனதுள்) நல்லது கருத்தன்.
வல்லமை யென்பயன்!

உ-ஆம் பிரபு: மன்னவ! அ[illegible]லும்
உன்தொல் குலத்தில் உன்திரு மேனியில்
வைத்த பரிவும் பத்திய மெத்தனை!
குடிலனுன் குடிக்கே யடிமை பூண்ட
ஆஞ்சனேயனே அறியேம்!

நாரா: (தனதுள்) முழுப் பொய்.
வாஞ்சையாய் மன்ன[illegible]வாயுரை முகமன்
விடுப்பனோ விடமென? குடிப்பனே!

சேவகன்: கொற்றவ!
நேற்று மாலையில் நின்திரு வாணையிற்
சென்றுழித் திருமுகம் நோக்கி யேதோ
சிந்தனை செய்துதன் சித்த மகிழ்ச்சியால்
தந்தன னெனக்கித் தரள மாலை.

நாரா: (தனதுள்)
எதுவோ பொல்லாங் கெண்ணினன். திண்ணம்.

ஜீவ: பார்மின், பார்மின், நம்மிசை வைத்த
ஆர்வமும் அன்பும். ஆ! ஆ!

நாரா: (தனதுள்) யாதும்
பேசா திருக்கி லேசுமே நம்மனம்;
குறியாற் கூறுவம்; அறிகி லறிக.

[நாராயணன் செல்ல]

௧-ஆம் பிரபு: சாட்சியு மோகண் காட்சியாம் இதற்கும்!
அங்கைப் புண்ணுக் காடியும் வேண்டுமோ?
எங்கு மில்லையே யிவன்போற் சுவாமி
பத்தி பண்ணுநர் சுமித்திரை பயந்த
புத்திரன், வீரவர் இவர்முதற் போற்றிய
எத்திறத் தவரும் இறைவ! இவனுக்
கிணையோ தன்னய மெண்ணுப் பெருமையில்?

[நாராயணன் மூக்கிற் கரி தேய்த்து வர]

ஜீவ: (நாராயணனை நோக்கி)
ஏ! ஏ! நாரணு கரியா யுன்மூக்
கிருந்தவா றென்னை? ஏ! ஏ! இதுவென்!

நாரா: மூக்கிற் கரிய ருளரென நாயனார்
தூக்கிய குறளின் சொற்படி, எல்லாம்
உள்ள நின் னருகவ ரில்லா ராவரோ?

ஜீவ: ஓகோ! ஓகோ! உனக்கென் பைத்தியம்!

யாவரும்: ஓகோ! ஓகோ! ஓகோ! ஓகோ!

[யாவரும் நகைக்க]

ஜீவ: (பிரபுக்களை நோக்கி)
நாரணு! நீயும் நடேசன் தோழனே.
நல்லது; விசேடமொன் றில்லை போலும்.

முதற் பிரபு: இல்லையெம் இறைவ! எல்லாப் புவியுநின்
வாகுவே தாங்க! மங்கலம் வரவே!

[பிரபுக்கள் போக]

ஜீவ: நாரா யணு! உனக் கேனிப் பித்து?
தீரா இடும்பையே தெளிவி லையுறல்.

நாரா: எனைவகை தேறியக் கண்ணும், வினைவகை
கோடிய மாந்தர் கோடியின் மேலாம்.

ஜீவ: எதற்குந் திருக்குறள் இடத்தரும்! விடுவிடு.

விரும்பி யெவருந் தின்னுங்
கரும்பு கைப்பதுன் வாய்க்குற் றம்மே. (16)

[அரசனும் சேவகர்களும் போக]

நாரா: ஐயோ! இதற்கென் செய்வன்! அரசன்,
உறுதியா நம்பினன்; சிறிதும் பிறழான்.
(தனிமொழி) வெளுத்த தெல்லாம் பாலெனும் மெய்ம்மை
யுளத்தான்! களங்கம் ஓரான். குடிலனோ
சூதே யுருவாத் தோற்றினன். அவன்றான்
ஓதுவ உன்னுவ செய்குவ யாவுந்
தன்னயங் கருதி யன்றி மன்னனைச்
சற்று மெண்ணான் முற்றுஞ் சாலமா
நல்லவன் போலவே நடிப்பான், பொல்லா
வஞ்சகன். மன்ன னருகுளோர் அதனை
நெஞ்சிலும் நினையார்; நினையினும் உரையார்
இறைவன் குறிப்பிற் கிசைய அறைவர்
வடித்து வடித்து மாற்றொலி போன்றே.
தடுத்து மெய்ம்மை சாற்றுவர் யாரே?
என்னே யரசர் தன்மை! மன்னுயிர்க்
காக்கமும் அழிவும் அவர்தங் கடைக்கண்
நோக்கி லுண்டாம் வல்லமை நோற்றுப்
பெற்றார்; பெற்றவப் பெருமையின் பாரம்
உற்றுநோக் குவரேல் உடல்நடுங் காரோ?
கருப்போ தேனோ என்றவர் களிப்பது.
நெருப்பா றும்மயிர்ப் பாலமும் அன்றோ?
விழிப்பா யிருக்கிற் பிழைப்பர்; விழியிமை
கொட்டிற் கோடி பிறழுமே. கொட்டும்
வாலாற் றேளும், வாயாற் பாம்புங்
காலும் விடமெனக் கருதி யாவும்
அடிமுதன் முடிவரை ஆய்ந்தா ராய்ந்து
பாரா ராளும் பாரென் படாவே?
யாரையான் நோவ! அதிலுங் கொடுமை!
அரசர்க் கமைச்சர் அவயவம் அலரோ?
உறுப்புகள் தாமே உயிரினை யுண்ண
ஒருப்படில் விலக்குவ ருளரோ? தன்னயம்

மறந்து மன்னுயிர்ச் சகமே மதித்தங்
கிறந்தசிற் றையனே இவனோ அமைச்சன்?
குடிலன் செய்யும் படிறுகள் வெளியாப்
பொய்யும் மெய்யும் புலப்பட உரைக்க
என்றால், நோக்க நின்றார் நிலையில்
தோன்றுஞ் சித்திர வொளிபோ லியார்க்குஞ்
சான்றொடு காட்டுந் தன்மைய வலவே.
சித்திரப் பார்வை யழுந்தார்க் கெத்தனை
காட்டினுங் கிறிய வரையலாற் காணார்.
என்செய? இனியான் எப்படிச் செப்புவன்?
நிந்தையா நடேசனைப் பேசிய குறிப்புஞ்
சிந்தனை செய்ததாச் செப்பிய செய்தியும்
ஓரில் யாதோ பெரிய உறுகண்
நேரிடு மென்றென் நெஞ்சம் பதறும்.
என்னே யொருவன் வல்லமை!
இன்னும் பிழைப்பன் மன்னன் விழிக்கிலே. (17)

[நாராயணன் போக]

இரண்டாம் அங்கம்: முதற் களம்

முற்றிற்று.

இரண்டாம் களம்

இடம்: ஊர்ப்புறத்து ஒரு சார்.

காலம்: வைகறை.

[நடராசன் அருணோதயம் கண்டு நிற்க]

(இணைக்குறள் ஆசிரியப்பா)

நடராசன்:
(தனிமொழி)

பரிதியி னுதயம் பார்க்கக் கருதில்
இவ்விடஞ் சாலவு மினிதே. உதயஞ்
செவ்விதிற் கண்டுபின் செல்வோம்.
ஓவியத் தொழில்வலோன் நீவியக் கிழியில்
தீட்டுவான் புகுந்த சித்திரம், தீட்டுந்
தூரியந் தொடத்தொடத் துலங்குதல் போல,
சூரியன் பன்னிறக் கதிர்கள் தொடத்தொட
உருவுதோன் றாவணம் ஒன்றாய்ச் செறிந்து
கருகிருள் மயங்கிய காட்சி கழிந்து
சிறிது சிறிதா யுறுப்புகள் தெளியத்
தோன்றுமித் தோற்றம் நன்றே!
சூட்டைச் சேவல் சுரைக்கொடி படர்ந்தவவ்
வீட்டுச் சியின்மேல் விம்பாய் நடந்துபின்
இருசிறை யடித்து நெடுவா யங்காந்து
ஒருமுறை கூவி உழையுளார் புகழ
உற்றுநோக் குவர்போற் சுற்றுநோக் குதலும்,
இருட்பகை யிரவி இருளெனத் தம்மையுங்
கருதிக் காய்வனோ என்றயிர்த் திருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாந் தம்பெயர் விளம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ டுதலும்,
பன்னிறச் சிறகர்ப் பறவைத் தொழுதி
தம்மினந் தழுவிச் சூழ்ந்து வட்டமாய்
அங்கங் கிருந்து தங்கண் முறைமுறை
அஞ்சிறை யொத்தறுத் தடியா, எஞ்சலில்
இசையறி மாக்களின் ஈட்டம் போல

வசையறு பாடல் வழங்கலும் இனிதே!
அதுவென்! ஆஹா! அலகா லடிக்கடி
தந்தையுந் தஞ்சிறை தடவி விளக்கிக்
கதுவுங் காத லாணையிட் டறைந்து
பின்புசென் றோயா தன்புபா ராட்டும்
இவ்விரு குருகுங் காதலர்.
கண்டும் அவர்நிலை காணார் போல்துகிர்த்
துண்டங் கொண்டு மாலைச் சொரிந்த
பழமெனப் பாவனை பண்ணிக் கொத்தி
உழையுழை ஒதுங்கி யோடிப் போலிக்
கூச்சங் காட்டுமிக் குருகுகா தலியே.
ஆட்வர் காத லறைதலுந் தையலர்
கூடமாய்க் கொள்ளலும் இயல்பே போலும்.
வாணி! மங்காய்! வாழி நின்குணம்!
ஒருதினம் இவ்வயின் உனையான் கண்டுழி
முருகவிழ் குவளை நின் மொய்குழற் சூட்டத்
தந்தை யன்பாய் மந்தகா சத்தொடு
வாங்கியும்; மதியா தவள்போ லாங்கே.
ஓடுமவ் வாய்க்கால் நீரிடை விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தனை.
ஏதியா னென்னுவ னோவென வுடன்நீ
கலங்கிய கலக்கமென் கண்ணுள தின்றும்.
அழுங்கலை வாணி! அறிவேன்! அறிவேன்!
உளத்தோ டுளஞ்சென் றொன்றிடிற் பின்னர்
வியர்த்தமே செய்கையும் மொழியும்—
"வாணி" என்றபேர் கேட்டனன்! யாரது?
(உற்றுச்செவி கொடுத்து) கானில் நன்றும். காரிகை யார்கொல்?
[பலதேவனும், ஒரு நற்றாயும், தோழனும் தொலைவில் வர]
சொல்வதென்! சூழ்ச்சியென்! கேட்குதும் மறைந்து.

(ஆசிரியத்துறை)

நற்றாய்: நாணமு மென்மகள் நன்னல மும்முகுத் துன்னை நம்பி
வீணில் விழைந்தஇக் கேடவன் தன்னுடன் வீவுறுமே.
பேணிய என்குடிப் பேர்பெரி தாதலினால்
வாணியின் வம்புரை யாமினி யஞ்சுதும் வாரலையோ.

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

நட: (தனதுள்)
ஐய்யா! இதுவென்! கட்டம்! கட்டம்!

(ஆசிரியத்துறை)

நற்றாய்: நாணிக் கவிழ்த்தவள் தன்றலைதொட்டு நவின்றவுன்றன்
ஆணைக் கவள்சிரம் அற்றினி வீழினு மஞ்சிலம்யாம்
காணப் பிறர்பொருள் கள்ளல மாதலினால்
வாணிக் குரித்தெனக் கேட்டபின் வெளவலம் வாரலையோ.

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

நட: (தனதுள்) நாரா யணன்அன் றுரைத்தது மெய்யே!

(ஆசிரியத்துறை)

நற்றாய்: நாணமி லாமகள் சாவுக் கினிவெகு நாள்களில்லை
காணிய நீயும் விரும்பலை யோலையிற் கண்டுகொள்வை
பேணிய நின்வாழ் வேபெரி தாதலினால்
வாணி யொளித்துநீ வாசித் தறிந்துகொள் வாரலையோ.

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

நட: (தனதுள்) ஆயினும் இத்தனை பாதகனோ இவன்!
பலதேவன்: எவருனக் குரைத்தார் இத்தனை பழங்கதை!
சவமவ ளெனக்கேன்? இவள்சுக மெங்கே?
பொய்பொய் நம்பலை, ஐயமெல் லாம்விடு.
பணத்திற் காக்கிழப் பிணந்துடிக் கின்றது.
சேரன் பதிக்கோர் செய்திசொல் லுதற்காச்
சென்றிதோ இரண்டு நாளையிற் றிரும்புவன்.
இச்சிறு பொற்றொடி மைச்சினிக்குக் கொடு.
வருகுவன் ஈதோ! மறக்கன்மின் என்னை!
[நற்றாய் போக, பலதேவனும் தோழனும் நடக்க]
தோழன்: செவ்விது! செவ்விது! இவ்விட மெத்தனை!
ஐந்தோ? ஆறோ?
பலதே: அறியேன். போ! போ!
இச்சுக மேசுகம், மெய்ச்சுகம் வினம்பில்.
தோழன்: வாணியை மணந்தபின் பூணுவை விலங்கு.
பலதே: வாணி யாயினென்? மனோன்மணி யாயினென்?

அதைவிடப் படித்த அலகையா யினுமென்?
கலிசத் திற்கது; காரியத் திற்கிது;
வாவா போவோம்; வழிபார்த் திருக்குஞ்
சேவக ராதியர் செய்குவ ரையம்.
எத்தனை பொழுதிங் கானது விடுவிட்டு?
ஏகுவம் விரைவில், இனித்தா மதமிலை.

[பலதேவனும், தோழனும் போக]

நட: கொடுமை! கொடுமை! இக் கொடும்பா தகன்சொல்.
கடுவெனப் பரந்தென் கைகால் நடுக்கின.
கைத்ததென் கண்ணுங் காதும்.
இத்தனை துட்டரும் இருப்பரோ உலகில்?
ஐந்தோ! ஆரோ! அறியான்! பாதகன்!
நொந்தது புண்ணா யென்னுளங் கேட்க.
மெய்ச்சுகம் இதுவாம்! விளம்புவ தென்னினி?
இச்சண் டாளனும் வாணியும்! ஏற்கும்!
ஒருபிடி யாயவன் உயிரினை வாங்க
ஓடிய தெண்ணம்; உறுத்தின தென்கை!
தீண்டவும் வேண்டுமோ தீயனை?
என்னிவன் அனந்தைக் கேகுங் காரியம்?
யாருடன் வினவ? நாரண னோ அது?

[நாராயணன் வர]

வா வா, நாரணா!

நாராயணன்: ஏ! ஏ! என்னை!
சினந்தனை தனியாய்?

நட: ஏன் இத் தீயவன்
அனந்தைக் கேகுங் காரணம்?

நாரா: யார்? யார்?

நட: அறிவை! நீவிளை யாடலை; அறைதி

நாரா: வதுவை மனோன்மணி தனக்கு வழங்கிட்...

நட: அதுவும் நன்றே! கெடுவனிவ் வரசன்!

நாரா: அடுத்தது வாணியின் மணமும், அறைந்துளேன்.

நட: விடுத்திடவ் வெண்ணம்; தடுக்கையா னறிவன்;
விடுத்தனன் கண்டும்; எரித்திடுவேன் நொடி.
உறுதியொன் றுளதேல்! உரையாய் நடந்தவை

நாரா: முதியவ ருசிதனுக் குரைக்க மற்றவன்

வதுவை யவ்வழியே யாற்றிட வாணியை
அதட்டினன்.

நட: அதற்கவள் ?

நா: மறுத்தனன்.

நட: எங்ஙனம் ?

நா: 'இறக்கினும் அதற்கியா னிசையேன்' என்றாள்.

நட: அரைக்கண முன்னம் அறிந்திலே னிம்மொழி.

நா: என்னே யுன்மதி ! ஏந்திழை யார்சொல்
நீர்மே லெழுத்தாம் ; யாரறி வாருளம் ?
மாறி நாடொறும் வேறுபா டுறுமதி
யெண்ணுட் பட்டு நுண்ணயங் கூடலாற்
பெண்கள் நிலையிற் பெரிதுந் திடனே.
புண்கொள் நெஞ்சொடு புலம்புகின் றாய்மிக.
காதலா லழிக் கனன்முன் வையாய்
மாதராற் கட்டுரை மாயா தென்செயும் ?
அக்கண முற்ற துக்கந் தூண்டக்
கன்னியா யிருப்ப னென்றா ளன்றி
யன்ன தவள்கருத் தாமோ ?

நட: அறியாய் !
புருடரே புலையர் ; நிலையிலாப் பதடிகள் ;
இருளடை நெஞ்சினர் ; ஈரமி லுளத்தர் ;
ஆணையு மவர்க்கொரு வீணுரை ; அறிந்தேன்.
தந்நய மன்றிப் பின்னொன் றறியாக்
காதகர் ; கடையர் ; கல்வியில் கசடர்.

நா: ஓதி யுணரினும் மாத ருள்ளம்
அலையெறி கடலினுஞ் சலன மென்ப.

நட: திரைபொரல் கரையிலும் வெளியிலு மன்றி,
கயத்திலும் அகத்திலுங் கலக்க மவர்க்கிலை,
இயக்கமும் மயக்கமுஞ் செறிவ தரிவையர்,
உள்ளப் பரப்பி லொருபுறத் தன்றி,
பள்ளத் தாழ்ச்சியிற் பரிவும், கொள்கை
விள்ளா முரணும், மெய்ம்மையில் தெளிவும்,
உள்ளார் ; அவர்தம் உறுதிநீ யுணராய்.
சுற்றிச் சுழலினுங் கறங்கொரு நிலையைப்

பற்றியே சுழலும்; அப் படியலர் புருடர்.
கேடவ ருறுவதிங் காடவ ருருவுகொண்
டலைதருங் கொடிய இவ் வலைகள் வழியே
புருடரோ இவரும்! கருவுறுங் குழவிமெய்
மென்றிட நன்றெனக் கொன்றுதின் றிடுவர்.
அவாவிற் களவிலை, அன்போ அறியார்.
மனமும் அவர்க்கொரு வாணிகம்! அந்தோ!
சீ! சீ! என் இத் தீயவர் செய்கை!
மாசிலா வையகத் திவ்வுயிர் வாழ்க்கை
ஆழ்பெருங் கடலுள் போம்மரக் கலனும்
ஆடவர் நெஞ்சம், அறத்துறை யகன்று
நீள்திசை சுழற்று நிலையிலாக் காற்றும்
தின்னய மற்ற எண்ணம் இயக்கச்
சென்றுழிச் சென்று நன்றறி வின்றி
அலையா வண்ணம் அறத்துறைக் குடாவில்
நிலைபெற நிறுத்து நங் கூரமாய், பின்னுஞ்
செய்வினை முயற்சியிற் பொய்வகைப் புன்னெறிக்
கெற்றுண் டகன்று பற்றொன் றின்றி
ஆசையாந் திசைதொறும் அலைந்து திரிந்து
கெடாவணங் கடாவிக் கெழுமிய அன்புசேர்
அறப்பிடி கடைப்பிடி யாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்த்துசுக் கானாய்,
நின்றது மங்கையர் நிலைமை யென்று
நினையா மனிதர், விலங்கினுங் கீழாய்
அனையார் தருசிற் றின்பமே யவாவி
வாழ்க்கைத் துணையா வந்தவர் தம்மைத்
தாழ்த்துஞ் சேறா மாற்றுவர் தவத்தால்
மந்திரவாள் பெற்று மாற்றலர் வெல்லாது
அந்தோ! தம்மெய் யரிவார் போலத்
தனியே தளருந் தமக்குத் துணையாய்
வருபவர் தமையும் பகைவரா நலிந்து
பாலையும் நஞ்சாப் பண்ணுவர். அவர்தம்
மதிகே டென்னே! துதிபெறு மன்புநற்
குணமு முணரில் துணைவ ராயின்

இல்லதென் னுலகில்? இவற்றுடன் கல்விசேர்
நல்லறி வுளதேற் பொன்மலர் நாற்றம்
பெற்றவா றன்றே? எற்றே மடமை!
கேட்டிட வேட்டவை யாவையும் ஈயுங்
கற்பக தருவென அற்பமுங் கருதாது
அடியுடன் முறித்து முடிபுற வெரித்துக்
கரிபெற முயன்ற கம்மிய னேயென,
தனக்கென வாழுந் தனிமிரு கத்தின்
மனக்கோள் நிமிர்த்து மற்றைய ரின்பமுந்
துன்பமுந் தனதா அன்புபா ராட்ட,
மெள்ளமெள் ளத்தன் உள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தந் தெளித்துத்
தானெனு நினைப்புந் தனக்கெனு மிச்சையும்
ஒய்வுறச் செய்து,மற் றொன்றாய் நின்ற
எங்கு நிறைந்தபே ரின்ப வெள்ளம்
முங்கி யதனுள் மூழ்கிட யாரையும்
பக்குவஞ் செய்யுநற் பள்ளிச் சாலை, இவ்
இல்லற மென்பதோர் நல்லுணர் வின்றி,
உடற்றின வடக்குமா உரைஞ்சிடு தடியென
மடத்தனங் கருதித் தம்மையும் பிறரையுங்
கெடுத்திடு மாந்தரின் கெடுமதி யென்னே!
நாரண! இவ்வயிற் கேட்டதுங் கண்டதுந்
தீராத் துயரமே செய்வது செல்குவன்.
ஏதா யினுமினி எய்தில்,
ஓதாய் முனிவர் உறையு ளுற்றே. (1)

[நடராசன் போக]

(நேரிசை ஆசிரியப்பா)

நார : (தனிமொழி)
நல்லது மிகவும்! செல்லிடந் தோறுங்
கதையா யிருந்தது. கண்டதென்? கேட்டதென்?
புதுமையிங் கிதுவும்! பொருந்துவ
தெதுவா யினுஞ்சரி. ஏகுவம் மனைக்கே. (2)

[நாராயணன் போக]

இரண்டாம் அங்கம் : இரண்டாம் களம்
முற்றிற்று.

மூன்றாம் களம்

இடம் : திருவனந்தையிற் சேரன் அரண்மனை.
காலம் : காலை.

[புருடோத்தமன் சிந்தித்திருக்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

புருடோத்தமன் : யார்கொலோ அறியேம்! யார்கொலோ அறியேம்!
(தனிமொழி) வார்குழல் துகிலொடு சோர மாசிலா
மதிமுகங் கவிழ்த்து நுதிவேற் கண்கள்
விரகதா பத்தால் தளரநீர் இறைப்ப
பரிபுர மணிந்த பங்கயம் வருந்துபு
விரல்நிலங் கிழிப்ப வெட்கந் துறந்து
விண்ணணங் கனைய கன்னியர் பலரென்
கண்முன் னின்றங் கிரக்கினுங் கலங்காச்
சித்தம் மந்துறு தயிரில் திரிந்து
பித்துறச் செய்தவிப் பேதை யார்கொலோ?
எவ்வுல கினளோ? அறியேம். இணையிலா
நவ்வியும் நண்பும் நலனு முடையவள்
யார்கொலோ? நாள்பல வானவே. ஆ! ஆ!
விழிப்போ டென்கண் காணில்! வீண்! வீண்!
பழிப்பாம் பிறருடன் பகர்தல் பகர்வதென்?
கனவு பொய்யெனக் கழறுவர். பொய்யோ?
நனவினும் ஒழுங்காய் நாடொறுந் தோற்றும்.
பொய்யல; பொய்யல; ஐய மெனக்கிலை.
நாடொறும் ஒருகலை கூடி வளரும்
மதியென எழில்தினம் வளர்வது போலும்.
முதனாள் முறுவல் கண்டிலம்; கடைக்கணில்
ஆர்வம் அலையெறி பார்வையன் றிருந்தது.
நேற்றிராக் கண்ட தோற்றமென் நெஞ்சம்
பருகின தையோ! கரிய கூந்தலின்
சிறுசுருள் பிறைநிகர் நறுநுதற் புரளப்
பொருசிலைப் புருவம் ஒருகலை நெகிழ்த்துச்

செவ்வரி படர்ந்த மைவழி நெடுவிழி
உழுவலோ டென்முகம் நோக்க எழுங்கால்
என்னைக் கெதிர்படத் தன்னைக் ககற்றி,
வெய்யோன் வாரியில் விழுங்கால் துய்ய
சேணிடைத் தோன்றுஞ் செக்கர்போற் கன்னம்
நாணொடு சிவக்க ஊர்கோள் நாப்பண்
தோன்றிய உவாமதி போன்றங் கெழிலொளி
சுற்றிய வதனஞ் சற்றுக் கவிழ்த்தி,
அமுதமூற் றிருக்குங் குமுதவா யலர்ந்து
மந்த காசந் தந்தவள் நின்ற
நிலைமையென் நெஞ்சம் நீங்குவ தன்றே!
தேவ கன்னியர் முதலாந் தெரிவையர்
யாவரே யாயினும் என்கண் தனக்கு
மைந்தரா மாற்றுமிச் சுந்தரி யார்கொலோ?
அறியுமா றிலையே! அயர்க்குமா றிலையே!
உண்டெனிற் கண்டிடல் வேண்டும். இலையெனில்
இன்றே மறத்தல் நன்றே. ஆம்! இனி
மறத்தலே கருமம். மறப்பதும் எப்படி?
போரெவ ருடனே யாயினும் புரியிலவ்
ஆரவா ரத்தில் அயர்ப்போ மன்றி...
[சேவகன் வர]

சேவகன்: எழுதரு மேனி இறைவ! நின் வாயிலில்
வழுதியின் தூதுவன் வந்துகாக் கின்றான்.
புரு: யாரவன்?
சேவகன்: பேர்பல தேவனென் றறைந்தான்.
புரு: (தனதுள்)
சோரன்!
(சேவகனை நோக்கி) வரச்சொல்.
(தனதுள்) தூதேன்? எதற்கிக்
கயவனைக் கைதவன் அனுப்பினான்?
நயந்தி துணர்ந்து நட்டிலன் போன்மே. 1
[பலதேவன் வர]

பலதேவன்: மங்கலம், மங்கலம்! மலய மன்னவ!
பொங்கலைப் புணரிசூழ் புவிபுகழ் சுமக்கத்
தன்தோள் தாரணி தாங்க எங்கும்

ஒன்னார் தலையொடு திகிரி யுருட்டிக்
குடங்கை யனையிற் குறும்பர் தூங்க
இடர்பார்த் தொதுங்குந் தடமுற் றத்து
மேம்படு திருநெல் வேலியிற் றிருக்கும்
வேர்பார் ஜீவக வேந்தன் விடுத்த
தூதியான். என்பெ ரோதில் அவ் வழுதியின்
மந்திரச் சிகாமணி தந்திரத் தலைவன்,
பொருந்தலர் துணுக்குறு மருந்திறற் சூழ்ச்சியன்
குடிலேந் திரன்மகன்...

புரு: (தனதுள்) மடையன்.
வந்ததென் ?

பலதே: அப்பெரு வழுதி யொப்பறு மாநகர்
நெல்லையிற் கண்டு புல்லார் ஈட்டமும்
அரவின தரசும் வெருவி னாரேலெனப்
பிறவிப் பௌவத் தெல்லையும் வறிதாம்
ஆணவத் தாழ்ச்சியும் நாண அகழ்வலந்
தொட்டஞ் ஞானத் தொடர்பினு முரமாய்க்
கட்டிய மதிற்கணங் காக்க விடயத்து
எட்டி யழுத்தி இழுக்கும் புலன்களின்
யந்திரப் படைகள் எண்ணில இயற்றி....

புரு: வந்த அலுவலென் ?

பலதே: மன்னவா ! நீயான்
வஞ்சிநாடதற்குத் தென்கீழ் வாய்ந்த
நன்செய்நா டென்றொரு நாடுள தன்றோ ?
எங்கட் கந்நா டுரித்தாம். அங்கு
பரவு பாடையும் விரவுமா சாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா...

புரு: நல்லது ! சொல்லாய்.

பலதே: தொல்லையாங் கிழமைபா
ராட்டித் தங்கோல் நாட்டி நடத்த
வல்ல மன்னவ ரின்மையால் வழுதிநாட்டு
எல்லையுட் புகுந்தங் கிறுத்துச் சின்னாள்
சதியாய் நீயர சாண்டாய்......

புரு: அதனால் ?

பலதே: அன்னதன் உரிமை மீட்க உன்னியே
முதுநக ராமெழில் மதுரை துறந்து
நெல்லையைத் தலைநகர் வல்லையில் ஆக்கி
ஈண்டினன் ஆங்கே.

புரு: வேண்டிய தென்னை?
உரையாய் விரைவில்.

பலதே: உதியனும் செழியனும்
போர்தனி புரியில் யார்கொல் பிழைப்பர்?
பங்கமில் இரவியுந் திங்களும் துருவி
எதிர்ப்படுங் காலை, கதிர்க்கடுங் கடவுள்
மறையஇவ் வுலகில் வயங்கிருள் நிறையும்
அவரந் நிலையில் அமர்ந்திடில் அவ்விருள்
தவறுந் தன்மைபோல் நீவிர் இருவருஞ்
சமர்செயி னுலகம் தாங்கா தென்றே
எமையிங் கேவி இவ்வவைக் கேற்றவை
நீடியா யெடுத்தெலாம் ஓதி,தன் செய்நாடு
உடையார்க் குரிமை நோக்கி யளிப்பதே
கடனெனக் கழறிப் பின்னிக ழுன்கருத்து
அறிந்து மீளவே விடுத்தான்.

புரு: ஆ! ஹா!
முடிந்ததோ? இலையெனின் முற்றும் செப்புவாய்.

பலதே: மேலும் ஒருமொழி விளம்புதும் வேந்தே!
சாலவும் நீவிர் பகைக்கில் சகமெலாம்
ஆழ்துயர் மூழ்கலும் அன்றி உங்கட்கு
எது விளையுமோ அறியேம் ஆதலின்,
அஞ்சா அரியே றன்னஜீ வகனுடன்
வெஞ்சமர் விளைத்தல் நன்றல.

புரு: (பயந்தாற்போல்) ஆ! ஆ!

பலதே: தன்செய்நா டினிமேல் மீட்டு நல்கலும்
எஞ்சலில் பெரும்புகழ்க் கேற்ற தன்றெனில்
உரைக்குது முபாயமொன் றுசிதன் மனையில்
திரைக்கடல் அமுதே உருக்கொண் டதுபோல்
ஒருமலர் மலர்ந்தங் குறைந்தது. தேனுண
விரைமலர் தேடளி வீற்றிங் கிருந்தது.

அன்னவள் மன்ன! நின் அரியணை யமரில்
தென்னவன் மனமும் திருந்தும். நன்சேய்நா
டுன்னதும் ஆகும்.

புரு: உண்மை! ஓ ஹோ!
வண்டு மலரிடை யணையஉன் நாட்டில்
கொண்டு விடுவரே போலும். நன்று!
கோதறு மிருபுறக் காதல் அன்றியெம்
நாட்டிடை வேட்டல்மற் றில்லை. மேலும்நம்
அரியணை இருவர்க் கிடங்கொடா தறிகுதி.

பலதே: (தனதுள்)
சுரிகுழல் வதுவை போனது. சுகம்! சுகம்!

புரு: ஆதலின் முடிவில்நீ ஓதிய தொழிக.
நன்சேய்நா டதற்கா நாடிநீ நவின்ற
வெஞ்சொல் நினைதொறும் மேலிடும் நகையே.
அடைக்கலம் என்றுநம் அமைச்சரை யடைந்து
நடைப்பிணம் போலக் கடைத்தலை திரிந்து
முடியுடன் செங்கோல் அடியிறை வைத்துப்
புரவலர் பலர்வாய் புதைத்து நிற்க,
அனையர்தம் மனைவியர் அவாவிய மங்கல
நாணே இரந்து நாணம் துறந்து
கெஞ்சுமெஞ் சபையில், அஞ்சா தெமது
நன்சேய்நா டதனை நாவுகூ சாமற்
பாண்டியற் களிக்க என்றுரை பகர்ந்தும்,
ஈண்டுநீ பின்னும் உயிர்ப்பது தூதுவன்
என்றபே ரொன்றால் என்றே அறிகுதி.
கருதா துனையிங் கேவிய கைதவன்
ஒருவா ரத்திற் குள்ளாய் அவன்முடி
யார்பகை இன்மையால் இதுகா றணிந்து
பார்வகித் தானெனப் பகரா தறிவன்.
விரித்துநீ யெம்மிட முரைத்த புரிசையும்,
அரிக்குநே ரென்னநீ யறைந்த அரசனும்
இருப்பரேல் காண்குவம் அவர்வலி யினையும்.
(சேவகனை நோக்கி)
அருள்வர தனையிங் கழையாய்! சேவக!

[அருள்வரதன் வர]

பலதே: (தனதுள்)
　　சிந்தனை முடிந்தது.
அருள்வரதன்: 　　வந்தனம்! வந்தனம்!!
புரு: நல்லது! செழியன் நெல்லையை நோக்கி
நாளையாம் ஏகுவம். நமதுபோர் வீரரவ்
வேளையா யத்தமாய் வைப்பாய்.
அருள்: 　　ஆஞ்ஞை.
புரு: செல்வாய் விரைவில். தென்னன் போர்க்கு
(பலதேவனை நோக்கி) வல்லா னென்னில் வாரமொன் றிற்குள்
துன்னிய சேனையும் தானும்நீ சொன்ன
கடிபுரி பலமாக் காக்க. இல்லையேல்,
முடிநம் அடியில் வைத்து நாமிடும்
ஆணைக் கடங்கி யமர்க. எமதிடம்
வீணுக் குன்னை விடுத்தகை தவற்கு
வஞ்சியான் மொழிந்த மாற்றமீ தெனவே
எஞ்சா தியம்புதி. ஏகாய், ஏகாய்!
　　[பலதேவன் போக]
(தனதுள்) மூட்டாள் இவனை விட்டவன் குட்டுப்
பட்டபோ தன்றிப் பாரான் உண்மை.
பச்சாத் தாபப் படுத்துவம்; நிச்சயம்.
நண்ணிய நமது கனவின்
எண்ண மேகினும் ஏகும் இனியே. 　　2
　　[புருடோத்தமன் போக]
(காவற் படைஞரும், சேவகர்களும் அருள்வரதனைச் சுற்றி நிற்க)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

அருள்: தீர்ந்தது சூரரே! நுந்தோள் தினவு;
நேர்ந்தது வெம்போர்.
யாவரும்: 　　வாழ்கநம் வேந்தே!
முதற் படைஞன்: நொந்தோம்; நொந்தோ மிதுகா றுறங்கி.
யாவரும்: உய்ந்தோம்; உய்ந்தோம்; வாழுக உன்சொல்!
உ-ஆம் படை: பெரும்போர் இலாநாள் பிறவா நாளே.
௩-ஆம் படை: மெய்யோ? பொய்யோ? ஐய! இதுவும்.
௪-ஆம் படை: யாவரோ, பகைவர்? அருளா பரணு!
தேவரோ, அசுரரோ, மூவரோ, யாவர்?

அருள்: பாண்டியன்.
யாவரும்: (இகழ்ச்சியாய்)
பாண்டியன்! சீச்சீ! பகடி
அருள்: ஈண்டுவந் தவனவன் தூதன். யதார்த்தம்....
யாவரும்: வியப்பு! வியப்பு!
௧-ஆம் படை: வேற்று ளொருவனென்
அயற்புறம் போனான். அவன்முகம் நோக்குழி
வியர்த்தனன்; தூதுடை கண்டு விடுத்தேன்.
முதற்படை: அவன்றான்! அவன்றான்! அவன்றான்! தூதன்
௪-ஆம் படை: யாதோ காரணம்? ஓதாய், தலைவா!
௨-ஆம் படை: அப்பந் தின்னவோ? அலாக்குழி எண்ணவோ
செப்பிய துனக்கு? நமக்கேன்? சீச்சீ!
அருள்: நல்லது வீரரே! நாளை வைகறை
நெல்லையை வளைந்து நெடும்போர் குறித்துச்
செல்லற் குரியன திட்டம் செய்வான்
வல்லையில் ஏகுதும். மங்கலம் உமக்கே. 3

[அருள் வரதன் முதலியோர் போக]

இரண்டாம் அங்கம்: மூன்றும் களம்
முற்றிற்று.

(கலித்துறை)

அடைய மனோன்மணி அம்மையுஞ் சேரனும் ஆசைகொள்ள
இடையில் நிகழ்ந்த கனாத்திற வைபவம் என்னையென்க!
உடலு ளுலண்டென வேயுழல் கின்ற வுயிர்களன்புந்
தடையில் கருணையுஞ் சந்தித்தல் எங்ஙனஞ் சாற்றுதுமே.

இரண்டாம் அங்கம்
முற்றிற்று.

ஆசிரியப்பா	22-க்கு	அடி	708
ஆசிரியத்துறை	3-க்கு	,,	12
கலித்துறை	1-க்கு	,,	4
ஆக அங்கம் 1-க்கு: பா-26-க்கு		,,	724

மூன்றாம் அங்கம்

முதற் களம்

இடம் : பாண்டியன் அரண்மனை.
காலம் : காலை.

[ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை]

(நிலைமண்டில ஆசிரியப்பா)

ஜீவகன் : ஐயமென்? அருஞ்சூழ் அமைச்சநின்! தனையன்
பெய்வளைக் கன்னியென் பேதையின் வதுவைக்
குரியன முற்றும் ஒருங்கே முடித்து
வருவதற் கமைந்த வலிமையும் கல்வியும்
உபாயமும் யாவும் உடையான்; அதனால்
அபாயம் கருதிநீ ஐயுறல் வீண்! வீண்!

குடிலன் : பலதேவ னொலொரு பழுதுறும் எனவெனக்
கிலையிலை ஐயம் சிறிதும். உலகத்து
இயற்கை யறியா இளையோ னாகினும்
முயற்சியின் மதியின் முதியோன் எனவே
மொழிகுவர். அவனாற் பழுதிலை. கொற்றவ!
வஞ்சி நாட் டுள்ளார் வஞ்சனைக் கஞ்சார்.
நஞ்சினும் கொடிய நெஞ்சினர், அவர்தாம்
கெஞ்சிடின் மிஞ்சுவர்; மிஞ்சிடிற் கெஞ்சுவர்;
என்னும் தொன்மொழி ஒன்றுண் டதனால்
மன்னவ! சற்றே மருளும் என்னுள்ளம்.
அன்றியும் புருடோத் தமனெனும் அரசன்
கன்றுஞ் சினத்தோன் என்றார் பலரும்.

ஜீவ : சினத்தோன் ஆயினென்? தேவரும் தத்தம்
மனத்தே அவாவி மயங்குநம் மனோன்மணி
திருவும் வெருவும் உருவும், பெருகும்
அருளுறை யகமும், மருளறு முணர்வும்,
முன்னமே இருடிகள் மொழியக் கேட்டனன்.
அன்னவன் தன்னிடைப் பின்னரும் பெயர்த்துக்
குறிப்பால் நமது கொள்கை யுணர்த்தில்,

செறித்திடும் சிறையினை யுடைத்திடும் புனல்போல்
தாங்கா மகிழ்ச்சியுள் தாழ்ந்தவன் இப்பால்
தலையா லோடி வருவன். உனக்கு
மலைவேன் மந்திரக் குடிலேந் திரனே!

குடில: முனிவர்க ளாங்கே முன்னர் மொழிந்தனர்
என நாம் நினைப்பதற் கில்லை. நம் அமுதின்
எழிலெலாம் எங்ஙனம் முனிவோர் மொழிவர்?
துறந்தார்க் கவைதாம் தோற்றுமோ மறந்தும்?
சிறந்தநூல் உணர்வும் தெளிந்தோர் உளமும்
செப்பினர் என்றிடில் ஒப்பெலாந் தகைத்தே.
ஆயினும், மலையநாட் டரசன் நமது
தாயின் தன்மை சகலமும் இப்போது
அறியா தொழியான்; அயிர்ப்பொன் றில்லை.
நெறிமுறை சிறிதும் பிறழா நினது
தூதுவன் யாவும் ஓதுவன் திண்ணம்
அம்ம! தனியே அவன்பல பொழுதும்
மம்மர் உழன்றவன் போன்று மனோன்மணி
அவயவத் தழகெலாம் மாறா தறைந்தறைந்து,
இமையவர் தமக்கும் இசையுமோ இவளது
பணிவிடை? நமது பாக்கிய மன்றோ
அணிதாய் இருந்திவட் காம்பணி யாற்றுதும்?
என்றுமிப் படியே இவன்பணி விடையில்
நின்றுநம் உயிர்விடில் அன்றோ நன்றாம்?
என்றவன் பலமுறை யியம்பல்கேட் டுளனே.

ஜீவ: ஐயமோ? குடிலா மெய்ம்மையும் இராஜ
பத்தியு நிறைந்த பலதே வன்றன்
சித்த மென்குல திலகமாந் திருவுடன்
பரிவுறல் இயல்பே. அரிதாம் நினது
புத்திர னென்னில், இத்திற மென்றிங்கு
ஓதவும் வேண்டுவ துளதோ? ஏதிதும்?

குடில: அதுகுறித் தன்றே யறைந்ததெம் இறைவ!
மதிகுலக் கொழுந்தாம் மனோன்மணி சீரெலாம்
அறியினும் சேரன் வெறிகொளும் சிந்தையன்
ஆதலின் வதுவைக் கவன்தான் இசைவனே,

யாதோ எனவென் மனந்தான் அயிர்க்கும்;
அவன்குணம் ஒருபடித் தன்றே; அவனுளம்
உவந்தன வெல்லாம் உஞற்றுவன் என்றே
நாட்டுள்ளார் நவில்வது கேட்டுளாய் நீயும்.
ஜீவ: ஆம்! ஆம்! அறிந்துளேம். ஏமாப் படைந்த
தன்னுளம் வியந்தவை இன்னவென் றில்லை.
வேதம் வகுத்த வியாசன் வியந்து
போற்றினும் பொருட்டாய் எண்ணான்; புலையன்
சாற்றுதல் ஒருகால் தான்மகிழ்ந் திடுவன்:
ஒருவன் தனதடி யிணையடைந் துறவே
பெரிது விரும்பினும் பெருமைபா ராட்டுவன்;
மற்றோர் மனிதன் சற்றுமெண் ணாதே
செருப்பால் மிதிக்கினும் விருப்பா யிருப்பன்,
மலரிடிற் காய்வன்; பரலிடின் மகிழ்வன்;
பெரியோர் சிறியோர் பேதையர் அறிஞர்
உரியோர் அயலோர் என்றவன் ஒன்றும்
உன்னான். ஆயினும் இன்னவை யாவும்
பிரபுத் துவமலாற் பிறவல குடிலா!
குடில: அடியேற் கவ்விடத் தையமொன் றுளது.
முடிபுனை மன்னரிற் கடிநகர்ச் செருக்கும்
இணையிலாச் சேனையும் ஈறிலா நிதியுந்
துணிவரு உளனும் பணிவிலா உரனும்
உனைவிட எவர்க்குள? ஓதுவாய். உன்வயின்
தினையள வேனும் சேரா தாகும்
ஒருகுணம் பிரபுத் துவமென யாரே
உரைதர உன்னுவர்? ஒவ்வுவ தெவ்விதம்?
மலையன் தந்தைகீழ்த் தாய்க்கீழ் வளர்ந்தவன்
அலனெனும் தன்மைநீ ஆய்ந்திலை போலும்.
நன்றுதீ தென்றவன் ஒன்றையு நாடான்
என்றிடில் நாம்சொலும் நன்மையும் எங்ஙனம்
நாடுவன் எனவெனக்கு ஓடுமோர் நினைவே.
ஒக்கும்! ஒக்கும்நீ யுரைத்தவை முற்றும்.
குலகுரு கூறுதல் கொண்டில மென்னில்
நலமன் றென்றே நாடி யனுப்பினேம்.

நயந்தில னாகில் அவன்விதி. நமக்கென்?
இயைந்த கணவர்வே றாயிரம். காண்குதும்.

குடில: அதற்கென் னையம்! ஆயிரம்! ஆயிரம்!
இதுமாத் திரமன் றிறைவ! சேரன்
சென்றவர்க் கெங்ஙனந் தீங்கிழைப் பானோ
என்றே யென்மனம் பதறும். ஏவுமுன்
உரைக்க உன்னினேன் எனினும் உன்றன்
திருக்குறிப் பிற்கெதிர் செப்பிட அஞ்சினேன்.

ஜீவ: வெருவலை குடிலா! அரிதாம் நமது
தூதுவர்க் கிழிபவன் செய்யத் துணியும்
போதலோ காணுதி, பொருநைத் துறைவன்
செருக்கும் திண்மையும் வெறுக்கையும் போம்விதம்!
விடுவனோ சிறிதில்? குடில! உன் மகற்குத்
தினைத்துணை தீங்கவன் செய்யின்என் மகட்கும்
பனைத்துணை செய்ததாப் பழிபா ராட்டுவன்.

[ஒற்றன் வர]

ஒற்றன்: மங்கலம்! மங்கலம்! மதிகுல மன்னவா!

ஜீவ: எங்குளார் நமது தூதுவர்!

ஒற்றன்: இதோ! இம்
மாலையில் வருவர். வாய்த்தவை முற்றுமிவ்
ஓலையில் விளங்கும்; ஒன்னல ரேறே!

[ஒற்றன் போக, ஜீவகன் ஓலை வாசிக்க.]

குடில: (தனதுள்) ஒற்றன் முகக்குறி ஓரிலெம் எண்ணம்
முற்றும் முடிந்ததற் கற்றமொன் றில்லை.
போரும் வந்தது. நேரும் புரவலற்
கிறுதியும் எமக்குநல் லுறுதியும் நேர்ந்தன.

ஜீவ: (தனதுள்) துட்டன்! கெட்டான் விட்டநந் தூதனை
ஏசினன்; இகழ்ந்தான்; பேசிய வதுவையும்.
அடியில்நம் முடிவைத் தவறா னாயிற்கீழ்ப்
படியில் விடுவனாம்; படைகொடு வருவனாம்;
முடிபறித் திடுவனாம்; முடிபறித் திடுவன்!
(குடிலனை நோக்கி) குடிலா! உனைப்போற் கூரிய மதியோர்
இடையார். இடையசிர். அடையவும் நோக்காய்;
கடையவன் விடுத்த விடையதி வியப்பே!

[குடிலன் ஓலை நோக்க]

குடில: நன்னலர் கூற்றே! என்னுறுதற் கென்னே!
உன்னவா என்றியாம் உறவுபா ராட்டிற்
குத்தவா எனும்உன் மத்தனன் றேயிவன்!
யுத்தந் தனக்கெள் ளத்தனை யேனும்
வெருவினும் அல்லோம். திருவினுஞ் சீரிய
உருவினுள் தனக்கிங் குரைத்ததோர் குற்றமும்
இழிவையும் எண்ணியே அழியும் என்னுளம்!

ஜீவ: பொறு! பொறு! குடில! மறுவிலா நமக்கும்
ஒருமறுக் கூறினோன் குலம்வே ரோடுங்
கருவறுத் திடலுன் கண்ணுற் காண்டி.

குடில: செருமுகத் தெதிர்க்கிற் பிழைப்பனோ சிறுவன்?
ஒருமயக் கதனாற் பொருவதற் கெழுந்தான்.
வெற்றியாம் முற்றிலுங் கொள்வேம் எனினும்,
ஆலவா யுள்ள படைகளை யழைக்கில்
சாலவும் நன்றாம்; காலமிங் கில்லையே.

ஜீவ: வேண்டிய தில்லை யீண்டவர் உதவி.
தகாதே யந்தநி காதர்தஞ் சகாயம்
ஒருநாட் பொருதிடில் வெருவி யோடுவன்.
பின்னரைத் திடுவோம்; அதுவே நன்மை.
புலிவேட் டைக்குப் பொருந்துந் தவிலடி
எலிவேட் டைக்கும் இசையுமோ? இயம்பாய்.

குடில: அன்றியு முடனே அவன்புறப் படலால்
வென்றிகொள் சேனை மிகஇரா தவன்பால்.

ஜீவ: இருக்கினென்? குடிலா! பயமோ இவற்கும்?
பொருக்கெனச் சென்றுநீ போர்க்குவேண் டியவெலாம்
ஆயத்த மாக்குதி; யாமிதோ வந்தனம்.

[ஜீவகன் போக வாயிற்காத்த
சேவகன் வணங்கிவந்து]

சேவகன்: விழுமிய மதியின் மிக்கோய்! நினைப்போற்
பழுதிலாச் சூழ்ச்சியர் யாவர்? நின்மனம்
நினைந்தவை யனைத்தும் நிகழுக வொழுங்கே.

குடில: நல்லது! நல்லது! செல்லா யப்பால்.

[சேவகன் போக]

சொல்லிய தென்னை? சோரன் நமது
(தனதுள்) நினைவறிந் துளனோ? நிருபர்க் குரைப்பனோ?
இனையவன் எங்ஙனம் உணருவன்? வினையறி
தாரணை யோர்ந்து நவின்றனன் போலும்...
காரணம் அதற்கும் கண்டிலம். ஆ! ஆ!
மாலைக் காக வாழ்த்தினன் இவனும்!
புலமையிற் சான்றோர் புகல்வது பொய்யல.
"கள்ள மனந்தான் துள்ளு" மென்பதும்
"தன்னுளந் தன்னையே தின்னு" மென்பதும்
"குற்றம் உள்ளோர் கோழையர்" என்பதும்
சற்றும் பொய்யல; சான்றுநம் மிடத்தே
கண்டனம். அவனெம் அண்டையில் அம்மொழி
விளம்பிய காலை விதிர்விதிர்ப் பெய்தி
உளம்பட படத்தென் றூக்கமும் போனதே.
சிச்சி! இச்சைசெய் அச்சஞ் சிறிதோ!
வஞ்சனை யாற்பெறும் வாழ்வி தென்னே!
நஞ்சுபோல் தனது நெஞ்சங் கொதிக்கக்
கனவிலும் நனவிலும் நினைவுகள் பலவெழத்
தன்னுளே பன்முறை சாவடைந் தடைந்து
பிறர்பொருள் வெளவும் பேதையிற் பேதை
எறிகடல் உலகில் இலையிலை. நில்! நில்!...
நீதியை நினைத்தோ நின்றேன்? பள! பள!
ஏதிது? என்மனம் இங்ஙனம் திரிந்தது!
கொன்றபின் அன்றோ முதலை நின்றழும்
வா வா காலம் வறிதாக் கினையே.
ஓவா திவையெலாம் உளறுதற் குரிய
காலம் வரும்வரும். சாலவும் இனிதே!
[குடிலன் போக]

மூன்றாம் அங்கம் : முதற் களம்
முற்றிற்று.

இரண்டாம் களம்

இடம் : ஊர்ப்புறம் ஒருசார்.
காலம் : எற்பாடு.

[நடன் : நடராஜன்.]

(நேரிசை ஆசிரியப்பா)

நடராஜன் :
(தனிமொழி)
காலையிற் கடிநகர் கடந்து நமது
வேலை முடிக்குதும். வேண்டின் விரைவா
இன்றிரா முடிக்கினும் முடியும். துன்றராக்
கவ்விய முழுமதிக் காட்சியிற் செவ்விதாம்
பின்னிய கூந்தல் பேதையின் இளமுகம்
என்னுளத் திருந்திங் கியற்றுவ திப்பணி.
அதனால் அன்றோ இதுபோல் விரைவில்
இவ்வினை இவ்வயின் இனிதின் முடிந்தது?
எவ்வினை யோர்க்கும் இம்மையிற் றம்மை
இயக்குதற் கின்பம் பயக்குமோர் இலக்கு
வேண்டும். உயிர்க்கது தூண்டுகோல் போலாம்
ஈண்டெப் பொருள்தான் இலக்கற் றிருப்பது?
இதோ ஓ! இக்கரை முளைத்தஇச் சிறுபுல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி.
அதன்சிறு பூக்குலை யடியொன் றுயர்த்தி
இதமுறத் தேன்றுளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூண் அருத்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து
ஆசிலாச் சிறுகா யாக்கி, இதோ! என்
தூசிடைச் சிக்கும் தோட்டியும் கொடுத்தே,
"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில்
தழைப்பதற் கிடமிலை. சிறார்நீர் பிழைப்பதற்கு
ஏகுமின். புள்ஆ எருதுஅயத் தொருசார்
சிக்கிநீர் சென்மின்!" எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்
பொறுமையும் புலனுங் காண்போர், ஒன்றையும்
சிறுமையாச் சிந்தனை செயாதுஆங் காங்கு
தோற்றுபே ரழகும் ஆற்றல்சால் அன்பும்

போற்றுதங் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம்கண் களிப்ப,
ஆர்த்தெழு மன்பினும் அனைத்தையும் கலந்துதம்
எவ்வெலாம் கரைக்குநல் இன்பம் நினைப்பர்.
தமக்குடன் நல்கும் வயற்குப யோகம்,
எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்
செய்தொழில் எத்தனை விசித்திரம்! ஐயோ!
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பவிச் சிறுகால்!
பாரிதோ! பரற்களை நெறுநெறென் றுரைத்துச்
சிரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக் கடங்கிய மண்கல் புல்புழு
இன்னதென் றில்லை; யாவையும் ஈர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலந் தகும்இவை எனவோர்ந் துருட்டிக்
கொண்டு சென்று இட்டுமற் “றையா!
அண்ட யோனியின் ஆணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீ ழருவியாய்த் தூங்கியும், குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்
ஊறிடுஞ் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்,
ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்,
மதகிடைச் சாடியும், வாய்க்கால் ஓடியும்
பற்பல படியான் பட்டங் கிட்டியது
அற்பமே யாயினும் ஆதர வாய்க்கொள்;
இன்னமு மீதோ ஏகுவன்.” எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்திவண் அடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்குமிந் நிலைமையர் யாவர்?

(நீரைக் கையாற் றடுத்து)

நிரந்தரம்! ஐயோ! நொந்தனை! நில்! நில்!
இரைந்ததென்? அழுவையோ? ஆயின் ஏகுதி

நீரே! நீரே! என்னே யுன் நிலைமை?
யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்?
நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப்போல் உளவேல் பினைப்பே றென்னே?...
(நாங்கூழ்ப் புழுவை நோக்கி)
ஓகோ! நாங்கூழ்ப் புழுவே! உன்பாடு
ஓவாப் பாடே. உணர்வேன்! உணர்வேன்!
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ.
எம்மண் ணாயினும் நன்மண் ணாக்குவை.
விடுத்தனை யிதற்கா, எடுத்தவுன் யாக்கை.
உழுதுழுது உண்டுமண் மெழுகினும் நேரிய
விழுமிய சேறாய் வேதித் துருட்டி
வெளிக்கொணர்ந் தும்புகழ் வேண்டார்போல
ஒளிக்குவை உன்குழி வாயுமோர் உருண்டையால்
இப்புறப் பயிர்நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி யுண்டாம்? என்னா துனக்கும்
குறும்புசெய் எறும்புங் கோடி கோடியாப்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னே?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள
(நாங்கூழ்ப்புழு குழிக்குள் மறைதலை நோக்கி)
விழுப்புகழ் வேண்டலை. அறிவோம். ஏனிது?
துறக்கலம். உன் தொழில் நடத்துதி. ஆ! ஆ!
எங்கு மிங்ஙனே இணையிலா இன்பம்
பங்கமில் அன்புந் தங்குதல் திருந்தக்
காணார் பேணும் வாணாள் என்னே!
அலகிலாத் தோற்றமோ டிலகிய உலகிற்
சிதறிய ருணக்கதிர் செறிந்து திரள
வைத்தசிற் ருடியின் மையமே யொத்த
உள்ளமும் உடலும் பெற்றுங், கள்வர்...
நினைக்கலை, தீயனை நினைப்பதுந் தீதே!
சினக்கனல் எழும்பும். நமக்கேன் இச்சினம்?
கிருபணன் தினன். விடுவிடு. அஃதென்?
என்கொல் அத்தோற்றம்? புகையோ?-மங்குலுக்கு

இந்திர மில்லை. செந்நிறப் படாமென,
பொதியில்நன் முகடாம் பொற்புறு கருவிற்
கதிமிரு தினமெனும் பொன்வினைக் கம்மியன்
உருக்கி விடுதற் குயர்த்திய ஆடகப்
பெருக்கென விளங்கிய அருக்கன தொளியைப்
பொருக்கெனப் புதைத்தவிப் புழுதி யென்னே
இதோ! துவண்டங் கிடையிடைத் தோற்றுவ
பதாகையின் தொகுதி யன்றோ பார்க்கின்?
இடியுருண் டதுபோல் எழுமொலி தேரொலி?
அடுபடை கொண்டிங் கடைந்தவன் யாவன்?
வருதிசை நோக்கில் வஞ்சிய னேயாம்...
பொருதற் கன்றவன் வருவது சரிசரி!
வதுவைக் கமைந்து வந்தான் போலும்.
இதுவென்? ஓகோ? மணப்பாட் டன்றிது.
[வஞ்சிநாட்டுச் சேனை அணிவகுத்து வழியில்
ஒருபுறம் போகப் படைப்பாணர் பாட]

(வஞ்சித் தாழிசை)

படைப்பாணர்:
அஞ்சலி லரிகாள்! நும்
சஞ்சிதப் பெருவாழ்வெம்
வஞ்சியன் சினத்தாற்கண்
துஞ்சிய கனவேகாண் (1)

படைகள்: ஜே! ஜே! ஜே!

பாணர்:
எஞ்சலில் பகைகாள்! நும்
மஞ்சுள மணிமகுடம்,
வஞ்சியன் சினத்தாலிர்
கஞ்சியுண் கடிதையேகாண். (2)

படை: ஜே! ஜே! ஜே!

பாணர்:
மிஞ்சிய பகைகாள்! நும்
துஞ்சிய பிதிர்க்கூட்டம்
வஞ்சியன் சினத்தாலென்,
நெஞ்சிலும் நினையார்காண். (3)

படை: ஜே! ஜே! புருஷோத்தமர்க்கு ஜே! ஜே!

(நேரிசை ஆசிரியப்பா தொடர்ச்சி)

நட: பார்புதைத் தெழுந்த வீரர்தம் ஆர்ப்பும்,
வார்கழல் ஒலியும், வயப்படை யொளியும்,
பாடிய பாட்டின் பண்ணும், தலைமிசைச்
சூடிய வஞ்சித் தொடையும், தன்னுமை
பொருவுதம் புயத்தில் வெண்கலப் பொருப்பில்
உருமுவீழ்ந் தென்னத் தட்டிய ஓதையும்
இருகனல் நடமிடும் ஒருகரு முகிலில்
மின்னுதித்து அடங்கல்போல் துன்னிய சினநகை
காட்டிய முகக்குறி யாவும் நன்றல.
வேட்டலோ இதுவும்! விளையுமா றெவனோ!
நினைவினும் விரைவாய் நனிசெலுங் குரத்த
கொய்யுளைத் திரைக்கடற் கூட்டமும், பெய்மத
மைம்முகில் ஈட்டமும், வான்தொடு விலோதனப்
பெருஞ்சிறை விரித்து நெடுந்திசை புதைத்துச்
செல்லும் அசலத் திரளும் செறிந்து,
நெல்லையை வெல்லவே செல்வது திண்ணம்.
அந்தோ! அந்தோ! மனோன்மணி வதுவை
வந்தவா றிதுவோ! வந்தவா றிதுவோ!
[இரண்டுழவர்கள் வர]

முதலுழவன்: வியப்பென்? சுவாமி!

நட: வயப்படை வந்தது
அறிவையோ நீயும்?

முதல் உழ: அறிவேன். போருக்கு
அழைத்திடில் யாவர் அணுகார்?

நட: வழுதி
மணமொழி வழங்க அன்றோ விடுத்தான்?

உ-வது உழ: மணமொழி பிணமொழி யானது; குடிலன்
கைதொடின் மஞ்சளும் கரியா கும்மே!

நட: செய்ததென்?

முதல் உழ: ஐயா! அதுநாம் அறியோம்;
குடிலன் படிறன்; கொற்றவன் நாடும்
முடியும் கவர்ந்து மொய்குழல் மனோன்மணி
தன்னையும் தன்மகற்கு ஆக்கச் சமைந்தான்;

மன்னனைக் கொல்ல மலையனைத் தனக்குச்
சூதாய்த் துணைவரக் கூவினான்.

நட: சீச்சீ!
எதிது? வஞ்சியான் வஞ்சனைக் கிசையான்;
பொய்பொய்; புகன்றதார்?

முதல் உழ: பொய்யல, பொய்யல.
ஐய! நானறைவது கேட்டி: எனது
மைத்துன னவன்தாய் மரித்த மாசம்
உற்றதால் அந்தத் திதியினை யுணரச்
சென்றனன் புரோகித சேஷைய னிடத்தில்.
அன்றுநாள் ஆதித்த வாரம்; அன்றுதான்
(உ-ஆவது உழவனை நோக்கி)
சாத்தன் உன்னுடன் சண்டை யிட்டது.
(நடராசனை நோக்கி) சாத்திரி தரையி லிருக்கிறார்; அவரது
மாமனார் கிட்டவே ஆமைப் பலகையில்...
(நாற்புறமும் நோக்கி, செவியில்)
இருந்து பலபல இரகசியம் இயம்புவர்...

நட: திருந்தச் செப்பாய்; யாருளார் இவ்வயின்

உ-வது உழ: இந்த மாமனார் மந்திரி மனைவிக்கு
உற்ற ஜோசியர்.

முதல் உழ: பொறு! யான் உரைப்பன்.
மற்றவ் வெல்லையென் மைத்துனன் ஒதுங்கி
அருகே நின்றனன். அப்போ தறைவர்:
"மருகா! நேற்று மந்திரி மனைவி
பலபல பேச்சுப் பகருங் காலை,
பலதே வன்றன் ஜாதக பலத்தில்
அரச யோகம் உண்டென் றறைந்தது
விரைவில் வருமோ என்று வினவினள்;
வரும்வரும் விரைவில் என்றேன் யானும்.
மறுமொழி கூறாது இருந்துபின் மனோன்மணி
வதுவைக் காரியம் பேசினள். மற்றுஅது
நடக்குமோ? என்றவள் கேட்டு நகைத்தாள்.
நடப்ப தரிதென நான்மொழிந் ததற்கு
வருத்தமுற் றவள்போல் தோற்றினும், கருத்திற்

சிரித்தனள் என்பது முகத்தில் தெரிந்தேன். ”
எனப்பல இரகசியம் இயம்பி, “வலியோர்
மனக்குறி, முகக்குறி, வறிதாம் சொற்கள்
இவைபோல் வருபவை யெவைதாம் காட்டும் ?”
எனஉரைத் திருவரு மெழுந்துபின் நகைத்தார்.
பின்னையென் மைத்துனன் பேரிமீன் றுடனே
எனக்கிங் கிவையெலாம் இயம்பினன். உனக்குச்
சாக்ஷி வேண்டுமேற் காக்கைச் சுப்பனும்
உண்டு ; மற்றவனைக் கண்டுநீ வினவே.

உ-வது உழ : வேண்டாம் ! வேண்டாம் ஐயமற் றதற்கு.
மீண்டும் ஒருமொழி கேள் : இவ் வழியாய்த்
தூதுவர் போகும் காலைத் தாக
ஏதுவால், இரும்படி இராமன் என்றன்
தங்கை மனைக்கு வந்தவத் தருணம்
அங்கியான் இருந்தேன். “ அரன்மனைச் செய்தி
என்ன ?” என் றேற்கவன் இயம்பும்: “மன்னன்
தெத்தெடுத் திடும்படி யத்தன முன்” டென,
“எப்போது யாரை?” என்றேற்கு ஒன்றுஞ்
செப்பா தெழுந்து சிரித்தவன் அகன்றான்.

முதல் உழ : பலதே வற்கிவன் நலமிகு சேவகன்.

உ-வது உழ :
குடிலனுள் வதைவிடக் குடகனுள் வதுநலம்.

முதல் உழ : ஆயினும், நமக்கஃ திழிவே ; மேலும்
தாயினுஞ் சிறந்த தயாநிதி மனோன்மணிக்
குறுதுயர் ஒருவரும் ஆற்றார்.

உ-வது உழ : அறிவிலாத்
தந்தையர் தம்வினை மக்களைச் சாரும் ;
சுந்தர வாணியின் சிந்தைநோய் வழுதியை
விடுமோ ? சொல்லாய்.

முதல் உழ : விதியெனப் பலவும்
படியோர் பாவனை பண்ணித் தமது
கடமையின் விலகுதல் மடமை ; அதனால்
நாட்டில் போர்வரின் நன்குபா ராட்டி
எஞ்சா வெஞ்சமர் இயற்றலே தகுதி

உ-வது உழ : அரசன், அரசனேற் சரியே ; சுவாமி!
உரையீர் நீரே திருவார் வாணியை
அறியீர் போலும்.

நட : அறிவோம், அறிவோம்!
நல்ல தப்புறம் செல்லுமின் நீவிர்......
[உழவர் போக]

(தனதுள்)

ஏழைகள்! தங்கள் ஆழமில் கருத்தில்
தோற்றுவ தனைத்தும் சாற்றுவர். அவர்தம்
தேற்றமில் மாற்றம், சிறுமியர் மழலைபோல்,
சுகம்தரு மொழிபோல், சுகந்தரும் சூழ்ச்சியும்
அனுமா னிக்கும் அளவையும் முனும்பினும்
கூட்டிக் காரண காரியக் கொள்கைகள்
காட்டலும், காணக் களிப்பே! ஆயினும்
பழுதல பகர்ந்தவை முழுதும் முன்னோர்
ஜனமொழி தெய்வ மொழியெனச் செப்புவர்.
அரசியல் இரகசியம் அங்காடி யம்பலம்
வரும்வித மிதுவே! மட்குடத் துளநீர்
புரைவழி கசிந்து புறம்வருந் தன்மைபோல்,
அரசர் அமைச்சர் ஆதியர் தங்கள்
சிந்தையிற் புதைத்த அந்தரங் கப்பொருள்
விழிமுகம் நகைமொழி தொழில்நடை இவைவழி
ஒழுகிடும். அவைகளை உழையுளார் தமக்குத்
தோற்றிய பலவொடும் தொடுத்துக் காற்றில்
தூற்றுவர். எனினும் சொன்னவை முற்றும்
குடிலன் குணமுடன் கூடலால் அவையும்,
படையிவண் வரநாம் பார்த்ததும்,
அடையவும் முனிவற் கறைகுவம் சென்றே.
[நடராசன் போக.]

மூன்றும் அங்கம் : இரண்டாம் களம்
முற்றிற்று.

---

1. ஆசிரியரின் மெய்ஞ்ஞான உ.போத }
2. ,, உலக மெய்ப்பா[illegible] }

மூன்றும் களம்

இடம் : கன்னிமாடம், நிலாமுற்றம்.
காலம் : யாமம்.

[மனோன்மணி உலாவ ; வாணி நிற்க ; செவிலி படுத்துறங்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

செவிலி : ஏதம்மா ! நள்ளிரா எழுந்து லாவினை ?
(படித்தபடியே)
தூக்கம் ஒழிவை'யேல் சுடுமே யுடலம்
மனோன்மணி : உடலால் என்பயன் ? சுடவே தகுமது
வேர்க்கிற திவ்விடம்; வெளியே இருப்பல்.
போர்த்துநீ தூங்கு !
[செவிலி தூங்க]
வாணி ! உனக்கும்
உறக்க மில்லையோ ?
வாணி : எனக்கது பழக்கம்.
மனோ வருதி இப்புறம். இரு இரு...
[இருவரும் நிலாமுற்றத்திருக்க]
இதுவரை
எங்கிருந் தனவிவ் அன்றிற் பேய்கள் !
நஞ்சோ நாவிடை ? நெஞ்சந் துளைக்கும் !
உறக்கங் கொண்டனள் செவிலி! குறட்டைகேள்
கையறு நித்திரை ! வாணி ! மற்றிது
வைகறை யன்றோ ?
வாணி : நடுநிசி அம்மா !
மனோ : இத்தனை யரவமேன் ? முனிவ ரறையில்
நித்தமு முண்டிது ! நிதியெடுப் பவர்போல்
தோன்டலு மண்ணினைக் கிண்டலும் கேட்டுளேன்
ஊரிலேன் இன்றிவ் உற்சவ அரவம் ?
வாணி :
(தனதுள்) போரெனிற் பொறுப்பனோ ? உரைப்பனோ ?
[ஒளிப்பனோ ?
மனோ : கண்டதோ நகருங் காணக் கனவு ?

வாணி: கண்டது கனவோ நாயே?

மனோ: கண்டது,...
கனவெனிற் கனவு மன்று: மற்று
நனவெனில் நனவு மன்று.

வாணி: நன்றே!
கண்ணாற் கண்டிலை போலும்! அம்ம!

மனோ: கண்ணால் எங்ஙனங் காணுவன்? கண்ணுளார்?

வாணி: எண்ணம் மாத்திரமோ? இதுவென் புதுமை!

மனோ: எண்ணவும் படாஅர்! எண்ணுளும் உளாஅர்!

வாணி: புதுமை! ஆயினும் எதுபோ லவ்வுரு?

மனோ: இதுவென வொன்று உவமையி லொருவரை
எந்திற மென்றியான் இயம்ப! நீயுஞ்
சித்திர ரேகை யலையே. விடுவிடு!
பண்ணியல் வாணி! வாவா! உன்றன்
பாட்டது கேட்டுப் பலநா ளாயின!

வாணி: என்பா டிருக்க! யாவரு மறிவார்!
உன்பா டதுவே ஒருவரு மறியார்

மனோ: பாக்கிய சாலிநீ! பழகியும் உளையே!
நீக்குக இத்தீ நினைவு! யாழுடன்
தேக்கிய இசையிற் செப்பொரு சரிதம்
[வாணி வீணை மீட்ட]
அவ்விசை யேசரி ஒவ்வுமித் தருணம்!
[வாணி பாட]

சிவகாமி சரிதம்

(குறள்வெண்செந்துறை)

" வாழியநின் மலரடிகள்! மௌனதவ முனிவ!
மனமிரங்கி அருள்புரிந்தோர் வார்த்தையெனக் கீயில்
பாழடவி இதிற்சுழன்று பாதைவிடுத் தலையும்
பாவியொரு வலையளித்த பலனுறுவை பெரிதே. (1)

சாரும்வரை குறியாது தன்னிழலை யளக்குந்
தன்மையென நான்நடக்கத் தான்வளரும் அடவி,
ஆரிருளில் இனிநடக்க ஆவதிலை. உடலம்
ஆறும்வகை விடுளதே லடையுநெறி யருளாய்." (2)

என்றமொழி கேட்டமுனி யெதிர்விடையங் கியம்பும்:—
"ஏகாந்தப் பெருங்ககனம்; இறினுலக ரனையார்;
சென்றுறைய மடமுமிலை; நிகழ்வெளியென் விடு:
சிந்தையற நொந்தவர்க்குச் சேரவிலை பந்தம். (3)

அறங்கிடந்த சிந்தையரா யாசையெலாந் துறந்த
அறிவீர ரொழியஎவ ராயினுமிங் கடையார்.
உறங்கஅவர் பணிப்பாயும் பூவணையும் உன்னுர்
உண்ணவெனில் பாலமிழ்தும் ஒன்ருக மறியார். (4)

ஆதலிலென் பாலுறுவ தியாதெனினு மைந்த!
அன்புடன்நீ யென்பிறகே யணையிலஃ துனதாம்.
வேதனையும் மெய்ச்சலிப்பும் விட்டகல இருளும்
விடியும். உடன் மனமிருக்கில் வேண்டுமிடம் ஏகாய்." (5)

என்றுரைத்த இனியமொழி யிருசெவியுங் குளிர,
ஏதோதன் பழநினைவும் எழவிருகண் பனித்து
தன்றெனவே தவவடிவாய் நின்றமகன் வணங்கா
தன்முனிவன் செல்வழியே நடந்துநனி தொடர்ந்தான். (6)

இந்திரநற் சாலவித்தை யெதுவோவொன் றிழைக்க
இட்டதிரை யெனத்திசைக ளெட்டுமிருள் விரிய
அந்தரத்தே கண்சிமிட்டிச் சுந்தரதா ரகைகள்
அரியரக சியந்தமக்குள் ளறைந்துநகை புரிய; (7)

என்புருகப் பிணைந்த அன்றில் இணைசிறிது பிரிய
ஏங்கியுயிர் விடுப்பவர்போ லிடையிடையே கூவ,
அன்புநிலை யாரறிவ ரென்பனபோல் மரங்கள்
அலர்மலர்க்கண் நீரருவி அகமுடைந்து தூவ; (8)

விந்தைநடப் பதுதெரிக்க விளிப்பவரில் வாவல்
விரைந்தலைய மின்மினியும் விளக்கொடுபின் ஆட;
இந்தவகை அந்தியைமுன் ஏவிஇர வென்னும்
இறைவியும்வந் திறுத்தனள்மற் றினைஞருயிர் வாட (9)

பொறியரவின் சுடிகையுறு பொலன்மணியி னொளியும்,
 பொலிமதத்தின் களிறையடியின் புலமருப்பி னொளியும்
அறிவரிய சிலவுழுவை அழல்விழியி னொளியும்,
 அலறிலையவ் அடவியிடை யயல்காட்டு மொளியே. (10)

பிரிவரிய ஊசிவழி பின்தொடரும் நூல்போல்
 பேரயர்வின் மனமிறந்து பின்தொடரும் மைந்தன்,
அரியபுத ரிடையகற்றி அன்பொடழைத் தேகும்
 அம்முனிவ னடியன்றி அயலொன்றும் அறியான். (11)

ஒருங்கார நிறைமுளரி உழையொதுக்கி நுழைந்தும்,
 உயர்மலையின் குகைகுதித்தும் ஓங்கார ஒலியே
தருங்கான நதிபலவுந் தாண்டிஅவ ரடைந்தார்
 சார்பிலர்க்குத் தனித்துணையாந் தவமுனிவ னிடமே. (12)

நேயமுட னெவ்வழியும் நேர்ந்தவரைத் தன்நுண்
 நிறுவுதலை வளைத்தழைக்கு நெருப்பொன்றும் அன்றி
வாயிலெனப் பூட்டென்ன மதிலென்ன வழங்கும்
 மனையென்னும் பெயர்க்குரிய மரபொன்று மின்றி. (13)

நின்றதனி யிடமிவர்கள் நேர்ந்தவுடன் முனிவன்
 நெருப்பினும் எழுப்புதற்கு நிமலவிற கடுக்கி
ஒன்றியமெய்ப் பத்தரில்தன் உளங்கூசி யொருசார்
 ஒதுங்குகின்ற மைந்தனகம் உவப்பஇவை உரைக்கும்:(14)

"இனிநடக்க வழியுமில்லை; இனித்துயரு மில்லை.
 இதுவேநம் மிடம்மைந்த! இக்கனலி னருகே
பனிபொழியும் வழிநடந்த பனிப்பகல இருந்து
 பலமூல மிதுபுசிக்கிற் பறக்குமுன திளைப்பே. (15)

தந்நாவி லொருவிரலைத் தாண்டவறி யாமல்
 சாகரமும் மலைபலவுந் தாண்டியலை கின்றார்.
என்னேயிம் மனிதர்மதி!' எனநகைத்து முனிவன்
 இனியகந்த முதலனந்த இனம்வகுத்தங் கிருந்தான். (16)

இருந்தமுனி "வருந்தினவ! ஏதுனது கூச்சம்?
 இருவருமே யொருவரெனி லெவர்பெரியர் சிறியர்?
திருந்தஅன லருகிலினிச் செறிந்துறைதி மைந்த!
 சேர்ந்தார்க்குக் களிப்புதவுஞ் சேரார்க்குப் பனிப்பே." (17)

எனஇரங்கி இரண்டுமுறை இயம்பியுந்தன் னருகே
யேகாம லெதிரொன்று மிசையாமல் தனியே
மனமிறந்து புறமொதுங்கி மறைந்துவறி திருந்த
மகன்மலைவு தெளிந்துவெளி வரும்வகைகள் பகர்ந்தான்.

பகர்ந்தநய மொழிசிறிதும் புகுந்ததிலை செவியில் ;
பாதிமுக மதியொருகைப் பதுமமலர் மறைப்பத்
திகழ்ந்தசுவ ரோவியம்போ லிருந்தவனை நோக்கிச்
சிந்தைநனி நொந்துமுனி சிறிதுகரு திடுவான். (19)

செந்தழலு மந்தவெல்லை திகழ்ந்தடங்கி யோங்கி
திகைக்களலி பிடித்தலைக்குஞ் சிறுபூனை யெனவே
விந்தையொடு நடம்புரிந்து விங்கிருளை வாங்கி
மீண்டுவர விடுத்தெடுத்து விழுங்கிவிளங் கினதே. (20)

மொழியாதும் புகலாது விழிமாரி பொழிய
முகங்கவிழ வதிந்தகுறி முனிநோக்கி வினவும் :
"எழிலாரு மிளமையினில் இடையூரு திகளால்
இல்லமகன் றிவ்வுருவ மெடுத்திவண்வந் தனையோ? (21)

ஏதுனது கவலை? உளத் திருப்பதெனக் கோதாய்
இழந்தனையோ அரும்பொருளை? இழந்தனரோ நண்பர்
காதல்கொள நீவிழைந்த மாதுபெருஞ் சூதாய்
கைவிடுத்துக் கழன்றனளோ? மெய்விடுத்துக் கழறாய்.

ஐயோஇவ் வையகத்தி லமைந்தசுக மனைத்தும்
அழலாலிங் கெழுந்தடங்கு நிழலாக நினையாய்.
கையாரும் பொருளென்னக் கருதிமணால் வகையைக்
காப்பதெலா மிலவுகிளி காத்தலினும் வறிதே. (23)

நண்பருற வினர்கள்நமை நாடியுற வாடல்
நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணலென எண்ணாய்!
பெண்களகக் காதலெலாம் பேசுமுயற் கொம்பே!
பெருங்கபட மிடுகலன்றோ பிறங்குமவ ருடலம்!" (24)

எரியுமுளம் நொந்தடிக ளிசைத்தவசை யுட்கொண்டு
ஏதிலனீள் கனவுவிழித் தெழுந்தவன்போல் விழித்து
விரிவெயிலில் விளக்கொளியும் மின்னொளியிற் கண்ணும்
வெளிப்பட்ட கள்வனும்போல் வெட்கிமுகம் வெளுத்தான்.

இசைத்தவசைச் செயலுணர எண்ணிமுகம் நோக்கி
இருந்தயதி யிக்குறிகண் டிறும்பூதுள் ளெய்தி
விசைத்தியங்கு மெரியெழுப்பி மீண்டுமவன் நோக்க
வேஷாக மியங்களெலாம் வெட்டவெளி யான. (26)

தின்மலவி பூதியுள்ளே பொன்மயமெய் தோன்றி
தீறுபடி நெருப்பெனவே நிலவியொளி விரிக்கும்.
உன்மைதிகழ் குருவிழிக்கு ளுட்கூசி யொடுங்கும்
உண்மைபெறு கண்ணிணையும் பெண்மையுருத் தெரிக்கும்.

கூசுமுக நாணமொடு கோணியெழில் வீச
குழற்பாரஞ் சரிந்துசடைக் கோலம‌ஃ தொழிக்கும்.
விசுலியின் மூங்கெனவே விம்மியவெய் துயிர்ப்பு
விங்கவெழு கொங்கைபுனை வேடமுழு தழிக்கும். (28)

இவ்விதந்தன் மெய்விளங்க இருந்தமக ளெழுந்தே
யிருடிபதந் தலைவணங்கி யிம்மொழியுங் கியம்பும்:
"தெய்வமொடு நீவசிக்குந் திருக்கோயில் புகுந்த
தீவினையேன் செய்தபிழை செமித்தருள்வை முனியே!

மண்ணுலகிற் காவிரிப்பூ மாநகரிற் செல்வ
வணிககுல திலகமென வாழ்வனொரு மங்கை.
எண்ணரிய குணமுடையள். இவள்வயிற்றி லுதித்தோர்
இருமகளி ரொருபுருட ரென்னஅவர் மூவர். (30)

ஒப்பரிய இப்புருடர்க் கோர்புதல்வ ருதித்தார்.
ஒருத்திமகள் யான்பாவி; ஒருத்திமுழு மலடி.
செப்பரிய அம்மலடி செல்வமிக வுடையள்;
செகமனைத்து மவள்படைத்த செல்வமென மொழிவர்.

உடல்பிரியா நிழல்போல ஓதியஅப் புதல்வர்
உடன்கூடி விளையாடி யொன்றாக வளர்ந்தேன்.
அடல்பெரியர் அருளுருவர் அலகில்வடி வுடையர்.
அவருடைய திருநாமம் அறைவேனோ அடிகாள்?" (32)

உரைத்தமொழி கேட்டிருடி யுடல்புளக மூடி
ஊறிவிழி நீர்வதன மொழுகவ‌ஃ தொளிக்க
எரிக்கவிற கெடுப்பவன்போ லெழுந்துநடந் திருந்தான்
இளம்பிடியுந் தன்கதையை யெடுத்தனன்முன் தொடுத்தே.

"மலடிசிறு தாய்படைத்த மதிப்பரிய செல்வம்
மடமகளென் றெனக்களித்தான். மயங்கியதின் மகிழ்ந்து
தலைதடுமா றச்சிறிய தமியளது நிலையும்
தலைவனெனுந் தன்மையையுந் தகைமையையு மறந்தேன்.

குறிப்பாயுள் ளுணர்த்தியும்யான் கொள்ளாது விடுத்தேன்.
குறும்புமதி யாலெனது குடிமுழுதுங் கெடுத்தேன்.
வெறுப்பாக நினைந்தென்மேல் வேதனைப்பட் டவரும்
வெறும்படிறென் உள்ளமென விட்டுவில கினரே. (35)

பொருள்விரும்பிக் குலம்விரும்பிப் பொலம்விரும்பி வந்தோர்
பொய்க்காதல் பேசினதோ புகலினள வில்லை.
அருளரும்பி யெனைவிரும்பி ஆளுமென தறிபர்
அவரொழிய வேறிலையென் றறிந்துமயர்ந் திருந்தேன்.

ஒருவாரம் ஒருமாதம் ஒருவருட காலம்
ஓயாமல் உன்னியழிந் தேன்.உருவங் காணேன்.
திருவாருஞ் சேடியர்க்குச் செப்பஅவர் சேரும்
திசைதேயம் எவரறிந்து தெரிப்பரெனச் சிரித்தார். (37)

ஆய்த்தார் கூடியெனை ஆயவுந்தான் ஒட்டார்.
அகல்வேலை யோளறியும் அகோராத்திரங் கெடுத்து;
தீயைத்தா னேயுமிழுஞ் சிறந்தகலை மதியும்;
திரிந்துலவுங் காலுமுயிர் தின்னுநம னென்ன. (38)

கண்டவரைக் கேட்டவரைக் காசினியில் தேடிக்
கண்டிடச்சென் றேயலைந்த கட்டமெனைத் தென்க?
உண்டெனத்தம் யூகநெறி உரைப்பவரே அல்லால்
உள்ளபடி கண்டறிந்தோர் ஒருவரையும் காணேன். (39)

உண்டெனிலோ கண்டிடுவன்; இல்லையெனில் ஒல்லை,
உயிர்விடுதலே நலமென் றுன்னியுளந் தேறி
கண்துயிலும் இல்விடந்தி கதுவவெளி யோடும்
கணக்காஇவ் வேடமொடு கரந்துபுறப் பட்டேன். (40)

தீர்த்தகுலம் மூர்த்திநலம் பார்த்துடலம் சலித்தேன்.
திருக்கறுபற் குருக்கள்மடம் திரிந்துமனம் அலுத்தேன்.
வார்த்தை கற்றும் வாதியர்தம் மன்றனைத்தும் வறிய
மறுத்துறங்கும் யோகியர்போய் வாழ்குகையும் பாழே.

மான்மறவாக் கலையினமே! வாழ்பிடிவிட் டகலா
மதம்பெருகு மாகுலமே! வல்லிகமே! சுகமே!
நான்மறவா நாதனையெங் ஞான்றுமறி விரோ?
நவில்விரெனப் பின்தொடர்ந்து நாளனந்தங் கழித்தேன்

இவ்விடமும் அவ்விடமும் எவ்விடமும் ஓடி
இதுவரையும் தேடியுமென் அறிபரைக்கண் டிலனே.
எவ்விடம்யான் நண்ணவினி? எவ்விடம்யான் உண்ண?
இக்காயம் இனியெனக்கு மிக்கஅரு வருப்பே. (43)

ஐயோவென் உள்ளநிலை அறியாரோ இனியும்?
ஆசைகொண்டு நானலைந்த தத்தனையும் பொய்யோ?
பொய்யேதான் ஆயிடினும் புனிதரவர் தந்த
போதமலால் வேறெனக்கும் ஓருமறி வுளதே? (44)

நல்லர்அரு ளுடையரென நம்பி இதுவரையும்
நானுழைப்ப தறிவரெனில் ஏனெதிர்வந் திலரோ?
இல்லையெனில் என்னளவும் இவ்வுலகம் அனைத்தும்
எந்தலமும் கொல்லவென எடுத்தசுடு காடே. (45)

என்னுடைய உயிர்த்துணைவர் எண்ணரிய அருளில்
ஏதோசிற் சாயையுன திடத்திருத்தல் கண்டு
மன்னுதவ மாமுனிவ! மனத்துயரம் உன்பால்
வகுத்தாறி னேன்சிறிது. மறுசாட்சி யில்லை. (46)

இனியிருந்து பெறும்பயனென்? இவ்வழலே கதி"யென்று
எரியுமழல் எதிரேதின் றிசைத்தமொழி முழுதும்
முனிசெவியிற் புகுமுனமே மூதுருவம் விளக்கி
முகமலர்ந்தங் கவளெதிரே முந்திமொழி குளறி... (47)

"சிவகாமி யானுனது சிதம்பரனே" என்னச்
செப்புமுனம் இருவருமற் றோருருவம் ஆனார்!
எவர்தாமுன் அணைந்தனரென் றிதுகாறும் அறியோம்.
இருவருமொன் றாயினரென் றேயறையும் சுருதி. (48)

பரிந்துவந்து பார்வதியும் பாரதியும் கஞ்சப்
பார்க்கவியும் யார்க்கிதுபோல் வாய்க்குமென வாழ்த்த,
அருந்ததியும் அம்ம! இஃது அருங்கதியென் றஞ்ச
ஆர்வமுலை கார்கவென ஆரணங்கள் ஆர்த்த. (49)

ஆழிபுடை சூழுலகம் யாவுநல மேவ!
அறத்துறை புகுந்துயிர்கள் அன்புவெள மூழ்க!
பாழிலை வேறுடைய பந்தனைகள் சிந்த
பரிந்தருள் சுரந்தமை நிரந்தரமும் வாழ்க! (50)

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

மனோ: வாணி! மங்காய்! பாடிய பாட்டும்,
வீணையின் இசையும் விளங்குநின் குரலும்
தேனினும் இனியவாய்ச் சேர்ந்தொரு வழிபடர்ந்து
ஊனையும் உயிரையும் உருக்கும். ஆ! ஆ!
[இருவரும் சற்று மௌனமாயிருக்க]
உனதுகா தலனெங் குளனோ? உணர்வைகொல்?
வாணி: எனது சிந்தையில் இருந்தனர்; மாறார்.
மனோ: ஆயினும் வெளியில்?
வாணி: அறியேன். அம்ம!
மனோ: போயின இடம்நீ அறியாய்?
வாணி: நாரணன்
முனிவர் தம்மடத் தேகினர் தனியென
ஓதினன் ஓர்கால்
மனோ: ஓகோ! ஓகோ!
[மௌனம்]
கடைநாள் நிகழ்ந்தவை யென்னை? கழறாய்.
வாணி: அடியனேற் கந்நாள் கெடுநாள் மிகவும்!
ஒருநாள் அந்தியில் இருவரும் எதிர்ச்சையாக்
கடிபுரி கடந்துபோய், நெடுவயற் பாயும்
ஒருசிறு வாய்க்காற் கரைகண் டாங்கே,
பெருமலை பிறந்த சிறுகாற் செல்வன்
தெண்ணீர்க் கன்னி பண்ணிய நிலாநிழற்
சிற்றில் பன்முறை சிதைப்பவன் போன்று
சிற்றலை யெழுப்பச் சிறுமி முறுமுறுத்து
அழுவது போல விழுமிய பரல்மேல்
ஒழுகும் தீம்புனல் ஓதையும் கேட்டுப்
பழுதிலாப் பால்நிலா விழுவது நோக்கி

இருவரும் மௌனமாய் நெடும்பொழு திருந்தோம்.
கரையிடை அலர்ந்த காவியொன் றடர்த்தென்
அருகே கொணர்ந்தெனக் கன்பா யீந்தனர்.
வருவதிங் கறியா மதியிலி அதனைக்
கண்ணினை ஒற்றிலன்; உள்மணம் உகந்திலன்;
மார்பொடு சேர்த்திலன்; வார்குழற் சார்த்திலன்;
ஆர்வமும் அன்பும் அறியார் மான
ஓடும் நிம்புனல் மாடே விடுத்துச்
சிறுமியர் குறும்பு காட்டிச் சிரித்தேன்.
முறுவலோ டவரும் ஏதோ மொழிய
உன்னும் முன்னரென் அன்னையங் கடைந்தாள்;
தீமொழி பலவும் செப்பினள். யானோ?
நாவெழல் இன்றி நின்றேன். நண்பர்
மறுமொழி ஒன்றும் வழங்கா தேகினர்.
அதுமுதல் இதுகாறும் அவர்தமை ஐயோ!
கண்டிலேன். இனிமேற் காண்பனோ? அறியேன்.
ஒருமுறை கண்டேன் உளக்கருத் தவருடன்
உரைத்தபோ தன்றி ஒழியா துயிரே!

மனோ: உரைப்பதென் வாணி! உளமும் உளமும்
நேர்பட அறியா என்றோ நினைத்தாய்?

வாணி: ஓர்வழிப் படரின் உணருமென் றுரைப்பர்.

மனோ: ஏனதில் ஐயம்? எனக்கது துணிபே?
பூதப் பொருட்கே புலன்துணை அன்றி
போதப் பொருட்குப் போதும் போதம்.
இரவியை நோக்கற் கேன்விளக் குதவி?
கருவிநுண் மையைப்போற் காட்சியும் விளங்கும்
பட்டே உணரும் முட்டா ளர்கள்போல்
தொட்டே உணரும் துவக்கிந் திரியம்.
நுண்ணிய கருவியாம் கண்ணோ உணரும்
எண்ணறச் சேய்த்தாம் நுண்ணிய ஒளியை!
கண்ணினும் எத்தனை நுண்ணிய துள்ளம்!
களங்கம் அறுந்தொறும் விளங்குமங் கெதுவும்.
உண்மையாய் நமதுள முருகிலவ் வுருக்கம்

அன்மை சேய்மை என்றிலை; சென்றிடும்.
எத்தனை பெட்டியுள் வைத்துநாம் பூட்டினும்
வானுள மின்னொளி 'வடக்கு நோக்கி'யைத்
தானசைத் தாட்டும் தன்மைநீ கண்டிலை!
போதங் கரைந்துமேற் பொங்கிடும் அன்பை
பூத யாக்கையோ தடுத்திடும்? புகலாய்!

வாணி: கூடும் கூடும்! கூடுமக் கொள்கை;
நம்பலாம் தகைத்தே!

மனோ: நம்புவ தன்றிமற்று
என்செய நினைத்தாய்? இவ்வரும் பொருள்கள்
தருக்கவா தத்தால் தாபித் திடுவோர்
கரத்தால் பூமணம் காண்பவ ரேயாம்!
அரும்பிற் பூமண மாய்குத லேய்ப்பத்
தரும்பக் குவமிலார் தமதுளம் போய
வழியே வாளா மனக்கணக் கிட்டு
மொழிவார் முற்றும் துணிவா யெனயான்
இச்சிறு தினத்தின் இயைந்தவை தம்மால்
நிச்சயித் துணர்ந்தேன் வாணி! ஐயோ!
நம்பலென் பதுவே அன்பின் நிலைமை!
தெளிந்தவை கொண்டு தெளிதற் கரியவை
உளந்தனில் நம்பி உறுதியாய்ப் பிடித்துச்
சிறிது சிறிதுதன் அறிவினை வளர்த்தே
அனுபவ வழியாய் அறிவதை அந்தோ!
அனுமா னுநியால் ஆய்ந்தறிந் திடுவோம்
அலதெனில் இலையென அயிர்ப்போம் எனத்திரி
வாதியர் அன்பொரு போதுமே அறியார்.
தாய்முலைப் பாலுள் நஞ்சு ஆய்பவ ரவரே!
முற்றுங் களங்கம் அற்றிடில் ஆ! ஆ!
[உடல் புளகாங்கிதமாய் நடுங்க]
ஏதோ வாணி! இப்படி என்னுடல்?...

வாணி: சீதமோ? தாயே!

மனோ: சீ! சீ! இன்றெலாம்
இப்படி அடிக்கடி என்னுடல் நடுங்கும்!

வாணி : இக்குளிர் காற்றின் இடையே இருத்தல்
தக்க தன்றினி. தாயே! பாராய்!
அம்மழை பெய்யும் இம்மெனும் முன்னம்.

மனோ : நனைந்திடில் என்னை? கரைந்திடு மோவுடல்?
[எழுந்து மேகம் பார்க்க]

வாணி : ஐயோ! ஏன் நான் அத்திசை காட்டினேன்?
(தனதுள்) பொய்யெப் படியான் புகல்வன்!

மனோ : வாணீ!
ஊர்ப்புறம் அத்தனை யொளியென்? ஓ! ஓ!
ஆர்ப்பேன்? ஆ! ஆ! அயிர்ப்பேன்? அறைகுதி
போர்க்குறி போலும், புகலுதி உண்மை.
[மழை இரைந்து பெய்ய]
அஞ்சலை அஞ்சலை. இதோஎன் நெஞ்சிடை
வெஞ்சரம் பாயினும் அஞ்சிலேன்! விளம்பு.

வாணி : இம்மழை நிற்கலை அம்ம! அறைகுவன்...
விளம்புவன் வீட்டுள் வருக!
தெளிந்ததோர் சிந்தைத் தீரநற் றிருவே!
[இருவரும் போக]

மூன்றும் அங்கம்: மூன்றும் களம்
முற்றிற்று.

நான்காம் களம்

இடம்: சுந்தரமுனிவர் ஆசிரமம்.

காலம்: வைகறை.

[நிஷ்டாபரர் கருணாகரர் இருவரும் அளவளாவி இருக்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

நிஷ்டாபரர்:
ஏதிஃ துமக்குமோ இத்தனை மயக்கம்!
வேதவே தாந்தம் ஓதிநீர் தெளிந்தும்
இரவெலாம் இப்படி இமையிமை யாதே
பரிதபித் திருந்தீர்! கருணா கரரே!
பாரினிற் புதிதோ போரெனப் புகல்வது!
போரிலை ஆயினென்? யாருறார் மரணம்?
எத்தினம் உலகில் எமன்வரா நற்றினம்?
இத்தினம் இறந்தோர் எத்தனை என்பீர்?
ஒவ்வொரு தினமும் இவ்வனம் ஒன்றில்,
எறும்பு முதலா எண்ணிலா உயிர்கள்
உறுந்துயர் கணக்கிட் டுரைப்போர் யாவர்?
சற்றிதோ மனங்கொடுத் துற்றுநீர் பாரும்.
குரூரக் கூற்றின் விரூபமிச் சிலந்தி!
பல்குழி நிறைந்த பசையறு தன்முகத்து
அல்குடி யிருக்க, அருளிலாக் குண்டுகண்
தீயெழத் திரித்துப் பேழ்வாய் திறந்து
கருக்கொளும் சினைஈ வெருக்கொளக் கௌவி
விரித்தெண் திசையிலும் நிறுத்திய கரங்களின்
முன்னிரு கையில் வெந்துறக் கிடத்தி,
மார்பொடு வயிறும் சோர்வுறக் கடித்துப்
பறித்திழுத் திசித்துக் கறிக்கமற் றவ்ஈ
நொந்துநொந் தந்தோ! சிந்தனை மயங்கி
எய்யா தையோ! என்றழு குரலிங்கு
யார்கேட் கின்றார்? யார்காக் கின்றார்?
கைகால் மிகில்நம் மெய்வே றாமோ?
நோவும் சாவும் ஒன்றே. அன்றியும்
உலகெலாம் நோக்கில்நம் உடலொரு பொருளோ?

பஞ்சா சத்கோடி யெனப்பலர் போற்ற
வஞ்சா திருந்த இப்புவி அனைத்தும்
இரவியின் மண்டலத் தொருசிறு திவலை
பரவிய வானிடை விரவிய மீனினம்
இரவியில் எத்தனை பெரியதுஒவ் வொன்றும்!
இரவியும் இம்மீன் இனங்களும் கூடில்
ஒருபிர மாண்டமென் றுரைப்பர் இதுபோல்
ஆயிரத் தெட்டுமற் றுண்டென அறைவர்.
ஆயிரத் தெட்டெனல் அலகிலை என்பதே.
இப்பெரும் உலகெலாம் ஒப்பறு திருமால்
உந்தியந் தடாகத் துதித்தபன் முளரியில்
வந்ததோர் நறுமலர் தந்தபல் லிதழில்
ஓரிதழ் அதனில் ஓர்சார் உதித்த
நான்முகச் சிலந்தி நாற்றிய சிறுவலை.
என்மிக? தாமிங் கோதிய மாலும்
ஒருபெருங் கடலில் உறுதுரும் பென்ப.
அப்பெருங் கடலும் மெய்ப்பொருட் கெதிரில்
எப்படிப் பார்க்கினும் மிசையாப் பேய்த்தேர்.
இங்கிவை உண்மையேல், எங்குநாம் உள்ளோம்?
நீர் யார்? நான் யார்! ஊரெது? போரெது!
போரெனப் பொறுக்கலீர்! ஓ! ஓ! பாரும்!
மருவறு மாயா மகோததி யதனிற்
புற்புதம் அனைய பற்பல அண்டம்
வெடித்தடங் கிடுமிங் கடிக்கடி அதனைத்
தடுப்பவர் யாவர்? தாங்குநர் யாவர்?
விடுத்திடும், விடுத்திடும். வீணிவ் விசனம்.
இந்திர ஜாலமிவ் எந்திர விசேடம்,
தன்தொழில் சலிப்பற இயற்றும்.மற் றதனுள்
படுபவர் கிரிகையுட் படுசிறு பயறே.
விடுபவர் யாவர்பின்! விம்மி விம்மிநீர்
அழுதீர், தொழுதீர், ஆடினீர், பாடினீர்,
யாரென் செய்வர்! யாரென் செயலாம்!
அடித்திடில் உம்மையும் பிடிக்குமிம் மாயை
பிடித்திடிற் பின்னும் படிப்பும் ஞானமும்

குருட்டர சனுக்குக் கொளுத்திய விளக்கும்
இருட்டறை யிருந்துகண் சிமிட்டலும் என்ன
ஆர்க்குமிங் குடக்கும் பிறர்க்குமென் பயக்கும்?
பார்க்கப் பார்க்கஇப் படியே துயரம்
மீக்கொளும் அதனால் விடுமுல கெண்ணம்.
சுட்டதோர் சட்டிகை விட்டிடல் என்னத்
துறப்பதிவ் வுலகம் மறப்பதற் கன்றோ!
மறக்கிற் சுயமே மறையும். மறைய
இறக்கும் நும்முளம். இறக்குமக் கணமே
பிறக்கும் பிரத்தியக் பிரபோ தோதயம்!
தீரும் உலகமும் நிகழ்த்திய போரும்
யாருமங் கில்லை. அகண்டசித் கனமாய்
எதிரது கழிந்தபே ரின்பமே திகழும்!
உரையுணர் விறந்தவிந் நிருபா திகம்யான்
உரைதரல், பிறவிக் குருடற் கொருவன்
பால்நிறம் கொக்குப் போலெனப் பகர்ந்த
கதையாய் முடியும்! அதனாற் சற்றே
பதையா திருந்துநீர் பாரும்
சுதமாம் இவ்வநு பூதியின் சுகமே. (1)

கருணாகரர்: சுகம்யான் வேண்டிலேன் சுவாமி! எனக்குமற்
றிகம்பரம் இரண்டும் இல்லையெனில் ஏகுக.
யானென ஒருபொருள் உளதாம் அளவும்,
ஞான தயாநிதி நங்குரு நாதன்
ஈனனும் என்னையும் இழுத்தடி சேர்த்த
வானநற் கருணையே வாழ்த்தியிங் கென்னால்
ஆனதோர் சிறுபணி ஆற்றலே எனக்கு
மோனநற் சித்தியிம் முத்தியும் யாவும்
ஐயோ! உலகெலாம், பொய்யா யினுமென்!
பொய்யோ பாரும்! புரையறு குரவன்
பரிந்துநம் தமக்கே சுரந்தவிக் கருணை!
இப்பெருந் தன்மைமுன் இங்குமக் கேது?
செப்பிய நிட்டையும் சித்தநற் சுத்தியும்
எப்படி நீரிங் கெய்தினீர்? எல்லாம்
ஒப்பறு நுந்திறம் என்றோ உன்னினீர்?

அந்தோ! அந்தோ! அயர்ப்பிது வியப்பே!
சுந்தரர் கடைக்கண் தந்திடு முன்னம்
பட்டபா டெங்ஙனம் மறந்தீர்? பதைப்பறு
நிட்டையா யினுமென்? நிமலவீ டாயினென்?
ஆவா! யாம்முன் அல்லும் பகலும்
ஓவாப் பாவமே உஞற்றியெப் போதும்
ஒருசாண் வயிறே பெரிதாக் கருதியும்,
பிறர்புக ழதுவே அறமெனப் பேணியும்;
மகிழ்கினும் துயருழந் தழுகினும் சினகரம்
தொழுகினும் நன்னெறி ஒழுகினும் வழுவினும்
எந்தொழில் புரியினும் எத்திசை திரியினும்
"நாமே உலகின் நடுநா யகம்நம்
சேமமே சகசிருட் டியினோர் பெரும்பயன்"
என்னஅங் கெண்ணலி எமக்கெமக் கென்னும்
தந்நயம் அன்றிப் பின்நினை வின்றி
முடிவிலா ஆசைக் கடலிடைப் பட்டும்;
தடைசிறி தடையிற் சகிப்பறு கோபத்
தீயிடைத் துடித்தும்; சயஞ்சிறி தடையில்
வாய்மண் நிறைய மதக்குழி அதனுள்
குதித்துக் குதித்துக் குப்புற விழுந்தும்;
பிறர்புகழ் காணப் பெரிதகம் உடைத்தும்
பிறர்பழி காணப் பெரிதக மகிழ்ந்தும்;
சிறியரைக் காணிற் செருக்கியும்; பெரியரைக்
காணிற் பொறுமையுட் கலங்கி நாணியும்;
எனைத்தென எண்ணுகேன்! நினைக்கினும் உடலம்
நடுங்குவ தந்தோ! நம்மை இங்ஙனம்
கொடும்பேய் ஆயிரம் கூத்தாட் டியவழி,
விடும்பரி சின்றிநாம் வேதனைப் படுநாள்
"ஏ! ஏ! கெடுவாய்! இதுவல உன்நெறி
வா! வா! இங்ஙனம்." எனமனம் இரங்கிக்
கூவிய தார்கொல்? குடிகொண் டிருந்த
காமமா திகளுடன் கடும்போர் விளைக்க
ஏவிய தார்கொல்? இடைவிடா தவைகள்
மேவிய காலை மெலிந்துகை யறுதம்

ஆவியுள் தைரியம் அளித்தவர் யார்கொல்?
சுந்தரர் கருணையோ தந்திற மோஇவை?
உளமெனப் படுவதோ அளவிலாப் பெருவெளி;
கோட்டையும் இல்லை, பூட்டுதாழ் அதற்கிலை;
நஞ்சே அனைய பஞ்சேந் திரியம்;
அஞ்சோ வாயில்? ஆயிரம்; ஆயிரம்;
அரைநொடி அதனுள் நரகென நம்முளம்
மாற்றிடக் கணந்தொறும் வருந்தி நினைவோ
சாற்றிடக் கணிதசங் கேத மெயிலை.
இப்பெரும் விபத்தில் எப்படிப் பிழைப்பீர்?
அருளா தரவால் யாதோ இங்ஙனம்
இருள்தீர்ந் திருந்தீர்; இல்லையெனில் நிலையெது?
விட்டதும் தொட்டதும் வெளிப்படல் இன்றி
நிட்டையும் நீரும் கெட்டலைந் திடுவீர்!
கட்டம்! கட்டம் கரதலா மலகமாய்க்
கண்டுமோ அருளிற் கொண்டீர் ஐயம்!
"யார்கேட் கின்றார்? யார்காக் கின்றார்?"
என்றீர் நன்றாய் நண்பரே! நம்நிலை
கண்டுளம் இரங்கிக் காத்தருள் புரிந்து
தொண்டுகொண் டாண்ட சுந்தரன் கருணை
நமக்கென உரித்தோ? நானா உயிர்கள்
எவர்க்கும் அதுபொது அன்றோ? இயம்பீர்.
எங்கிலை அவனருள்? எல்லையில் அண்டம்
தங்குவ தனைத்தும் அவனருட் சார்பில்.
அண்டகோ டிகளிங் கொன்றோ டொன்று
விண்டிடா வண்ணம் வீக்கிய பாசம்,
அறியில் அருளலாற் பிறிதெது ஆகருஷணம்?
ஒன்றோ டொன்றியாப் புற்றுயிர் அன்பில்
நின்றஇவ் வுலகம், நிகழ்த்திய கருணை
பயிற்றிடு பள்ளியே அன்றிப் பயனறக்
குயிற்றிய பொல்லாக் கொடியயந் திரமோ?
பாரும்! பாரும்! நீரே கூறிய
சிலந்தியின் பரிவே இலங்கிடு முறைமை!
பூரிய உயிரிஃ தாயினும், தனது

சீரிய வலையிற் சிக்குண் டிறந்த
ஈயினை ஈந்தா இனியதன் குஞ்சுகள்
ஆயிரம் அருந்த அருகிருந் தூட்டி
மிக்கநல் அன்பெனும் விரிந்தநூல் தெளிய
அக்கரம் பயில்வ ததிசயம்! அதிசயம்!
இப்படி முதற்படி, இதுமுத லாநம்
ஒப்பறும் யாக்கையாம் உயர்படி வரையும்
கற்பதிங் கிந்நாற் கருத்தே. அதனால்
இத்தனி உலகில் எத்துயர் காணினும்
அத்தனை துயரும், நம் அழுக்கெலாம் எரித்துச்
சுத்தநற் சுவர்ண மாச் சோதித் தெடுக்க
வைத்த அக் கினியென மதித்தலே, உயிர்கட்கு
உத்தம பக்தியென் றுள்ளுவர் ஒருகால்
காரண காரியம் காண்குவம் அல்லேம்.
யாரிவை அனைத்தும் ஆய்ந்திட வல்லார்?
பாரிசா தாதிப் பனிமலர் அந்தியின்
அலர்தலை அன்னவை விளர்நிறம் கிளர
நறுமணம் கமழ்தற் குறுகா ரணமென
நேற்றிரா நடேசர் சாற்றிடும் முன்னர்
நினைத்தோம் கொல்லோ? உரைத்தபின் மற்றதன்
உசிதம்யார் உணரார்? நிசியலர் மலர்க்கு
வெண்மையும் நன்மணம் உண்மையும் இலவேல்
எவ்வணம் அவற்றின் இஷ்டநா யகராம்
ஈயின மறிந்துவந் தெய்திடும்? அங்ஙனம்
மேவிடில் அன்றோ காய்தரும் கருவாம்?
இவ்விதம் நோக்கிடில் எவ்வித தோற்றமும்
செவ்விதிற் பற்பல காரணச் செறிவால்
அவ்வவற் றுள்நிறை அன்பே ஆக்கும்
சிற்றறி வாதலான் முற்றுநாம் உணரோம்.
அந்தியில் இம்மலர் அலர்வதேன் என்பதிங்
கறிகிலோம் ஆயினும் அதற்குமோர் காரணம்
உளதென நம்பலே யூகம் அதனால்
உலகிடைத் தோன்றும் உறுகணுக் கேது
நலமுற நமக்கிங் கிலகா ததினாற்

பலமுறை நம்மையே பரிந்திழுத் தாண்டவர்
இலையுல கிடையென எண்ணுவ தெங்ஙனம்?
யாரிங் குலகெலாம் அறிந்திட வல்லார்?
பாருமிங் கீதோ! பரம தயாநிதி
நங்குரு நாத னென்பதார் ஒவ்வார்?
நம்புவம் நீரும் நானுமிங் கொருப்போல்.
ஆயினும் பாரும்! அம்மணி மனோன்மணி,
ஏதோ சூழ்வினை இசைவால் தனது
காதாற் கேட்கவும் கண்ணாற் காணவும்
இல்லா ஒருவனை எண்ணி மயங்கினள்.
அல்லல் இதுவே போதும். அஃதுடன்,
அப்புரு டன்முன் ஆரென ஆயில்
ஒப்பறு புருடோத் தமனே என்ன
எப்படி நோக்கினும் இசையும். அப் படியே
செப்பினர் யாவும் தெரிந்தநம் குருவும்
ஏதோ ஒருவன் சூதா ஏவிய
தூதால் வந்ததே ஈதோ பெரும்போர்!
போர்புரிந் திடவரு புருடோத் தமனும்
வார்குழல் மனோன்மணி மாதும், நோக்கின்
நம்மிலும் எத்தனை நம்பிய அன்பர்!
இம்மென ஒருமொழி இசைத்திவர் தம்மை
ஒருவரை ஒருவர் உணர்த்திடப் பண்ணில்,
வெருவிய போரும் விளைதுயர் அனைத்தும்
இருவர்தம் துக்கமும் எல்லாம் ஏகும்.
இப்படிச் சுலபசாத் தியமா யிருக்க
அப்படி ஒன்றும் அடிகளென் னுமல்
சுருங்கைதொட் டிடவே துவக்கித் தன்திரு
அருங்கை வருந்தவும் ஆற்றுமப் பணியே.
சுருங்கை இதற்குஞ் சொல்லிய துயர்க்கும்
நெருங்கிய பந்தம் நினைத்தற் கென்னை?
ஒன்றும் தோற்றுவ தன்றுஎன் தனக்கே,
என்றுநான் எண்ணி எம்குரு நாதன்
திருமொழி மறுத்தேன் சிற்றறி வினையே
பெரிதெனக் கருதலோ, அலதவர் பேணிய

இவ்வழி நம்மறிக் கெட்டா விடினும்
செவ்வி நிதுவெனத் தெளிதலோ தகுதி ?
இப்படி யேயாம் இவ்வுல கென்றிலை,
அற்பமும் அறிவிலை ஐயம். நமதுமற்
றெய்ப்பினில் வைப்பா யிருந்தபே ரருளைக்
கைப்படு கனியெனக் கண்டபின், உலகில்
எப்பொருளையுமிப் படியே இவ்வருள்
தாங்கிடும் என்பதில் சமுசயம் என்னை ?
இல்லா மாயை என்செய வல்லதாம் ?
எல்லாம் அவனருள் அல்லா தில்லை.
என்னனு பவமிது. மன்னிய இவ்வருள்
தன்னிடை மூழ்கித் தானெனல் மறந்து,
நெருப்பிடை இழுதென நெக்குநெக் குருகி
இருப்பவர் பிறர்க்காய் இராப்பகல் உழைப்பர்
ஒருபயன் கருதார். அருள்கரு துவதென் ?
அகிலமும் தாங்கும் அருளிலோர் அரங்கமாச்
சகலமும் செய்வர். அஃதவர் சமாதி.
எங்கெலாம் துக்கம் காணினும் அங்கெலாம்
அங்கம் கரையநின் றரற்றி "ஐயோ !
எம்மையும் காத்த இன்னருள் இவரையும்
செம்மையிற் காக்க" எனமொழி குளறி
அழுதுவேண் டுவதே அன்றி
விழுமிய முத்தியும் வேண்டார் தமக்கே. (2)

[சுந்தரமுனிவரும் நடராசரும் வர; கருணாகரர், நிஷ்டாபரர் இருவரும் எழுந்து வணங்க]

சுந்தர: எல்லாம் நடேசரே ! உமதுபே ரருளே !
அல்லா தென்னால் ஆகுமோ ? சுருங்கை
இத்தினம் எப்படி முடியும்நீர் இலரேல் ?
எத்தனை கருணை ? என்னைகைம் மாறு ?

நட: நல்லது ! நல்லது ! சொல்லிய முகமன் !
வேலை எனதோ ? உமதோ ? விநோதம்;
ஏவிய வழியான் போவதே அல்லால்
ஆவதென் என்னால் ? ஆ ! ஆ ! நன்றே !

சுந்தர: கருணாகரரே! கலைப்பற நீரிங்கு
ஒருவா றுறங்கவென் றுள்ளி அன்றோ
இவ்விடம் அனுப்பினேம்? என்னை சிறிதும்
செவ்வினில் தூங்கா திருந்தீர்! சிச்சீ!
எத்தனை நாளா யினதீர் தூங்கி!
இத்தனை வருந்தியும் ஏனிலை தூக்கம்?
பன்னாள் இரவும் பகலும் உழைத்தீர்;
எந்நா ளாறுவிர் இவ்வலுப் பினிமேல்?

கருணா: அடியேற் கலுப்பென்? அருளால் அனைத்தும்
முடிவது. மேலும், யான்வரும் வேளை
இட்டமாம் நிட்டா பரரும் தனியாய்
நிட்டைவிட் டெழுந்தார்; இருவரும் அதனால்
ஏதோ சிலமொழி ஓதிமற் றிருந்தோம்;
ஈதோ உதயமும் ஆனதே; இனியென்?

சுந்தர: விடிந்த தன்றிது; வெள்ளியின் உதயம்
படும், படும்; மிகவும் பட்டீர் வருத்தம்.
உங்கள்பேச் சறிவோம்; ஓயாப் பேச்சே!
இங்கது முடியுமோ? ஏனுங் கட்கும்
சமயிகட் காம்சச் சரவு?
அமையும் உங்கட் கவரவர் நிலையே. (3)
[யாவரும் போக]

மூன்றும் அங்கம்: நான்காம் களம்
முற்றிற்று.

(கலித்துறை)

சாற்றரும் ஆபதந் தான்தவிர்ந் தின்பந் தரமுயன்று
தோற்றருங் கற்படை யேதோ அமைத்தனன் சுந்தரனே
வேற்றுரு வாயகம் வேதித்து நம்மை விளக்குமவன்
மாற்ற மனுபவம் வந்தபின் னன்று மதிப்பரிதே.

மூன்றும் அங்கம்
முற்றிற்று.

ஆசிரியப்பா	6-க்கு	அடி	819
வஞ்சித்தாழிசை	3-க்கு	,,	12
குறள்வெண்செந்துறை	50-க்கு	,,	100
கலித்துறை	1-க்கு	,,	4
ஆக அங்கம் 1-க்கு	பா. 60-க்கு	,,	935

நான்காம் அங்கம்

முதற் களம்

இடம்: படை பயில் களம்.
காலம்: காலை.

[பலதேவன் படையணிவகுக்க, குடிலன் அரசனை எதிர்பார்த் தொருபுறம் நிற்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

குடிலன்: பருதியும் எழுந்தது; பொருதலும் வந்தது...
[பெருமூச்செறிந்து]
(தனிமொழி) கருதுதற் கென்னுள காணுதும். ஆ! ஆ!
ஒருவன தாசைப் பெருக்கால் உலகில்
வருதுயர் கடலிற் பெரிதே! வானின்
எழுந்தவிவ் இரவி விழுந்திடு முன்னர்
ஈண்டணி வகுக்குமிக் காண்டகும் இளைஞரில்
மாண்டிடு மவர்தொகை மதிப்பார் யாரே!
மாண்டிடல் அன்றே வலிது. மடுவுள்
இட்டகல் லாலெழும் வட்டமாம் விரிதிரை
வரவரப் பெரிதாய்க் கரைவரை வரல்போல்,
நின்றவில் விரரை ஒன்றிய மனைவியர்
உற்றார் பெற்றார் நட்டார் என்றிப்
படியே பரவுமே படியெலாம் துயரம்!...
[சற்று நிற்க]
என்னை என்மதி இங்ஙனம் அடிக்கடி
என்னையும் எடுத்தெறிந் தேகுதல்? சிச்சீ!
மன்னவர்க் காக மாள்வ திவர்கடன்.
மன்னவன் என்போன் மதியில் வலியோன்,
அன்றியும் பலநா ளாகநம் அன்னம்
தின்றிங் கிருந்திவர் செய்ததென்? அவர்தம்
உடன்பா டிதுவே. கடம்பா டாற்றும்
காலம் விடுவதார்? மேலும் இயல்பாப்
பலபெயர் துக்கப் பட்டால் அன்றி

உலகில் எவரே ஒருசுகம் அணைவார்?
இயல்பிது வாயின் இரங்கல் என்பயன்?
வயலுழும் உழவோர் வருத்தமும் குனிந்திருந்து
ஆடை நெய்வோர் பீடையும் வாகனம்
தாங்குவோர் தமக்குள தீங்கும் நோக்கி
உலகிடை வாழா தோடுவ ரோபிறர்?
அலகிலா மானிடர் யாவரும் அவரவர்
நலமே யாண்டும் நாடுவர். மதிவலோர்
களத்தோடு காலமும் கண்டுபின் உன்னக்
குளக்கரை இருக்கும் கொக்கென அடங்கிச்
சம்பவம் சங்கதி என்பவை நோக்கி
இருப்பர்; நலம்வரிற் பொருக்கெனக் கொள்வர்.
நண்ணார் இதுபோல் நலமிலா ஐயம்.
எண்ணார் துணிந்தபின், பண்ணார் தாமதம்.
ஏழையர் அலரோ இரங்குவர் இங்ஙனம்?
கோழையர் எங்ஙனம் கூடுவார் இன்பம்?
வந்தனன் அஃதோ மன்னனும்.

[ஜீவகன் வர]

வந்தனம் வந்தனம் உன்திரு வடிக்கே. (1)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

ஜீவகன்: குடிலா? நமது குறைவிலாப் படைகள்
அடையவும் அணிவகுத் தனவோ?

குடில: அடியேன்.
நாரணர்க் கன்றே நீளரண் காப்பு!
சொன்னதப் படியென உன்னினன்.

ஜீவ: ஆமாம்!
அதற்கேன் ஐயம்?

குடில: அவர்க்கது முற்றும்
இதக்கே டென்றனர். ஆயினும் போயினர்.

[படைகள் வணங்கி]

படைகள்: ஜயஜய! ஜீவக வேந்த! விஜயே!

குடில: அதிர்கழல் வீரரும் அரசரும் ஈதோ
எதிர்பார்த் திருந்தனர் இறைவ! நின் வரவே.
நாற்றிசை தோறும் பாற்றினம் சுழல

நிணப்புலால் நாறிப் பணைந்தொளி பரப்பும்
நெய்வழி பருதி வைவேல் ஏந்திக்
கூற்றின் நா என்னக் குருதிகொப் புளித்து
மாற்றலர்ப் பருகியும் ஆற்றா தலையும்
உறையுறு குறுவாள் ஒருபுறம் அசைத்துக்
காற்றினும் மிகவும் கடுகிக் கூற்றின்
பல்லினும் கூரிய பகழி மல்கிய
தூணி தோளில் தூக்கி, நாண் நின்று
எழுமொலி உருமுபோன் றெழுப்பி ஆர்த்தவர்
கடிபுரி காக்குநின் காற்படை யாளர்.
இருப்புக் கலினம் நெரித்துச் சுவைத்துக்
கருத்தும் விரைவு கற்கும் குரத்தால்
பொடியெழப் புடைக்கும் புரவிகள் போர்க்கு
விடைகேட் டுதடு துடித்ததும் வியப்பே.
நிணங்கமழ் கூன்பிறைத் துணைமருப் பசைத்து
மம்மர் வண்டினம் அரற்ற மும்மதம்
பொழியும் வாரணப் புயலினம் தத்தம்
நிழலொடு கறுவி நிற்பதும் அழகே.
முன்னொரு வழுதிக்கு வெந்நிட் டோடிய
புரந்தரன் கைப்படாப் பொருப்புகள் போன்ற
கொடிஞ்சி நெடுந்தேர் இருஞ்சிறை விரித்து
“வம்மின்! வம்மின்! வீரரே! நாமினி
இம்மெனும் முன்னமவ் விந்திர லோகமும்
செல்லுவம்! ஏறுமின்! வெல்லுவம்!” எனப்பல
கொடிக்கரம் காட்டி யழைப்பதும் காண்டி...

ஜீவ: கண்டோம், கண்டோம். களித்தோம் மிகவும்.
உண்டோ இவர்க்கெதிர்? உனக்கெதிர்? ஓ! ஓ!
[படைகளை நோக்கி]
வேற்படைத் தலைவரே! நாற்படை யாளரே!
கேட்பீர் ஒருசொல்! கிளர்போர்க் கோலம்
நோக்கியாம் மகிழ்ந்தோம். நுமதுபாக் கியமே
பாக்கியம். ஆ! ஆ! யார்க்கிது வாய்க்கும்?
யாக்கையின் அரும்பயன் வாய்த்ததிங் குமக்கே!

தாயினும் சிறந்த தயைபூண் டிருந்தநும்
நேயமாம் தேவிக்குத் தீவினை யிழைக்கத்
துணிந்தவிவ் வஞ்சரை எண்ணுந்தோறும்
[எண்ணுந்தோறும்
அகந்தனில் அடக்கியும் அடங்கா தெழுந்து,
புகைந்துயிர்ப் பெறியப் பொறிகண் பொசிய
நெடுந்திரட் புருவம் கொடுந்தொழில் குறிப்ப
வளங்கெழு மீசையும் விளர்ந்தெழுந் தாடக்
களங்கமில் நும்முகம் காட்டுமிச் சினத்தீ
கண்டுஅப் பாண்டிய கொண்டனள் உவகை.
அலையெறிந் திரைந்தா ஆர்த்தனள். கேண்மின்!
முலைசுரந் தூட்டிய முதுநதி மாதா!

படைகள்: தாம்பிர பன்னிக்கு ஜே! ஜே!

ஜீவ: ஒருதுளி யேனுநீர் உருண்டுளீர் ஆயின்
கருதுவிர் தாம்பிர பன்னியின் கட்டுரை.
"மக்காள்! அருந்தி வளர்மின்! நுமக்கு
மிக்கோர் இல்லா வீரமாய்ப் பரந்து
முதுசுதந் தரத்தின் முத்திரை ஆகி,
இதுபரி ணமித்துடம் இதயத் துறைக!
அன்னியன் கைப்படா இந்நீர் கற்பிற்கு
இழிவுறின் மார்பினின் றிதுவே சோரியாய்ப்
பொழிகநீர் பொன்றிடும் அளவும்!" என்றன்றோ
வாழ்த்தி நுந்தமை வளர்த்தினள்? அவளுரை
தாழ்த்தா திவணீர் போர்த்தபோர்க் கோலம்
பார்த்தாள் ஆர்த்தவள் வாழ்த்தா தென்செய்வள்!

படைகள்: ஜே! ஜே!

ஜீவ: விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரமறும் அற்பர்வாய்ப் படுமோ?

படைகள்: தமிழ்மொழிக்கு ஜே! ஜே!

ஜீவ: பழையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
மன்னிய அன்பின்நும் அன்னையர் பாடி
நித்திரை வருவகை ஒத்தறுத் துமது

தொட்டில்நா லாட்ட,அவ் இட்டமாம் முன்னோர்
தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்
எண்ணரி இருகணும் கண்ணீர் நிறையக்
கண் துயி லாதுநீர் கனிவுடன் கேட்ட
வண்தமிழ் மொழியால் மறித்திக் காலம்
“ஆற்றிலம்; ஆண்மையும் உரிமையும் ஒருங்கே
தோற்றனம்” எனச்சொலத் துணிபவர் யாவர்?

படைகள்: சிச்சீ!

ஜீவ: பொதியமா மலையிற் புறப்பட் டிங்குதன்
படியே உலாவுமிச் சிறுகால், பணிந்துமற்று
“அடியேம்” எனத்திரி பவர்க்கோ உயிர்ப்பு!

படைகள்: ஹே! ஹே!

ஜீவ: கோட்டமில் உயிர்ப்போ கூறிர்; அன்ன
நாட்டபி மானமில் நடைப்பிண மூச்சும்?

படைகள்: சிச்சீ! சிச்சீ!

ஜீவ: சேனையோ டிவ்வழி திரிந்துநேற் றிரவில்நும்
திருவனை யார்களும் சேய்களும் கொண்ட
வெருவரு நித்திரைக் குறுகண் விளைத்துநும்
பாஷாபி மானமும், தேசாபி மானமும்
பொருளெனக் கருதா தருணிறை நுமது
தாய்முலைப் பாலுடன் வாய்மடுத் துண்டநல்
ஆண்மையும் சுதந்தரக் கேண்மையும் ஒருங்கே
நிந்தைவஞ் சியர்செய வந்தநும் கோபம்
முற்றும் இயல்பே. மற்றுத்தன் குகையுள்
உற்றரி முகமயிர் பற்றிடின் அதற்குக்
குறும்பால் எழுஞ்சினம் இறும்பூ தன்றே!
உரிமைமேல் ஆண்மைபா ராட்டார் சாந்தம்,
பெருமையில் பிணத்திற் பிறந்ததோர் சீதம்.
அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு!
வந்தஇக் கயவர்நும் சிந்தையிற் கொளுத்திய

வெந்நமற் சுவரே இந்நலம் ஆகுக!

படைகள்: ஆகுக! ஆகுக!

ஜீவ: இன்றுநீர் சிந்தும் இரத்தமோர் துளியும்,
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே "இந்தப்
பாண்டியர் உரிமை பாராட்டும் பண்பினர்;
நீண்டன்மின் இருந்தலிர்! அவர்நம் செருக்கு.
சுதந்தரம் அவர்க்குயிர்; சுவாசமற் றன்று
நினையுமின் தன்றுய்க் கனவினும் இதனை"...
எனமுர சறையுமே எத்திசை யார்க்கும்.
இத்தனிப் போரில் நீர் ஏற்றிடும் காயம்
சித்தங் களித்து, ஐயமா நுமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை ஆகி
எத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்!

படைகள்: ஜே! ஜே!

ஜீவ: போர்க்குறிக் காயமே புகழின் காயம்.
யார்க்கது வாய்க்கும்! ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தம் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினம் தாமனு பவிக்குஞ் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் தொந்தபுண் எண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்,
என்றால் அப்புண் 'இரந்துகோட் டக்கது'
அன்றோ? அறைவீர். ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே. எவரே
புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்?
புகழுடம் பன்றியிவ் விகழுடம் போமெய்?
கணங்கணம் தோன்றிக் கணங்கணம் மறையும்
பிணம்பல, இவரெலாம் பிறந்தார் என்பவோ!
உதும்பர தருவில் ஒருகனி அதனுட்
பிறந்திறும் அசகம் இவரினும் கோடி.
பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்.
அப்பெரும் புகழுடம் பிப்படி இன்றிதோ!
சுலபமாய் நுமக்கெதிர் அணுகலால்; துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியந்தோம்.

ஒழுக்கமற் றன்றது வெனினும், உம்மேல்
அழுங்கா றுஞ்சிறி தடைந்தோம். நும்மோடு
இத்தினம் அடையும் இணையிலாப் பெரும்புகழ்
எத்தனை ஆயிரம் ஆயிரம் கூறிட்
டொத்ததோர் பங்கே உறுமெனக் கெனவே
ஓடுமோர் நினைவிங் கதனால், வீரர்காள்!
நீடுபோர் குறித்திவண் நின்றோர் தம்முள்
யாரே ஆயினும் சிராம் தங்கள்
உயிருடம் பாதிகட் குறுமயர் வுன்னிச்
சஞ்சலம் எய்துவோர் உண்டெனிற் சாற்றுமின்.
வஞ்சகம் இல்லை. என் வார்த்தையீ துண்மை
மானமோ டவரையிம் மாநக ரதனுட்
சேமமாய் இன்றிருத் திடுவம். திண்ணம்.
உத்தம மாதர்கள் உண்டுமற் றுங்கே
எத்தனை யோபேர். இவர்க்கவர் துணையாம்.

படைகள் : இல்லை! இல்லையிங் கத்தகைப் புல்லியர்!

ஜீவ : குறைவெனக் கருதன்மின். எம்புகழ்க் கூறு
சிறிதாம் எனவுரிச் செப்பினேம். அதனாற்
பிறிதுநீர் நினையீர். பேசுமின் உண்மை.

படைத்தலைவர் : இல்லையெம் இறைவ! இந்நா டதனுள்
இல்லையத் தகையர்.

யாவரும் : இலையிலை! இலையே!

ஜீவ : நல்லதப் படியேல், நாமே நுஞ்சுய
நாட்டில்நல் லுரிமைபா ராட்டும். பெரிய
மேன்மையும் அதனால் விளைபுகழ் அதுவும்
மறுக்கிலம். பொறுக்குமின். வம்மின்! விஜய
இலக்குமி காத்திருக் கின்றாள்! அன்றியும்
ஒலிக்குநும் ஜயபே ரிகைகேட் டலதுமற்று
ஒய்கிலள் நோன்புநம் தாய்மனோன் மணியே (2)

படைவீரர் : மனோன்மணிக்கு ஜே! ஜே! ஜே!

யாவரும் : இளவரசிக்கு ஜே! ஜே! ஜே!

(குறளடிவஞ்சிப்பா)

ஜீவ:

நந்தாய்தமர் நங்காதலர்
நஞ்செய்பிறர் நந்தாவுரை
நந்நேயமேல் வந்தேநனி
நொந்நாழ்துயர் தந்தேஇவண்
நிந்தாநெறி நின்றாரிவர்
தந்தாவளி சிந்தாவிழ,
அடிப்போமடல் கெடுப்போமுகத்
திடிப்போங்குட லெடுப்போமிடுப்
பொடிப்போஞ்சிர முடைப்போம்பொடி
பொடிப்போம்வசை துடைப்போமுயிர்
குடிப்போம்வழி தடுப்போம்பழி
முடிப்போமினி நடப்போம்நொடி.
எனவாங்கு,
பெருமுர சதிரப் பெயருமின்
கருமுகில் ஈர்த்தெழும் உருமென ஆர்த்தே.

[படைகள் முரசடித்து நடக்க,
படைப்பாணர் பாட]

(கலித்தாழிசை)

படைப்பாணர்:

தந்நகர மேகாக்கச் சமைந்தெழுவோர் ஊதுமிந்தச்
சின்னமதி சயிக்குமெமன் செருக்கொழிமின் தெவ்விர்காள்!
சின்னமதி! சயிக்குமெமன் எனச்செருக்கி நிற்பீரேல்,
இன்னுணவிங் குமக்கினிமேல் எண்ணிரே எண்ணீரே இசைத்துளோமே.

படைகள்: ஜே! ஜே!

பாணர்:

மறுகுறு தம் ஊர்காக்கும் வயவர்புய மேவிஜயை
உறைவிடமா இவர்வாளென் றேடுமின் தெவ்விர்காள்!
உறைவிடமா? இவர்வாளென் றேடிடீர் ஆயினினி
மறலிநிசை ஒருபோதும் மறவீரே மறவீரே வழங்கினோமே. (2)

படைகள் : ஜே! ஜே!

பாணர் :

ஒல்லுமனை தான்காக்க உருவியகை வாளதற்குச்
செல்லுமுறை பின்னரிலை திரும்பிடுமின் தெவ்வீர்காள்!
செல்லுமுறை பின்னரிலை எனத்திரும்பீர் ஆயின் நுங்கள்
இல்லவர்க்கு மங்கலநாண் இற்றதுவே இற்றதுவே இயம்பினோமே.

படைகள் : ஜே! ஜே!

[படைகளும் ஜீவகன் முதலியோரும்
போர்க்களம் நோக்கிப் போக.]

நான்காம் அங்கம் : முதற்களம்
முற்றிற்று.

இரண்டாம் களம்

இடம்: கோட்டைவாசல்.
காலம்: காலை.

(நேரிசை ஆசிரியப்பா)

முதற்படைஞன்: இப்படை தோற்கின் எப்படை ஜயிக்கும்?
எப்படி இருந்தது ராஜன் பேச்சு!
கல்லும் உருகிக் கண்ணீர் விடும். இப்
புல்லும் கேட்கிற் புறப்படும் போர்க்கு.

௨-ஆம் படை: முற்றும் கேட்டைகொல்?

முதற்படை: முற்றும் கேட்டேன்.
சற்றும் மனமிலை திரும்புதற் கெனக்கு.
சரியல ஆணையில் தவறுதல் என்றே.
வெருவி நான் மீண்டேன். இலையேல் உடன்சென்
றொருகை பார்ப்பேன். ஓகோ! சும்மா
விடுவனோ? பார்க்கலாம் விளையாட் டப்போது.
என்செய! என்செய! எத்தனை பேரையான்
பஞ்சாய்ப் பறத்துவன்! துரத்துவன்! பாண்டியில்
வஞ்சவிவ் வஞ்சியர் என்செய வந்தார்?
நெஞ்சகம் பிளந்திந் நெடுவாள் தனக்குக்
கொஞ்சமோ ஊட்டுவன் குருதி! என்செய!
தினைதொறும் உடலெலாம் தின்பது தினவே!
பாக்கியம் இல்லையென் கைக்கும் வாட்கும்!

௨-ஆம் படை: பாக்கியம் அன்றது. பறைப்பயல் பாவி
குடிலனோ டிணையும் கோணவாய்க் கொடியன்,
சடையன், தலைவனோ டெதுவோ சாற்றித்
தடுத்தே நமையெலாம் விடுத்தான் இப்பால்.

௩-ஆம் படை: கெடுத்தான் அவனே என்னையும். அன்றேல்
முடித்தே விடுவனென் சபதம் முற்றும்.
சண்டிஅச் சங்கரன் வந்துளான் சமர்க்கு.
கண்டேன். கையிற் கிடைக்கிற் பண்டென்

தாயையும் என்னையும் சந்தையிற் பழித்த
வாயினை வகிர்ந்து மார்பினைப் பிளந்து...
[வாய்மடித்துப் பற்கடிக்க]

௪-ஆம் படை: வஞ்சியர் அனைவரும் மானமில் மாக்கள்.
பிஞ்சிற் பழுத்த பேச்சினர். யானெலாம்
நன்றா யறிவன். ஒன்றார் என்னுடன்.
சென்றுளேன் ஜனார்த்தனம். கண்டுளேன் வைக்கம்

௫-ஆம் படை: விடுவேன் அல்லேன். அடுபோர் முடியினும்
நடுநிசி ஆயினும் அடுகள முழுதும்
தேடுவன்; சங்கரன் செத்தான் ஆயினும்
நாடி யவன்தலை நசுக்கி மிதித்து
வாயிடை நெடுவேல் இறக்கி...

முதற்படை: சீ! சீ!
சேவக னாநீ! செப்பிய தென்னை!
யாவரே பிணத்தோ டாண்மைபா ராட்டுவர்?
பிணமோ பிணத்தோ டெதிர்க்க!

௫-ஆம் படை: போ! போ!
பெருமைநீ பேசேல். பெற்றவுன் தாயேல்
அருமைநீ அறிகுவை.

முதற்படை: யாரா யினுமென்?
பிணத்தொடு பிணக்கெது? சீ! சீ! அன்றியும்
ஒருவன் தனக்கா உண்டாம் குரோதம்
கருதியிங் கெவன்வாள் உருவினன்? நமக்கெலாம்
மாதா இவ்வயின் மகாநா டிதுவே.
ஏதோ அவனையும் நம்மையும் இகழ்ந்திவ்
வஞ்சியர் வஞ்சமாய் வந்தனர். அதனால்
நெஞ்சகம் கொதித்து நெடியநம் சுதந்தரம்
தனக்காய் உயிரையும் உவப்போ டளிக்கத்
துணிந்தே நம்மையும் மறந்தே நின்றோம்,
என்னில் அவரவர் இழுக்குஆர் கருதுவர்?
உன்னுதி நன்றாய். ஒருவன் தனக்கா
வந்தபோர் அன்றிஃ தூர்ப்போர். அதனால்
இதோஅங் கெய்தினோர் யாரே ஆயினும்

சுதேசாநு ராகத் தொடர்பால் அன்றிப்
பலவாம் நமது பழம்பழி மீட்போர்
கொலோபா தகஞ்செயும் கொடுமைய ரேயாம்.

[நாராயணன் படைக்கோலமாகிக் குதிரையின்மேல் வர]

உ-ஆம் படை: பாரும்! பாரும்! நாரா யணரிதோ...

நாராயணன்: உன்பெயர் முருக னன்றோ?

முதற்படை: அடியேன்.

௩-ஆம் படை: என்பெயர் சாத்தன். சுவாமி!

நாரா: ஓகோ!
எத்தனை பேருளர் இவ்வாயி லின்கண்?

முதற்படை: பத்தைஞ் ஞாறுளர், மெத்தவும் உத்தமர்.
மிகுநிறத் தார். போர் விரும்பினர். இவர்தம்
தகுதிக் கேற்ப தன்றிக் காவல்.

நாரா: பொறு! பொறு! முருகா புரையற் றோர்க்குமற்
றுறுபணி, இன்னதென் றுண்டோ? எதிலும்
சிறுமையும் பெருமையும் செய்பவர்க் கன்றிச்
செய்வினை தனக்கெது? மெய்ம்மையில் யாவும்
திருத்தமாச் செய்தலே பொருத்தமுத் தமர்க்கு

உ-ஆம் படை: வேணுமென் றுயினும் எங்களை விடுத்தல்
நாணமும் நோவுமாம் நாரா யணரே!

நாரா: வேண்டுமென் றூரே விடுப்பர். சிச்சீ
அப்படி யேதான் ஆயினும் நமக்குக்
கைப்படு கடமையே கடமை...
முருகா!
எத்தனை பேரால் ஏலுமிக் காவல்?

முதற்படை: நாலிலொன் றுயின் சாலவும் மிகுதி.

நாரா: அத்தனை வல்லவர் கொல்லோ? ஆயின்
இத்தனை பேர்க்குள தொழிலெலாம் தம்மேல்
ஏற்றிட வல்லரை மாற்றிநீ நிறுத்திக்
காட்டுதி எனக்கு.

முதற்படை: காட்டுவன் ஈதோ!
[அணிவகுத்துக் காட்ட]

நாரா: (தனதுள்)
நல்லனித் தலைவன். வல்லவர் இவரும்.
முதற்படை: ஈதோ நின்றனர்!
[காவற்படைகளை விலக்கி நிறுத்திக்காட்ட]
நாரா: போதுமோ இவர்கள்?
முதற்படை: போதும்! போதும்!
காவற்படைகள்: போதுமே யாங்கள்...
நாரா: எண்ணுமின் நன்று யேற்குமுன்! பின்புநீர்
பண்ணும் தவறுதம் பாலாய் முடியும்
காவற்படை: தவிர்கிலம் கடமையில். சத்தியம். தலைவ!
நாரா: தகுதியன் றெனச்சிலர் சாற்றிய தொக்க
மிகுபழி நீவிரும் மொழிவிரோ என்மேல்?
காவற்படை: மொழியோம் ஒன்றும். மொழியோம் நும்மேல்.
நாரா: சரி! சரி! ஆயின் தாங்குமின் காவல்.
பரிமற் றையர்க்கெலாம் உளவோ?
௧-ஆம் படை: ஓகோ!
௨-ஆம் படை: பெரியதென் பரிபோற் பிறிதிலை.
நாரா: காணுதும்.
அணிவகுத் திவ்வயின் அமர்மின்! முருகா!
மற்றைவா யிலிலும் மாற்றியிவ் விதம்யான்
வைத்துள படையும் அழைத்திப் புறநீ
நொடியினில் வருதி.
முதற்படை: அடியேன், அடியேன்.
[முதற்படைஞன் போக]
நாரா: ஆம்பொழு தழைப்போம். வாம்பரி அமர்மின்:
[கோட்டைமேல் உலாவி நின்று]
(தனதுள்) அரும்படை இரண்டும் அதோ! கை கலந்தன.
வரும்பழி யாதோ? மன்னவர்க் கேதோ?
ஆவதிங் கறியேன்! ஜீவக! ஜீவகா!
முற்றுநான் அறிவன்நின் குற்றமும் குணமும்
குற்றமற் றென்னுள கூறற் குன்வயின்?
வித்தையும் உன்பெருஞ் சத்திய விருப்பமும்

உத்தம ஒழுக்கமும் எத்துணைத் தையோ!
வறிதாங் கிளையே வாளா அனைத்தும்
அறியா தொருவனை யமைச்சா நம்பி!
இன்னதொன் றன்றிமற் றென்பிழை உன்னுழை
மன்னவன் நல்லனு வாய்க்குதல் போல
என்னுள தரியவற் றரியதிவ் வுலகில்?
வாய்ந்துமிங் குனைப்போல் வாளுன் வறிதாத்
தீத்திறல் ஒருவன் சேர்க்கையால் வீதல்
மன்னுளோர் பண்ணிய புண்ணியக் குறைவே!
சுதந்தரம் அறுவோர்க் கெந்தீங் குண்டோ?
கூறுவோர் அறிவின் குறைவே; வேறென்?
அன்றியும் உன்மிசை நின்றிடும் பெரும்பிழை
ஆயிரம் ஆயினும் தாய்மனோன் மணிநிலை
கருதுவர் உன்னலம் கருதா தென்செய்வர்?
வருவது வருக! புரிகுவம் நன்மை.
(உ-ம்படைஞனை நோக்கி) முருகன் வரவிலை?

உ-ஆம் படை: வருவன் விரைவில்.

நாரா: அதுவென் ஆ! ஆ!

உ-ஆம் படை: ஆ! ஆ! அறியேம்!

நாரா: பலதே வன்படை அலவோ?

உ-ஆம் படை: ஆம்! ஆம்!

நாரா: மன்னவன்?

உ-ஆம் படை: நடுவே.

நாரா: வலப்புறம்?

உ-ஆம் படை: குடிலன்.

நாரா: என்னையிக் குழப்பம் இடப்புறம்?

உ-ஆம் படை: ஏதோ!

நாரா: வருவது முருகன் போலும். முருகா!

[முருகன் வர]

வயப்பரி வீரரே! மன்னவர்க் கபஜயம்,
(படை வீரரை நோக்கி) இமைப்பள வின்கண் எய்தினும் எய்தும்.
இம்மெனும் முன்னநாம் எய்துவோம் வம்மின்!

முதற்படை: வந்தனர் ஈதோ மற்றைய வீரரும்

நாரா: தந்தனம் உனக்கவர் தலைமை. நொடியில்
வலப்புறம் செலுத்துதி. மன்னவன் பத்திரம்.
இருபுறம் காக்குதும். வருகவென் அருகே!
(முருகன் காதில்)
குடிலனை நம்பலை.

முதற்படை: அடியேன் அறிவேன்.

நாரா: அறிந்தவா றுற்றுதி! மறந்திடேல் மெய்ம்மை!
வம்மின் வீரரே! வம்மின்!
உம்வயின் உளது நம் செம்மல துயிரே.
[யாவரும் விரைவாய்க் குதிரைமேற் செல்ல]

நான்காம் அங்கம்: இரண்டாம் களம்

முற்றிற்று.

மூன்றும் களம்

இடம்: அரண்மனையில் ஒரு சார்.

காலம்: நண்பகல்.

[ஜீவகன் தனியாய்ச் சோர்ந்துகிடக்க, சேவகர் வாயில் காக்க]

(நேரிசை ஆசிரியப்பா)

முதற்சேவகன்: செய்வதென்? செப்பீர். கைதவற் றியாமோ
ஆறுதல் கூறுவம்?

௨-ஆம் சேவகன்: கூறலும் வீணே!
பெருத்த துயரிற் பேசும் தேற்றம்
நெருப்பிடை நெய்சொரிந் தற்றே யென்பர்.

௩-ஆம் சேவ: பணிந்தியாம் அருகே நிற்போம் அன்றித்
துணிந்துமற் றதுதான் சொல்லுவர் யாவர்?

௪-ஆம் சேவ: நாரா யணரேல் தீரமாய் மொழிவர்.

௩-ஆம் சேவ: மெய்ம்மை! மெய்ம்மை! விளம்புவர் செம்மையாய்

முதற் சேவ: எங்குமற் றவர்தாம் ஏகினர்? உணர்வைகொல்?

௪-ஆம் சேவ: மங்கைவாழ் மனைக்குநேர் ஓடுதல் கண்டேன்.

௨-ஆம் சேவ: சகிப்பளோ கேட்கில் தமியள்...

௩-ஆம் சேவ: ஆயினும்,
மகளால் அன்றி மன்னவன் தேறான்.
அதற்கே சென்றனர் போலும். ஆ! ஆ!

௨-ஆம் சேவ: நாரா யணரே நன்மதி உடையோர்.

௪-ஆம்சேவ: பாரீர்! இன்றவர் பண்ணிய சாகசம்.
இன்றியாம் பிழைத்ததிங் கிவரால். அன்றே...

[ஜீவகன் எழுந்து நடக்க]

௩-ஆம் சேவ: அரசன் அஃதோ எழுந்தான் காணீர்.

முதற் சேவ: உரைதரு கின்றான் யாதோ? ஒதுங்குமின்.
அடுத்திவண் நிற்பீர். அமைதி! அமைதி!

ஜீவகன்: கெடுத்தேன் ஐயோ! கெடுத்தேன் நாணம்
விடுத்துயிர் இன்னும் வீணில் தரித்தேன்.
ஆ! ஆ! என்போல் யாருளர் வீணர்!
யாருளர் வீணர்! யாருளர்! யாருளர்!
பாண்டியன் தொல்குலம் பட்டபா டின்றுமற்
றிதுவோ! இதுவோ! மதிவரு குலமே!
மறுவறு நறவே! மாசறு மணியே!
அழியாப் பழிப்புனக் காக்கவோ உனது
வழியாய் உதித்தேன் மதியிலா யானும்!
அந்தோ! இந்து முதலா வந்த
முன்னோர் தம்முள் இன்னார்க் கிரிந்து
மாண்டவர் அன்றி மீண்டவர் உளரோ!
யாதினிச் செய்குவன்! ஐயோ பொல்லாப்
பாதகன் மக்களுள் வெட்கமில் பதடி.

[பற்கடித்து]

போர்முகத் தோடிப் புறங்கொடுத் தேற்குக்
கார்முகம் என்செய! கடிவாள் என்செய!

[வில்லும் வாளும் எறிந்து]

ஓ! ஓ! இதனால் உண்டோர் பெரும்பயன்.

[மறுபடியும் வாளை எடுத்து
நோக்கி நிற்க, சேவகர் ஓடிவர]

போ! போ! வெளியே போரிடைப் பொலியாது
வாளா இருந்த வாளுக் கிதோ

[நாராயணன் வர]

எனதுயிர் ஈவேன் வினவுவர் யாவர்?

நாரா: மனோன்மணி தன்னை மறந்தாய் போலும்.

ஜீவ: குழந்தாய்! குழந்தாய்!...

[விழுந்து மூர்ச்சிக்க]

சேவகர்: கொற்றவா! கொற்றவா!

நாரா: பேசன்மின்!

[அரசனை மடியில் தாங்கி]

முதற்சேவ: பேசன்மின்!

நாரா: வீசுமின்! அகன்மின்!

முதற்சேவ: வெளியே!
௨-ஆம் சேவ: பனிநீர்...
நாரா: தெளிநீ சிறிது?
ஜீவ: குழந்தாய்! குழந்தாய்! கொன்றேன் நின்சீர்!
[எழுந்து சோர்வாயிருக்க]
நாரா: இழந்தால் இருப்பளோ? என்செயத் துணிந்தாய்?
ஜீவ: நஞ்சே எனக்கியான்! என்செய் வேனினி!
இருதலைக் கொள்ளியில் எறும்பா னேனே!
செருமுகத்து இரிந்தென் மானம் செகுத்தும்
உயிரினை ஓம்பவோ உற்றது? ஓர்சிறு
மயிரினை இழக்கினும் மாயுமே கவரிமா.
பெருந்தகை பிரிந்தும்ஊன் சுமக்கும் பெற்றி
மருந்தாய் எனக்கே இருந்ததே நாரண!
நாரா: மன்னவ! யார்க்கும் தன்னுடல் மாய்த்தல்
அரிதோ? பெரிதாம் அஞர்வந் துற்றுழிக்
கருதிய தமரைக் காட்டிவிட் டோடி
ஒளிப்பதோ வீரமென் றுன்னினை?
ஜீவ: ஓ! ஓ!
போரிடை ஓடுவோன் வீரம்நா டுவனோ?
நாரா: காலமும் களமும் கண்டு திரும்புதல்
சாலவும் வீரமே. தக்கவை உணரும்
தன்மையில் சௌரியம் மடமே. சூழ்ச்சிசேர்
வன்மையே வீரத் துயிராம் மன்னவ!
ஜீவ: போதும்! போதும்நின் போலி நியாயம்!
சாதலுக் கஞ்சியோர் தனையளுக் காகச்
சூதக உடம்பைச் சுமக்கத் துணிந்தேன்.
மன்னனும் அல்லன். வழுதியும் அல்லன்!
(சேவகரை நோக்கி)
என்னுடன் இருமின்! ஏன்நிற் கின்றீர்?
முதற்சேவ: இறைவ! ஈதென்னை!
ஜீவ: இறைவனென் றென்னை
இசைப்பது வசையே. இஃதோ காண்மின்!
அசைந்த தொருநிழல். அஃதோ யானெனப்
பாருமின். பாண்டியன் போரிடைப் பட்டான்.

வாரும்! வாரும்! இருமின் யாவரும்.
நாரா: வீறாய் வெற்றுரை விளம்பலை வேந்தே!
காணாய் அஃதோ! அவர்விடும் கண்ணீர்.
[சேவகர் அழுதலை நோக்கி]
ஜீவ: வம்மின்! வம்மின்! எம்மனீர்! ஏனிது?
முதற்சேவ: பருதிகண் டன்றோ பங்கயம் அலரும்?
அரச நீ துயருறில் அழுங்கார் யாரே?
ஜீவ: பிரியசே வகரே! பீடையேன்! துயரேன்!
இழந்தனம் முற்றும் என்றோ எண்ணினீர்!
அழிந்ததோ நம்மரண்? ஒழிந்ததோ நம்படை?
மும்மையில் இம்மியும் உண்மையில் இழந்திலம்.
வெல்லுவம் இனியும்: மீட்போம் நம்புகழ்
அல்லையேற் காண்மின்!
நாரா: அதற்கென் ஐயம்?
இறைவ! இப் போதுநீ இசைத்தவை சற்றும்
குறைவிலை. தகுதியே. கூறிய படியே
ஆவது காண்குவம். அழகார் அம்புயப்
பூவின துயர்வு பொய்கையின் ஆழத்
தளவா வதுபோல், உளமது கலங்கா
ஊக்கம் ஒருவன தாக்கத் தளவெனத்
துணிவார்க் குறுதுயர் தொடுமுன் எவ்வும்
அணியார் பந்துறும் அடிபோல், முயற்சியில்
இயக்கிய இன்பம் பயக்குமென் றிசைக்கும்
சான்றோர் சொல்லும் சான்றே அன்றோ?
ஆதலின் இறைவநீ ஓதிய படியே
உள்ளத் தெழுச்சியும் உவகையோ டூக்கமும்
தள்ளா முயற்சியும் தக்கோர் சார்பும்,
[குடிலனும் பலதேவனும் வர]
உண்டேல் ஊழையும் வெல்லுவம். மண்டமர்
அடுவதோ அரிது வடிவேல் அரசே!
குடில: இப்பரி சாயர சிருப்பது வியப்பே!
(தனதுள்) தக்கோர் என்றனன் சாற்றிய தென்னோ!
[அழுவதாகப் பாவித்து ஒருபுறம்
ஒதுங்கி முகமறைந்து நிற்க]

ஜீவ: ஏனிது குடில! ஏன்பல தேவ!
ஆனதென்? அமைச்ச! ஆ! ஆ!

குடில: அடியேன்.

ஜீவ: வருதி இப்புறம்! வருதியென் அருகே!

குடில: (அழுது) திருவடிச் சேவையில்...

ஜீவ: செய்தவை அறிவோம்.

குடில: (ஏங்கி) ஜனித்தநாள் முதலா...

ஜீவ: உழைத்தனை! உண்மை!

குடில: உடல்பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே...

ஜீவ: விடுத்தனை உண்மை. விளம்பலென்?

குடில: உண்மையில்
பிசகிலன் என்பது...

ஜீவ: நிசம்! நிசம்! அறிவோம்!

குடில: (விம்மி) எல்லாம் அறியும் ஈசனே சான்றெனக்கு
அல்லால் இல்லை...

ஜீவ: அனைவரும் அறிவர்.

குடில: அருமை மகனிவன் ஒருவன்...

ஜீவ: அறிகுவம்.
[பலதேவன் மார்பினைச் சுட்டிக்காட்டி]

குடில: பாராய் இறைவ!

ஜீவ: (பலதேவனை நோக்கி) வாராய்.

குடில: இப்புண்
ஆறுமா றென்னை? தேறுமா றென்னை?
உன்னருள் அன்றிமற் றென்னுள தெமக்கே...

ஜீவ: அம்பின் குறியன்று, யாதிது?

குடில: அடியேம்,
அன்பின் குறியிது!

ஜீவ: ஆ! ஆ!

குடில: ஆயினும்
பொல்லாப் பகைவர் பொய்யர் அவர்பலர்...
இல்லை தாக்குவர் இறைவ! என் மெய்ம்மை...
[அழ]

ஜீவ: வெல்வோம் நாளை! விடுவிடு துயரம்.
குடில: (தனதுள்) அறிந்திலன் போலும் யாதும்!
[சிறிதுளம் தெளிந்து]
ஜீவ: அழுங்கலை.
வெறுந்துய ரேனிது? விடு! விடு! உலகில்
வெற்றியும் தோல்வியும் உற்றிடல் இயல்பே,
அழுவதோ அதற்கா விழுமிய மதியோய்!
குடில: (தனதுள்) சற்றும் அறிந்திலன்! என்னையென் சமுசயம்!
ஜீவ: முற்றிலும் வெல்லுதும் நாளை. அதற்கா
ஐயுறேல்! அஞ்சலை! ஆயிரம் வஞ்சியர்
தனுகினும் நாளை...
குடில: நாயேற் கதனில்
அணுவள வேனும் இலையிலை அயிர்ப்பு.
நெடுநாள் ஆக நின்பணி விடைக்கே
உடலோ டாவியான் ஒப்பித் திருந்தும்,
கெடுவேன், அவையிக் கிளர்போ ரதனில்
விடுமா றறியா வெட்கமில் பதடியாய்க்
கொடியார் சிலர்செய் கொடுஞ்சூ ததனால்
தடுமா றடைந்தென் தகைமையும் புகழும்
கெடுமா றுகுத்த கெடுமதி ஒன்றே
கருத்திடை நினைதொறும் கண்ணிடு மணல்போல்.
உறுத்துவ திறைவ! ஒவ்வொரு கணமும்.
பகைவர்தம் படைமேற் படுகிலா வுடலம்
கெடுவேற் கென்னோ கிடைத்ததிங் கறியேன்!
அடுபோர்க் களத்தியாண் டடைந்திலன்! ஐயோ!
வடிவேல் ஒன்றென் மார்பிடை இதுபோல்
[பலதேவனைக் காட்டி]
படுமா றில்லாப் பாவியேன் எங்ஙனம்
நோக்குவன் நின்முகம்? காக்குதி! ஐயோ!
தாக்குறு பகைவர் தம்படை என்னுயிர்
போக்கில. நீயே போக்குதி! காக்குதி!
இரக்கமுற் றுன்திருக் கரத்துறை வாளிவ்

உரத்திடை ஊன்றிடில் உய்குவன். அன்றேல்...
[அழுது]

ஜீவ: உத்தம பத்தியில் உனைப்போல் யாரே!

நாரா: (தனதுள்) மெத்தவும் நன்றிந் நாடகம். வியப்பே!
மற்றக் கோழைக் குற்றதெப் படிப்புண்?
போரிடை உளதன் றியார்செய் தனர்பின்?
உணர்குவம். இப்பேச் சோய்விலாப் பழங்கதை.
[நாராயணன் போக]

குடில: சித்தமற் றவ்வகை தேர்ந்துள தென்னில்,
இத்தனை கருணையும் எனக்கென அருளுதி.
பாதநற் பணிவிடை படைத்தநாள் முதலா
யாதுமொன் றெனக்கா இரந்திலன். உணர்வை.
ஓதிய படியென் உரங்கிழித் துய்ப்பையேல்
போதுமிங் கெனக்(கு)அப் போதனை காண்குவர்
மன்னுல குள்ளார் என்னுள நிலைமை!
உன்பெயர்க் குரிய ஒவ்வோர் எழுத்தும்
என்னுரத் தழியா எழுத்தினில் எழுதி
இருப்பதும் உண்மையோ இலையோ என்பது
பொருக்கெனக் கிழித்திங் குணர்த்துதி புவிக்கே.
[முழந்தாளுன்றி நின்றழ]

ஜீவ: அழுவதேன்? எழு! எழு! யாரறி யார்கள்!
உன்னுளம் படும்பா டென்னுளம் அறியும்.
என்னநு பவங்கேள். குடிலா! ஈதோ
சற்றுமுன் யானே தற்கொலை புரியத்
துணிந்துவாள் உருவினேன். துன்னென நாரணன்,
அணைந்திலன் ஆயினக் காலை...

குடில: ஐயோ!

ஜீவ: தடுத்தான்; விடுத்தேன்!

குடில: (தனதுள்) கெடுத்தான் இங்கும்!

ஜீவ: அரியே றன்ன அமைச்ச! பெரியோர்
தரியார்; சகியார் சிறிதொரு சழக்கும்.
ஆயினும் அத்தனை நோவதற் கென்னே?
வாளுறை சேர்த்திலம்! நாளையும் போர்செயக்
கருதினோம்! உறுதி! வெருவியோ மீண்டோம்?

குடில: வஞ்சியர் நெஞ்சமே சான்றுமற் றதற்கு.
மீண்டதிற் குறைவென்? ஆ! ஆ! யாரே
வெருவினோர்? சீ! சீ! வீணவ் வெண்ணம்!
இருதினம் பொருதனர் சிறுவனை வெலற்கென்
றொருமொழி கூறநம் உழையுளார் சிலர்செய்
[நாராயணன் நின்றவிடம் நோக்கி]
சதியே யெனக்குத் தாங்காத் தளர்ச்சி
அதுவலால் என்குறை மதிகுல மருந்தே!
சென்று நாம் இன்று திரும்பிய செயலே
நன்றெனப் போர்முறை நாடுவோர் நவில்வர்.
செவ்விதில் ஓடிநாய் கௌவிடும் சிறந்த
மடங்கலோ எதற்கும் மடங்கியே குதிக்கும்.
குதித்தலும் பகையினை வதைத்தலும் ஒருகணம்.
நாளை நீ பாராய்! நாந்தா னுப்பும்
வேலையே அன்றி விசிதலை அனந்தை
ஊரார் இவ்வயின் உற்றதொன் றறியாச்
சீராய் முடியுநம் சிங்கச் செருத்திறம்!
மீண்டோம் என்(று)உனித் தாண்டிலின் மீனென
ஈண்டவன் இருக்குக: இருக்குக. வைகறை
வரும்வரை இருக்கில் வந்தவிவ் வஞ்சியர்,
ஒருவரும் மீள்கிலர். ஓர்கால் இக்குறி
தனக்கே தட்டிடில் தப்புவன் என்பதே
எனக்குள துயரம். அதற்கென் செய்வோம்!
ஆதலின் இறைவ! அஞ்சினேம் என்றொரு
போதுமே நினையார் போர்முறை அறிந்தோர்.

ஜீவ: எவ்விதம் ஆயினும் ஆகுக. வைகறை,
இதுவரை நிகழ்ந்தவற் றெதுகுறை வெனினும்
அதுவெலாம் அகலநின் றரும்போர் ஆற்றதும்.

குடில: வஞ்சியான் இரவே அஞ்சிமற் றெழுந்திடில்
அதுவுமாம் விதமெது?
[சேவகன் வர]

சேவகன்: உதியன் தூதுவன்
உற்றுமற் றுன்றன் அற்றம்நோக் கினனே.

குடில: சரி! சமா தானம் சாற்றவே சார்ந்தான்.

ஜீவ : பெரிதே நின்மதி! ஆ! ஆ! வரச்சொல்.
[வஞ்சித்தூதன் வர]

தூதன் : தொழுதனன், தொழுதனன், வழுதி மன்னவா!
[வணங்கி]
அருளே அகமாத் தெருளே மதியா
அடலே உடலாத் தொடைபுக ழேயா
நின்றவென் இறைவன் நிகழ்த்திய மாற்றம்
ஒன்றுள துன்வயின் உரைக்க என்றே
விடுத்தனன் என்னை அடுத்ததா துவனு.
இன்றுநீர் இருவரும் எதிர்த்திடில் யாவர்
வென்றனர் என்பது விளங்கிடும் உனக்கே.
பொருதிட இனியும் கருதிடில் வருவதும்
அறிகுவை! அதனால் அறிகுறி உட்கொண்
டுறுவது முன்னுணர்ந் துறவா வதற்கே
உன்னிடில் தாம்பிர பன்னியி னின்றொரு
கும்ப நீருமோர் நிம்ப மாலையும்
ஈந்தவன் ஆணையில் தாழ்ந்திடில் வாழ்வை!
மதிற்றிற மதித்திறு மாப்பையேல் நதியிடை
மட்பரி நடாத்தினோர்க் கொப்பா குவையே.
ஆதலின் எங்கோன் ஓதிய மாற்றம்
யாதெனிற் கைதவா! வைகறை வருமுன்
தாரும் நீரும்நீ தருவையேற் போரை
நிறுத்துவன். அல்லையேல் நின்புரம் முடிய
ஒறுத்திட உழிஞையும் சூடுவன். இரண்டில்,
எப்படி உன்கருத் தப்படி அவற்கே.

ஜீவ : நன்று! நன்று! நீ நவின்றனை. சிறுவன்
வென்றதை நினைத்தோ அலதுமேல் விளைவதைக்
கருதித் தன்னுளே வெருவியோ உன்னை
விடுத்தனன் என்பதிங் கெடுத்துரை யாதே
அடுத்திவண் உள்ளார் அறிகுவர் ஆயினும்,
மற்றவன் தந்தசொற் குற்ற நம்விடை
சாற்றுதும் கேட்டி. தன்பொருள் ஆயின்
ஏற்றிரந் தவர்க்கியாம் யாதுமீந் திடுவோம்.
அருந்திடச் சேரன் அவாவிய புனலும்

விரும்பிய சுரும்பார் வேம்பும் விதுகுலம்
வரும்பரம் பரைக்காம் அல்லால் எனக்கே
உளவல; அதனால் ஒருவனீந் திடுதல்
களவெனக் காணுதி. மற்றுநீ கழறிய
உழிஞையங் குளதெனில் வழுதிபொற் பழுதில்
நொச்சியும் உளதென நிச்சயம் கூறே.

தூதன்: ஐயோ! கைதவா! ஆய்ந்திலை உன்றன்
மெய்யாம் இயல்பு. மிகுமுன் சேனையின்
நீரும் திறமும் உனதரும் வீரமும்
கண்முற் படுமுன் கவர்ந்தசே ரற்கிம்
மண்வலி கவர்தலோ வலிதென் றுன்னினை?
என்மதி குறித்தாய்! எடுத்தகைப் பிள்ளாய்!

குடில: நில்லாய் தூதுவ! நின்தொழில் உன்னிறை
சொல்லிய வண்ணம் சொல்லி யாங்கள்
தரும்விடை கொடுபோய்ச் சாற்றலே அன்றி
விரவிய பழிப்புரை விளம்புதல் அன்றே.
அதனால் உன்னுயிர் அவாவினை யாயின்
விரைவா யேகுதி விடுத்தவன் இடத்தே.

தூதன்: குடிலா! உன்மனப் படியே! வந்தனம்.
மருவிய போரினி வைகறை வரையிலை.
இரவினில் வாழுமின் இவ்வர ணகத்தே.
[தூதுவன் போக]

குடில: தூதிது சூதே, சொன்னேன் அன்றோ?

ஜீவ: ஏதமில் மெய்ம்மையே ஆயினும் என்னை?
தீரும் தாரும் யாரே அளிப்பர்?
எனவோ அவைதாம்? யாதே வரினும்
மனவலி ஒல்கலை மானமே பெரிது.
சிதைவிடத் துரவோர் பதையார் சிறிதும்
புதைபடுங் கணைக்குப் புறங்கொடா தும்பல்.
மதிகுல மிதுகா ரொருவரை வணங்கித்
தாழ்ந்துபின் நின்று வாழ்ந்ததும் அன்று!
மாற்றார் தமக்கு மதிகுல மாலையும்

ஆற்றலி ருடன்நம் ஆண்மையும் அளித்து
நாலாறு துலகம் ஆளல்போல் நடித்தல்
நாலாற் பாவை உயிர்மருட் டுதலே
ஒட்டார் பின்சென் றுயிர்வாழ் தலினும்
கெட்டான் எனப்படல் அன்றோ சீர்த்தி!
அதனாற் குடிலா! அறிகுதி துணிபாய்.
எதுவா யினும்வரில் வருக. ஒருவனை
வணங்கியான் இணங்குவன் எனநீ மதியேல்.
[எழுந்து]
வருவோம் நொடியில். மனோன்மணி நங்குலத்
திருவினைக் கண்டுனந் தேற்றி மீள்குவம்.
கருதுவ பலவுள. காணுதும்.
இருநீ அதுகா றிவ்வயின் இனிதே
[ஜீவகன் போக]

குடில: கருதுதற் கென்னே! வருவது கேடே.
தப்பினாய் இருமுறை. தப்பிலி நாரணன்
கெடுத்தான் பலவிதம். மடப்பயல் நீயே
[பலதேவனை நோக்கி]
அதற்கெலாம் காரணம்.

பலதே: அறிகுவை, ஒருவன்
இதுபோல் வேலுன் நெஞ்சிடை இறக்கிடில்.

குடில: உன்நடக் கையினால்.

பலதே: உன்நடக் கையினால்!
மன்னனைக் குத்திட உன்னினை ; ஊழ்வினை!
என்னையே குத்திட இசைந்தது : யார்பிழை?

குடில: பாழ்வாய் திறக்கலை. ஊழ்வினை! ஊழ்வினை!
பகைக்கலை எனநான் பலகாற் பகர்ந்துளேன்.

பலதே: பகையோ? பிரியப் படுகையோ? பாவி

குடில: பிரியமும் நீயும்! பேய்ப்பயல்! பேய்ப்பயல்!
எரிவதென் உளமுனை எண்ணும் தோறும்.
அரியவென் பணமெலாம் அழித்துமற் றின்று...

பலதே: பணம்பணம் என்றேன் பதைக்கிறாய் பிணமே!
திணம்படு நெஞ்சுடன் நின்றேன். மனத்திற்

கண்டுநீ பேசுதி! மீண்டலை வறிதே!
[பலதேவன் போக]

குடில: விதி யிது! இவனுடன் விளம்பி யென்பயன்?
இதுவரை நினைத்தவை யெல்லாம் போயின!
புதுவழி கருதுவம்! போயின போகுக!
[மௌனம்]
எதுவுமிந் நாரணன் இருக்கில்,
அபாயம். ஆ! ஆ! உபாயமிங் கிதுவே. (2)
[குடிலன் போக]

நான்காம் அங்கம்: மூன்றாம் களம்
முற்றிற்று.

நான்காம் களம்

இடம்: அரண்மனையில் ஒரு சார்.
காலம்: மாலை.

[ஜீவகனும் குடிலனும் மந்திராலோசனை: பலதேவன் ஒருபுறம் நிற்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

ஜீவகன்: ஆதி இன்னதென் றோதுதற் கரிய
வழுதியின் தொழுகுல வாளுள் ஓரிரா
எனமதிப் பதற்கும் இருந்ததே! குடில!
இத்தனை கே(டு) இன்(று) எங்ஙனம் விளைந்தது?
சற்றும் அறிந்திலேன் தையலர் புகலுமுன்.
மாற்றார் நமது மதிற்புறத் தகழைத்
தூர்த்தார் எனப்பலர் சொல்லுவ துண்மைகொல்!
குடில: ஓரிடம் அன்றே. உணர்ந்திலை போலும்.
(தனதுள்) வேரறக் களைகுதும். இதுவே வேளை.
ஜீவ: என்னை! என்னை!
குடில: மன்னவா! யானிங்
கென்னென ஓதுவன் இன்றையச் சூது?
ஜீவ: மருவரு மதிலுள கருவியென் செய்தன?
குடில: கருவிகள் என்செயும் கருத்தா இன்றியே!
ஜீவ: காவல் இல்லைகொல்? சேவகர் யாவர்?
குடில: ஏவலின் படியாம் என்று யிரவர்
ஆதியர் காவலா ஆக்கியே அகன்றோம்.
ஜீவ: ஏதிது பின்னிவர் இருந்துமற் றிங்ஙனம்?
குடில: இருந்திடில் இங்ஙனம் பொருந்துமோ இறைவ!
ஜீவ: செவ்விது! செய்ததென்?
குடில: எவ்விதம் செப்புகேன்?
நாரணர் காவலின் நாயகர் ஆக்கினோம்.
போரிடைக் கண்டனை நாரணர் தம்மை
ஜீவ. மெய்ம்மை! கண்டனம். விட்டதென் காவல்?

குடில : ஐய! யான் அறிகிலன். அவரினும் நமக்கு
மெய்ம்மையர் யாவர்? வேலியே தின்னில்
தெய்வமே காவல் செய்ப்பயிர்க் கென்பர்.

ஜீவ : துரோகம்! துரோகம்!

குடில : துரோகமற் றன்று!
விரோதம்! அடியேன் மேலுள விரோதம்.
திருவடி தனக்கவர் கருதலர் துரோகம்.

ஜீவ : கெடுபயல்! துரோகம்! விடுகிலன் சிறிதில்.

குடில : மடையன்! ஐயோ! மடையன்! சுவாமீ
எலிப்பகை தொலைக்க இருந்ததன் வீட்டில்
நெருப்பினை இடல்போல் அன்றோ நேர்ந்தது.
விருப்பம்மற் றவர்க்குன் வெகுமதி ஆயின்,
திருத்தமாய் ஒருமொழி திருச்செவி சேர்க்கில்
அளிப்பையே களிப்புடன் அமைச்சும் தலைமையும்!
அத்தனை அன்புநீ வைத்துளை!

[அழுது]

ஜீவ : ஆ! ஆ!
எத்தனை துட்டன்! எண்ணிலன்! சற்றும்!

குடில : ஐயோ! எனக்கிவ் வமைச்சோ பெரிது?
தெய்வமே அறியுமென் சித்த நிலைமை!
வெளிப்பட ஒருமொழி விளம்பிடில் யானே
களிப்புடன் அளிப்பனக் கணமே அனைத்தும்.
விடுவேம் அதற்கா வேண்டிலெம் உயிரும்!
போர்முகத் திங்ஙனம் புரிதலோ தகுதி?

[பலதேவன் மார்பைக் காட்டி]

ஜீவ : யார்? யார்? நாரணன்?

[பலதேவனை நோக்கி]

பலதே : ஆம்! அவன் ஏவலில்
வம்பனங் கொருவன்...

ஜீவ : நம்பகை அன்றுபின்!

குடில : நின்பகை அன்றுமற் றென்பகை இறைவ!

ஜீவ : உன்பகை என்பகை! ஓ! ஓ! கொடியவன்!
செய்குவன் இப்போ தேசிரச் சேதம்!
இடங்குழம் பியதிங் கிதனாற் போலும்?

குடில: அடங்கலும் இதனால் ஐய! அன்றேல்,
இடப்புறம் வலப்புறம் யாதே குழம்பும்?
மடப்பயல் கெடுத்தான்! மன்ன! நம் மானம்!
ஒருமொழி அல்லா திருமொழி ஆயின்
வெருவர வெம்படை வெல்லுவ தெங்ஙனம்!
ஜீவ: அழைநா ரணனை.
[முதற்சேவகனை நோக்கி]
முதற்சேவ: அடியேன்
ஜீவ: நொடியில்.
[சேவகன் போக]
பழமையும் பண்பும்நாம் பார்க்கிலம்; பாவி!
இத்தனை துட்டனோ? ஏனிது செய்தான்?
குடில: சுத்தமே மடையன்! சுவாமீ! பொறுத்தருள்.
என்னதே அப்பிழை. மன்ன! நீ காக்குதி!
வருபவை உன்திரு வருளால், வருமுன்
தெரிவுறும் அறிவெனக் கிருந்தும், திருவுளம்
நிலவிய படியே பலதே வனைப்படைத்
தலைவனாய் ஆக்கிடச் சம்மதித் திருந்தேன்.
எனதே அப்பிழை, இலதேல் இவ்விதம்
நினையான் இவனுயிர் நீங்கிடப் பாவி!
அதன்பின் ஆயினும் ஐயோ! சும்மா
இதமுற இராதுபோர்க் களமெலாம் திரிந்து
கடிபுரிக் காவற் படைகளும் தானுமாய்
இடம்வலம் என்றிலை: இவுளிதேர் என்றிலை:
கடகயம் என்றிலை: அடையவும் கலைத்து,
கைக்குட் கனியாய்ச் சிக்கிய வெற்றியை
[விம்மி]
ஜீவ: கண்டனம் யாமே.
குடில: காலம்! காலம்!
ஜீவ: கொண்டுவா நொடியில்
[உ-ஆம் சேவகனை நோக்கி]
உ-ஆம் சேவ: அடியேன்! அடியேன்-
[உ-ஆம் சேவகன் போக]
குடில: சென்றது செல்லுக. ஜயிப்போம் நாளை
ஒன்றுநீ கேட்கில் உளறுவன் ஆயிரம்.

நெடுநா உடையான். கேட்டினி என்பயன்?
ஜீவ: விடுவேம் அல்லேம். வெளிப்படை கேட்பதென்?
எழுமுன் அவன்கழு ஏறிடல் காண்குதும்.
குடில: தொழுதனன் இறைவ! பழமையன்! பாவம்!
சிறிதுசெய் கருணை. அறியான்! ஏழை!
ஜீவ: எதுவெலாம் பொறுக்கினும் இதுயாம் பொறுக்கிலம்.
எத்தனை சூதுளான்! எத்தனை கொடியன்!
குடில: சுத்தன்!
ஜீவ: சுத்தனோ? துரோகி! துட்டன்!
[நாராயணன் உள்ளே வர]
இட்டநம் கட்டளை என்னையின் றுனக்கே?
[முருகன் முதலியோர் வாயிலில் நிற்க]
நாரா: எப்போ திறைவ!
ஜீவ: இன்றுபோர்க் கேகுமுன்!
நாரா: அப்போ தாஞ்ஞையாய் அறைந்ததொன் றில்லை
கடிபுரி காக்கவென் றேவினன் குடிலன்.
ஜீவ: குடிலனை யாரெனக் கொண்டனை, கொடியாய்!
நாரா: குடிலனைக் குடிலனென் றேயுட் கொண்டுளேன்.
ஜீவ: கெடுவாய்! இனிமேல் விடுவாய் பகடி!
குடிலனென் அமைச்சன்.
நாரா: நெடுநாள் அறிவன்!
ஜீவ: நானே அவனிங் கவனே யானும்
நாரா: ஆனால் நன்றே, அரசமைச் சென்றிலை.
ஜீவ: கேட்டது கூறுதி.
நாரா: கேட்டிலை போலும்.
ஜீவ: கடிபுரி காத்தைகொல்?
நாரா: காத்தேன் நன்றாய்.
ஜீவ: காத்தையேல் அகழ்க்கணம் தூர்த்ததென் பகைவர்?
நாரா: தூர்த்ததுன் பகையல. துரத்திய படைப்பிணம்.
பார்த்துமேற் பகருதி.

ஜீவ: பார்த்தனம் உன்னை
ஆர்த்தபோர்க் களத்திடை அதுவோ காவல்?

நாரா: உன்னையும் காத்திட உற்றனன் களத்தில்.

ஜீவ: என்னையுன் கபட நாடகம்? இனிதே!
அவனுரம் நோக்குதி. அறிவைகொல்?
[பலதேவனைக் காட்டி]

நாரா: அறிவேன்.

ஜீவ: எவனது செய்தவன்?

நாரா: அவனே அறிகுவன்.

ஜீவ: ஒன்றும்நீ உணர்கிலை?

நாரா: உணர்வேன். இவன்பால்
நின்றதோர் வீரன்: இப் பொற்றொடி யுடையான்
"என்தங் கையினிழி விப்படி எனக்கே"
என்றுதன் கைவேல் இவனுரத் தெற்றிப்
பொன்றினன் எனப்பலர் புகல்வது கேட்டேன்.

ஜீவ: நன்றுநன் றுன்கதை!

குடில: நன்றிது நன்றே!
[பொற்றொடி காட்டி]
பூணிது நினதே! அரண்மனைப் பொற்றொடி.
காணுதி முத்திரை! வாணியும் சேர்ந்துளாள்.
இச்செயற் கிதுவே நிச்சயம் கூலி.
அடியேம் தமக்கினி விடையளி. அகலுதும்.
அஞ்சிலேம் உடலுயிர்க் கஞ்சுவம் மானம்.
வஞ்சகர் கெடுப்பர். வந்தனம்.
[தன் முத்திரைமோதிரம் கழற்றி நீட்ட]

ஜீவ: நில்! நில்!
(நாராயணனை நோக்கி) இத்தனை சூதெலாம் எங்குவைத் திருந்தாய்?
உத்தமன் போலமற் றெத்தனை நடித்துளாய்
சோரா! துட்டா! சுவாமித் துரோகி!
வாராய் அமைச்ச! வாரீர் படைகாள்!
[முருகன் முதலிய தலைவரும் படைஞரும் வர]
நாரா யணனிந் நன்றிகொல் பாதகன்,
இன்றியாம் இவனுக் கிட்டகட் டளையும்

நன்றியு மறந்து நன்னகர் வாயிற்
காவல் கைவிடுத்துக் கடமையிற் பிறழ்ந்தும்,
மேவருந் தொடியிதெங் கோவிலில் நிருடியும்,
ஏவலர்க் கதனையிந் தேபல தேவன்
ஓவலில் உயிரினை உண்டிடத் தூண்டியும்,
அநுமதி இன்றியின் றமர்க்களத் தெய்திக்
கனைகழற் படைபரி கரிரதம் கலைத்துச்
சுலபமா யிருந்தநம் வெற்றியும் தொலைத்துப்
பலவழி இராசத் துரோகமே பண்ணியும்
நின்றுளான். அதனல் நீதியா யவனை
இன்றே கொடுங்கழு வேற்றிட விதித்தோம்!
அறிமின் யாவரும்; அறிமின்! அறிமின்!
சிறிதன் றெமக்கிச் செயலால் துயரம்.
இன்றுநேற் றன்றெனக் கிவனுடன் நட்பு.

நாரா: வெருவிலேன் சிறிதும் வேந்தநின் விதிக்கே!
அறியாய் ஆயின் இதுகா றுயும்
வறிதே மொழிகுதல்! வாழ்க நின்குலம்!

ஜீவ: நட்பல; மக்களே யாயினென்? நடுநிலை
அற்பமும் அகலோம். ஆதலில் இவனை
[படைத்தலைவரை நோக்கி]
நொடியினிற் கொடுபோ யிடுமின் கழுவில்!

முருகன்: அடியேம். நொடியினில் ஆற்றுதும் ஆஞ்ஞை.
குடிலரே வாரும்!

ஜீவ: மடையன் இவன் யார்?

முருகன்: கூறிய பலவும், குடிலரோ டொவ்வும்.
வேறியார் பிழைத்தனர் வேந்தமற் றின்றே?

குடில: கேட்டனை இறைவ! கெடுபயல் கொடுமொழி.
(காதில்) மூட்டினன் உட்பகை!

நாரா: முருகா! ஓ! ஓ!
[முருகனை அருகிழுத்து]

ஜீவ: மாட்டுதிர் இவனையும் வன்கழு வதனில்
[சேவகனை நோக்கி]

முருக: ஆயிற் கழுபதி னாயிரம் வேண்டும்.
[வாயிற்சேவகன் வர]

சேவ: சுந்தர முனிவர் வந்தனர் அவ்வறை.
சிந்தனை விரைவிற் செய்தற் குளதாம்.

ஜீவ: வந்ததெவ் வழியிவர்! வந்தனம் குடிலா!
நடத்துநீ அதற்குள் விதிப்படி விரைவில்.

குடில: மடத்தனத் தாலிவர் கெடுத்தெனைப் புகல்வர்;
விடுத்திட அருளாய்!

ஜீவ: விடுகிலம்.

குடில: ஆயின்,
அடுத்துநின் றிதுநீ நடத்தலே அழகாம்.

ஜீவ: (தன் சேவகனை நோக்கி)
அடைத்திடு சிறையினில், அணுகுதும் நொடியில்
[ஜீவகன் போக]

குடில: சடையா! கொடுபோய் அடையாய் சிறையில்.
[சடையன் அருகே செல்ல]

முருக: அணுகலை! விலகிநில்! அறிவோம் வழியாம்.
[சடையன் பின்னும் நெருங்க]
வேணுமோ கோணவாய் விக்கா!

சடையன்: கொக் கொக்!
[விக்கி]

முருக: கூவலை! விடியுமுன் கூவலை!

சடையன்: கொக் கொக்.

சேவகர்: சேவலோ! சேவலோ! சேவலோ! சேவலோ!

யாவரும்: [கைதட்டிச் சிரித்து]

குடில: ஏதிது? இங்ஙனம் யாவரு மெழுந்தார்!
விதியிற் செல்லலை. விணர் அபாயம்!
ஒழிகுவம் இவ்வழி! வழியிது! வா! வா!
[குடிலனும் பலதேவனும் மறைய]

சேவகரிற் சிலர்: பிடிமின் சடையனை!
[சடையனும் குடிலனும் சேவகரும் ஓடிட,
சில படைஞர் துரத்திட, சிலரார்த்திட]

மற்றைய சேவகர்: பிடிமின்! பிடிமின்!

சேவகரிற் சிலர்: குடிலனெங் குற்றான்?

குடிலன் : கொல்வரே! ஐயோ!

[நன்ருய் மூலையில் மறைய]

சேவகரிற் சிலர் : விடுகிலம் கள்வரை!

மற்றைய சேவ : பிடிமின்! பிடிமின்!

[கூக்குரல் நிரம்பிக் குழப்பமாக]

நாரா : முருகா! நிகழ்பவை சரியல சிறிதும்.

(ஒரு திண்ணை யிலேறி நின்று) அருகு நில். சீ! சீ! அன்பரே அமைதி!

[குழப்பங் குறைந்து அமைதி சிறிது பிறக்க]

முருக : அமைதி! கேண்மின்!

முதற் சேவகன் : அமைதி! அமைதி!

நாரா : நல்லுயிர்த் துணைவரே! நண்பரே! ஒருமொழி
சொல்லிட, ஆசை! சொல்லவோ!

[குழப்பந்தீர]

சேவகரிற் சிலர் : சொல்லுதி.

[சிறிது சிறிதாய்ப் படைஞர் நெருங்கிச் சூழ]

சேவகர் யாவ : சொல்லாய்! சொல்லாய்! பல்லா யிரந்தரம்!

நாரா : நல்லீர் மிகவும் அல்லா திங்ஙனம்
முன்பின் அறியா என்போ லிகள்மேல்
அன்புபா ராட்டிர். அநேக வந்தனம்!

[கைகூப்பி]

சேவகர் : அறியா ருனையார்? அறிவார் யாரும்.

[முற்றிலும் அமைதி பிறக்க]

நாரா : அறிவீர் ஆயினும் யானென் செய்துளேன்?
என்செய வல்லவன்! என்கைம் மாறு!
பாத்திர மோநும் பரிவிற் கித்தனை?

சேவகர் : காத்தனை! காத்தனை! காவற் கடவுள் நீ!

நாரா : கெட்டார்க் குலகில் நட்டார் இல்லை!
ஆயினும், வீரர்நீ ராதலின், நும்முடன்
ஈண்டொரு வேண்டுகோள் இயம்பிட ஆசை
அளிப்பிரோ அறியேன்?

[படைஞர் நெருங்கிச்சூழ]

சேவகர் : அளிப்போம் உயிரும்.

குடில: (பல ஒளித்தநிங் குணர்வனோ? ஓ! பல தேவ!
தேவன்காதில்)

நாரா: ஒருதின மேனும் பொருதுளேன் உம்முடன்
கருதுமின் என்னவ மாவமுஞ் சிறிதே.

சேவகர்: உரியதே எமக்கது. பெரிதன் றுயிரும்!
[யாவரும் கவனமாய்க் கேட்க]

குடில: (தனதுள்)
எரியிடு வானோ இல்லிடை? ஐயோ!

நாரா: அத்தனை அன்புநீர் வைத்துளிர் ஆயின்
என்மொழி தனக்குநீர் இசைமின், எனக்காத்
தீதே ஆயினும் செமித்தருள் புரிமின்!

சேவ: யாதே ஆயினும் சொல்லுக!

நாரா: சொல்லுதும்!
போர்க்களத் துற்றவை யார்க்கும் வெளிப்படை
ஊர்ப்புறத் தின்னம் உறைந்தனர் பகைவர்.
நாற்புறம் நெருப்பு; நடுமயிர்த் தூக்கின்
மதிகுலக் கொழுந்தாம் மனோன்மணி நிலைமை
இதனினும் அபாயமிங் கெய்துதற் கில்லை.
நுந்தமிழ் மொழியும் அந்தமில் புகழும்
சிந்திடும்; சிந்திடும் நுஞ்சுதந் தரமும்.
இத்தகை நிலைமையில் என்னை நும் கடமை?
மெய்த்தகை வீரரே! உத்தம நன்பரே!
எண்ணுமின் சிறிதே! என்னை நம் நிலைமை!
களிக்கவும் கூவவும் காலமிங் கிதுவோ?
வெளிக்களத் துளபகை, வின்கூக் குரலிதைக்
கேட்டிடிற் சிறிதும் கேலியென் றெண்ணார்;
கோட்டையுட் படைவெட் டேயெனக் கொள்வர்
பெரிதுநம் அபாயம்! பேணி அதற்குநீர்
உரியதோர் கௌரவம் உடையராய் நடமின்.
விடுமின் வெகுளியும் விண்வினை யாட்டும்.
படையெனப் படுவது கரையிலாக் கருங்கடல்.
அடலோ தடையதற்கு? ஆணையே அணையாம்.
உடைபடின் உலகெலாம் கெடுமொரு கணத்தில்.

கருமருந் தறையிற் சிறுபொறி தெறினும்
பெருநெருப் பன்றோ? பின்பார் தடுப்பர்.
அதனால் அன்பரே! ஆணைக் கடங்குமின்,

குடில: (மூச்சுவிட்டு) ஆ!

நாரா: இதுபோல் இல்லை யெனக்குப காரம்
இரந்தேன். அடங்குமின்! இரங்குமின் எமக்கா!

க-ஆம் சேவ: நாரா யணரே! நவின்றவை மெய்யே!
ஆரே ஆயினும் சகிப்பர் அநீதி!

நாரா: ஏதுநீர் அநீதியென் றெண்ணினிர்? நண்பரே!
ஓதிய அரசன் ஆணையை மீறி
எனதுளப் படிபோர்க் கேகிய அதற்கா
மனுமுறைப் படிநம் மன்னவன் விதித்த
தண்டனை யோவநி யாயம்? அலதியான்
உண்ட சோற்றுரிமையும் ஒருங்கே மறந்துமற்
றண்டிய அரச குலத்திற் கபாயம்
உற்றதோர் காலை உட்பகை பெருக்கிக்
குற்றமில் பாண்டிக் கற்றமிற் கேடு
பண்ணினேன் என்னப் பலதலை முறையோர்
எண்ணிடும் பெரும்பழிக் கென்பெயர் அதனை
ஆளாக் கிடநீர் வாளா முயலலோ
யாதே அநீதி? ஓதுமின். அதனால்
என்புகழ் விரும்புவி ராயின், நண்பரே!
ஏகுமின் அவரவர் இடத்திற் கொருங்கே!

க-ஆம் சேவ: எங்கினி ஏகுவம் இங்குனை இழந்தே?

உ-ஆம் சேவ: உன்கருத் திருப்பிற் குரியதோ இவ்விதி?

நாரா: கருத்தெலாம் காண்போன் கடவுள், விரித்த
கருமமே உலகம் காணற் குரிய.
ஒருவனோ அலதிவ் வுலகமோ பெரிது?
கருதுமின் நன்றாய். காக்குமின் அரசனை.
செல்லுமின். நில்லீர்! செல்லிலென் றனக்கு
நல்லீர் மிகவும்!

சேவகர்: நாரா யணரே

உமக்காங் கொடிய கழுமரம் எமக்கும்
நன்றே என்றே நின்றேம் அன்றிக்
கெடுநினைவோன் றெண்ணிலம். கொடுமதற் கருமதி

நாரா: தென்னவன் சிறைசெயச் செப்பினன்; அதனால்
இன்னம் பிழைப்பேன் இக்கழு, உமக்கியான்
சொன்னவா றடங்கித் துன்னினை எனில்
இல்லையேல் எனக்கினி எய்துவ தறியேன்.
வல்லைநீர்! செல்லுமின்! செல்லுமின்! வந்தனம்.
செல்லுமின்! சத்தியம் செயிக்கும்! செயிக்கும்!
நல்லது! நல்லது!

[படைஞர் விடைபெற்றுப் போக]

முருக: நாரா யணரே!
நுஞ்சொல் என்சிரம் ஆயினும் நுஞ்செயல்
சரியோ என்றெனக் குறுவதோர் ஐயம்.
சத்தியம் செயிக்கும் என்றீர். எத்திறம்?
குடிலன் தனக்கநு கூலமாய் அனைத்தும்
முடிவது கண்டும் மொழிந்தீர் முறைமை!

நாரா: பொறு! பொறு! முடிவில் அறிகுவை.

முருக: முடியும்
தருணம் யாதோ? மரணமோ என்றால்,
மரணம் அன்றது; மறுபிறப் பென்பீர்.
யாதோ உண்மை?

நாரா: (இருவரும் நடந்து) ஓதுவம். வாவா!
நன்றிது தீதிது என்றிரு பான்மையாய்த்
தோற்றுதல் துணிபே. அதனால்
தேற்றம் இதேயெனச் செய்கதல் வினையே. (1)

[நாராயணனும் முருகனும் சிறைச்சாலைக்குப் போக]

பலதே: என்னையுன் பிதி? எழுவெழு இவர்க்குன்
பொன்னே பொருட்டு?

[பலதேவனுங் குடிலனும் வெளியே வந்து]

குடில: போ! போ! மடையா
உன்னினம். சூதே.

பலதே: உன்குணம். நாரணன்
சொன்னது கேட்டிலை?

குடில: சொல்லிற் கென்குறை?
முன்னினும் பன்னிரு பங்கவன் துட்டன்,
[சேவகன் போக]

சேவகன்: மன்னவன் அழைத்தான் உன்னைமற் றப்புறம்.

குடில: வந்தனம் ஈதோ! சுந்தரர் போயினர்?

சேவ: போயினர்.

குடில: ஓ! ஓ! போ இதோ வந்தோம்.
[சேவகன் வர]

(தனதுள்) ஆயின தென்னையோ அறிகிலம். ஆயினும்
சேயினும் எளியேன் திரும்பவும் நொடியே. (2)
[குடிலனும் பலதேவனும் போக]

நான்காம் அங்கம்: நான்காம் களம்
முற்றிற்று.

ஐந்தாம் களம்

இடம் : அரண்மனையில் ஒருசார்.
காலம் : மாலை.

[ஜீவகனும் சுந்தரமுனிவரும் மந்திராலோசனை]

(நேரிசை ஆசிரியப்பா)

சுந்தரர்:
வளையும்வேய் நிமிரும்; வளையா நெடுமரம்
கிளையுடன் கெடுமே கிளர்காற் றதனில்!

ஜீவகன்:
முளையுமோர் மரமோ? முனிவ! புல்லினம்!
களைகுவர், களைகிலர் காழ்பெறும் தருக்கள்.
சேணுயர் தேக்கு திசையெறி சூறையில்
ஆணிவே ருடனெழுந் ததிர்ந்தசைந் திறினும்
பேணுவர் அதனைப் பெரியோர்! யாரே
காணுவர் காழறு நாளாமில் நாணலை?
ஒருயிர்ப் பேனும் உண்டேல் அடிகாள்!
போரிடைப் போக்குவன்; புகழெனக் கதுவே!

சுந்தரர்:
பொறு பொறு! ஜீவக! வெறுமொழி புகலேல்!
அரியது செய்வதே ஆண்மையும் புகழும்!
அரிதுயிர் தரித்தலோ மரித்தலோ அறைதி.
வேட்டையா ரோட்டிட வெருவுதீக் குருவி*
நீட்டிய தன்சிர நீள்மணற் புதைத்துத்
தனதுகண் காணாத் தன்மையர் பிறரும்
தனதுடல் காணார் எனநினை வதுபோல்
என்னையிம் மயக்க மன்னவ! உனக்கும்!
சிறுபசி தாங்காச் சிறுமையர் பற்பலர்;
அறவழி இதுவென அறியாக் கயவர்;
பிறர்பொருள் வெளவியும் பிறவுயிர் கவர்ந்தும்
அலையும் தீமையர் அநேகர், அகப்படின்
மலைவற மரணமும் வெருவார் மான,

* Ostrich.

கலக்கமொன் றின்றிக் கழுவே றிடுநல்
புலப்படக் கண்டுளாய் இலக்கமின் முறையே.
துரந்திடும் துயர்க்கணம் வருந்திடும் காலை
மரித்தலோ அவையெலாம் சகித்தலோ தகுதி ?
தன்னுயிர் ஈவர் தக்கோர் சார்ந்த
மன்னுயிர் காத்திடு மார்க்கமற் றஃதேல்
வார்கடல் முகட்டில், மாதிரி வழிஞர்
ஆர்கலன், அலையெறி புயல்கால் ஆதியாற்
சேர்திசை திரிந்து தியங்குமேல், மீகான்
களமும் காலமும் கருதித் தனக்குறு
தளர்வுபா ராட்டுதல் தவிர்த்து, சாய்ந்து,மற்
றெதிருறு காற்றிற் கிசைவுற வதிந்து,
தன்றிசை செல்லத் தக்ககால் வரும்வரை
சென்றொரு கரைசேர்ந் தொன்றுவ னல்லால்,
உவப்புறு நிதிகெட உழையுளார் களும்பரி
தவித்திட மரக்கலம் துரப்பனோ சாற்றாய்.
தக்கோர் செயலெலாம் தமக்கா அலவே !
முக்கியம் புகழோ தக்கவன் கடமையோ?
அதனால் ஜீவக ! அகற்றந் நினைப்பு.
மதிகுலம் வந்த மதிவலோர் பலரும்
செலாவழி நின்றிமில் செலுத்தினோ; தீங்காய்
உலாவிய சுழல்காற் றோடொரு சுழியிடைப்
பட்டனோ ; நம்பிய பாய்மரம் பழுது
விட்டிடிக் கோட்டையாம் வெளிக்கட லோட்டம்.
மண்டிய பெருங்காற் றடங்கும் வரையும்
அண்டையில் உளதோர் கைவழி அதனில்
ஒண்டிநீ ஒதுங்கி உன்தொல் நகராம்
துவாத சாந்தத் துறைபோய்
நிவாதமா நிலைபெற லேநெறி முறையே ! (1)

ஜீவ : என்குல முனிவ ! இயம்பிய மாற்றம்
நன்கே. உன்றன் நயப்பிற் கென்செய !
கழுமரக் கதையதைக் கண்டேன் இன்றே.
பழுதுபாய் மரமெனப் பகர்ந்ததும் உண்மை !
வழுவெனக் கண்டது மாற்றினன். அதேக

வந்தனம் வந்தனம்! ஆயினும் ஒருசொற்
சிந்தையிற் சேர்த்தெனைத் தெருட்டிட வேண்டும்.
வேற்றுமை உருவாய் விளங்கிய காலம்
காற்றினும் கடிய கடுநடை உடைய
தன்றோ? அதிலகப் பட்டார் முந்திச்
சென்றோ வின்றோர்! சிறிதுபிந் திந்து
நிற்பரேற் பெரிதும் பிற்பட் டொழிவர்.
ஆதலால் அடிகாள் பூதலத் துயர்ந்த
மேதையின் மிருந்த மாவிடர்க் கரசராய்
வந்தவர், தந்தமக் குற்ற மறிந்திறம்
எட்டிய மட்டும் குற்றம் விடுத்துக்
கால கதிக்கநு கூலமாய் நவின
சீர்பல திருத்தி ஓரியல் புதிதா
நாட்டித் தமது நாட்டுளோர் சுகம்பா
ராட்டில ரேலவர் ஆண்டநாட் கெல்லை
காட்டுமோ கொடிய காலக் கரப்பே!
இவ்வழி தனக்கெனத் துணிந்ததோர் இயல்பே
அவ்வர சனுக்காம் யாக்கை. அஃதின்
அழிவே யவன தொழிவாம். அதனால்
எல்லாம் அறிந்த இறைவ! இவ் விடத்தியான்
பல்லா யிரநாட் பரிவுடன் உழைத்தே
அமைத்தவிப் புரியும் சமைத்தவிவ் வரணும்
நன்றே ஆயினும் ஆகுக: அன்றிப்
பொன்றினும் பொன்றுக: பொறித்தவென் அரசியல்
மற்றவை தம்மொடு மாண்டிடும்: மாண்டபின்
அற்றதோர் கவந்தம் அமர்க்களத் தாடும்
பெற்றிபோல் மூச்செறி பிணமா யானும்
நடித்தலோ உன்திரு வடித்தா மரையைப்
பிடித்ததற் கழகாம் பேசாய் விடுத்தே!

சுந்தர: எடுத்ததன் முயற்சி யாதே யாகுக!
முடித்திடு முன்ன ரடுத்ததன் மதியால்
தீங்கெனத் தேர்ந்திடி னுங்கவற் றுட்பின்
வாங்கலே யார்க்கும் ஆம்பணி யென்ப.
இமைகை விடற்கு வேளைசிந் திப்போர்

செய்மை உளிமனை திரும்பார் ஒப்பர்.
ஆதலால் ஜீவக! நிதென வருதற்
கியாதோர் ஐயமும் இலைநீ தொடரியல்
எனவின் றெய்திய வற்றால் உனது
மனத்திடை மயக்கற மதிந்தனை ஆயின்,
ஒழுங்கா யிவையெலாம் ஒழித்தியான் குறித்த
மருங்கே அணைந்து வாழலே கருமம்.
வேறிலை தேறு மார்க்கம்
கூறுதி அதனால் உன்மனக் கோளே. (2)

ஜீவ: ஐய!யான் உரைப்பதென்? அடுத்தவை இவையெலாம்
கைவிடில் என்னுயிர் கழியும். அதனில்
இன்றியான் பட்ட இகழ்ச்சி முழுதும்
பொன்றிடப் பொருதுபின் பொன்றுதல் அன்றே
சிறப்பது செப்புதி! சிறியேன் ஒருசொல்
மறுத்தது பொறுத்தருள் மாதவக் கொழுந்தே!

சுந்தர: சங்கரா! சற்றே தாதான் மியபலம்!
வெங்கரா பிடித்தவை விடினும் விடுமே!
நல்லது ஜீவக! நன்றெனும் புல்லிய
அற்பமாம் சிற்றுயிர் அரியதன் உடலையும்
பிறர்களைக் கிரையென விந்தவை பேணல்
கண்டும் புகழிற் கொண்டனை பிராந்தி.
இவ்வுயிர் இயலுல கியற்கையென் றெண்ணினேன்.
செவ்விதின் நின்னிலை தேர்ந்தபின் ஐயம்
வருவது. அதனால், மதிகுலம் வந்த
ஒருமலர் நின்னுழை உள்ளது; தமிழர்
ஆவோர் யார்க்கும் அஃதுரித் தாம்; நீ
காவா யாகிற் காப்பதெம் கடனே.

ஜீவ: இதுபோ லில்லை அடிகள் செய்யும்
உதவி. தமியேற் குளதுயர் இதுவே;
கண்மணி தனையெனிப் புண்படும் உள்ளம்
அருளுதி காக்கும் உபாயம்,
இருணிறை இடுக்கணுக் கியைந்திடு மருந்தே.

சுந்தர: நல்லது! கேட்டி! சொல்லுதும், உரியநீர்

விட்டான் முதலையும், விரும்பிய நிலைகப்
பட்டாற் களிறும் பலபல ஆகி
விடுமென அறிந்த கெடுவினை யாளர்
தொடர்பிறல், அவரிடு தூண்டிலிற் சிக்கி
இடமது பெயர்ந்தாழி, எடுத்தவெவ் விலைக்கும்
கேடுமுன் கருதிக் கோடலே முறையெனும்,
அறிவோர் மொழியயர்ந் திறுமாப் பகத்துட்
கொண்டுநீ நின்றதைக் கண்டிக் கடிபுரி
தோட்டென் உறையுள் மட்டுமோர் சுருங்கை
அதிரக சியமாய் அமைத்துளேன். அவ்வழி,
சதமென நம்புமிச் சாலி புரமும்,
அதன்புறம் ஊன்றிய அடர்புலப் படையும்,
அறிந்திடா வகையவை கடந்துசென் றுன்னை
மறந்திடா மாபதி அடைந்திடச் செயுமே.

ஜீவ: தேவரீர் செய்யும் திருவரு ளுக்குமா
றுவதும் உளதோ? ஆ! ஆ! அடிகாள்!
வழுதியர் பலர்பலர் வழிவழி காக்கும்
முழுமதித் தொழுகுலத் தெய்வநீ போலும்.
பழுதற நீயிவண் பகர்ந்ததோர் வழியிது
திருத்திட எடுத்த வருத்தமெத் தகைத்தே!

சுந்த: நல்லது! முகமன் நவின்றனை. நிற்க
சொல்லிய சுருங்கை உனக்குமிவ் விடுக்கணில்
உதவுமோ அன்றோ உரைக்குதி விரைந்தே.

ஜீவ: அடியேன் ஆசை திருவடி அறியும்.
கடிபுரி விடிலுயிர் நொடியுமிங் கிராது.
பாண்டியர் குலமெனும் பாற்கடல் உதித்த
காண்டகு கன்னியை இவ்வழி உன்திரு
உளப்படி கொடுபோய் அளித்தரு ளுதியேல்,
இந்துவின் குலமெனும் முந்திய பெயர்போய்ச்
சுந்தரன் குலமெனச் சந்ததம் வழங்கும்.
தீங்கா திதுகா றென்னுளம் நிறைந்த
தாங்காப் பெருஞ்சுமை தவிர்தலாம், யானும்
ஒருமனம் உடையனாய் மறலியும் வெருவ

ஆற்றுவன் அரும்போர். அதனிடை யமபுரம்
ஏற்றுவன் எங்குலம் தூற்றிய சேரனை;
வென்றிடின் மீளுவன் அன்றெனிற் பண்டே
அனையிலாத் தனையனுக் கம்மையும் அப்பனும்
தயாநிதி! நின்றிருச் சரணமே என்ன
வியாகுல மறவே விடுவனென் உயிரே.

சுந்தர: விடுகிலை, ஆகினும் வெளிக்கடல் ஓட்டம்.
நடுநிசி நாமினி வருகுதும். கொடிய
கடிபுரிக் கனலிடைக் காய்ந்திடும் உன்றன்
சிறுகொடி மறுவிடம் பெயர்த்துதும் சிறந்த
அந்தமில் செழியரைத் தந்திட உரித்தே.
[எழுந்து]

ஜீவ: கட்டளைப் படியே? கட்டிய கற்படை
கண்டிட ஆசையொன் றுண்டடி யேற்கு

சுந்தர: காட்டுதும் இன்றிரா கற்படை சேர்முறை.
ஒருவர் ஒருபொருள் அறியில் இரகசியம்;
இருவர் அறிந்திடிற் பரசியம் என்ப.
கைக்கெட் டியதுதன் வாய்க்கெட் டுதற்குள்
வந்துறும் அந்தமில் பிரதிபந் தங்களே.
[முனிவர் போக]

ஜீவ: (தனிமொழி) வந்தனம். வந்தனம். அடிகாள்! வந்தனம்.
என்னே! என்னே! இந்நாள் இயன்றவை!
கொன்னே கழிந்தன் றோரிமைக் கொட்டும்.
குருநாள் மழையொடு மிகுகாற் றெறிந்த
பரவையின் பாடெலாம் பட்டதென் உளமே.
இரவினில் வருபவை எவையெலாம் கொல்லோ?
தாயே! தாயே! சார்வன சற்றும்
ஆயேன், எங்ஙனம் பிரிந்துயிர் ஆற்றுவேன்?
விடுக்குமா றெவனென் விளக்கே? உன்னைக்
கெடுக்குமா றெவனிக் கிளர்போ ரிடை? அது
தடுக்குமா றெவனினி? சமழ்ப்பற் றுடலம்
பொறுக்குமா றெவனிப்! பொல்லா வல்லுயிர்
துறக்குமா றெவனுனைத் துணையற விடுத்தே?

அந்தோ! அந்தோ! என்றன் தலைவிதி!
நாற்புற நெருப்புறி னெளியும் தனது
வாற்புற நஞ்சால் மாய்ந்திடும் என்ப.
நரனலன்; நரேந்திரன்; நானது போற்சுதந்
தரனலன் எனினென் தலைவிதி கொடிதே!
பிரிவெனு மென்னுளம் கருதிடு முனமே
பிரையுறு பாலென உறைவதென் உதிரம்.
நாளை துன்முகம் காணுவ தெவ்விதம்?
நடுநிசிப் பொழுது தொடுகற் படைவழி
முனிவரன் பிறகுபோந் தனிவழி விடுத்திவண்
தங்குவன் யானும்! தங்குவை நீயும்!
இங்கதற் கிசையேன் இறக்கினும் நன்றே!
[மௌனம்]
கற்படை இதுதான் எப்புறத் ததுவோ!
உரைத்திலர் முனிவர் ஒளித்தனர். இஃதும்
உளதோ? இலதோ? உணர்பவர் யாவர்?
முனமே முனிவன் மொழிமனம் அன்றே
இளையவிப் போர்க்கெலாம் ஏதுவாய் நின்றது!
கூடிய தன்றது! ஏ! ஏ! குடிலனை
[சேவகன் வர]
ஓடியிங் கழையாய்!
[சேவகன் போக]
உண்மையெப் படியென
நாடுமுன் வாடி நலிதல் என்பயன்?
நம்புதல் எல்லாம் துன்பமே தருவது.
நம்பினும் நாரா யணனை. அதற்கா
வன்பே செய்தான் மாபா தகனவன்.
நட்பே நமக்கிங் குட்பகை யானது!
முனிவரோ முதுநகர் விடுத்தநாள் முதலா
களவழி இதுமுனி கட்டற் பாற்றே
மனத்திடைக் களங்கம் வைத்துளர். அஃதவர்
விளம்பிய மொழியே விளக்கிடும். நன்றாய்
ஆரா யாமுனம் அனுப்புதல் தவறே.
[குடிலன் வர]
வாராய் குடில! மந்திரி உனக்கு

நேர்தான் ஆரே! நிகழ்ந்தவை அறிவைகொல்?
சுந்தர முனிவரோர் சுருங்கைதொட் டுளராம்;
நந்தமை அழைத்தனர் ஒளித்திட அவ்வழி;
மறுத்திட, மனோன்மணி யேனுமங் கனுப்பென
ஒறுத்தவர் வேண்டினர் உரியநம் குலமுனி
ஆதலின் ஆமென இசைந்தோம்; அவ்வழி
யாதென வினையதற் கோதா தேகினர்;
பாதிரா வருவராம். பகர்ந்தவிக் கற்படை
மெய்யோ பொய்யோ? மெய்யினில் எவ்வயின்
உளதென உணர்தியோ? ஒழுங்குகொல், நமது
இளவர சியையங் கனுப்புதல்?

குடில: இறைவ!
முன்னர்நாம் ஒருநாள் இந்நகர் காண
அழைத்தோம்! அந்நாள் யாதோ பூசை
இழைத்திட வோரறை இரந்தனர்

ஜீவ: ஆம்! ஆம்!

குடில: அவ்வறை எவ்வறை?

ஜீவ: அதுயான் அறிவேன்.
செவ்வே வடக்குத் தேம்பொழிற் கிப்புறம்.
மறுமுறி மணவறை,

குடில: அறிவிது வெகுநலம்;
(தனதுள் ஜீவகனை நோக்கி)
உறுவதங் கென்னென உணர்ந்தனை?

ஜீவ: உணர்ந்திலேன்.

குடில: அதுவே கற்படை. அறிந்துளேன். பழுது
செயத்தகு வினையல ஆதலின் திருவுளம்
உணர்த்திலேன் முனிவர் ஓதிய திதுவே.
இவ்வரன் முற்றும் இயற்றிய நமக்குச்
செவ்வினில் இதுவோ செய்தற் கரியது?
சுந்தரர் நமையெலாம் புந்தியற் றவரென
நொந்துதாம் உழைத்ததை நோக்கிடில் நகைப்பே!

ஜீவ: நந்தொழில் பழிந்தலே சிந்தையெப் பொழுதும்:
பண்டே கண்டுளோம். பாங்கோ அனுப்புதல்?

குடில: பழுதல; பாலனும் குழவிகை யிருப்ப

மல்லையுந் தஞ்செய வல்லவர் யாரே?
அனையினை ஒருபாற் சேமமாய் அனுப்பிய
பினையிலை கவலையும் பீதியும் பிறவும்.
உட்பகை வெளிப்பகை எப்பகை ஆயினென்?
கவலையொன் றிலதேல் எவருனை வெல்வர்?
ஆதலான் முனிவர் ஓதிய படியே
அனுப்புதல் அவசியம் குணப்பிர தம்மே.
ஆனால் அடியார் அரசகன் னியர்கள்,
நேற்றர் தெரியல் சூடுமுன் இரவில்
தனிவழி யடியார்பால் தங்குதல்...?

ஜீவ: தவறே.

குடில: முனிவரே ஆயினும், அடியரே. உலகம்
பைத்தியம்; பழித்திடும்; சத்தியம் உணராது.

ஜீவ: மெய்ம்மை. வதுவைமுன் விடுவன் றனுப்புதல்

குடில: அனுப்பினும் அதனால் ஆம்பயன் என்னே?
மனத்துள கவலை மாறுமோ? கவலை
முன்னிலும் பன்னிரு பங்காய் முதிரும்.

ஜீவ: அதுவே சரி! சரி! ஐயமொன் றில்லை.
வதுவைக் கிதுவோ தருணம்?

குடில: மன்னவ!
அடியேன் அறிவிப் பதுவுமிங் கதுவே!
கொடிதே நம்நிலை. குற்றமெப் புறமும்.
அடிகள் அறைந்தவா றனுப்பா திருக்கில்
உட்பகைச் சதியால் ஒருகால் வெற்றி
தப்பிடின் நங்குலம் எப்படி ஆமோ?
வைப்பிடம் எங்குமின்? எய்ப்பிடம் எங்கே?
இருமா முனிவரோ கருநா உடையர்.
நம்பிய தலைவரோ வம்பினர்; துரோகர்.
இத்தனை பொழுதுமங் கெத்தனை கூச்சல்!
எத்தனை கூட்டம்! எத்தனை குழப்பம்!
முருகனும் நாரா யணனும் மொழிந்த
அருவருப் புரையிங் கறையேன். அவர்தாம்
சேவகர் குழாங்களைத் திரட்டி யென்மேல்

ஏவினர்; அதற்கவர் இசைந்திலர். பிழைத்தேன்!
வேண்டினர் பின்னையும்; தூண்டினர் உன்னெதிர்

ஜீவ : காண்டும்! காண்டும்! கடுஞ்சிறை சேர்த்தனை.

குடில : சேரா திவரைமற் றியாரே விடுவர்.
ஆயினும் தலைவர் நிலைமை இஃதே
வெல்லுவ தெலாநம் வீரமே அல்லால்
இல்லை அவர்துணை என்பது தெளிவே.
அல்லொடு பகல்போல் அல்லல்செய் கவலையும்
வீரமும் எங்ஙனம் சேருமோ அறியேன்.
கவலைநீர் உபாயம் கருதில், நுவல்தரு
கல்லறை நன்றே கடிமண முடியின்...
கடிமண மதற்கோ, முடிபுனை மன்னர்
வேண்டுமென் றன்றோ ஆண்டகை நினைத்தனை?
வருடக் கணக்காய் வேண்டுமற் றதற்கே.
ஒருநலம் காணின் ஒருநலம் காணோம்.
ஏற்ற குணமெலாம் இருப்பினும் இதுபோல்
மாற்றல னாய்விடின் மனோன்மணி யென்படும்?
பிரிதலே அரிதாம் பெற்றியீர்! பிரிந்தபின்
பொருதலே ஆய்விடிற் பொறுப்பளோ தனியள்!
பூருவ புண்ணியம் அன்றோ மன்றல்
நேருமுன் இங்ஙனம் நெறியிலான் துர்க்குணம்
வெளியா யினதும்? எளிதோ இறைவ!
வேந்தராப் பிறந்தோர்க் குனைப்போற் சாந்தமும்
பிறர்துயர் பேணும் பெருமையும் ஒழியா
அறம்நிறை அகமும் அறிவும் அமைதல்;
பாண்டமேல் மாற்றலாம் கொண்டபின்! என்செய!
ஆண்டுகள் பழகியும் அறிகிலம் சிலரை.
ஐயோ! இனிநாம் அந்நிய ராயின்
நன்றாய் உசாவியே நடத்துதல் வேண்டும்.
அன்றேற் பெரும்பிழை!

ஜீவ : ஆ! ஆ! சரியே!

குடில : ஆதலின், இறைவ! ஆய்விடத் தெங்கும்
ஏதமே தோன்றுவ தென்னே இந்நிலை?

ஜீவ: அரசல எனினமக் கார்பிழை என்னே?

குடில: திருவுளப் பிரியம். தீங்கென் அதனில்?
உன்றன் குலத்திற் கூன்றுகோல் போன்று
முடிமன் னவர்பலர் அடிதொழ நினது
தொழுமை பூண்டுநல் ஊழியம் இயற்றும்
வீரமும் மேதையும் தீரமும் திறமும்
குலமும் நலமும் குணமும் கொள்கையும்
நிரம்பிய நெஞ்சுடைப் பரம்பரை யாளராய்
நிற்பவர் தமக்குமற் றொப்பெவ் வரசர்?
அற்பமோ ஐய! நின் அடிச்சே வகமே?

ஜீவ: என்னே மனோன்மணிக் கிச்சை? அறிகிலேன்!

குடில: மன்னே மற்றது வெளிப்படை அன்றே?
அன்னவட் கிச்சை உன்னுடன் யாண்டும்
இருப்பதே என்பதற் கென்தடை? அதற்கு
விருத்தமாய் நீகொள் கருத்தினைச் சிந்தையிற்
பேணியே கலுழுநள் போலும் பிறர்பால்
நாணியிங் கோதாள். வாணியேல் நவில்வள்.

ஜீவ: உத்தமம்! உத்தமம்! மெத்தவும் உத்தமம்!
பலதேவன்தன் நலமவள் கண்டுளாள்?

குடில: பலகால் கண்டுளாள். கண்டுளான் இவனும்
ஆர்வமோ டஃதோ மார்பிடைப் பட்டபுண்
'மனோன்மணி மனோன்மணி', எனுமந் திரத்தால்
ஆற்றுவான் போலவே அவ்வறை யிருந்தவன்
சாற்றலும் சற்றுமுன் னூடையாய்க் கேட்டேன்.
ஆயினும், அரச! பேயுல கென்குணம்
அறியா ததனால் வறிதே பலவும்
சாற்றும். தன்னயம் கருதல்போற் பிறர்க்குத்
தோற்றும். அதனால் தூற்றுவர். அதுவும்
மாற்றலே மந்திரத் தலைவர்தம் மாட்சி.
ஆதலின், இறைவ! அவைக்களத் தநேக...

ஜீவ: ஓதலை ஓதலை உனதன் றத்தொழில்.
தனையைக் குரியது தந்தையே உணருவன்.

இனையதே என்மகட் கிந்நிலைக் கேற்பதும்.
அரசனா யாயினும் சரியிம் முடிபு.
மிகைதெரிந் தவற்றுள் மிக்கது கொளலெனும்
தகைமையில் தகுவதும் இதுவே. அதனால்,
குடிலா ! மறுக்கலை.

குடில : அடியேன். அடியேன்.

ஜீவ : இந்நிசி இரண்டாஞ் சாமம் அன்றோ
முன்னநாம் வைத்த முகூர்த்தம் ?

குடில : ஆம் ! ஆம் !

ஜீவ : செவ்விது செவ்விது ! தெய்வசம் மதமே !
ஆவா ! எவ்வள வாறின தென்னுளம் !
ஓவா என்றுயர்க் குறுமருந் திதுவே !
பிரிந்திடல் ஒன்றே பெருந்துயர்.

குடில : பிரிந்துநீர்
இருந்திடல் எல்லாம் ஒருநாள். அதற்குள்
வெல்லுதும், காண்டி ! மீட்குதும் உடனே.

ஜீவ : நல்லது ! வேறிலை நமக்காம் மார்க்கம்.
ஒருமொழி மனோன்மணி உடன்கேட் டி·ஃதோ
வருகுதும் அதற்குள் வதுவைக்
கமைக்குதி அவ்வறை அமைச்ச ரேறே ! (4)

[ஜீவகன் போக]

குடில : தப்பினன் நாரணன். சாற்றற் கிடமிலை.
(தனிமொழி) இப்படி நேருமென் றெண்ணினர் யாவர்?
முனிவரன் வந்ததும், நனிநலம் நமக்கே !
மறுப்பளோ மனோன்மணி? சீசீ மனதுள்
வெறுப்புள ளேனும் விடுத்தவ ளொன்றும்
மொழியாள். சம்மதக் குறியே மௌனம்.
அழுவாள் ; அதுவும் பிரிவாற் றாமையே
ஆய்விடும், அரச னய்விலா உளத்துள்.
நடுநிசி வருமுன் கடிமணம் இவண்நாம்
முடிக்கின் முனிவன் தடுப்பதும் எவ்விதம்?
ஏய்த்திட எண்ணினன் என்னையும்! பேய்ப்பயல்!

வாய்த்தநின் கெனக்கே மற்றவள் கற்படை.
[மௌனம்]
ஏகம் சென்றவா றுரைத்தோம். உறுதி
யாகமற் றதனிலை அறிவதார்? உளதல
துரைப்பரோ முனிவர்? உளதெனின் உரைத்தவா
றிருத்தலே இயல்பாம். எதற்குமீ துதவும்.
[மௌனம்]
சென்றுகண் டிடுவம். திறவுகோல் இரண்டு
செய்தத தெற்கெலாம் உய்வகை ஆனதே!
எத்தனை திரவியம் எடுத்துளேம்! கொடுத்துளேம்!
அத்தனை கொடுத்தும் அறிவிலாப் படைஞர்,
நன்றியில் நாய்கள் இன்றஃ தொன்றும்
உன்று தெவ்வையே ஓட்டிடத் துணிந்தன.
என்றோ நாரணன் தனக்குமிங் கிவர்க்கும்?
எளியனென் றெண்ணினேன். வழிபல தடுத்தான்
கெடுபயல் பாக்கியம், கடிமணம் இங்ஙனம்
நடுவழி வந்ததும்! விடுகிலம்.
கொடியனை இனிமேல் விடுகிலம் வறிதே. (5)

நான்காம் அங்கம் : ஐந்தாம் களம்
முற்றிற்று.

(கலித்துறை)

அரிதா நினைத்ததன் அங்கங்கள் யாவும் அழிந்தபின்னும்
புரியே பொருளெனப் போற்றிய ஜீவகன் புந்தியென்னே!
பிரியாத சார்பு பெயர்ந்து விராகம் பிறந்திடினும்
தெரியாது தன்னிலை ஆணவம் செய்யும் திறஞ்சிறிதே!

நான்காம் அங்கம்
முற்றிற்று.

ஆசிரியப்பா	12-க்கு	அடி	1297
வஞ்சிப்பா	1-க்கு	,,	14
கலித்தாழிசை	3-க்கு	,,	12
கலித்துறை	1-க்கு	,,	4
ஆக அங்கம் 1-க்குப் பா 17-க்கு		,,	1327

ஐந்தாம் அங்கம்

முதற் களம்

இடம் : கோட்டைக்கும் வஞ்சியர் பாசறைக்கும் நடுவிலுள்ள வெளி.

காலம் : யாமம்.

[குடிலன் தனியே நடக்க.]

(நேரிசை ஆசிரியப்பா)

குடிலன் :
(தனிமொழி)
திருமணம் கெடினும் நீங்கிலே சுங்கிலி
இருசரம் இன்றி எப்போ ரிடையும்
ஏகார் மறியோர். இதில்வரு கேடென்?
ஆகா வழியும் அன்றிது. சேரனை
அணைந்தவன் மனக்கோள் உணர்ந்ததன் பின்னர்
சுருங்கையின் தன்மை சொல்லுதும் ஒருங்கே
இசைவனேற் காட்டுதும். இன்றேல் மீள்குதும்.
பசையிலா மனத்தன்! பணிதலை விரும்புவன்!
பாண்டி நா டாள்வோ படையெடுத் தானிவன்.
தூண்டிடு சினத்தன்; தொழுநிடின் மீள்வன்.
வேண்டிய நீரும் விழைந்ததோர் தாரும்
பாண்டில் பாண்டிலா யாண்டுகள் தோறும்
அனுப்புதும். குறைவென் அதனில்? இதுவே
மனக்குறை நீக்கு மார்க்கம்—வதுவை
போயினென்? ஆயினென்? பேயன் நம்மகன்
எடுத்தெறிந் திடுவனிப் போதே நம்மொழி.
அடுத்தநம் படைஞரோ பகைவர்; அவர்தமைக்
கெடுத்தநா ரணற்கே கேளொடு கிளைஞர்,
ஆதலில் இஃதே தீதறு முறுதி..,
என்னை நம் ஊகம்! என்னை நம் ஊக்கம்!
முன்னர்யாம் அறியா இன்னநற் சுருங்கையில்
துன்னிருள் வழிதனி தொடர்ந்திவண் சேர்ந்தோம்.
ஊக்கமே பாக்கியம். உணர்விலார் வேறு
பாக்கியம் ஊழெனப் பகர்வதெல் லாம்பாழ்.
சாக்கியம் வேறென்? சாத்தியா சாத்தியம்

அறிகுறி பலவால் ஆய்ந்தறிந் தாற்றும்
திறமுள ஊகமே யோகம்; அன்றி
(நட்சத்திரங்களை நோக்கி) வான்கா டதனில் வறிதே சுழலும்
மீன்காள்! வேறும் உளதோ விளம்பீர்?
மதியிலா மாக்கள் விதியென நும்மேற்
சுமத்தும் சுமையும் தாற்றும் சும்மையும்
உமக்கிடு பெயரும் உருவமும் தொழிலும்
அமைக்கும் குணமும் அதில்வரு வாதமும்,
யுக்தியும் ஊகமும் பக்தியும் பகைமையும்,
ஒன்றையும் நீவிர் உணரீர்! அஃதென்?
வென்றவர் பாசறை விளங்குவ தஃதோ!
இங்குமற் றுலாவுவன் யாவன்? பொங்குகால்
வருந்தொறும் சிலமொழி வருவ. அஃதோ
திரும்பினன்! ஒதுங்குவம். தெரிந்துமேற் செல்குவம்
[புருடோத்தமன் தனியா யுலாவிவர]

(குறள்வெண் செந்துறை)

புரு: (பாட)
உன்னினைவில் ஒருபோதும் ஓய்வின்றிக் கலந்திருந்தும்
 உயிரே என்றன்
கண்ணிணைகள் ஒருபோதும் கண்டிலவே நின்னுருவம்
 காட்டாய் காட்டாய். (1)
அவத்தைபல அடையுமனம் அனவரதம் புசித்திடினும்
 அமிர்தே என்றன்
செவித்துணைகள் அறிந்திலவே தித்திக்கும் நின்னாமம்
 செப்பாய் செப்பாய். (2)
பொறிகளறி யாதுள்ளே புகும்பொருள்கள் இலையென்பர்
 பொருளே உன்னை
அறியவவா வியகரணம் அலமாக்க அகத்திருந்தாய்
 அச்சோ அச்சோ. (3)
[புருடோத்தமன் சற்றே அகல]

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

குடில: மனிதன் அலனிவன்! புனிதகந் தருவன்!
(தனிமொழி) தேவரும் உளரோ? யாதோ? அறியேன்.

இருளெலாம் ஒளிவிட் டிலங்கிய உருவம்
மருள்தரு மதனன் வடிவே! மதனற்கு
உருவிலை என்பர். ஓசையும் உருவும்!
பாடிய பாட்டின் பயனென்! அஃதோ!
நாடி அறிகுதும். நன்று நன்று.

[புருடோத்தமன் திரும்பி வர]

(குறள்வெண் செந்துறை - தொடர்ச்சி)

புரு: (பாட)

புலனுறக் காண்பதுவே பொருளென்னும் போதமிலாப் புன்மை யோர்க்கிங்
குலவாதென் உளநிறையும் உளதுண்மை உணர்த்தும்வகை உண்டே உண்டே. (4)

பெத்தமனக் கற்பிதமே பிறங்குநினை வெனப்பிதற்றும் பேதை யோர்க்கோர்
யத்தனமற் றிருக்கவென்னுள் எழுமுனது நிலையுரைப்ப தென்னே யென்னே. (5)

தேர்விடத்தென் உள்ள நிறை தெள்ளமுதே உன்னிலைமை தேரா திங்ஙன்
ஊர்விடுத்தும் போர்தொடுத்தும் உனையகல நினைத்ததுமென் ஊழே ஊழே. (6)

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

குடில: சேரனே யாமிது செப்பினோம். போரினில்
ஒருபுறம் ஒதுங்கி அரசனை அகற்றி
நின்றதாற் கண்டிலேன். நிறைந்த காமுகன்.
ஒன்றனு கூலம் உரைத்தான். நன்றே
ஊரிவன் விடுத்ததும் போரிவண் தொடுத்ததும்
எண்ணிய கொள்கைக் கிசையும் புகன்றவை.
நண்ணுதும் நெருங்கி. நல்லது! திரும்பினன்.

[புருடோத்தமன் திரும்பி வர]

புரு: (தனி மொழி) என்றும் கண்டிலம் இன்றுகண் டதுபோல்.
எத்தனை முகத்திடைத் தத்துறு துயரம்!
இவ்வயின் யான்வந் திறுத்தநாள் முதலாக்
கௌவையின் ஆழ்ந்தனை போலும்! ஐயோ!

[குடிலன் எதிர்வர]

(குடிலனை நோக்கி)
கூறுதி! பெயரென்! சாற்றுதி! தத்க்ஷணம்!
குடில: அடியேன்! அடியேன்! குடிலன்! அடிமை!
புரு: வந்ததென் இருள்வயின்? வாளிடேன் அடியில்
குடில: வெந்திறல் வேந்தநின் வெற்றிகொள் பாசறை
சேர்ந்துன் அமையம் தேர்ந்து தொழுதுஓர்
வார்த்தைநின் திருச்செவி சேர்த்திடக் கருதி
வந்தனன் அடியேன்: தந்தது தெய்வம்
உன்றன் திருவடி தரிசனம் உடனே!
சிந்தையெப் படியோ அப்படி என்செயல்!
புரு: செப்புதி விரைவில். செப்புதி வந்தமை!
குடில: ஒப்பிலா வீர! எப்புவ னமுநின்
மெய்ப்புகழ் போர்த்துள ததனால், இப்புவி
நீவரு முனமே நின்வசப் பட்டுத்
தாவரும் இன்பம் தடையறத் துய்ப்பப்
பாக்கியம் பெற்றிலம் பண்டே என்றுனி
ஏக்கமுற் றிருந்தமை யானெடு நாளாய்
அறிந்துளன். இன்றுநீ ஆற்றிய போரிற்
செறிந்திரு படையும் சேர்தரு முனமே
முறிந்தியாம் ஓடிய முறைமையும் சிந்தையிற்
களிப்படை யாமலே கைகலந் தமையும்
வெளிப்படை யன்றோ? வேந்த! இப் புவியோர்
வெல்லிட மும்வெலா இடமும் யாவும்
நல்லவா றறிவர். நாயினேன் சொல்வதென்?
வேசையர் தங்கள் ஆசையில் முயக்கம்
அன்றோ இன்றவர் ஆற்றிய போர்முறை?
என்செய் வாரவர்? என்செய்வார்? ஏழைகள்!
நின்புகழ் மயக்கா மன்பதை உலகம்
யாண்டும் இன்றெனில், அணிதாம் இந்தப்
பாண்டியும் நின்பாற் பகைகொளத் தகுமே!
ஒருவா றறமே யாயினும், மருவாக்
கொற்றவர் பிழைக்காக் குற்றமில் மாக்களை
மற்றவர் மனநிலை முற்ற அறிந்தபின்
கருணையோ காய்தல்? தருமநல் லுருவே!

புரு: (தனதுள்)
யாதோ கூறநோன் றெண்ணலினன். அறிகுவம்.
(குடிலனை நோக்கி)
வேண்டிய தென்னை அதனால்? விளம்புதி.
குடில: ஆண்டகை யறியா ததுவென்? இன்று
மாண்டவர் போக மீண்டவ ரேனும்
மாளா வழிநீ ஆளாய் என்னக்
கைகுவிப் பதேயலாற் செய்வகை யறியா
அடியேன் என்சொல! ஆ! ஆ! விடியில்
வாளா மாளும் மனிதர் தொகுதி
எண்ணி எண்ணி எரிகிற தென்னுளம்.
என்னுடி கருணை! இவர்க்குள் தாய்க்கொரு
புதல்வராய் வந்த பொருநரெத் தனையோ?
வதுவை முற்றுறு வயவரெத் தனையோ?
புதுமணம் புரிந்த புருடரெத் தனையோ?
நொந்த சூலினர் நோவுபா ராது
வந்திவண் அடைந்த மள்ளரெத் தனையோ?
தாய்முகம் வருந்தல் கண்டழுந் தன்சிறு
சேய்முகம் மறவாச் செருநரெத் தனையோ?
செயிருற முழந்தாள் சேர்ந்தழு பாலரைத்
துயிலிடைத் துறந்த சூரரெத் தனையோ?
புரு: சரி, சரி! இவையுன் அரசர்க் காங்கு
சாற்றா தொழிந் ததென்?
குடில: சாற்றிலென்?
போற்றான் யார்சொலும் புந்தியும் சற்றும்.
அன்பிலன்; பிறர்படும் துன்பம் சிறிதும்
அறியா வெறியன்; அன்பொ டிம்மாலை
குறியா நீவிடு தூதையும் கொண்டிலன்.
அண்டிய ஜீவ ராசிகள் அனைத்தையும்
மண்டமர் இதில்நின் வைவாள் தனக்கே
இரையிடல் ஒன்றே விரதமாக் கொண்டனன்.
பித்தன் ஒருவன் தன்னால் இத்தமிழ்
நாடெலாம் வெறுஞ்சுடு காடாய் விடுமே.
ஆவ! இப்பெரும் பாவமும் பழியும்

அஞ்சினேன்; அஞ்சினேன்! எஞ்சலில் கருணை
யுருவே அடியேற் கொருமொழி தருவையேல்
ஒருவர்க் கேனு முறுதுய ரின்றி
அரசனும் புரிசையு மரைநொடிப் போதினுன்
கரதல மாமொரு கௌசலம்,
காட்டுகே னடியேன் கேட்டரு ளரசே! (1)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

புரு: பாதகா! விசுவாச காதகா!

(தனதுள்) ஆ! ஹா!

[சிரித்து]

குடில: அரசன் கைப்படி லாங்குளார் யாருமென்
உரைதவ றுதுன் றுடைக்கி லொதுங்குவர்.
மங்கல மதுரையு மிங்கிவர் வழியே
உன்னை நோக்கி லொதுங்குதல் திண்ணம்.
தொல்புவி தோற்றிய தொட்டர சுரிமை
மல்கிய புவியிஃ ததனால், "மன்னவன்"
என்றபே ரொன்றுநீ யிவையே லென்றும்,
நின்னா ணையின்கீழ் நின்றுநீ முன்னர்
வேண்டிய நாரொடு நீருமே யன்றிமற்
றீண்டுள எவையே யாயினும் வேண்டிடில்,
சிரமேற் சுமந்துன் முரசா சனத்தைக்
கோயில் வாயிலிற் கொணர்ந்துன் றிருவடி
கண்டுமீள் வதுவே கதியடி யேற்காம்
பண்டிரா கவன்றன் பழம்பகை செற்று
வென்றபோ திலங்கை விபீஷணன் காத்தவா
றின்றுநீ வென்றநா டினிதுகாத் திடுவேன்.

புரு: சமர்த்தன் மெத்தவும்! அமைத்ததந் திரமென்?

குடில: அரசன தந்தப் புரமது சேர
யாவரு மறியா மேவருஞ் சுருங்கை
ஒன்றுள தவ்வழி சென்றிடி லக்கணங்
கைதவன் கைதியா யெய்துவ னுன்னடி.

புரு: உண்மை?

(சேவகரை நோக்கி) யாரது?

குடில: உரியன் கண்முன்
மெய்ம்மை யலாதெவர் விளம்புவர்?
[அருள்வரதன் வர]

அருள்: அடியேன்!

புரு: கைத்தளை காற்றளை கொடுவா நொடியில்.
[அருள்வரதன் போக]

(குடிலனை நோக்கி)
எத்திசை யுளதுநீ யியம்பிய சுருங்கை?

குடில: அறிந்தே! அஃதோ! சரணம் புகுந்த
எளியேற் கபய மியம்புதி யிறைவ!

புரு: அவ்வழி போநீ யணைந்தனை?

குடில: ஆம்! ஆம்!
செவ்விது நொருமொழி செப்பிடி லுடனே
காட்டுவ னடியேன்.
[அருள்வரதனுஞ் சேவகரும் விலங்கு கொண்டுவர]

புரு: (குடிலனைச்சுட்டி) பூட்டுமின்! நன்றாய்!

குடில: ஐயோ! ஐயோ! ஓஹோ! செய்ததென்?
மெய்யே முற்றும். பொய்யிலை! பொய்யிலை!
[அருள்வரதன் விலங்கு பூட்ட]

புரு: எத்திசை யுளதச் சுருங்கை? ஏகாய்!
சித்திர வதையே செய்வேன் பிழைப்பில்!

குடில: (அழுது) தேடியே வந்து செப்பிய வடியேன்
ஓடியோ போவேன்? ஓஹோ! உறுதி
முந்திய தந்திடில்......

புரு: மூடுநின் பாழ்வாய்.
சேரன் விஜயமுந் திருடான்! அறிகுதி.

(சேவகரை நோக்கி)
சூரர் பதின்மர் சூழுக விருபுறம்!

(குடிலனை நோக்கி) நடவா யுயிர்நீ நச்சிடில் கெடுவாய்!
எத்திறம் பிழைப்பினுஞ் சித்திர வதையே! (2)
[யாவரும் சுருங்கை நோக்கிப் போக]

ஐந்தாம் அங்கம்: முதற் களம்
முற்றிற்று.

இரண்டாம் களம்

இடம்: கன்னிமாடத் தொருசார்.
காலம்: யாமம்.

[சில தோழிப்பெண்களும் ஒரு கிழவியும் அளவளாவி இருக்க.]

(நிலைமண்டில ஆசிரியப்பா)

கிழவி: எதுக்குமிவ் விளக்கும் இச்சிறு செம்பும்
ஒதுக்கிவை அம்மா! உதவும் வழியில்.
முதற்றோழி: என்னடி கிழவி! சொன்னால் அறிகிலை.
போம்வழி அறியோம்! போமிடம் அறியோம்!
மந்திரக் குளிகையோ! அந்தர மார்க்கமோ!
மூட்டையேன்? முடிச்சேன்? கேட்டியோ தோழி?
காது மில்லை! கண்ணுறு மில்லை!
ஏது மில்லை! எனுயிர் இருப்பதோ!
கிழவி: கிழவிபேச் சேற்குமோ கின்னரக் காரிக்கு!
படும்போ தறிவை! இப்படியே பண்டு
முன்னொரு சண்டையில் உன்னைப் பெறுமுன்
ஓடினோம்...
முதற்றோழி: போடீ! உன்கதை அறிவோம்.
[கிழவி போக]
சிரிக்கவா? என்செய! சிவனே! சிவனே!
[நகைக்க]
உ-ம் தோழி: அம்மணி என்செய்தாள்? அக்காள்! அதன்பின்.
'எப்படி அரசன் மீண்டான்.' செப்பாய்!
முதற்றோழி: எப்படிச் செப்பயான்? ஏந்திழை பட்டபா
டய்யோ! அத்துயர் தெய்வமே அறியும்!
மன்னவன் வாசல் கடந்தான் எனுமுனம்
தன்னிலை தளர்ந்தாள், சாய்ந்தாள். வாணியும்
அருகுள செவிலியும் யானுமாய் விரைவில்
தாங்கினோம், பாங்குள அமளியிற் சேர்த்தோம்.
மூச்சிலை; பேச்சிலை; முகமெலாம் வெயர்வை.

இட்டகை இட்டகால் இட்டவப் படியே.
இப்படி முடிந்ததே! இனியென் செய்வோம்!
தப்புமோ இவ்வொரு தத்துமென் றெண்ணி
ஏங்கினோம், தியங்கினோம்; பாங்கிருந் தழுதோம்.

உம் தோழி: ஐயோ தெய்வமே! அப்போ தவளுயிர்
பட்டபா டெதுவோ! கட்டம்! கட்டம்!

முதற்றோழி: விதியிது! அலதிது கதையிலும் உளதோ?
நொந்தபுன் அதனிலே வந்திடும் நூறிடி.
தந்தைதே றிடத் தன்துயர் மறைத்து
மகிழ்ச்சி காட்டினள், வந்ததித் தளர்ச்சி.
முடிவில் தீயும் மூளுமும் மடங்காய்.

உம் தோழி: எத்தனை வேதனை! எத்தனை சோதனை!
யாது மறியாட் கேனித் துனிபு?
ஓதிய கட்டுரை ஒருமுறை இனியும்
தவிறுதி அக்காள்!

முதற்றோழி: நங்கைநன் மொழியென்
செவியிடை இனியும் மணிபோல் திகழும்!
அரசனை அடிபணிந் தொருசார் ஒதுங்கி
நீக்கமில் அன்பும் ஊக்கமும் களிப்பும்
காட்டிய மதிமுகம் கோட்டியே நின்ற
தோற்றமென் கண்ணின் மாற்றுதல் அரிதே!
"என்னே இதற்கும் யோசனை எந்தாய்!
கொன்னே வருந்தலை! கொள்கையிற் பிறழா
நீதிநம் பாலெனில் நேர்வது ஐயமே.
ஏததற் கையம்? இதுவிட் டடிமை
பெயர்வது பெரிதல, பேருல கதற்குத்
துயர்வரும் எல்லைநம் துயர்நோக் குதலோ
பெருமை! அன்னதே முனியிடம்; கருதிய
பிரிவோ ஒருதினம்! குருவும் தந்தையும்
சமமெனிற் சுந்தர விமலன் தன்திருப்
பாதா தரவே போதா தோதுணை?
ஆயினும் அத்தனை அவசரம் ஆயின்,
ஆகுக ஆஞ்ஞைப் படியே! தடையிலை.

அன்னையும் நின்னை அன்றிவே றறியேன்,
உன்னதே இவ்வுடல். உன்றிரு உள்ளம்
உன்னிய படியெலாம் உவப்பச் செய்குவன்.
அடிமையின் கவலையால் அரசர்க் கியல்பாம்
கடமையிற் பிறழும் கலக்கம் விலக்குவை!
அப்பாம் உன்பால் ஐய! உன்மகள்
வேண்டும் வரமெலாம் யாண்டுமிவ் வொன்றே."

உ-ம் தோழி: மொழியோ இதுவும்? ஆஅ! ஆஅ!
இதுவெலாம் காணவோ எழுதினன் பிரமன்?

முதற்றோழி: எதுவெலாம் காணவோ இருப்ப திக்கண்?

உ-ம் தோழி: என்செய் கின்றனள் இப்போ தேழை?

முதற்றோழி: வஞ்சியிவ் அறையே வருவள் வல்லை!
ஏதோ எழுது கின்றனள். வாணி
கோதிநின் றாற்று கின்றனள் கூந்தல்.

உ-ம்தோழி: நீரா டினளோ இந்நிசி?

முதற்றோழி: ஆம்! ஆம்!
எழுந்து வாசநீ ராடி முன்சுரத்
தழுந்திய அன்றுநான் அணிந்தவெண் பட்டினைக்
கொடுவரப் பணித்தங் கதுவே தரித்து
நெடுநுதல் திலகமும் நேர்படத் திட்டி,
அன்றிரா அணிந்தமுத் தாரமும் அணிந்து,
நின்றுதன் நிலையெலாம் ஆடியில் நோக்கி,
நன்றே நங்காய்! வாணி! நவிலுதி!
அன்றுபோல் அன்றே இன்றென் நிலைமை!
என்று சிறுமுறு வலித்தனள். என்சொல!
உருவமும் உடையும் உரையும் நடையும்
சருவமும் பாவனை பண்ணியும்......

[முதற்றோழி அழ, மனோன்மணியும், வாணியும் வர]

உ-ம் தோழி: அஃதோ!
வந்தனள். காணுதி வாணியும் பின்னுளள்.
மறைகுவம் அவ்வறை. வருகவிவ் வழியே!

[தோழிமார் போக]

மனோன்: எந்தைபோல் தயாநிதி எங்கணும் இல்லை.
வந்தனம் வழங்கவும் வாய்கூசுவதே!
ஏதோ ஒருவிதம் எழுதினேன் என்க!
வாணி! உன் மனத்திற் கிசைந்தான் மன்னன்.
காணு யிதோ அதற்குள கட்டளை.
[திருமுகங்காட்ட; வாணி வாசிக்க]
சொன்னேன் அன்றே வாணி! முன்னமே
அன்னை தந்தையர் அன்பறி யார்சிறார்.

வாணி: இத்தருணத்தில் இதுவென்? அம்மணி!
சத்தியம் எனக்கிது சம்மதம் அன்று.
நினைப்பரும் துயரில் நீயிவண் வருந்த
எனக்கிது தகுந்தகும்! ஏதிது தாயே!
உன்மனப் படியெலாம் உறுங்காற் காண்குவம்.

மனோன்: என்மனப் படியெது? எனக்கொரு மனதோ?
எந்தையின் மனப்படி என்மனப் படியே.
வந்தஇச் சுரத்திடை மாண்டதென் சித்தம்.

வாணி: ஆயினும் அம்மா! யாரிஃ தறியார்?
பாயிருள் தொகுதியும் பரிதியும் கொடிய
வெஞ்சினக் கழுகும் அஞ்சிறைக் கிளியும்
பொருந்தினும் பொருந்திர். ஐயோ! இத்தகைப்
பெருந்துயர்க் கெங்ஙனம் இசைந்தனை என்க.
என்னையுன் நினைவோ! என்னையுன் துணிபோ!
இன்னன மகிழ்ச்சியில் என்மண மேகுறை!
[அழ]

மனோன்: வருந்தலை வாணி! வா வா. இன்னும்
தெரிந்திலை. ஐயோ! சிறுமியோ நீயும்?
உண்மையான் உரைத்தேன். உணருதி. உறுதி.
என்மனம் ஆரவே இசைந்தேன். மெய்ம்மை.
ஏதென எண்ணினை இவ்வுயிர் வாழ்க்கை?
தீதற இன்பம் துய்ப்பதீ எண்ணில்
ஈதல அதற்காம் உலகம். இமையவர்
வாழ்க்கையி லுந்துயர் வந்துறும் எனிலிவ்
யாக்கையில் அமையுமோ நீக்கமில் இன்பம்.
எனக்கெனக் கென்றெழும் இச்சையா திகளெனும்

மனக்கள னங்களாம் மாசுகள் அனைத்தும்
தேய்த்தவை மாற்றித் திகழொளி யேற்றி
மன்னிய மணியாய்ப் பன்னிட என்றே
வைத்தநற் கடிய வாழ்க்கையாம் சாணையை
பைத்தபூஞ் சேக்கையாப் பாவித் துறங்க
யத்தனஞ் செய்திடும் ஏழையர் போல
என்னை நீ எண்ணினை! வாணி! இந்தச்
சுகவிருப் பேதமைத் தொழும்புசெய் பந்தம்.
தவமே சுபகரம். தவமென் உணருவை?
உடுப்பவை உண்பவை விடுத்தரண் அடைந்து
செந்தீ யூந்திடைச் செறிந்தமைந் துறைதல்
ஆதியா ஓதுப அல்ல. அவற்றைத்
தீதறு தவமெனச் செப்பிடார் மேலோர்.
இவ்வுயிர் வாழ்க்கையில் இயைந்திடும் துயரம்.
ஐயோ! போதா தென்றே அன்னோர்
போனகம் துறந்து கானகம் புகுந்து
தீயிடை நின்று சாவடை கின்றார்?
தந்தைதா யாதியா வந்ததன் குடும்ப
பந்தபா ரத்தினைப் பேணித் தனது
சொந்தமாம் இச்சைகள் துறந்து மற்றவர்க்
கெந்தநா ளுஞ்சுகம் இயைந்திடக் கடமையின்
முந்துகின் றவரே முதற்றவ முனிவர்.

வாணி: அத்தகைத் தவமிங் கடியேன் தனக்கும்
ஒத்ததே அன்றோ?

மனோன்: மேம்படக் கருதிடில் ஓம்புதி நீயும்.
அடுத்தவர் துயர்கெடுத் தளித்தலே யானிங்கு
எடுத்தநற் றவத்தின் இலக்கணம் ஆதலின்,
நடேசனை நச்சுநின் நன்மணம் அதுவும்
விடாதினை அடுத்த வீரநா ரணன்றன்
கடுஞ்சிறை தவிர்த்தலும் கடனெனக் கருதி
எழுதினேன். இஃதோ! வழுதியும் இசைந்தான்
என்கடன் இதுவரை: இனியுன் இச்சை.

வாணி: ஆயிடிற் கேட்குதி அம்மனை! என்சூள்.
கண்டவர்க் கெல்லாம் பண்டைய வடிவாய்

நீயிவண் இருக்க நின்னுளம் வாரி
வெள்ளிலா மெள்ள விழுங்கி இங்ஙனம்
வேதகம் செய்த போதக யூதபம்;
பேரிலா ஊரிலாப் பெரியோன் அவன்றான்
யாரே ஆயினும் ஆகுக, அவனை நீ
அணையுநாள் அடியேன் மணநாள். அன்றேல்
இணையிலா உன்னடிக் கின்றுபோல் என்றும்
பணிசெயப் பெறுவதே பாக்கியம் எனக்கு
கடமையும் பிறவும் கற்றறி யேன்விடை
மடமையே ஆயினும் மறுக்கலை மணியே!

மனோன்: பேதைமை அன்றோ ஓதிய சபதம்?
ஏதிது வாணி! என்மணம் தனக்கோ,
இனியரை நாழிகை. இதற்குள் ஆவதென்?
அன்பின் பெருக்கால் அறைந்தனை போலும்.
மன்பதை உலகம் வாஞ்சா வசமே.

வாணி: உடலலால் உயிரும் விழியலால் உணர்வும்
கடபட சடமலாற் கடவுளும் இலையேல்
வேண்டிய விளைக! விசனமென்? அன்றேற்
காண்டியவ் வேலை கருணையின் இயல்பே. (1)

[இருவரும் போக]

ஐந்தாம் அங்கம்: இரண்டாம் களம்
முற்றிற்று.

மூன்றாம் களம்

இடம்: அரண்மனையில் மணமண்டபம்.
காலம்: நடுநிசி.

[அமைச்சர் படைவீரர் முதலியோர் அரசனை எதிர்பார்த்து நிற்க.]

(நிலைமண்டில ஆசிரியப்பா)

முதற்படைத் தலைவன்: அடிகள்பின் போயினர் யாவர்? அறிவீர்
௨-ஆம் படை: நடராசனை நீர் அறியீர் போலும்!
முதற்படை: அறிவேன். ஆ! ஆ! அரிவையர் யாரே
வெறிகொளார் காணில்! வீணில் வாணியைக்
கெடுத்தான் கிழவன்.
௩-ஆம் படை: அடுத்ததம் மணமும்!
தெரியீர் போலும்!
முதற்படை: தெரியேன். செய்தியென்?
௩-ஆம் படை: கோனிலா நாரணன் கொடுஞ்சிறை தவிர்த்தலும்
வாணியின் மனப்படி மன்றல் நடத்தலும்
இவ்வரம் இரண்டும் அம்மணி வேண்ட
அளித்தனன் அனுமதி களிப்புடன் அரசன்.
முதற் படை: இருதிரை இட்டவா றிப்போ தறிந்தேன்.
ஒருதிரை வாணிக் கொருதிரை மணிக்கே.
௩-ஆம் படை: எத்திரை தாய்க்கென் றியம்புதி கேட்போம்.
முதற் படை: இத்திரை தாய்க்காம்
௩-ஆம் படை: சீ! சீ! அத்திரை.
௨-ஆம் படை: எத்திரை ஆயினென்? ஏனிரை கின்றீர்?
முதற் படை: இருதிரை வந்தவா றிதுவே ஆயினும்
ஒருதிரைக் கொருதிரை எத்தனை தூரம்?
௩-ஆம் படை: அதோஅவன் அறிகுவன். அறிந்திதோ வருவேன்.
[௩-ஆம் படைஞன் மற்றோரிடம் போக]
முதற் படை: ஐயோ! பொய்யறும் அன்னையம் மணிக்கும்
பொய்யன் பலதேவனுக்குமோ பொருத்தம்?
௨-ஆம் படை: வருத்தமேன் உனக்கு? மன்னன் திருவுளக்

கருத்தனு சரித்துநாம் காட்டலே கடமை.
[௩-ஆம் படைஞன் மீண்டும் வர]

௩-ஆம் படை: இப்புறம் வருதி. செப்புவன் ரகசியம்.
(முதற்படை சத்தியம் செய்தபின் சாற்றினன். நீயும்
நோக்கி) எத்திறத் தோர்க்கும் இயம்பலை. பத்திரம்!
அத்திரை மனத்திற் கன்றுமற் றப்புறம்
நெருங்கிய சுருங்கையொன் றுளதாம். அவ்வழி
செல்லில் வெகுதொலை செனுமாம். இப்போர்
வெல்லும் வரையும் அவ்வழி மனந்தோர்
இருவரும் எய்திவாழ்ந் திருப்பராம்.

முதற் படை: சரி! சரி!
பொருவரும் புத்திமான் குடிலன். எத்தனை
விரைவினிற் சமைத்தான்! வெகுதிறம் உடையான்

௩-ஆம் படை: இப்போ தன்றது; நகரா ரம்பம்.
எப்போ தப்போ தேவரும் துயரம்
கருதிமுன் செய்தனன்.

முதற் படை: ஒருவரும் அறிந்திலம்!
[முருகன் வர]

௩-ஆம் படை: யாரது? முருகனோ? நாரணன் எங்கே?

முருகன்: நாரணன் அப்புறம் போயினன்; வருவன்.

௩-ஆம் படை: பிழைத்தீர் இம்முறை.

முருகன்: பிழைத்திலம் என்றும்!

௩-ஆம் படை: அத்திரைச் செய்தி அறிவாய் வைத்ததார்?

முருகன்: வைத்ததா ராயினென்? வெந்தது விடு!
[இருவரும் நகைக்க]

௨-ஆம் படை: வாயினை மூடுமின். வந்தனன் மனமகன்.

முருகன்: ஈயோ வாயில் ஏறிட நாயே!

முதற் படை: அரசனும் முனிவரும் அதோவரு கின்றார்!
[ஜீவகன், சுந்தரமுனிவர், கருணாகரர், நிஷ்டாபரர், பலதேவன், நடராசன், நாராயணன் முதலியோர் வர]

ஜீவகன்: இருமின் இருமின்! நமர்காள் யாரும்!
[ஜீவகன், முனிவர் முதலியோர் தத்தம் இடத்திருக்க]

கோளுவோ கொல்லிது! மணவறை! இருமின்.
பலதேவ னேனும் பிறரெவ ராயினும்
வந்திலர் என்னை?

பலதேவன் :
மன்னவர் மன்ன!
அந்தியிற் கண்டேன் அடியேன். அதன்பின்
ஒருவரும் கண்டிலர். தனிபோ யினராம்.

ஜீவ :
இருமிரும் தீரும். எங்கே இறுநம்
காரிய மேயவர் கருத்தெப் பொழுதும்
(நாராயணனை நோக்கி) பாரீர் அவர்படும் பாடு.

நாராயணன் :
பார்ப்பேன்!
சத்தியம் சயிக்குமேற் சாற்றிய படியே!

ஜீவ :
இத்தகை உரைப்போர் எப்புவ னமுமிலை:
எண்ணி நீர் சயித்த இத்தொழில் இனியாம்
பண்ணற் கென்னடை? சுவாமி! அடிகள்
தந்தநன் முகூர்த்தம் வந்ததோ?

சுந்தர :
வந்தது!

[புருடோத்தமனும், குடிலனும், அருள்வரதன் முதலிய மெய்காப்பாளருடன் கற்படைவழி வர]

புருடோத்தமன் : நின்மின்! நின்மின்! பாதகன் பத்திரம்!
(கற்படையில் அருள்வரதனை நோக்கி)
என்பின் இருவர் வருக.
(தனதுள்)
இதுவென்?
இந்நிசி எத்தனை விளக்கு! ஏதோ
மன்னவை போலும்! மந்திரா லோசனை!
இவர்சுந் தரரே! அவர்நட ராஜர்!
இவர்களிங் குளரோ! எய்திய தெவ்வழி?
இத்திரை எதற்கோ? அத்திரை எதற்கோ?
இத்தனை கோலா கலமென் சபைக்கு?
மாலையும் கோலமும் காணின் மணவறை
போலாம். அறிந்தினிப் போவதே நன்மை.
மந்திரம் ஆயின் மற்றதும் அறிவோம்.

இந்நல் திரை நமக் கெத்தனை உதவி!
[திரைக்குப் பின் மறைந்து நிற்க]

ஜீவ: என்குலம் காக்க எனவருள் பழுத்துக்
கங்கணம் கட்டிய கருணை நிதிகாள்!
மனத்திறந் தாழ்ந்த மதிமந் திரிகாள்!
எனக்கென உயிர்வாழ் என்படை வீரர்காள்!
ஒருமொழி கூறிட அனுமதி தருமின்.
ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே;
பாடையின் சிறப்பெலாம் பயில்வோர் சிறப்பே;
எள்ளரும் மதிகுலச் சிறப்பெலாம் எமர்காள்!
கள்ளமில் நும்முனோர் காப்பின் சிறப்பே,
ஆதலில் உமக்குப சாரம்யான் ஓதுதல்,
மெய்க்குயிர் கைக்குநா விளம்புதல் மானும்.
ஈண்டுகாத் திடுவல்யாம் எனக்கடன் பூண்டநும்
மதிகுல மருந்தாய் வாய்த்தஎன் சிறுமி
விதைபடும் ஆலென விளங்கினள். அவளைக்
காத்திடும் உபாயம் கண்டிட இச்சபை
சேர்த்தனன் என்பது தெரிவீர் நீவிர்.
இன்றுநாம் பட்டதோர் இழுக்கிவ் வைகறை
பொன்றியோ வென்றோ போக்குவம் திண்ணம்.
ஒருகுலத் தொருவன் ஒருமரத் தோரிலை.
அப்படி அன்றுநம் கற்பகச் சிறுகனி!
தப்பிடின் மதிகுலப் பெயரே தவறும்.
அரியவிச் சந்தியைப் பெரிதும் கருதுமின்.
இருந்திடச் சிறியள்: அபாயம்! தனியே
பிரிந்திடப் பெரியள்: பிழை! அஃதன்றியும்
குலமுடி வெண்ணிக் குலையுநம் உளத்திற்
கிலையதனாலோர் இயல்சமா தானம்.
ஆதலில் அரியதற் காலத் தியல்பை
யாதென நீவிர் ஆய்ந்தியான் இப்போ
தோதிடும் உபாயத் தாலுறு நன்மையும்
தீமையும் நன்றாய்த் தெரிந்து செப்புமின்!
குடிலனை அறியார் யாரிக் கொற்றவை?

உ-ம் படை: குடிலனை அறியுமே குவலயம் அனைத்தும்.

ஜீவ: அறிந்திடில் இறும்பூ தலையார் யாவர்?
மடியுளார் யாரவன் மதியதி சயித்திடார்?
நெஞ்சுளார் யாரவன் வன்திறற் கஞ்சார்?
பார்வையார் அவனிடத் தாரா ஆர்வம்?
உண்மைக் குறைவிடம்; நின்மைக் கணிகலம்
சத்திய வித்து: பத்தியுள் மத்தன்.
ஆள்வினை தனக்காள்; கேள்வி நன் கேள்வன்.
ஏன்மிக? நமர்காள்! இந்நடு நிசியிலும்
யானறி யாதுழைக் கின்றனன் எனக்கா.
நன்றே இங்கவன் இலாமையும் அன்றேல்
தற்புகழ் கேட்க அற்பமும் இசையான்.
புரு:(தனதுள்) எத்தனை களங்கமில் சுத்தன்! கட்டம்!
ஜீவ: பற்பல பாக்கியம் படைத்துளர் பண்டுளோர்
ஒப்பறும் அமைச்சனை இப்படி ஒருவரும்
முன்னுளோர் பெற்றிலர்: பின்னுளார் பெறுவதும்
ஐயமென் றுரைப்பேன், அன்னவன் புதல்வன்
மெய்ம்மையும், வாரமும் வீரவா சாரமும்.
பத்திசேர் புத்தியும், யுத்திசேர் ஊக்கமும்
உடையனாய் அடையவும் தற்பிர திமைபோல்,
இனியொரு தலைமுறை தனிசே வகஞ்செய
இங்குவிற் றிருந்திலன் ஆயின். எமர்காள்!
எங்குநீர் கண்டுளீர் இச்சிறு வயதிற்
பலதே வனைப்போற் பலிதமாம் சிறுதரு?
உ-ம் படை: இலையிலை எங்கும்! இவர்போல் யாவர்!
ஜீவ: எனதர சுரிமையும் எனதர சியல்பும்
தமதார் உயிர்போல் தாம்நினைந் திதுவரை
எவ்வள வுழைத்துளார் இவ்விரு வருமெனச்
செவ்விதின் எனைவிட நீவிரே தெரிவீர்.
இக்குலம் அவர்க்கு மிக்கதோர் கடன்பா
டுடையதென் றெருவரும் அயிர்ப்புறார். அதனால்
தடையற அக்கடன் தவிர்க்கவும் நம்முளம்
கலக்கிடும் அபாயம் விலக்கவும் ஒருமணம்
எண்ணினேன். பண்ணுவேன் இசைவேல் நுமக்கும்
மணவினை முடித்த மறுகணம் மணந்தோர்

இருவரும் இவ்விடம் விடுத்து நம் முனிவரர்
தாபதம் சென்று தங்குவர். இந்நகை
ஆபதம் கருதியே அருட்கடல் அடிகள்
தாமே வருந்திச் சமைத்துளார் அவ்விடம்
போமா றொருசிறு புரையறு சுருங்கை.
அவ்வழி இருவரும் அடைந்தபின், நம்மைக்
கவ்விய கௌவையும் கவலையும் விடுதலால்,
வஞ்சியன் ஒருவனோ, எஞ்சலில் உலகெலாம்
சேரினும் நம்முன் நிற்செறி பஞ்சே.
இதுவே என்னுளம். இதுவே நமது
மதிகுலம் பிழைக்கும் மார்க்கமென் றடிகளும்
அருளினர் ஆஞ்ஞை. ஆயினும் நுமது
தெருளுறு சூழ்ச்சியும் தெரிந்திட விருப்பே. (1)

(நேரிசை ஆசிரியப்பா)

உரையீர் சகடரே உமதபிப் பிராயம்.
சகடன்: அரசர் குலமன்று. ஆயினென்? சரி சரி!
நாராயணன்: மருகன் தப்பிய வருத்தம் போலும்.
(தனதுள்)
ஜீவ: குலந்தேர் வதுநற் குணந்தேர் வதுவே.
பெயரால் என்னை ? பேயனிவ் வஞ்சியான்
பெயரால் அரசன்! செயலாற் புலையன்!
உ-ம் படை: செய! செய! சரிசரி! தெளிந்தோம்! தெளிந்தோம்!
நாரா: மனிதரால் ஆவதொன் றில்லை. மன்னவா!
இனியெலாம் ஈசன திச்சை.
சகடன்: சரி! சரி!
யாவரும்: சம்மதம்! சம்மதம்! சர்வசம் மதமே!
ஜீவ: வாராய்! நாரண! ஆனால் அப்புறம்
சென்றுநம் மனோன்மணிச் செல்வியை யழைத்து
மன்றல் திரைப்பின் வரச்செய்.
[நாராயணன் போக]
யார்க்கும்
சம்மதம் எனிலிச் சடங்கினை முடிப்போம்.
வம்மின்! இனியிது மங்கல மணவறை.

கவலை அகற்றுமின் கட்டுடன்! பனிநீர்த்
திவலை தெறுமின்! சிரிமின்! களிமின்!
இன்று நாம் வென்றோம் என்றே எண்ணுமின்!
இனிநாம் வெல்லற் கென்தடை? தினமணி
வருமுன் ஏகுவம். அரைநா ழிகைத்தொழில்!
ஆற்றுவம் அரும்போர் கூற்றுமே அஞ்ச.
நாளை நல் வேளை: நம்மணி பிறந்தநாள்
பாரீர்! பதினொ ருண்டுமிந் நாளில்
ஓரோர் மங்கல விசேடம்!

சகடன்: ஓ! ஓ!
சரி! சரி! ஒவ்வொரு வருடமும் அதிசயம்!
[நாராயணன் திரும்பிவர- மனோன்மணி வாணி முதலிய தோழியருடன் திரைப்பின் வந்து நிற்க]

நாரா: இட்டநின் கட்டளைப் படியே எய்தினர்.

ஜீவ: (நாராயணனை நோக்கி)
மற்றிவர் கவலை மாற்றிட ஒருபா
சாற்றிசைத் திடுவளோ வாணி? சாற்றுதி!

வாணி: (பாட) (கோச்சகக் கலிப்பா)

நீர்நிலையின் முதலையின்வாய் நிலைகுலைந்த ஒருகரிமுன்
ஓர்முறையுன் பெயர்விளிக்க உதவினைவந் தெனவுரைப்பர்;
ஆர்துயர அளக்கர் விழும் அறிவிலியான் அழைப்பதற்குன்
பேர்தெரியேன் ஆயிடினும் பிறகிடல்நின் பெருந்தகையோ. (1)
பாரரசர் துகிலுரியப் பரிதவிக்கும் ஒருதெரிவை
சீர்துவரை நகர்கருதிச் சிதைவொழிந்தாள் என உரைப்பர்;
ஆர்துணையும் அறவிருக்கும் அறிவிலியான் அழைப்பதற்குன்
ஊர்தெரியேன் ஆயிடினும் உறுதிதரல் உனக்குரித்தே. (2)
மறலிவர மனம்பதறும் மார்க்கண்டன் உனதிலிங்கக்
குறிதழுவி அழிவில்வரம் கொண்டான்முன் எனவுரைப்பர்;
வெறிகழுமிப் பொறியழியும் வெம்பாவி விரவுதற்குன்
நெறியறியேன் ஆயிடினும் நேர்நிற்றல் நினதருளே. (3)

(ஆசிரியப்பாவின் தொடர்ச்சி)

சுந்தர: எதுவோ இதனினும் ஏற்புடைப் பிரார்த்தனை?
மந்திரம் தந்திரம் வழங்கும் நற்செபம்
யாவையும் இதுவே. பாவாய்! மனோன்மணி!

வருதி இப்புறம். வாங்குதி மாலை.

[மனோன்மணி மணமாலைகொண்டு பலதேவனெதிர் வர]

ஒருதனி முதல்வன் உணர்வன் உன்னுளம்.
உன்னன் புன்மையேல் இன்னமும் காப்பன்.

[புருடோத்தமன் திரைவிட்டு வெளிவந்து நிற்க.]

முதற் படை : ஆற்றேன்! ஆற்றேன்! ஐய! இத் தோற்றம்.

உ-ஆம் படை: ஊற்றிருந் தொழுகி உள்வறந் ததுகண்.

ச-ஆம் படை : அமையா நோக்கமும் இமையா நாட்டமும்,
ஏங்கிய முகமும் நீங்கிய இதழும்,
உயிரிலா நிலையும் உணர்விலா நடையும்
பார்த்திடிற் சூத்திரப் பாவையே. பாவம்!

[மனோன்மணி புருடோத்தமனைக் காண ; உடன் அவன் நிற்குமிடமே விரைவில் நடக்க-]

யாவரும் : எங்கே போகிறாள்? இதுயார்? இதுயார்?

புரு: இங்கோ நீயுமோ! என்னுயிர் அமிர்தே!

[புருடோத்தமன் தலைதாழ்க்க; மனோன்மணி மாலைசூட்டி அவன்றோளோடு தளர்ந்து மூர்ச்சிக்க.]

சுந்தர : மங்கலம்! மங்கலம்! மங்கலம்! உமக்கே!

யாவரும் : சோரன்! சோரன்! சேரன்! சோரன்!

நிஷ்டாபரர் : கண்டேன்! கண்டேன்! கருணா கரரே!

[கருணாகரரைத் தழுவி.]

யாவரும் : பற்றுமின்! பற்றுமின்! சுற்றுமின்! எற்றுமின்!

பலதே: கொன்மின்! கொன்மின்!

[யாவரும் புருடோத்தமனைச் சூழ; சுந்தரர் கூட்டம் விலக்க]

சுந்தர : நின்மின்! நின்மின்!

[அருள்வரதனும் மெய்க்காப்பாளரும் வர]

அருள்வரதன் : அடையின் அடைவிர் யமபுரம். அகன்மின்!

[புருடோத்தமனையும் மனோன்மணியையுஞ் சூழ்ந்து நின்று காக்க.]

யாவரும் : படையுடன் பாதகன்!

[யாவரும் பின்னிட விலங்குடன் குடிலனைக் காட்டி-]

அருள்: பாதகன் ஈங்குளான்.

ஜீவ: குடிலா! உனக்குமிக் கெடுதியேன்? ஐயோ!
அடிகாள்! இதுவென்! இதுவென் அறிநி
அறியேன் இச்சூ தறியேன்! அறியேன்!

சுந்தர: பொறு! பொறு! ஜீவக! அறிகுதும் விரைவில்

புரு: வஞ்சியான் வஞ்சியான்! மன்னவ! உன்சொல்
அஞ்சினேன். சூதுன் அமைச்சன் செய்கை
சுருங்கையின் தன்மை சொல்லியென் னையிங்
கொருங்கே அழைத்தான் உன்னகர் கவர.
உன்னர சுரிமையும் உன்னகர் நாடும்
என்னிடம் இரந்தான் இச்சூ திதற்கா!
ஓடிய சுருங்கையின் உண்மைகண் டிவன்தன்
சூதும் துரோகமும் சொலியுனைத் தெருட்ட
எண்ணியான் வந்துழி இவ்வொளி விளக்கும்
பண்ணியல் பாட்டும் பழையபுண் ணியமும்
தூண்டிட ஈண்டுமற் றடையவும், யாண்டும்
எனதுயிர் அவாவிய இவ்வரு மருந்தை
நனவினிற் காணவும் நண்ணவும் பெற்றேன்.
பிரிகிலம் இனிமேல். உரியநின் உரிமை
யாதே ஆயினும் ஆகுக. ஈதோ!
மீள்குவன். விடைகொடு. நாளையும்
வேட்டையேற் காண்போம் ஞாட்பிடை நாட்டே.

ஜீவ: உண்மையோ? குடிலா! உரையாய்!...
[குடிலன் முகங்கவிழ்த்து நிற்க.]

நாரா: இதுவுநின்
உண்மையோ! மௌனமேன்?

யாவரும்: ஓகோ! பாவி!

நாரா: படபடத் திடுநின் பாழ்வாய் திறவாய்!

சுந்தர: விடு விடு! விசாரணைக் கிதுவன் றமையம்!
நன்மையே யாவும் நன்மையாய் முடியின்.
வாராய் ஜீவக! பாராய் உன்மகள்
தாராத் தன்னிரு கைதோட் குட்டி
என்படு மார்பிடைக் கண்படு நிலைமை.

இருமனம் ஏனினி! என்றுமிப் படியே
மருகனு மகளும் வாழ்க! வாழ்த் துநியே.

ஜீவ: கண்மணி! அதற்குட் கண்வளர்ந் தனையோ!
உன்னையும் மறந்துறங் குநியேல் இனிமேல்
என்னையெங் கென்னுவை? இறும்பூ திருவரும்
ஒருவரை ஒருவர் உணர்ந்தமை!

[மனோன்மணி திடுக்கிட்டு விழிக்க]

வெருவலை! மணியே! பிரியீர் இனியே. (3)

(வாழ்த்து - மருட்பா)

பள்ள உவர்க்கடலிற் பாய்ந்தோடும் வெள்ளமென
உள்ளம் உவந்தோடி ஒன்றானாய்—விள்ளா
மணியின தொளியும் மலரது மணமும்
அணிபெறு மொழியின் அருத்தமும் போல,
இந்நிசி யாகவெஞ் ஞான்றும்
மன்னிய அன்புடன் வாழ்மதி சிறந்தே!

[யாவரும் வாழ்த்த]

ஐந்தாம் அங்கம் : மூன்றும் களம்
முற்றிற்று.

(கலித்துறை)

சிறிதா யினும்பற் றிலாதுகை யற்ற திருமகடன்
குறியாத் தலைவன் குடிலன்பின் எய்திய கொள்கைகண்டீர்
அறிவாம் எனுநம் அகங்காரம் ஆறும் அவத்தையினிற்
செறிவா யிருக்குந் திருக்கு வெளிப்படும் சீரிதுவே.

ஐந்தாம் அங்கம்
முற்றிற்று.

ஆசிரியப்பா	6-க்கு	அடி	569
வெண்செந்துறை	6-க்கு	,,	12
கொச்சகக்கலிப்பா	3-க்கு	,,	12
மருட்பா	1-க்கு	,,	6
ஆக அங்கம் 1-க்குப் பா	16-க்கு	,,	599

பாக்களின் வரி எண்ணிக்கை

பாயிரம்	அடி	57
அங்கம் 5-க்கும்	,,	4445
ஆக இந்நாடகத்துள் வந்த அடிகள்		4502

மனோன்மணீயம்

முற்றிற்று

குறிப்புரை

பாயிரம்

பாயிரம் எனினும் முகவுரை யெனினும் நூன்முக மெனினும் ஒக்கும். பாயிரம் போது, சிறப்பு என இருவகைப்படும்.

இவற்றுள் ஒரு நூலுக்கு மட்டுமே உரியதன்றி எல்லா நூன் முகத்தும் உரைக்கத்தக்க கடவுள் வணக்கம் போதுப்பாயிரத்தின் பாற்படும். ஒரு நூலுக்கே இன்றியமையாமல் உரியதாய் அவ்வொரு நூன்முகத்தே உரைக்கப்படுவது சிறப்புப் பாயிரம்.

கடவுள் வணக்கம்

வேதசிகை-வேதத்தின் முடிபாகிய உபநிடதம். வேதசிகை என்றது வேதத்தின் பிரிவு இரண்டனுள் முந்தியதான கரும காண்டம் ஒழியப் பிந்தியதாய்ச் சிறந்து நிற்கும் பிரமகாண்டம். விரிகலை - பரந்த சாத்திரம். விரிகலை: வினைத்தொகை. போதம் - அறிவு. சிந்தனை செய்தல் - தியானித்தல், நீளநினைத்தல். கூடுங்கால் - வாராக்கால்: கால் ஈற்று வினையெச்சம். இவ் வெண்பாவின் முதலடியும் ஈற்றடியும் முற்று மோனைகள். மற்றையடிகளில் மேற்கதுவாய் மோனை.

தமிழ்த்தெய்வ வணக்கம்

பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவாவது பல தாழிசைகள் வந்த கொச்சகக் கலிப்பா. தரவு எனினும் எருத்தம் எனினும் ஒக்கும். தரவாவது தந்து முன்னிற்பது.

தமிழ்-இனிமை. இணையில்லாதது, மற்ற மொழிகளிலில்லாத 'ழ' என்னும் எழுத்தைத் தனியே உடையது. கலைமகள் பெண்பாலாதலின் தமிழை அணங்கென்று கூறினர்.

தரவு க. வதனம்-முகம். பிறைநுதல் - பிறைபோன்ற நுதல்: உவமைத்தொகை; வடிவத்துக்கும் ஒளிக்கும் அழகுக்கும் பிறை, உவமை. திலகம் - பொட்டு. அணங்கு - தெய்வம்.

கடல், பூமி, பரதகண்டம், தட்சிணம், திரவிட நாடு, புகழ், தமிழ் என்பவற்றினிடத்து முறையே ஆடை, மகள், முகம், நெற்றி, திலகம், மணம், தெய்வம் என்ற தன்மையை ஏற்றிக் கூறியதனால் உருவகவணி. ருஷபமகாராசனது புத்திரனை பரத மகாராசனால் ஆளப்பட்ட இடமாதல்பற்றி இந்தியா பரத கண்டமெனப்பட்டது. தெக்கணம் - தெக்ஷிணம், தென்னிங்

தியா (=சென்னை மாகாணம்). திரவிட நாடு - தமிழ் நாடு : குண கடல், குமரி, குடகம், வேங்கடம் எனும் நான்கு எல்லைக்குட்பட்ட நாடு. இது, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம் என்னும் ஐந்து திராவிட மொழிகள் வழங்கும் இடமாதலின் திராவிட நாடு என்று சொல்லப்படும். நறும் - வாசனை, இனிமை.

தாவு உ. அளித்து - காத்து. துடைத்தல் - அழித்தல். எல்லை அறு - வடிவு, குணம், செயல் முதலியவற்றில் ஒரு எல்லையற்ற. முன் இருந்தபடி - தன் வடிவம் மூப்படையாமல் முன்னிருந்த நிலைப்படியே. களிதெலுங்கு - மகிழ்தற்குக் காரணமாகிய தெலுங்கு. கவின் - அழகு. உதரம் - வயிறு. உலக வழக்கு - உலகத்தவரால் வழங்கப்படுதல். வழங்குதல் - பேசுதல். திறம் - பெருமை. வாழ்த்துதும் - வாழ்த்துவோம் : தும் விகுதி பெற்ற தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று.

கன்னட முதலிய மொழிகளுக்குத் தமிழே தாய்மொழி யென்பது பலமொழி யாராய்ச்சி யாளர் துணிபு. ஆரியம் - வட மொழி ; விந்திய மலைக்கும் இமய மலைக்கும் இடையிலுள்ள ஆரிய வர்த்தத்தில் வாழ்ந்த ஆரியர் களுக்கு உரித்தாயிருந்த மொழி.

உலக வழக்கு அழிதலாவது, இப்பொழுது எந்த நாட்டிற்கும் சொந்த மொழியாக வழங்காமை. இதனாற்றான் தேவபாஷை என வழங்குவது போலும்.

கன்னட முதலியன ஒன்று பலவாதல்;பழங்கன்னடம்,புதுக் கன்னடம், அச்ச தெலுங்கு, மிசிர தெலுங்கு என்றபாகுபாட்டுடன் விளங்குதல்.

தாழிசை

தாழிசை எனினும் இடைநிலைப்பாட்டு எனினும் ஒக்கும். நாற்சீரின் மிக்குப் பலசீரான் வந்து அடியிரண்டாய் ஈற்றடி குறைந்து வருவன குறட்டாழிசை யெனப்படும்.

தாழிசை க. குடமுனி - குடத்திற்றோன்றிய முனி: அகத்தியர். கரை - எல்லை. தொடுகடல் - சகர புத்திரரால் தோண்டப்பட்ட கடல்: சாகரம். புகழாமே - கீர்த்தியாமோ, ஏகாரம் எதிர்மறைப் பொருளது. தமிழ் கடலினும் பெரிதென்றபடி. கடல் குடித்தது:—இந்திரன் வேண்டுகோட்படி அவன் பகைவனாகிய விருத்திராசுரனைக் கடலினின்றும் வெளிப்படுத்தும் பொருட்டுக் கடனீரைத் தம் ஒரு கையால் முற்றும் பருகிப் பின் உமிழ்ந்த வரலாற்றினால் விளங்கும். சகர புத்திரர் கடல் தொடுவதற்குக் காரணம் அசுவமேத யாகம் செய்யலுற்ற சகர சக்கரவர்த்தியின் வேள்விக்குதிரையை இந்திரன் பாதாள உலகத்திற்கொண்டொளித்தமை. குருவாவார் முருகக் கடவுளும் சிவபெருமானும்.

தாழிசை. உ. அரனார் - சிவ பெருமான்; ஆர்: சிறப்பு விகுதி. உரை இழந்து - பேச்சொழிந்து. விழிப்பாரேல் - விழிப்பவராயினு ரென்றால். இலக்கணம்-இலட்சணம். அரியது - அறிதற்கு அருமையானது. ஒரு பிழை-மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணமில்லை செயற்கை பற்றியே மணம் உண்டென்று 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற செய்யுள் அளவில் நக்கீரர் கூறிய வல்லுரையாகிய பிழை. உரையிழத்தலும் விழித்தலும்பிழைசெய்து சமாதானம் சொல்ல அறியாதவர் செயலாகக் கொண்டு சிவபெருமான் தாம் நக்கீரரிடத்தில் இயற்கை மணம் என்று கூறியதாகிய பிழைக்கு அச்சிவபெருமானே உரையிழந்து விழித்தாரென்று சொல்வாருமுளர். இச்செய்யுளில் தமிழின் பொருளிலக்கணம் தேவர்க்கும் தேவரனைய புலவர்க்கும் திகைப்பைத் தருவது என்பது குறிக்கத்தக்கது. முன்-முன்னொரு காலம்; நக்கீரர் முன்னர், அல்லது அரனார் முன்னிலையிலும் ஆம்.

தாழிசை. ௩. சதுமறை-சதுர்மறை; சதுர் - நான்கு, மறை - வேதம், மறைவானபொருள்களை உட்கொண்டிருப்பது, காரண இடுகுறிப்பெயர். மக்களில் சில வகுப்பாரும் பெண்பாலாரும் ஓதக்கூடாதென்று மறைக்கப் பட்டதென்பது பண்டையுரை. சகம் - பூமி. முதுமொழி - முதுமையாகிய மொழி. அநாதி- ஆதியற்றது, தோன்றிய காலம் இன்னதென்று துணியப்பெறாதது.

ஆரியமொழி நன்கு பரவுமுன் தமிழ்போன்ற ஒரு மூலமொழி ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பரவியிருந்த தென்பது பல மொழிகளையுங் கற்றுணர்ந்த ஆங்கிலேய பண்டிதர்களின் துணிபு என்பது நூலாசிரியர் குறிப்பு.

தமிழ் முதுமொழி என்றது: இந்தியாவிற்கு ஆரியம் வருமுன் மூலமொழி தமிழேயா மென்பதும் இப்பொழுதும் இமயமலைச் சாரலிலிருக்கும் ஒருவகை வேடர்மொழி தமிழோடொற்றுமையுடைய தென்பதும் நீலகிரியிலும் குடகிலுமுள்ள தோடர் குடகர் மொழிகளும் அன்ன என்பதும்பற்றி. முதுமொழி நீ அநாதி என்பதை நீ முதுமொழி அநாதி எனக் கூட்டுக.

தாழிசை. ௪. வேகவதி - வைகையாறு. காலநதி - காலமாகிய வெள்ளம். நினை கரவா காரணத்தின் அறிகுறி-உன்னை அகப்படுத்தா தென்பதைக் காட்டுவதோர் அடையாளம்.

வேகவதி - 'வேகமுடையது' வைகை. வேகவதிக்கு: உருபு மயக்கம். காலத்தைப் பிரவாகம் என்பது ஒரு மரபு. பிரளயப் பெருங்கடல் வெள்ளம் என்றலும் ஒன்று. ஒரு வெள்ளத்திற்கு வயப்படாமல் எதிர்த்துச் சென்றதனால் மற்றொரு வெள்ளத்திற்கும் வயப்படாமல் இழுத்துச் செல்லும் என்ற தன்மை விளக்குவதாம். இதனால் தமிழ் மொழி காலத்திற்கு வயப்படாமல் தோற்றம் அழிவின்றி நிலை

பேறுடையரென்பது ஏற்ற மாம். ஒரு சிற்றேடு:—மதுரையில் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் கூன்பாண்டியன் காலத்து அவனும் அவனைச் சார்ந்த சமணர்களும் ஞானசம்பந்தரோடு அனல் புனல் வாதம் (சொற்போர்) நிகழ்த்தியபோது ஞானசம்பந்தர் எழுதி நீரிலிட்ட ஏடு எதிர்த்துச் சென்றது. இஃது அடைந்த இடமே திருவேடகம் என்னும் திருப்பதி. இவ் ஏட்டில் எழுதிய செய்யுளே 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்... துயர் தீர்கவே' என்பது. சிற்றேடு - சிறிய ஏடு, நறுக்கு என்க. இப்பொருளில் எண்ணாயிரஞ் சமண முனிவர் எழுதியிட்ட நாலடிச் செய்யுள் கொண்ட ஏடென்று குறிப்பாருமுளர். அவர் ஒரு என்பதற்கு ஒன்றென்னும் பொருளைக் கொள்ளாது ஒப்பற்ற என்னும் பொருளைக் கொண்டார் போலும். கரவா - கரவாத: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; கர: பகுதி.

தாழிசை. ௬. கடையூழி - ஊழிக்கடை, கற்பாந்தகாலம். தனிமை - தனித்திருக்குந் தன்மை. கழித்தல் - தீர்த்துக் கொள்ளுதல். அம்பலத்துள் உடையார்-பொன்னம்பலத்தில் எழுந்தருளியிருக்கின்ற தலைவரான சிவபிரான். வாசகம் - திருவாசகம்.

வாசகத்தில் ஒரு பிரதி கருதியதாவது:—அந்தணர் வேடம் பூண்டுவந்த அம்பலவாணர், மாணிக்கவாசகர் பாண்டிநாட்டிலிருந்து பாடிய வாசகப் பாடல்களை மீண்டுங் கேட்கும் வேட்கையினால் சிதம்பரத்தில் வைத்துப் பாடக் கேட்டுப் படி (பிரதி) யெடுத்த தன்மை. வாசகம்: வாசகத்தாலாகிய நூலுக்குக் கருவியாகுபெயர். கடையூழி வருந்தனிமை கழித்தல் என்றது - சிவபிரான் தம் திருக்கையால் எழுதியருளிய திருவாசக ஏட்டுப்பிரதி, யாவும் அழியுங் கடையூழிக் காலத்தினும் தான் அழியாது சிவபெருமானுடன் அமர்ந்திருந்து அவர் தனித்திருக்குந் தன்மையை நீக்கித் துணைபுரிவது.

தாழிசை. ௬. இலகும் - விளங்கும். நலம் - அழகு. வியஞ்சனம் - அறிகுறி. இச்செய்யுளில் சங்கச் சிறுபலகை தமிழுக்கு உவமம் செய்கையால், சங்கப்பலகை கற்றறிந்தார் தகுதிக்கேற்ப இடங்கொடுத்து விளங்குவதுபோலத் தமிழும் நூலாராய்ச்சியாளர் ஒப்பத்தக்க முறையில் சிறந்த நூல் வடிவில் விரிந்து ஓங்கும். சங்கப்பலகை இரண்டு சாண் சதுர வடிவினது.

தாழிசை. எ. இருவிழி - கலைமகளின் இருவிழிகள். இவை வடமொழி தென்மொழி என்பன. இவற்றுள் தென்மொழி வலவிழியோ வடமொழி வலவிழியோ என்பதுவே சொற்போருக்கு இடமாகுங் கூற்று. இதனுண்மை அடுத்த இரண்டு தாழிசைகளால் முடிவுபெறும். கெடுவழக்கு - கெடுதி பயக்கும் பேச்சு. கெடு வழக்கு : வினைத்

தொகையுமாம். கிழக்கொடு மேற்குணரார் (1) கிழக்கு மேற்கு என்ற திசைகளையறியார் (2) ஒன்றுமறியார் (3) கீழ்மை மேன்மை அறியாதார்.

தாழிசை. அ. வீறு - வேறு எவர்க்குமில்லாத சிறப்பு, பெருமை. குணதிசை யறியார் - கீழ்த்திசையின் பெருமை யறியாதவர்கள். குணதிசை-நன்மையான வழி என்பது தொனி. கலைமகள் - கல்விக்குரிய பெண் தெய்வம். இச்செய்யுளில் குணதிசை யறியாரே கலைமகளின் இருவிழிகளில் வடமொழியை வலவிழியென்று குறிப்பாரென்று கூறியிருத்தல் காண்க. அத்தகையார் குணதிசையறியாதவரே. குணதிசை, குணக்கு + திசை. குணக்கு - கிழக்கு.

தாழிசை. கூ. பூர்வதிசை - கீழ்த்திசை. பழைய நிலைமை என்பது தொனி. மதியுடையார் - அறிவுடையார். கலைமகள் கிழக்கு முகமாக இருக்கின்றதை அறிந்தவர்கள் தென்மொழியே வலக்கண் என்பதை ஐயுறமாட்டார்கள் என்பதாம்.

தாழிசை. க0. பத்துப்பாட்டு ஆதி - திருமுருகாற்றுப்படை முதலிய பத்துப் பாடல்கள் அடங்கிய சங்கத்தமிழ் நூல்கள். மனம் பற்றினர் - கருத்து ஊன்றியவர். எத்துணையும் - எவ்வளவும். துணை - அளவு. இலக்கணம் இல் - பொருளிலக்கணத்துக்குப் பொருந்தாத. பத்துப்பாட்டு - தமிழுக்கே உரிய ஒழுக்கம் முதலியவற்றை இனிது புலப்படுத்துவதோடு மலை, கடல், நாடு, நகர், சிறுபொழுது, பெரும்பொழுது முதலியவற்றை உள்ள வண்ணமே கூறி இன்பம் பயக்கும் நன்னெறியுடையது. இத்தகைய இயற்கை வருணனைகளால் மனத்தை மகிழ்விக்கும் நூல் வடமொழியில் இன்றென்பதே குறை என்ற குறிப்பாகும்.

தாழிசை. கக. மறு அற - (ஐயந்திரிபுகளாகிய) குற்றமில்லாதபடி. உள்ளுவரோ-எண்ணுவார்களோ. மனு ஆதி - மனு முதலிய வடமொழி நீதிநூல்கள். ஒரு குலத்துக்கு ஒருநீதி- ஒவ்வொரு வகுப்புக்கு ஒவ்வொரு வகையான ஒழுக்கம்; அதாவது மக்களுள் பல வகுப்புக்களைப் பகுத்து உயர்வு தாழ்வு கற்பித்து உயர்வு தாழ்வுக்குத் தக நடுநிலையின்றி ஏற்றத்தாழ்வான முறைகளை ஒரே வகைக் குற்றத்திற்கு விதித்தல். திருக்குறளில் இத்தகைய வருந்தத்தக்க நடுநிலை பிறழ்ந்த முறைகள் கூறப்பட்டில என்பது தேற்றம்.

தாழிசை. கஉ. கரைத்து - உருகச்செய்து. மலம் கெடுக்கும் - மும்மலத்தை யொழிக்க வல்ல. கனம் சடை என்று - கனமென்றும் சடையென்றும் உருவிட்டு.

"திருவாசகத்திற்கு உருகாதார்
ஒருவாசகத்திற்கும் உருகார்"

"வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க்
[காண்கிலேம்

திருவா சகமிங் கொருகா லோ
[திற்
கருங்கல் மனமுங் கரைந்துகக்
[கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து
[நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்
[விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய
[ரிலரே"

என்ற நால்வர் நான்மணிமாலை அடிகளின் கருத்து மனங்கரைத்து என்பதிற் குறிக்கப் பட்டது. மும்மலம் - ஆணவம், மாயை, கன்மம். இவற்றைக் கெடுப்பது திருவாசகம். மாண்டோர் - மாட்சிமைப்பட்டவர்; மாண் : பகுதி. சங்கிதை, பதம், கிரமம், சடை, கனம், வருணக் கிரமம் முதலியன வேதத்தின் மூல பாடம் ஒரு சிறிதும் பிறழா திருத்தலை நோக்கி ஏற்பட்டவை. பொருட்பயன் கருதியமையாதவை. இவற்றுள், கனம், சடை என்பன வேதத்தை மொழிமாற்றி உருவிட்டுக் கூறும் வகை. கனம்-வருந்திப் படிக்க வேண்டுவதாயுள்ள முறை. சடை - சடைபோற் பின்னிக் கூறும் முறை.

தனிச்சொல்:- என ஆங்கு - என்று இவ்வாறாக. தனிச்சொல் எனினும், விட்டிசை, கூன், தனிநிலை எனினும் ஒக்கும்.

ஆசிரியச் சுரிதகம்

சுரிதகம் எனினும், மடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல் எனினும் ஒக்கும். குளிநிரை நீர்ச்சுழி போல நின்று சுரிந்திறுவது சுரிதகம்; அதாவது சுருக்கிக் கூறுவது.

சுரிதகம். நிற்புகழ்ந்து - உன்னைப் புகழ்ந்து: நெடுந்தகை - பெருமைக் குணம். பழம்பணி - பழைய அணி. நாற்கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். மேய - பொருந்திய. மீக்கொள - மேம்பட. வெள்ளியதெனினும் - வெள்ளியாலாகியதாயினும் (சாரமற்ற தாயினும்). ஒள்ளிய - ஒளி பொருந்திய. சிறுவிரல் அணி - சிறு விரலில் அணியப்படும் ஆழி. கொண்மதி - கொள்வாய்; மதி : முன்னிலை யசை. கொடுமலையாளம் என்றது, கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள் மலாடு என்ற பெயருடன் மலையாளம் ஒன்றாயிருத்தலால், இந்நூலாசிரியர் வாழும் நாடும் செந்தமிழுக்கு உரியது அன்றென்று சாதுரியமாக அவையடக்கம் உரைத்ததாகும். இச்செய்யுளில், தமிழ்த் தெய்வத்தின் மைந்தர் என்றது, தமிழ் பயிலுவோரை. தமிழ்த்தெய்வத்துக்கு ஆபரணம் என்றது தமிழ் நூல்களை. பழம் பணி புதுப்பிப்பவர்-பழைய நூல்களைப் பிழையறப் பதிப்பித்து வெளியிடுபவர். புதுப்பணி செய்பவர் - புதிதாக நூல்கள் எழுதுபவர். கடையேன் - பிற்பட்டவன் என்பதோடு தாழ்வுடையவன் என்றும் பொருள் தருவது. கொண்மதி என்றதை மதிகொள் என மாறி இயைத்து அறிவில் ஏற்றுக்கொள் என்றலுமாம்.

நேரிசை வெண்பா. அமையத்தக. ஆட்டும் - ஆட்டுவிக்கும்.

நீ சுமை பொறுப்பது எவன் - நீ பாரம் தாங்குவது என்ன காரணத்தால். நயந்தால் - விரும்பினல். ஆடுவம் - ஆடுவோம். நாணம் அவம் - வெட்கம் கொள்ளுதல் வீண்.

இந் நாடகத்தைச் செய்ய நினைத்த மனம் சுமை தாங்க மாட்டாது திகைப்பதை அறிந்து கடவுள் திருவருளால் யாவும் நடைபெறவிருக்கும் அதற்கு, மாறுபடக் கருதி வருந்துதல் வீண் என்று தேற்றியவாறு.

பாயிரவுரை

முற்றிற்று.

விளக்கச் சிற்றுரை

முதல் அங்கம்

முதற் களம்

[ ] இவ் அடையாளத்துட் காணப்படுபவை ஆசிரியரவர்கள் முதற்பதிப்பில் எழுதிச் சேர்த்துள்ளன.

ஸ்ரீவக வழுதி மதுரைமாநகர் விட்டுத் திருநெல்வேலியைத் தலைநகராகக்கொண்டு அதிற் கோட்டை முதலியன அமைத்து வீற்றிருக்குங் காலத்து, அவரிடத்து அன்புமிகுந்த சுந்தரமுனிவர் திருநெல்வேலிக்கு எழுந்தருளினார். எழுந்தருளிய சுந்தரமுனிவரை வரவேற்குஞ் சிறப்புடன் நாடகந் தொடங்குகின்றது.

1. சிங்காதனம் - சிங்காசனம் (வடசொல்) அரியணை.

2. சேர்மின் - சேர்த்து வையுங்கள். சீரிதே - ஏ: அசை; சீரிது : சீர்மை என்னும் பண்படியாகப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்று; இச்சொல்லை, சீர்+இது என்றும் பிரிக்கலாம்.

3. இணை-இரண்டு. கடிமலர் : கடி - மணம் : உரிச்சொல்.

7. கழைகறி - கரும்பைக்கடிக்கின்ற. பிளிறு - களிறு இரைதலைப் பிளிறுதல் என்ப.

8. உளை - பிடரி மயிர். குரம் - காலின் குளம்படி. ஓதை - ஓசை; ஓசை, ஒலி, முழக்கு என்பன ஒருபொருள் குறித்த பல சொற்கள்.

18. விஜயீபவ (வடசொல்)- வெற்றி யுண்டாக. ராஜேந்திரா- இராஜ+இந்திர : குண சந்தி.

23. விஜயன்-விசயன். மிகுந்த வெற்றியுடையவன், அர்ச்சுனன்.

25. பவபாசம் - (வடமொழித் தொடர்)பிறப்பைத்தரும் பந்தம்.

26. இரிந்திட - முறிந்தோட.

33. பீடு - பெருமை.

35. கடக்கரும் - கடக்க + அரும் - கடத்தற்கருமையான.

36. ஆசி - ஆசீர்வாதம் (வடசொல்) நன்மொழி. நனி - மிகுதி: உரிச்சொல்.

37. புரி - கோட்டை, அரண்.

41. ஊன்வரு பெருநோய்-பிறவிப் பிணி.

45. கேண்மோ - கேள்+மோ —மோ: முன்னிலை யசை.

46. தென்பாண்டி: திருநெல்வேலி.

47. வாதவூரர்-திருவாதவூரிற் றோன்றிய மாணிக்கவாசகர்.

48. 51. [இவ்வரிகளின் பொருள் பூகோள படம் நோக்கில் எளிதில் விளங்கும். நிலப்பகுதியை ஒரு பசுவாகவும் அதிற் பரத கண்டமாகிய இந்தியாவை அப்பசுவின் மடியாகவும் பாவிக்கில் தென்பாண்டி நாடு அம்மடியினின்றும் பால் சுரக்கின்ற சுரையாக, தானே தோற்றும்.]

49. சரதம் (வடசொல்) - உண்மை.

50. சுரை - சுரத்தலை உடையது.

54. பனிவரை - இமயமலை.

55. [தலையாக - தலையாகவும்; உம்மை : உயர்வு சிறப்பும்மை.]

56. குறுமுனி - குறுகிய வடிவங்கொண்ட அகத்திய முனிவர். மலை - மலையம், பொதியம்.

58. பொன்வரை-பொன்மலை. இமயமாகிய மேரு. [இங்கு அகத்திய முனிவர்க்குச் சூட்டி வழங்கும் பெருமை மலைய மலைமேல் ஆரோபிக்கப்பட்டிருக்கிறது.]

59. சந்நு-ஓர் முனிவர். இவர் காதின் வழி கங்கை வந்ததால் சாநவி என்னும் பெயர் பெற்றது.

60. வாயசம் (வடசொல்) - காகம். பொன்னி - காவிரி; பொற்றுதுக்கள் உடைமையின் பொன்னி. இந்திரன் வேண்டுகோட் கிணங்கிய விநாயகக் கடவுள் சையகிரியிற் றங்கிய குறுமுனிவரின் கரகநீரைக் காகவடிவெடுத்து வந்து கவிழ்த்தினுர்; இதனுல் பொன்னி காவிரி என்னும் பேரைப் பெற்றது. மேலும் இந்திரன் நந்தனவனமாகிய காவை விரியச் செய்தலால் காவிரி என்றலுமாம். இது,

“சுரகு லாதிபன் தூய்மலர் [நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றி [ஞேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்கு [வாம்.”

என்ற பிரபுலிங்கலீலைக் காப்புச் செய்யுளான் உணரப்படும்.

64. வேழம் - யானை. மருப்பு - தந்தம் (வடசொல்). காழகில் - வைரம் பொருந்திய அகிற்கட்டை.

65. சந்தனுடவி - சந்தன + அடவி : தீர்க்கசந்தி. அடவி-காடு. சாடி - மோதி.

67. தடம்பணை - பெரிய பள்ளத்தாக்கு ; பணை - வயல்.

69. வாரம் - ஓரம்.

70. [தாமிரவர்ணி - தாமிரபர்ணி, தாமிரபன்னி, தாம்பிரபூரணி என்ற பல பெயருடன் வழங்கும்பொருநைநதி;] பர்ணம் (வடசொல்)-இலை ; இந்நதி நீரில் செம்புத் தாதுக்கள் எடுக்கப்படும்.

70-71. தாம்பிரபரணியாறு கங்கை காவிரி இரண்டினும் மேம்பட்டதென்பது.

73. பொன்னகர்-தேவலோக நகர், அமராவதி. கண்டனை - கண்டாய்.

74. அடையலர் - பகைவர், பொருந்ாதவர்.

74.-75. [அகழ், விரிவிற்கும் சத்துருக்களின் பயத்தளவிற்கும் உவமை.]

75. கட்செவி - பாம்பு; கண்ணையே செவியாகவும் கொண்டது : அன்மொழித்தொகை. சுடிகை - உச்சிக்கொண்டை.

76. அகழ்-அகழ்தலுடையது, தோண்டப்பட்டது, கிடங்கு.

77. மஞ்சு-மேகம்(வடசொல்.) துஞ்சு - தங்கு. இஞ்சியுரிஞ்சி - மதிலை யுராய்ந்து (தேய்த்து).

78. உதயன் (வடசொல்) - ஞாயிறு, பகலவன்.

75-78. மேகமண்டல மட்டும் அளாவிய கோட்டை மதிலைச்

சூழ்ந்து பாதாளம் வரை ஆழ்ந்திருக்கும் அகழியின் நிலைமையைக் கூறியவாறு.

79. பதாகை (வடசொல்) - கொடிச்சீலை. மீனம்-மீன்; மின்னுவது. அம்: சாரியை.

80. உவாமதி-நிறைமதி, முழுநிலா.

79-80. மீன்கள் அழுக்குகளை உண்ணுதல் இயற்கை.

81. வெயில்-ஒளி. எயில்-மதில்

82. எந்திரம் (வடசொல்) - பல்வகைப் பொறிகள்.

83. வெறி - மயக்கம். நெறி - வஞ்சக வழி.

88. குரவ - ஆசிரிய, பெரும, குரவன்: முதல் வேற்றுமை.

89. துன்னலர் - பகைவர்.

90. வெருவுவர் - அஞ்சுவர். பொருது - போர் செய்து.

91. உள்ளற்பாற்றோ - கருதுந் தன்மையதோ.

92. புரை - குற்றம்.

98. ஆயற்பாற்றது - ஆராயத் தக்கது.

99. வாயில் - வழி.

107. சேடியர் - தோழிமார்.

110. சிவிகை (வடசொல்) - பல்லக்கு. சின்னம் - குறி, அடையாளம்; (வடசொல்) திருச்சின்னம்.

116. [புராணம் - பழங்கதை.]

117. படிறு - வஞ்சகம்.

119. உவர்த்து - வெறுத்து.

121. விரசமாய் - வி + ரசமாய், சுவையற்றதாய்.

123. துனி - வெறுப்பு.

126. பரிவு - அன்பு, இரக்கம்.

132. கமலை - கமலத்தில் விருப்பவள். கலைமகள் முன்னர்க் குறிக்கப்பட்டிருப்பதால் ஈண்டு இலக்குமி.

129 - 135. மனோன்மணியின் உயிர் உடல் முதலியனவாக அன்பு அழகு முதலியன உருவகிக்கப்பட்டுள்ளன. பாண்டியன் தொல்குலம் மதி (சந்திரன்) ஆகவும், அதிற்றோன்றிய மதியென்றது மதி தோன்றிய பாற்கடலிற்றோன்றிய மதி என்றார்.

138. வன்னி - நெருப்பு.

139. அவி - அவிசு, அவிழ்.

142. வெய்துயிர்ப்பு - பெருமூச்சு.

146. புங்கவர் - உயர்ந்தவர்.

147. மணி - மனோன்மணி.

[காவியங்களுக்குரிய மலை, நதி, அரண் இவற்றின் வருணனை இக்களத்தில் ஒருவாறு வந்தமை காண்க.]

முதல் அங்கம்

இரண்டாம் களம்

ஆசிரியத் தாழிசையாவது மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவது.

தாழிசை 1. [சுடுகணை தூர்ப்பவன் - மன்மதன்.] கணை - அம்பு.

தா-2. வடு - மாறுத்தழும்பு.

தா-4. கடுவுண்ட கண்டர் - அமுதமெடுக்கத் திருப்பாற் கடலைக் கடைந்த காலத்து உண்டாய நஞ்சுண்ட கண்டத்தை

புடையவர், திருநீலகண்டர், கடு-கஞ்சு, விடம்.

தா-5. பலி (வடசொல்) - பிச்சை: உடைந்தான் - தோற்றான். தெருவிற் பலிகொண்டது என்றது, தாருகாவனத்துச் செருக்குற்ற முனிவர்களின் செருக்கை யழிக்கும் பொருட்டுச் சிவபெருமான் கங்காள நாதராகச் சென்று பிச்சையெடுத்தமையைக் குறிக்கும்.

தா-6. கரத்தல் - மறைதல்.

[2,4,6 தாழிசைகள் காமதகனனுடைய பெண்ணொரு பாதியாகுந் தன்மையைக் (அர்த்த நாரீசத் தன்மையை) குறிப்பிக்கின்றன.] இத் தாழிசைகளிலிருந்து வாணியின் காதலனாகிய நடராசன், காதலால் அரையுருவாய் மெலிந்திருக்கின்றானென்றதும் மனோன்மணி காதற் சுவை யறியாதவள் என்பதும் விளங்கும்.

4. [மன்றலு மானதுபோலும்- மணந்த பின்னர் நாயகன் பேர்கவிலாமை வழக்கானதால்.] வார் குழல் - நீண்ட கூந்தல்: அன்மொழித்தொகை. குழல் - கூந்தலைக் கட்டுமுறை யைந்தில் ஒன்று.

7. இச்சகத்து - (1) இச்சையுடன், (2) இந்தப் பூமியில்.

12. சிவந்த - நாணத்தால் சிவந்த [C. F. Blushing.] கபோலம் - கன்னம். நுவன்று - சொல்லி. நுவல் : பகுதி.

17. இதில் வரும் பழமொழி இன்மைப் பொருள்தர வழங்குவது. பசுவன்றி எருதீனுதென்க. ஈனுதல் பசுவேயன்றி எருதன்றென்க.

25. இயம்புகோ - இயம்புவேன்.

28-29. எட்பூ ஏசிய நாசியாய்- எள் மலரிலும் சிறந்த மூக்குடையவளே! பெண்கள் நாசிக்கு எட்பூ உவமை.

35. இடும்பை - துன்பம், இன்னல்.

38. இது மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா என்னுங் கருத்தது.

43. கைரவம் - ஆம்பல்.

46. வள்ளை - வள்ளையிலை: காதுக்குவமைப்பொருள்.

47. வெம்மொழி - கொடுஞ்சொல்.

50. ஒருவர் - நடராசர்.

59. [ஒக்குமோ - ஒப்பரோ.]

66. பெட்பு - ஆசை.

75. கண்டோ - கற்கண்டோ. காரிகை யணங்கு - காரிகையாகிய அணங்கு, மிகவும் அழகுடையவள்: ஒரு பொருட் பன்மொழியுமாம்.

87. வற்கலை-வலியவுடை; மரவுரி.

89. சிந்துரம் (வடசொல்) - சிவப்பு.

90. வாரிசம் (வடசொல்) - தாமரை.

100. சதுவும் - பற்றும்.

107-108. [சக்கரம் இருத்திட - யந்திர ஸ்தாபனஞ் செய்ய.]

110. வடதளவுதரவாணி- ஆலிலைபோல் பரந்த வயிற்றையுடைய வாணியே.

112. வாசிட்டாதி - வாசிட்டம்+ஆதி, வாசிட்ட முனி செய்த (நூல்). வைராக்கியம் -

இன்ப உலகத்தை வெறுக்கச் செய்வது.

119-120. ஆமையின் புறச் சார்பு அலவனொடு ஆங்கு வது வயும்-ஆமை புறவடிக்கும் அலவ வன் முழந்தாளுக்கும் உவமை என்றது குறித்து.

125. நச்சினேன் - விரும்பி னேன்.

126. பிச்சி-பித்தி, பைத்தியக் காரி.

132. அயிராவதத்தன் - இந்திரன், அயிராவதமென்னும் வெள்ளை யானை யூர்ந்து செல்ப வன்.

133. அனிச்சம்-அனிச்சப் பூ. இது பெண்களடி மென்மைக்கு வமை. நெருஞ்சில் - நெருஞ்சி முள்.

135. அஞ்சனம் (வடசொல்)- மை: கண்ணிடு மை. கஞ்சனக் கதுப்பு - கண்ணாடிபோன்ற கன் னம், (வடமொழித்தொடர்.)

139. அணங்குறல்-வருந்தற்க. சுணங்கு-தேமல். பொன்-இலக் குமி, தங்கம்.

141. முகை முகிழ்த்தல் - பூத் தல். [தாமே நட்டு வளர்த்த முல்லை பூக்குங்கால் இராச கன் னியர்க்கு விவாகம் நேரிடுமென் பது காவிய வழக்கு.] வல்லை - விரைவு.

146. துச்சம்-அற்பம், புன்மை, வெறுக்கத்தக்கது.

149. சந்தம் (வடசொல்) - அழகு.

152. துன்று இரா-நெருங்கிய இருள். தோகாய்: உவமை யாகு பெயர், தோகை என்பதின் விளி.

[இக் களத்தில் மன்மதோ பாலம்பனமும் கேசாதிபாத வரு ணனையும் ஒருவாறு வந்தமை காண்க.]

முதல் அங்கம்

மூன்றும் களம்

8. நறை - தேன், வாசனை. ஆர் - நிறைந்த. தார் - மாலை.

14. ஓவல் - இடையறுதல். உளுற்றுமின் - செய்யுங்கள்: மின் ஈற்று ஏவற்பன்மை.

17. அழுக்காறு - பொறாமை: அழுக்கறு என்னும் பகுதி நீண்டு தொழிற்பெயராயிற்று.

25. சினகரம் - கோவில். மனோகரம் - மனத்தைக் கவர் தல்.

26. உய்ப்பினும் - செலுத்தி னும். உய்: பகுதி.

29. முசிப்பு - முடிப்பு.

32. சிட்ட - கற்றறிவுடைய.

33. புரந்தரன் - இந்திரன். கரந்து - மறைத்து.

36. ஒவ்வும் - பொருந்தும்.

39. கைப்பிள்ளை-சிறு பிள்ளை. கை - சிறுமை.

39. [இதன் பின்வரும் வெண்பா, உண்மைத் துறவியா

கிய முனிவர்மேல் குடிலன் அவமே பொருளாசை ஆரோபித்ததைப் பழித்து நாராயணன் செவியறிவுறுத்தும் துறையாகக் கூறும் கூற்று.]

கோற்றொடி - அழகிய வளையலணிந்த பெண்.

பார்த்திபன் - அரசன், பாரை விளங்கச் செய்பவன்.

51. அறத்தாறு-அறநெறி.

53. அரந்தை - துன்பம்.

56. வதுவை - திருமணம்.

59. சீலம் - ஒழுக்கம்.

60. சாலவும் - மிகவும்.

64. இடியேறு - ஆணிடி, பேரிடி.

65. அடு - கெடு, கொல்.

70. தொழும்பு - அடிமை.

73. வியர்த்தம் (வடசொல் வி+அர்த்தம்) - வீண் - பயனற்றது.

77. நேராள் - உடன்படாள்.

84. திரைத்தது - சுருங்கிற்று.

87. வாழ்தும் இவ்வயின்-இவ்விடம் வாழ்வோம்.

95. [இவ்வரிக்குப் பின் வரும் வெண்பாவில் 'சோற்றதற்கா' என்னும் தனிச்சொல் சகடனைக் குறிக்குங்கால் 'சொற்றதற்கா' என்பதின் நீட்டல் விகாரமாய் அவனது தவறு மொழியையும் சுட்டி நிற்கின்றது.]

104. பொருவரும் - ஒப்பற்ற.

110. பூவை-நாகணவாய்ப்புள்.

117. பரற்கல் - கூழாங்கல்.

129. இதம்-நன்மை, இனிமை.

133. [இராச்சிய தந்திரத்து - இராச்சிய காரியங்களில்.]

149. நளினம் - தாமரை.

152. குமுதவாய் விண்டு - செவ்வாம்பல் மலர் போன்ற வாயைத் திறந்து.

153. குயிலின் மிழற்றி-குயில் போற் பேசி.

156. மந்திரம் - வீடு.

158. கண்படு மெல்லே-துயில் கொளும்போது, தூங்கும்போது.

163. நாலி - முத்து.

165. கட்டழல்-கண்+தழல் - நெருப்பு.

166. ஒல்கும் - தளரும்.

169. அயினி நீர் - ஆலத்தி நீர். பூதி - விபூதி, திருநீறு.

173. இழுது - நெய்.

178. கங்குல் - இருள்.

180. சிரசிரா - சிரசு+இரா - தலையிருக்க மாட்டா, தலைத் தண்டனை வரும்.

182. நிமித்திகர் (வடசொல்)- சோதிடர், குறி கூறுவோர்.

183. பெண்ணையந்தார் சூடிட - பனம்பூ மாலையைச் சூடும்படி.

184. பெண்ணை - மகளை. அம் தார் சூட்டெடன - அழகிய மாலையைச் சூடும்படி செய்யென; அதாவது, வஞ்சி யரசனுக்கு மணம் செய்து கொடுமின் என.

203. அங்கணம் (வடசொல்)- முற்றம்:

[இக்களத்தில் கணக்கண்டு, காமங்கொண்ட மனோன்மணியின் காமசுர வருணனை ஒருவாறு வந்தமை காண்க.]

முதல் அங்கம்

நான்காம் களம்

4. அரும்பிய அம்புலி - தோன்றிய சந்திரன்.

6. உறுத்தும் - வருத்தஞ்செய்யும். ஒறுத்து - தண்டித்து.

7. சூல் - கருப்பம்.

12. பஞ்சவனம் - பஞ்சவர்ணம்; ஐந்து நிறம்.

13. பிசிதம் - வேம்பு.

14. வானவன் - தேவன்.

16. சேயது - சேய்மையிலுள்ளது, தூரத்திலுள்ளது. போந்தை - பனைமரம்.

12-22. [இவ்வரிகளில், பஞ்சவன் - பிசிதம் - வானவன் - போந்தை என்ற மொழிகள் முறையே பாண்டியனையும், அவனது மாலையாகிய வேம்பையும், சேரனையும், அவனது மாலையாகிய பனம்பூவையும் குறிப்பித்து நிற்பதால் பாண்டியன் மகளாகிய மனோன்மணி சேரனது பேரழகு கண்டு மயங்கி இச்சையுறுவதை யுணர்த்த அறிகுறியாக வந்த ஒரு கனாக் காட்சி தொனியருத்தமாக் கூறியதாயிற்று.]

27. துப்பு - பவளம்.

30. காம்பு அடு - மூங்கிலைப் பழிக்கின்ற. போன்மே - போலுமே, போலும் என்பது போன்ம் எனத் திரிந்தது: மகரக் குறுக்கம்.

37. பரிதி - சூரியன்.

42. மிகை - துன்பம்.

57. அழல் - அழுதல்.

61. விழுமம் - துன்பம்.

62-63. மின்னேய் மருங்குல் - மின்னலை ஒத்த இடை.

65. உகுத்து - சிந்தி. வம்பு - புதுமை, வீண்.

69. நச்சியது - விரும்பியது, நச்சு: பகுதி.

73. விநயமாய் - பணிவாய்.

82. கற்பனை - கட்டளை.

86. பாலை - பாலைவனம்.

89. தாரு - மரம்.

92. ஆறலை - வழிப்பறி.

115. சாடில் - வீழ்ந்தால்.

121. ['அரிவையர் பிழைப்பர்' என்பதை 'எங்ஙனம்' என்ற ஜீவகன் சொல்லோடு சேர்த்துத் தன்மேல் சாட்டப்பட்ட பிடிவாதத்தை அரசன்மேலேற்றி வாணி மறுமொழி கூறினாள் என்க.]

131. மாற்றலர் - பகைவர்.

148. மண்ணுநள் - கழுவாள்.

152. பணி - நகை.

169. புளியம் பழமும் தோடும் போலாமென்பது, ஒன்றிற்கொன்று பற்றற்ற தன்மையுணர்த்துவது.

180. முருகு - தேன், மணம்.

183. நிசிதம் - கூர்மையான.

194. துனி - வருத்தம்.

197. திருவாழ்கோடு - பொன்மகள் வாழுமெல்லை.

187-199. நிலவுலகிலுள்ள மற்ற முடிமன்னரையெல்லாம் பயனற்ற திருகுகள்ளியும் கருவேல மரத்திரளுமாக வெட்டியொழித்து, மன்பதை சுகத்தோடு வாழும்படி (தனது வெண்கொற்றக் குடையால்) நிழலளித்து, இன்னுமழியாத பகைவரெவரேனும் வந்தெதிர்த்தாலும் அவரது தலையை யறுத்துத் தள்ளும் வீரமே இலைகளாக விட்டும், புகழென்று சொல்லப்

பட்ட எங்கும் மணமெடுத் தோங்குகிற நற்குணங்கள் பல பல பூக்களாகப் பூத்தும், துயக்குண்ட ஆன்மாக்களின் துன்பங் களையும் படிக்குத் தனது உள்ளங்கனி கின்ற தண்ணளியே பழங்களாகப் பலந்தந்தும், தருமராச்சிய மென்ற தனிப் பேர்கொண்ட செந்திருவாழு மெல்லையாகிய சேர தேசத்தை யாள்வோனாகிய புருடோத்தமன் என்னும் தன்னிகரில்லாத் தலைவனையன்றி, நினது கற்பகப் பூங்கொடியாகிய மனோன்மணி மணந்து சுற்றத் தகுந்த கற்பகத்தரு வேறொன்று மில்லை என்பது.

202. இடுக்கண் - துன்பம்.

[இக்களத்தில் வாணியின் காதல் நிலைமை வாணியின் வாசகத்தால் வருணிக்கப்படுகிறது.]

முதல் அங்கம்

ஐந்தாம் களம்

1. சக்தி - வலிமை.
3. பெட்பு - விருப்பம்.
9. கற்றை - ஒன்று சேர்ந்தது.
19. அயர்த்தோம்-மறந்தோம்.
39. மாறன் - பாண்டியன்.
40. இறுமாப்பு - செருக்கு.
47. [அரசனைப் போர்க்களத்தில் தானே சூதாகக் கொலை புரிய உட்கொண்ட குடிலன் கருத்தை அவாய்நிலைப் பொருளால் இவ்வரி உணர்த்துகின்றது.]
50. உற்பவம் (வடசொல்) - தோற்றம்.
52. இந்துஇரவி-சந்திரன் சூரியன், மதி கதிர்.
66. சுவானம் (வடசொல்) - நாய்.
67. குக்கன் (வடசொல்)-நாய்
75. இணையறு - ஒப்பற்ற.
78. உதாரம் (வடசொல்) - தயாளத்துவம்.
88. [புண்ணியம்போல - போலிப் புண்ணியமாக.]
88. மேதினி - உலகு.

[இக்களத்தில் குடிலன் துர்க்குணம் அவனது மொழிகளாலேயே விளக்கப்படுகிறது.]

கலித்துறை

நிதனம் - அழிவு.

தனு கரணம்-உடம்பு கருவி.

[முதலங்கம் முடிவில் வருங் கலித்துறை அவ்வங்கத்துள் நடந்த கதையைத் தொகுத்துக் கூறி, ஞானபரமாகப் பொருட்படுத்துகிறது. மதுரையாகிய கூடஸ்த நிலை தவிர்ந்த ஜீவனாகிய ஜீவன் நெல்வேலியாகிய அன்னமயாதி பஞ்சகோச சரீராபிமானத்தால் குருவாசகமாகிய அருள்வழி விடுத்துக் குடிலனாகிய மாயா வசத்தனாய்த் துக்கத்திற் காளாகின்றான் என்பது குறிப்பு.]

இரண்டாம் அங்கம்

முதற் களம்

2. பொறையன் - சேரன்.

3. மருமான் - மருமகன்.

4. மன்றல் - திருமணம்.

9. மந்திரம் - ஆலோசனை, சூழ்ச்சி.

1-9. இவ்வடிகளில் ஜீவக வழுதி குடிலனுக்குப் பயந்து சுந்தர முனிவர் தன்னிடம் கூறியவற்றைக் குடிலன் தனக்குக் கீழ்ப்பட்டபதவியில்இருப்பவனுயிருந்தும் தன்னின் மேம்பட்டவனுகக் கருதி அவனிடம் கூறுகின்றான்.

12. பரிசு - தன்மை, விதம்.

14. அற்றம் - சமயம், காலம்.

19. காண்டகும் - பார்க்கத் தக்க (அழகு வாய்ந்த)

20. மாண்ட - மாட்சிமைப் பட்ட, மாண் : பகுதி.

24. செய்வான் - செய்ய: வான் ஈற்று வினையெச்சம்.

23. அனந்தைப்பதி - திருவனந்தபுரம்.

29. மொழிப்பயன் - சொற்பொருள்.

33. கண்ணகல் ஞாலம் - இடமகன்ற பூமி. ஞாலம் - ஈண்டு இடவாகு பெயராய்ப் பூமியிலுள்ளவரை யுணர்த்தும்.

29-39. இங்கு குடிலன் தன் மகனுக்கு மனோன்மணியைக் கொள்ளவும் பிறவரசர் தேடி வாராதிருத்தற்கு முபாயங்கொள்வான்போல், எளிய ஜீவகனை மணஞ்செய்ய முதல் முதல்பேசி வருதலிணங்கிய ஆடவரில் லுள்ளாரே யென்றும், ஆடவர் தேடி மன்றல் சாற்றுதல் தகாது என்றும் மெல்ல வரசனுக்கு உரைக்கின்றமை காண்க.

47. கொழுந்து - மணமுள்ள பச்சிலை, இங்கு மனோன்மணியைக் குறிக்கின்றது.

54. நேரார் - ஒப்பாகார்.

63. எதிலன் - அயலான்.

69. கடிபுரி - காவல் மதில்.

73. சூழ்ச்சித் துணைவர் - ஆலோசனைச் சபையினங்கத்தவர்.

75. [நன்செய் நாடு - நாஞ்சி நாடு; நாஞ்சநாடு என்று இக் காலத்து வழங்குவர்.]

78. மருதம் - நானிலத்தில் ஒன்று, அது வயலும் வயல் சார்ந்த இடமும். நெய்தல்-கடலும் கடல்சார்ந்த இடமும். மயங்கி - கலந்து.

80. மழலை - இளஞ்சொல். வண்டானம் - நாரை. புலர்மீன்- உலர்த்துமீன் (கருவாடு).

81. ஓம்புபு - ஓம்பி, பேணி. நுளைச்சியர் - நெய்தல் நிலப் பெண்டிர். குழை - காதணி.

83. இருஞ்சிறை - பெரிய சிறகு; (கரிய இறகு.)

84. அலக்கண் - துன்பம்.

80-84. [நெய்தல் நிலத்தில் உலர்த்தப்படும் மீனை மருத நிலத்து வண்டானக் குருகு கவர அதை ஓட்ட நுளைச்சியர் எறிந்த பொற்குழை கடற்கரையிலுள்ள புன்னை நிழலிலுறங்கி அம் மலர்த் தாதுக்களால் பொன்னிறம் பெற்றுத் திரும்பி மருநிலத்த

திற்குச் சென்ற எருமையின்மேலிருந்து சிறகுலர்த்தும் கடற் காக்கையை வருத்திற்று என்பது பொருள்.]

85. கேதகை - தாழை.

87. தாது - மகரந்தம்.

85-87. நெய்தலுக்குரிய கைதை மலரின் நிழலைத் தனது பெடையென மயங்கிச் சென்ற மருத நிலத்துத் தாராக் குருகை எளனஞ் செய்து சிரித்த ஆம்பல் மலரின் வாய்நிறையத் தன் மலர்த்தாதினைக் கொட்டிக் கோங்குமரம் விலக்கும் என்பது பொருள்.

88. வால்வளை - ஒளி பொருந்திய சங்கு.

89. ஓதிமக் குடம்பை என்று உன்னுபு-அன்னத்தின் முட்டை என்று எண்ணி.

90. அடம்பு : நெய்தல் நிலத்தில் படரும் கொடி.

93. காரா - எருமை, காரான் எனவும் படும்.

94. அலமுகம்-கலப்பை நுனி. தாக்குழி - மோதுமிடத்து. அலமரும் - வருந்தும்.

95. ஊடல் - பிணக்கம்.

81-98. கருப்பஞ் சாற்றைக் காய்ச்சுகின்ற மருதநிலச் சாலையில் எழும் பெரிய புகையானது நெருங்கி மண்டுதலினாலே வாடிப்போன நெய்தல் நிலத்துள்ள கொடிகளின் பசுந் தழைகள் தளிர்க்கும்படியாகப் புல் மேய்ந்து வீடு நோக்கிச் செல்லுமெருமை யானது அப் புகையைக் கன்றென நினைத்துத் தீம் பால் சுரந்து பொழியும். கொழு நுனி பூமியைக் கிண்டிக் கொண்டு போம்பொழுது தன் பத்தை யடைந்த ஆமையானது பரத்தியர் தம் நாயகன்மாரோடு கொண்ட ஊடலின்கண்ணே தாங்கள் கோபத்தோடு தங்கள் மார்பில் பூசியிருந்து வழித்தெறிந்த குங்குமக் குழம்பினிடை யொளித்துக்கொள்ளும்.

97. அன்றில்-ஒன்றில்லையேல் ஒன்றில்லாதது; இணைந்தே வாழும் பறவை.

98. நளி - பெருமை. கோட்பறை விளி - கொன்று கொள்ளுதற்கு இசைவாக அடிக்கப்படும் பறைக்கொட்டு முழக்கம்.

99. சாலி - நெல்.

100. பஃறி - ஓடம். நிரை - வரிசை.

99 - 102. அழகிய கிளைகளையுடைய மருத மரத்திலே வாழ்ந்திடும் அன்றிலானது நெய்தல் நிலப்பறை யோசையைக்கேட்டு இரா முழுதும் கண் துஞ்சாது. மூங்கிலென வளர்ந்த நெற்கதிர்க் குலையோடு கூடிய பயிரின் தாளினிடத்தே உப்புப் பாரமேற்றி நிறைந்த கப்பற் கூட்டத்தை (நங்கூரம்போட இசைவில்லாத பொழுது கப்பல் காற்றால் வேறு கரைக் கடியுண்டுபோகாது) கப்பற் கயிற்றினால் கட்டுவர்.

நெல் தாளில் கட்டுவாரெனக் கொள்க. இங்கு நெய்தல் நிலத்தில் உப்புப் பாரமேற்றியிருக்குங் கப்பல்கள் மருத நிலத்திலுள்ள நெற்பயிர் மூட்டிலே கட்டப்படுதலானது இவ்விரு திணையினது சமீபத்தையும், கப்பலையும் பிணிக்கத்தக்க விதமாய் நெற்பயிர் மூடுகள் மூங்கிற் பண்ணை மூடுகள் போல ஆனையடிப்பட்டு நின்றதையுங் குறித்த

படி. இப் பெருமை பொருந்திய நஞ்சை நாடெங்கும் இரவும் பகலுந் தம் வரவொழிந்தாலும் மாறி வந்தாலும் மழையானது அவ்வப் பருவகாலங்களிலே பெய்தலாகிய தங் கடமையில் வழுவுதல் செய்யாது. தப்பினுமென்றவடியால் வரவொழிதலும் மாறிவருதலுங் கொள்ளப் பட்டன. இத் தவறுப்பொருள் தவறினும் மழை தங்கடன் தவறுதென்றமையின் அவ்வப் பருவங்களில் காலமறிந்து பெய்யும்மழை குன்றுவெனப்பட்டது.

103. கொண்மூ - மேகம். கொள் கலம் - பொருளைக் கொள்ளக்கூடிய பாண்டம்.

105. மிடி தீர் - வறுமையைப் போக்குகின்ற.

106. முந்நீர் நீத்தமும் - கடல் வெள்ளமும். முந்நீர் - ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தன்மையுடையது; ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்று மூன்று நீரை உடையது எனினுமாம். நீத்தம் - நீந்தப்படுவது, நீந்து + அம். அம்: செயப்படு பொருள் விகுதி.

111. ஓம் என ஓ இறந்து-ஓம் என்ற சத்தத்துடன் மதகுநீர் தாங்கும் பலகையைக் கடந்து.

110.-112. அந் நாஞ்சி நாட்டின் ஒரு பக்கத்தில் கால்வாய்களினிடத்தே நீரானது விம்மியேறி மதகைத் தாண்டிப் பாய்ந்து வீழ்கின்ற வெள்ளமானது "ஓம்" என்ற ஓசையுடன் விடாது ஒலித்தலினாலே குடிலை மந்திரத்தின் தொனியே கேட்கும்.

113. இரணம்,¦உப்பு-உப்பளம்.

114. பழனம்-வயல்.

115. தூமம் - புகை.

116. கவடி - சோவி.

117. அலவன் - நண்டு.

118. துகிர்க்காலன்னமும் - செம்பவளம் போன்ற கால்களுடைய .அன்னப்பறவையும்: புகர்-கபில நிறம், மங்கிய செந்நிறம்.

119. செம்கண் போத்து - சிவந்த கண்ணுடைய செம்போத்து. கம்புள்-சம்பங்கோழி.

122. குழீஇ - கூடி.

124. அந்தியங்காடியின் சந்தம் - அந்திக்காலத்துக் கடைவீதியினழகு.

125. குழூஉக்குரல் - குழூஉக் குறிகளால் வியாபாரிகள் பேசும் வழக்கம் குறிக்கப்படுகிறது. குழூஉ - கூட்டம்.

113-126. வாசனை பொருந்திய பூவோடு கூடிய குவளைக்கொடிகளும் நானாவிதமான நிறங்களோடு கூடிய உப்பளங்களும் நிரம்பிய பூமியைக் கம்பளமாக விரித்துக் கொண்டும், தங்களுக்கு வெளிச்சம் தரும்பொருட்டுத் தாமரையினது சுத்தமாகிய மொட்டுகளைப் புகையிலாத விளக்காகக் கொண்டும் நிலவு வெளிச்சத்தைத் தருகின்ற முத்துக்களையும் சோவிகளையும் பணமாகக் கொண்டும் நண்டுகள் தங்கள் பல விரல்களாலே (இலாப நஷ்டம்) ஆதாயஞ் செலவு பார்த்து அப் பணங்களை நோட்டம் பார்த்து எண்ணவும் பவளம் போன்ற கால்களையுடைய அன்னப்பட்சியும், தவிட்டுநிறக் கால்களையுடைய கொக்கும், சிவந்த கண்களையுடையசெம்போத்தும், நீர்க்கோழியும், உரத்த சத்தத்

தோடுகூடிய நாரையும், தம்மினத்தையே சினந்து பார்க்கின்ற காடையும், பொய்யாப் புள்ளும், மீன்கொத்திப் பறவையும் என்றிவை பலவும் அளவிறந்தன சேர்ந்து தங்கள் தலையைச் சிறிது குறிப்போடாட்டியும், சிறகையடித்தும், சாயங்கால வேளையில் அங்காடியின் (கடையின்) அழகோவென்று கண்டோர் ஐயுறும் வண்ணம் தங்கள் தங்கள் சாதிக்குரிய சத்தத்தைப் பரவும்படி காட்டுகின்ற பெரிய ஓசை மட்டும் ஒரு சார் நிரம்பும்.

126. ஆர்தரும் - நிறையும்.

127. வீறுடை எருத்தினம் - இறுமாப்புடைய எருதுக் கூட்டம்.

128. ஈறு - முடிவு, எல்லே.

127-130. சங்கையில்லாத சகரர்களென்று சொல்லும்படியான உழவர்கள் வலியையுடைய உழவு மாடுகளைப் பொன்னேரில் பூட்டி ஒருவர்பின் னொருவராக ஒழுங்காய் நின்றுழும்வரை வாழ்த்திப் பாடும் குரவைப் பாட்டானது ஒரு பக்கத்தே வழங்காநிற்கும்.

131-145. வயலின் கண்ணே நெருங்கியுண்டான நாற்றுகளை நீரைப் பாய்ச்சிப் பிடுங்குகின்ற உழத்தியரும், அந்நாற்றின் திரள்களைச் சுமைகட்டத் திரைக்கின்ற பெண்களும், அல்லது திரைத்துச் சுமையாக்குகின்ற உழத்தியரும், நடுகை வயலுக்குக் கொண்டுபோகின்றவரும், நடுகின்றவரும், களையாகிய விரோதப் பயிர்களை எடுக்கின்ற உழத்தியரு முதலாயுள்ள கள்ளுண்டு களிக்கும் இப்பள்ளிகளினுடைய உழத்திப் பாட்டினின்றும் மற்றவர்கள் பாடுகின்ற பாட்டுகளினின்று முண்டாகின்ற ஓசையானது எப்பக்கமுஞ் செல்லும்படி கேட்கப்படுவது ஒரு பக்கம். மலைபோலரிந்து குவிக்கப்பட்டிருக்கின்ற நெற்போரின்மீது பிணையல் (வட்டம் வருகின்ற) எருமைக்கடாக்களானவை மேகம் போல் விளங்க, முழங்குகின்ற மருதநிலப் பறையானது மங்கல முழவுடனே கலந்து விம்முதல் ஒரு பக்கம். தம்முடலை ஒரு இறகினால் தடவுதலும் அது படுமுன்னே கூச்சங்கொண்டு சிரிக்கின்ற சிறுபெண்களைப் போல அந்த வளம் பொருந்திய பூதேவியானவள் கலப்பையோடு கூடிய கொழுவினது நுனியானது தன்மேல் படுமுன்னம் கூச்சத்தையடைந்து தன்னுடைய தேகமானது இளக, எப்பக்கமும் வாடா வளத்தோடு கூடிய செந்நெற் பயிராகிய ரோமாஞ்சமிட்டுப் பலவகையாகிய வளங்களையும் அங்களிப்பள். வளங்களிப்படி யிருக்குமாயின் நான் என்ன சொல்லப்போகிறேன்.

133. அடுபவர் - கொல்பவர்.

134. பள் - ஒருவகைப்பாட்டு, இசை.

138. கிணை-மருதநிலப் பறை.

140. நீவு - தடவு.

143. உலப்பு - கேடு. உல : பகுதி.

144. பயிர் மயிர் - பயிராகிய மயிர்; உருவகம்.

147. பாடை-பாஷை, மொழி.

147. [நன்செய் நாட்டில் இன்றும் தமிழே வழங்குகின்றது. பாண்டியனுக்கும் சேரனுக்கும்

ஒருகால் நன்செய் நாட்டைப் பற்றி விவாதம் வந்தபோது அந் நாட்டில் வழங்கும் தமிழ்ப் பாஷையைச் சான்றாகக் காட்டினதாக ஒரு கதையும் உண்டு.]

152. கண்டனன்-செய்தனன்.

155. கிளத்தில் - சொன்னால்; கிள : பகுதி.

159. ஒப்புரவு - இணக்கம்.

160. அந்நியோந்நியம் - அடுத் தலரல்லாத தன்மை; மிக நெருக்கமானது.

171. ஆற்றலே ஆற்றல் - செய் உதே வலிமை.

172. அவாம்-விரும்பும், அவா வும் என்பது அவாம் எனத்திரிந் தது.

174. மன்னவை - அரசசபை.

172-178. து தரிலக்கணம் கூறப்பட்டவாறு.

182. வென்றிவைவேல்- வெற்றியும் கூர்மையும் பொருந் திய வேல்.

185. மேவலர் - பகைவர், மேவு - பகுதி.

191. நினதே - நின்னுடை யதே.

203. ஏழை (1) அறிவின்மை, (2) தனியனாந்தன்மை; இரக்கக் குறிப்பு.

210. இராச்சிய பிரண சூத்தி ரம்—இராச்சிய பாலனஞ் செய் யும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சாசனம். பர்ணம் - தாங்குதல்.

210-211. யார்க்கும் நீச்சே - எவர்க்கும் எய்க்காத ஆழ முடைத்தாயிருக்கின்றது.

215-219. மாதா பிதாக்களுக் குத் தெரியாமல், தங்களை மறக் கச்செய்து அவர்கள் ஒழுக்கங் களைவிட்டுத் திரும்பும்படி செய்ய வல்ல சேவகமானது அவ னிடத்தேயுண்டு. இச் சேவகத் தின்கண்ணே இவன் சித்தி பெறுவானோ மாட்டானோ என் பதைப்பற்றிச் சந்தேகம் வேண் டியதில்லை. அதனாலே, நெருங்கி யிருக்கின்ற கூந்தலையுடைய மாந்தரிடம் தூதுசெல்ல வேண் டியதற்குரிய வல்லமை யுண்டு.

223. இருக்கும் இருக்கும் - நாம் கூறியது வெற்றுரையன்று; உண்மையே என்க.

226. கால விளம்பனம்-காலத் தைக் கழித்தல். Delay is dangerous.

236. சிந்தனை செய்து - யோசித்து.

239. சுரகுரு-தேவகுரு, வியா ழன், பிரகஸ்பதி. பிரசுரன் - அசுரகுரு, சுக்கிராச்சாரி.

244. திருமேனி-மலைநாட்டார் சனைத் திருமேனி யென்றல் அந் நாட்டு வழக்கு.

247. ஆஞ்சநேயன் - அநு மான், அஞ்சனாதேவியின் குமா ரன்.

253. தாளம் - முத்து.

260. அங்கை - உள்ளங்கை, அகம்+கை - அகங்கை. ஆடி - கண்ணாடி.

262-263. சுமித்திரை பயந்த புத்திரன்-இலட்சுமணன். சுமித் திரை - தசரதன் மனைவி.

263. வீரவாகு-முருகக் கடவு ளுக்குத் துணைவர்.

268. ["புறங்குன்றி கண்ட னையரேனு மகங்குன்றி மூக்கிற் கரியாருடைத்து" என்னும் திருக (28 அதி. 7-ஆம்) குறளைக் குறிப்பித்துக் குடிலனுடைய

வஞ்சகத் தன்மையை நாராயணன் கூறுமற் கூறுகின்றான்.]

276. வாகு - தோள்.

278. ஒப்பு நோக்குக:— "தேரான் தெளிவுந் தெளிந் தான்கணையுறவுந், தீரா இடும்பை தரும்"—திருக்குறள் 51-அதி. 10-ஆம் செய்யுள்.

279-280. ஒப்பு நோக்குக:— "எனைவகையாற் றேறியக்கண்ணும் வினைவகையான், வேறாகு மாந்தர் பலர்"—திருக். 52-அதி. 4-ஆம் செய்.

289. உன்னுவ - நினைப்பவை.

303. கருப்போ - கரும்போ.

313. உறுப்புகள் - ஒப்பு நோக்குக:—"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும், உடையான் அரசருளேறு" — திருக். 39 - அதி. 1-ஆம் செய்.

314. ஒருப்படில்-ஒருமைப் படில், ஒற்றுமைப்பட்டால், இணங்கினால்.

316. இறந்த சிந்தையன் - சிந்தையற்றவன் - மனத்தில் இயற்கைக்குண மொழிந்தவன்.

332. சித்திரப் பார்வை யமுந் தார்க்கு-ஓவியத்துறை யுணர்ச்சி யற்றார்க்கு.

327. உறுகண் - துன்பம்.

306-309. பாம்பிற்கு விடம் தலையிலும் தேளுக்கு வாலிலும் ஆதலால் யாவும் அடிமுதல் முடி வரை அரசர் கவனிக்கவேண்டு மென்பது கருத்து.

[இக்களத்தில் நாட்டுவளம் - திணை மயக்கம்-தூதிலக்கணம் செங்கோன்மை-அமைச்சு முதலி யன ஒருவாறு கூறப்பட்டமை காண்க.]

இரண்டாம் அங்கம்

இரண்டாம் களம்

வைகறை - விடியற்காலை. (Early morning.)

1-32. நடராசன்:—சூரியோதயத்தைப் பார்க்க விரும்பில், இவ்விடம் மிகவும் பொருத்தமான இடம். சூரியோதயத்தை நன்றாய்க் கண்டு பின் மற்றக் காரியத்திற்குச் செல்லுவோம். சித்திரமெழுதுவதில் கைவந்தவன், தான் படத்தில் எழுதப் புகுந்த சித்திரமானது அவனால் எழுதுதற்கு எடுத்துக்கொண்ட தூரியக்கோல் படுந்தோறும் உருவம் இன்னதென்று தெரிய வருவதுபோல் சூரிய கிரணங்கள் படப்பட பொருள்கள் மேல் படர்ந்திருக்கிற இருள் நீங்கிப் பொருள்களெல்லாம் விளக்கமுறக் காணப்படுகின்றன.

சூரியனுடைய பல வர்ணமுடைய கிரணங்கள் சராசரங்கண் மேற் படப்பட யாதொரு வடிவமுங் கண்ணுக்குப் புலப்படாத படி ஏகமாய், துன்னிய காரிருட் பிழம்பானது மூடிக்கொண்டிருந்த தோற்றமானது போய், சிறிது சிறிதாய்ச் சராசரத்தின் உறுப்புகள் கண்ணுக்கு நன்றாய்ப் புலப்படும்படியாக விருக்குங் காட்சி மிக நன்றே!

உச்சிக்கொண்டையையுடைய சேவற்கோழியானது சுவரைக் கொடி படர்ந்திருக்கின்ற வீட்டி னுடைய முகட்டின்மீது கர்வத் துடனடைந்து பின் இரண்டு பக்கத்து இறக்கைகளையும் தட் டிப் பெரிய வாயைத் திறந்து ஒருதரங் கூவிப் பக்கத்திலுள்ள வர் தன்னைப் புகழ வேண்டிச் சுற்றிப் பார்க்கின்றுரைப்போல் நோக்குதல் மிக வினிதே.

இருளுக்குப் பகைவனை சூரி யன் காகந் தங்களையிருட் கூட் டங்களென்று கொல்லுவானோ வென்று ஐயுற்று இரண்டு இறக் கைகளாகிய கைகளினால் தம்மு டைய மார்பிலே புடைத்துக் கொண்டு கலக்கத்தை யடைந்து கா! கா! வெனக் கூவிக் காகத் தொகுதிகள் தட்டுக்கெட்டுத்தடு மாறி எப் பக்கங்களிலும் தனித் தனிப் பறந்தோடுவது மிக அழகாயிருக்கின்றது.

பல வர்ணங்களோடு கூடிய இறக்கைகளுடைய பட்சிக் கூட் டங்கள் சத்தமினங்களோடு சேர்ந்து வட்டமிட்டுக்கொண்டு எங்கெங்குக் குடம்பை கொண்ட னவோ அங்கங்கிருந்து முன் னெழுவன முன்னும், பின் னெழுவன பின்னுமாக எழுந்து காலம் வரையறை காட்டுமா போல ஒத்தறுத்தடித்தல் குற்ற மற்ற இசை நூலறிந்த கானமாக் களின் கூட்டம்போல, குற்ற மற்ற பாடல்களாகிய பயிர்த்தலை வழங்கலும் இனிதே. அது வென் - அதோ விரண்டு பட்சி களும் ஒன்றுக்கொன்று செய்து கொள்வன என்ன! ஆஹா! ஓ! நானறிந்து கொண்டேன்.

மூக்கினால் விம்முகின்ற தங் கள் சிறகுகளை அடிக்கடி தடவுத லால், தங்களுக்கு ஒருவர்மாட் டுண்டா யிருக்கின்ற காதலை ஆணையிட்டுச் சொல்லிக் காட்டு வதுபோல், ஒன்றன் பின் னொன்று சென்று அன்பினை விடாது பாராட்டுகின்ற இந்த இரண்டு பட்சிகளுஞ் செய்து கொண்டிருப்பதென்ன?

1. பரிதி - ஞாயிறு.

3. செவ்வி தின்-செம்மையாக.

4. ஓவியம் - சித்திரம்; நீவி யம் - சீலை. நீவியக்கிழி: மீமிசை போல் ஒருபொருட் பன்மொழி.

5. தீட்டுவான்-தீட்ட; வான்: ஈற்று வினையெச்சம்.

6. தூரியம் - சித்திரமெழுதுங் கோல்.

8. வணம் - வண்ணம், விதம்.

9. கருகு இருள் மயங்கிய காட்சி கழிந்து - காரிருட் பிழம் பானது மூடிக்கொண்டிருந்த தோற்றமானது போய்.

12. சூட்டு-உச்சிக்கொண்டை.

13. வீம்பு - தெம்பு.

14. அங்காந்து - வாயைத் திறந்து, அங்கா: பகுதி.

15. உழை - பக்கம்.

17. இருட்பகை இரவி - இரு ளுக்குப் பகைவனாகிய ஞாயிறு.

18. காய்வனோ - எரிவனோ, கோபிப்பனோ.

20. மெய்யார் தம் பெயர் விளம்பி-கா கா என்று கரைந்து.

22. தொழுதி - கூட்டம்.

25. ஒத்தறுத்து - ஓசையிட்டு. அடியா - அடித்து. எஞ்சல் - குறைதல்.

26. இசை - பண். ஈட்டம் - கூட்டம்.

29. ததையும் - செறியும், நெருங்கும்.

33. துகிர் - பவளம்.

33-39. பவளம்போலும் மூக்கினால் சரற்கறற்களைச் சிந்திக்கிடக்கிற பழத்தைக் கொத்தினாற் போற் கொத்தி, அப்பக்கமு மிப்பக்கமும் ஒதுங்கி யொதுங்கி வெட்கமில்லாத வெட்கத்தைக் காட்டுகின்ற இப் பட்சியானது அப் பட்சிகளாற் காதலிக்கப் பட்ட பேடு.

ஆடவர் தம் காதலைத் தம் காதல் சென்ற தையலாரிடத்துச் சொல்லியக்கால் அத் தையலார் வஞ்சகமாய்க் கிரகித்துக் கொள்ளுதல் அவர்களுடைய சுபாவமாயிருக்கிறது போலும். (கூடகம் - அறிந்துமறியாதது போலிருத்தல்.)

40-51. துண்டம் - துண்டு, கூடம் - மறைவு.

வாணி? ஏ பெண்ணரசி? உன் நாண் முதலிய நற்குணங்கள் நீடூழி வாழ்க. இவ்விடத்தே ஒருநாள் நானுனைப் பார்த்த பொழுது வாசனையை விடாத கருநெய்தற் புட்பத்தை உன்னுடைய நெருங்கிய கூந்தலில் சூடும்படி கொடுத்தவுடன் நீ அதை மனதுடன் (அன்பாய்) புன்னகையோடு கையில் வாங்கினதும் அம் மலரை மதியாதவள்போல் அங்கே யோடுகின்ற வாய்க்கால் தண்ணீரில் ஓடச் செய்துவிட்டுச் சின்னஞ் சிறு பெண்களின் குறும்பு காட்டிச் சிரித்ததை நான் என்ன எண்ணிக் கொள்வேனோ வென்று நீ யெய்திய கலக்கப்பாடு இன்னும் என் கண்முன் நிற்கின்றது. ஏ - வாணீ! பெண்கள் நாயகமே! நீ பயப்படவேண்டாம். நிச்சயமாக அறிவேன். என்னுடைய உள்ளத்தோடு உன்னுள்ளம் ஒத்து நின்றபின் நம்மிருவருக்குள் ஆடிக்கொள்ளும் பேச்சும் செய்கையும் எதுவானாலென்ன?

49. அழுங்கலை - வருந்தாதே.

50-51. இவ்வடிகள் "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனுமில" என்ற திருக்குறள் 110-அதி. 10-ஆம் செய்யுட் கருத்தமைந்தவை.

53. யார்கொல் - யாரோ (ஐயம்). சூழ்ச்சியென் - எதைக் குறித்துப் பேசுகிறார்கள்.

நற்றாய் - ஈன்ற தாய் (சோரஸ்திரியின் தாய்).

என்னுடைய மகள் உன்பொருட்டாக நாணத்தையும் விட்டு நலத்தையுங்கெடுத்து உன்னை நம்பி வீணில் சம்பவித்த இந்தக் கேடுகளெல்லாம் அவள் சாகும் வரைக்கும் உலகம் சொல்லிக் கொண்டேயிருக்கும். நாங்கள் பெரிய குடியிற் பிறந்தவர்களாதலினாலேயே வாணியினுடைய வம்புரை (கல்யாணப் பேச்சு) கேட்க நாங்களஞ்சுகிறோம். நீ வருவாயா, வரமாட்டாயா?

என்னுடைய மகள் உன்னுடன் சம்பந்தப்பட்டவளாதலினாலே நாணம் இழந்தவளாயினாள். அந் நாணமிழந்த என் மகள் நீ வந்து அவட்கு நல் காமையினாலே இதோ சாவப் போகின்றாள். அதற்கும் வெகு நாட்களில்லை. அவளைப் பார்ப்பதற்கு நீயும் விரும்பவுமில்லை.

அவனுனைக்கெழுதி யிருக்கின்ற இந்த ஓலையில் அவனது நிலைமையைக் கண்டுகொள்வாய்.

இவ் வோலையை வாணிக்குத் தெரியாமல் நீ வாசித்து அறிந்து கொள். அப்படி வாசித்தறிந்த பின்னும் நீ வருவாயோ வரமாட்டாயோ. தன்னுடைய நாயகி சாவக்கிடக்கின்றான் என்று தெரிந்துங் காண விரும்பாத பாதகனே இவன்! (சாவக்கிடக்கின்றான் — பிரிவாற்றாமையின் கண் வந்த சாவு.)

ஆசிரியத்துறை 1. உகுத்து - சிந்தி. வ்யுறும் - கெடும். வம்புரை - வீண் பேச்சு.

ஆசிரியத்துறை 2. நவின்ற - சொன்ன. கள்ளலம் - களவு செய்கின்றிலேம். வெளவலம் - பற்றுகிலேம். காண - கண்டபின்.

ஆசிரியத்துறை 3. விரும்பலெ - விரும்பாதே. கொள்வை - கொள்வாய். காணிய - காண.

"செல்லாமையுண்டேல் எனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க் குரை" (திருக்குறள்: 1160.)

54. கேட்குதும் - கேட்போம்.

58. பழங்கதை - வாணியைப் பலதேவனுக்கு மணம்பேசியிருப்பதாய்க் கேட்ட நற்றாயின் கூற்றுக்கு இவன் பொய்யெனக் காட்டும்பொருட்டுப் பழங்கதையென்றான்.

61. கிழப்பிணம் - சடன்.

64. பொற்றொடி - பொன்னாலாகிய வளை, (மைச்சினி - தன் சோரக் காதலிக்குப் பலதேவன் வைத்த முறை.)

71. அலகை - பேய்.

72. (கணிசம் - கண்ணியம், வழக்கச்சொல். அது - விவாகம். இது - சோரநாயகி போகம்.)

78. கடு - விடம், நஞ்சு.

79. கைத்தது - கசந்தது.

100. உசிதன் - பாண்டியன்.

108. நிண்ணயம் - நிர்ணயம், வரையறை.

107-109. மறி : எழுவாய், திடனே பயனிலை.

117. ஈரம் - அன்பு.

120. காதகர் - கொலையாளர்.

111-115. காதலென்னும் ஊழித் தீயின் முன்னே அப்பெண்கள் வார்த்தையை வைப்போமானால் கெடாதபடி நிற்றலுமுண்டோ? அப்போது வந்த மனஸ்தாபத்தினால் எவப்பட்டுக் கன்னியாயிருப்பேன் பலதேவனைக் கலியாணம் செய்வதினும் என்று சொன்னாளே யன்றிக் கன்னியாயிருப்பது அவள் மனசு தானோ? (அன்று).

123. அலையடித்தலானது கடற்கரையிலும் மேல் வெளியிலேயுமின்றி ஆழத்திலும் உள்ளுங் கலக்கமில்லை. அவர்க்கிலையென்றதனால் பெண்களுக்கும் கடற்கும் ஒருங்கே கூட்டியுரைக்கப்பட்டது (a) கடல்-1. கரை, 2. கயம் (b) பெண்கள்-1. வெளி, 2. அகம்.

124. கயம் - கஜம், ஆழம்.

125. வாட்டமும் வயக்கமும் பெண்களிடத்தே சார்வது அப்பெண்களது நெஞ்சி லெங்கேனும் ஒரு பக்கத்திலேயே யல்லாமல் அவர்களுடைய நெஞ்சினடியில் அன்பும், நினைத்திருப்பதை வெளிவிடாத வலியும்,

மெய்ம்மையிற் றெளிவும் உள்ளவர்களாக்கும்.

127-8. கொள்கை விள்ளா முரண்-கொள்கைகளை விடாது பற்றி நிற்கும் மனவுறுதி.

129. அம் மாதரது நிறையினை நீ யறியமாட்டாய். காற்றாடியானது சுற்றிக்கொண்டே இருந்த போதிலும் தன்னுடைய சக்கர நிலையைப் பற்றிக்கொண்டே சுழலும். புருடர்கள் அப்படியல்லர். இப் பூதலத்தில் மாணிட வுருக் கொண்டு திரிகின்ற இக்கொடிய பசாசங்களின் மூலமாகவே பெண்கள் கேடடைவது. இவர்கள் ஆண் பிள்ளைகளா?

142-149. நீண்ட புகழின்கண்ணுள்ள இச்சையானது காற்றாகி நிலை இல்லாத எண்ணத்தை ஆட்டுவிக்க, போனபோன இடங்களிற் போய் நல்லறிவுமில்லாமல் அலைந்து கெட்டுப்போகாதபடி இல்லறத்திற்குரிய இடமாகி, சிறிய குடாவின் கண்ணே நிலை பெற நிறுத்துவதோர் நங்கூரமாயும், இன்னும் தாங்கள் செய்யுந் தொழில்களைச் செய்யுமா றறியாது மனமிடிந்து அவ்வினையை விட்டு ஆசை செல்லத்தகுந்த எல்லாத் திசைகளிலேயும் அலைந்து திரிந்து கெட்டுப்போகாதபடி அவ்வாடவரை நல்வழிச் செலுத்தி நிறைந்த அன்போடு கூடிய இல்லறத்தின்கண் வாழ்தலையே உள்ள நாள் உள்ளளவும் மனத்திற் கொள்ளப் பதித்துச் சிறப்புள்ள நல்ல சுகம் பொருந்திய இடத்திற் கொண்டு வந்து சேர்க்கின்ற சுக்கானும் வந்துதவியது மங்கையரன்றோ என்றறியமாட்டாத மனிதர், மிருகங்களினுங் கீழானவர்களாய் அன்ன பெண்களாற் பெறப்படுகின்ற சிற்றின்பத்தையே கைக்கொண்டு தங்களுடைய இல்வாழ்க்கைத் துணையாய் வந்த அப் பெண்டிரை, ஆழத்துக்குள்ளே இழுத்துக் கொள்ளுகிற சேறொக்குவர்.

143. இயக்க - செலுத்த. இயங்க : தன்வினை.

144. சென்றுழி - சென்ற

148. எற்றுண்டு-மோதப்பட்டு.

161. நலிந்து - வருந்தி.

167-190. இவரது அறியாமை எத்தன்மையது -விரும்பிய எவற்றையும் வேண்டக் கொடுக்கும் கற்பக விருட்சமென்று கிஞ்சித்தாயினும் நினையாது அடியோடு வெட்டித் தள்ளி அவ்வளவையும் தீயைப் போட்டுச் சுட்டுக் கரியாக்க வேண்டுமென்று நினைந்த கம்மாளனைப்போல் எல்லாந் தனக்கென்றே யபிமானிக்கின்ற ஒப்பற்ற மனத்தினது கோட்டத்தைத் திருத்தி மற்றவருடைய சுகதுக்கங்களையும் நம் சுகதுக்கங்களாக அன்புபுரியவும், மெல்லத் தனதுள்ளத்தின் கடும்பற்றினை யகற்றி, கமை, சாந்தி முதலிய நற்குணங்கள் படிப்படியாக வளரும்படியாகச்செய்து தன்னுடைய சித்தத்தின் கண்ணேயுள்ள அறிவையும் விளக்கி, நான் எனதென்னும் இருவகைப்பற்றினையும் ஒயும்படி செய்து எங்கும் நிறைந்திருக்கவும் தனக்கயலாய் நின்ற பேரின்ப வெள்ளத்தின்கண்ணே முழுகித் திளைக்கும்படி எவரையும் பக்குவப்படுத்தும் நல்ல பள்ளிக்கூடம் என்று இவ்வில்லறத்தை அறியும் நல்

லறிவில்லாமல் ஆவுரிஞ்சு தறியைப் போல் புத்தியில்லாத காரியஞ்செய்யத்தொடங்கித் தம்மையும் பிறரையும் கெடுத்திடு மாந்தரின் கெடுமதி வியக்கத்தக்கது.

167. எற்றே - எத்தன்மைத்தோ?

170. முடிபுற - முடிவடைய.

171. கம்மியன் - கொல்லன், கம்மாளன்.

173. மனக்கோள் - மனக்குற்றம், மனக்கோட்டம்.

184. தினவு - ஊறல்.

190. உறையுள் - உறைவிடம்.

[இக் களத்தில் சூரியோதய வருணனையும் இல்லற இயல்பும் கூறினமை காண்க.]

இரண்டாம் அங்கம்

மூன்றும் களம்

3. நுதி - நுனி, முனை. (கூரிய)

4. விரகம் - வேட்கை.

5. பரிபுரம்-சிலம்பு. பங்கயம்-தாமரை, இங்கு முதலாகு பெயராய் மலரை யுணர்த்திப் பின் உவமையாகு பெயராய் மலர் போன்ற அடிகளை யுணர்த்திற்று. வருந்துபு - வருந்தி: செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

6. விண்ணணங்கு - தேவமகளிர்.

12. நவ்வி - அழகு.

17. நனவு - நினைவு, கனவு என்பதன் எதிர்மொழி.

21. முறுவல் - சிரிப்பு.

28. உழுவல் - பேரன்பு, எழுமையுந் தொடர்ந்த அன்பு.

30. வாரி - கடல்.

31. செக்கர் - செவ்வானம்.

32. ஊர்சோன் நாப்பண்-பரிவேட மத்தியில்.

36. அவணின்ற-அவள் நின்ற, அல்லது அவண் நின்ற.

41. அயர்க்குமாறிலே-மறக்கும் படியாயில்லை.

46. அரசன் சத்திரியனாயிருந்ததினால் போர் வருங் காலத்தில் எல்லாவற்றையும் மறப்பான்.

(சத்திரியர்கள் எல்லாவற்றையும் மறப்பது போர் வருங்காலத்திற்றான்.)

51. கயவன் - கீழ்மகன், கைதவன் - பாண்டியன்.

52. போன்மே - போலுமே.

54-60. பொங்குகின்ற அலையையுடைய சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமி (எங்கோன்) கீர்த்தியைச் சுமக்கவும் குறுநில மன்னர்கள் தங்கள் குடங்கையில் தலைசாய்த்துத் தாங்கும்படி இடம் பார்க்கும் விசாலம் பொருந்திய வாசலையுடைய மேன்மை பொருந்திய திருநெல்வேலியில்.

55-56. எத்திசையினும் உள்ள மாற்றரசர் தலையை வெட்டிச் சாய்த்துஞ் சக்கராக்ஞையுமெங்குஞ் செல்லும்படி செலுத்தியும்: உருட்டி: செம்மொழிச் சிலேடை.

56. ஒன்னார்-ஒன்னலர், பகைவர். திகிரி - சக்கரம்.

57. குடங்கை - உள்ளங்கை. குறும்பர் - சிற்றரசர். குறுநில மன்னர்.

60. வேம்பார் - வேப்பம் பூமாலை யணிந்த.

66. புல்லார் ஈட்டம்-பகைவர் கூட்டம்.

67. அரவின் அரசு - ஆதிசேடன். ஞெரேல்: ஒலிக் குறிப்பு.

68. பிறவிக்கடற் பரப்பினும் அகன்றதாக. வறிதா - ஒன்று மில்லையாம்படி.

பௌவம் - கடல்.

69. ஆணவம் - மும்மலங்களில் ஒன்று; முற்றும் அழியாதது.

70. உரம் - பலம்.

69 - 73. ஆணவமலத்தினது ஆழமுங்கூட நாணும்படியாக அகழியொன்று பலமாய்த் தோண்டி அஞ்ஞானத் தொடர்பினும் (பந்தத்தினும்) அதிகமுள்ளதா யொத்த மதில் கூட்டங்களைக் காக்கும்படி விஷயப் பொருள்களிலே பாய்ந்து அமிழ்த்தி ஈர்க்கின்ற பஞ்சப் புலன்களைப் போல எண்ணில்லாதனவாகிய யந்திரப் படைகளையு மமைத்து.

78. பாடை - மொழி. பாஷை யென்பதன் திரிபு. ஆசாரம் - ஒழுக்கம்.

79. சாக்கியம் - சாட்சியம், சான்று.

83. இறுத்து - தங்கி.

84. சதி - வஞ்சனை.

87. வல்லை - விரைவு, உடன்.

88. ஈண்டினன் - நெருங்கினன்.

91. [இரவியும் திங்களும் சமநிலை வருங்கால் திங்களின் சாயையால் சூரிய கிரகணம் நேரும் என்பது கணித சித்தாந்தம்.]

94-97. அப்படி யெதிர்ப்பட்டவர் வேறிடஞ் செல்லாது அந்தப்படியே நிற்பாராயின் இருளும்படியே மூடிக்கொள்ளும் தன்மைபோல நீங்களிருவரும் (சூரிய வமிசத்தனாகிய நீயும் சந்திர வமிசத்தனாகிய எங்கோனும்) யுத்தஞ் செய்வீராயின் இவ்வுலகந் தாங்கமாட்டாதென்று கருதி இச் சபைக்கு என்னை யேவி.

114. விரை - வாசனை. அளி - வண்டு, இங்கு புருடோத்தமன். மலர் - மனோன்மணி.

118-121. வண்டைக்கொண்டு போய்ப் பூவில் விடுவானேன். குற்றமற்ற காதலானது தலைவன் தலைவியர்க்குத் தானே யுண்டானால் எங்களுட்டில் கவியாணஞ் செய்வதே தவிர வேறு விதமொன்றுமில்லை. அன்றியும் நமது சிம்மாசனம் இரண்டு பேர்க்கு இடங்கொடாது.

120. கோதறு - குற்றமற்ற.

121. வேட்டல்-மணத்தல்.

129. அடி இறை - அடியில் இறையாக. இறை - இறுக்கப் படும் பொருளாகிய வரி, கப்பம்.

130. புரவலர் - அரசர், புரத்தலில் வல்லவர். புரத்தல் - காத்தல்.

131-132. அவாவிய மங்கல நாண் - விரும்பிய தாலிக் கயிறு. நாணம்-பெண்களுக்குள்ள நாற்குணங்களில் ஒன்று.

143. அரிக்கு - சிங்கத்துக்கு. நேர் - ஒப்பு.

159-161. இப் பலதேவனை யிங்குத் தூதுவிட்டவன் முற்றும் அறிவிலி. அவனுக்கு (முட்டினபின் குனியும் புத்தியாதலால்) குட்டிக் காட்டினலொழிய அறியப் போகிறதில்லை. குட்டிக் காட்டுதல் - போரில் தொலைத்தல்.

பச்சாத்தாபப் படுத்துவோம் - ஏனிப்படித் தூதனுப்பினேனென்று பரிதாபப்படச் செய்வோம்.

161. பச்சாத்தாபம் - கழிந்ததற்கு இரங்குதல், கழிவிரக்கம்.

166. இதுகாறும் - இதுவரை.

171. மூவர் - திரிமூர்த்திகள் - அயன், அரி, அரன். அசுரர் - தேவர்களுக்கு மாறானவர். சுராபானஞ் செய்யாதவர்.

172. பகடி - கேலி.

179. அலால் என்பதற்குப் பதில் அதில் என்றும் பாடம் கொள்ளலாம்.

183. திட்டம் செய்வான் - ஏற்பாடு செய்ய.

மூன்றாம் அங்கம்

முதற் களம்

1. தனையன் - குமாரன், புதல்வன். தனயை - பெண்பால்.

6. ஐயுறல் - சந்தேகப்படாதே. எதிர்மறை ஏவல்.

7. பழுது - குற்றம்.

10. மதியில் முதியோன் - அறிவில் முதிர்ந்தவன்.

15. தொல்மொழி - பழமொழி.

16. மருளும் - மயங்கும்.

18. கன்றும் - கோபிக்கும். சினம் - கோபம்.

21. திருவும் வெருவும் உருவம் - இலக்குமி தேவியும் பயப்படும் அழகும்.

26. செறித்திடும் சிறையினை - அடைக்கும் அடைப்பை அல்லது அணையை.

29. மலைவு - மயக்கம், தியக்கம்.

35. தகைத்து - தகுதியையுடையது.

39. பிறழா - மாறுபடாத.

42. மம்மர் உழன்றவன் - மயக்கத்தில் வருந்தினவன், உழல்: பகுதி.

46. பணி ஆற்றுதும் - தொண்டு செய்வோம்.

49. இயம்பல் - சொல்லுதல்: அல் ஈற்றுத் தொழிற்பெயர்.

53. பரிவுறல் - அன்புகூர்தல்.

61. ஒருபடித்தன்று - ஒரு தன்மையதல்ல.

62. உஞற்றுவன் - செய்வன்.

64. ஏமாப்பு - இன்பம். ஏமா: பகுதி.

76. உன்னான் - நினைக்கான்.

81. உரனும் - வலியும்.

86. மலையன் - சேரன்.

94. நயந்திலன் - விரும்பிலன்.

105. வெறுக்கை - செல்வம்.

108. துணை - அளவு, திணை, பால் : ஈண்டுச் சிறுமை பெருமையை உணர்த்துவன.
114. அற்றம் - சமயம், காலம்.
127. உன்மத்தன் - பைத்தியக்காரன்.
134. காண்டி - காண்பாய்.
135. செரு முகத்து - போர்க்களத்தில்.
138. ஆலமாய் - மதுரை.
141. நிகாதர் - வஞ்சகர்.
144. தவில் - கொட்டு.
151. விழுமிய - சிறந்த, விழுமம் - சிறப்பு : உரிச்சொல்.
158. ஓர்ந்து - ஆராய்ந்து.
164. கோழையர்-உறுதியற்றவர்.
167. விதிர்விதிர்ப்பு - நடுநடுக்கம்.
174. வெளவு - களவுசெய்.
177. இவ்வடியின் கருத்து ஆங்கிலத்தில் Crocodile tears - முதலைக்கண்ணீர் என்பதோடொத்தது. அதாவது முதலை தான் கொன்ற மிருக முதலியவற்றைத் தின்னும்போது கண்ணீர் விடுக்கும் என்பது உலக வழக்கு.
180. ஓவாது - இடையறாமல், நீங்காமல்.

மூன்றும் அங்கம்

இரண்டாம் களம்

1. கடிநகர் - காவல் நகரம்.
3. முடுக்கினும் - விரைவுபடுத்தினும். துன்று அரா - நெருங்கிய பாம்பு.
4. முழுமதி-உவாமதி. காட்சி - தோற்றம். செவ்விது-அழகிது.
3-5. இராகுவாகிய கரும்பாம்பினுற் பிடிக்கப்பட்ட நிறைமதியினது தோற்றத்தினும் அழகிதாகிய பின்னி விடப்பட்டுள்ள கூந்தலையுடைய பேதைமைக் குணமுள்ள வாணியின் இளமை மாறுத முகம்.
6. பணி - தொழில்.
9. இம்மை - இப்பிறப்பு.
10. இலக்கு - குறி (Aim)
14. காண்டி - காண்பாய். குறிப்பு - நோக்கம்.
15. அடி - அடி யிதழ்.
16. அருத்தி - உண்பித்து ; அருந்தி : தன்வினை, வினையெச்சம்.
18. பராகம் - தாது, பொடி - துகள். பரப்பித்து - பரப்பி. பலம், பயன்.
19. ஆசு - உள்ளீடு.
20. தூசு - துகில், ஆடை, தோட்டி - துறட்டி.
22. சிறார் - சிறுவர் : அண்மை விளி.
23. புள் - பறவை. அயத்து - குதிரையின் அல்லது ஆட்டின்.
26. புலன் - அறிவு.
30. பனிப்ப - துளிக்க.
31-32. [தாவர சிருட்டிகளின் செய்கை விசித்திரங்களிலும் தெய்வ அருள் நிறைந்துகிடக்கும் தன்மையை இவ்வடிகள்

விளக்குகின்றன.] புல்லினிடத்து, சிறந்த இடத்துள்ள உணவைப் பெற்று விருந்தினரை அழைத்து அருந்தி வாசனைச் சுண்ணந்தந்து மக்களைப் பெற்று மக்களால் பிறரை ஆடைபற்றி ஈர்த்தும், மக்களைப் புள் முதலியவற்றின்மேல் ஏற்றிப் பல இடங்களுக்கு அனுப்பியும் ஆகும் செயல்கள் ஆரோபிக்கப் பட்டன.

32. என்பு - எலும்பு. திளைப்பர் - அநுபவிப்பர்.

35. விசித்திரம்-அற்புதம்.

41. ஈர்த்து - இழுத்து.

42. முந்நீர்மடு-கடலாகிய பள்ளம்.

43. காலத்தச்சன்-காலமாகிய தச்சன்.

46. அண்டயோனியின் ஆணை - சூரியன் நியமனம் அல்லது கடவுளின் கட்டளை. அண்டம் - உலக உருண்டை. அண்ட யோனி - உலக உருண்டைக்குக் காரணமான கடவுள்.

48. தூங்கி-தாழ்ந்து, தொங்கி.

49. பூமியின்குடர் - நில வெடிப்பு, குடர் - குடல் என்பதன் போலி.

57. எழிலி - மேகம், எழுதலையுடையது.

59. நிரந்தரம்-எப்பொழுதும்.

61. [யான் தடுப்பதால் வரும் காலதாமதத்தையுன்னி நீ இரைகின்றாய் போலும்; இனி அழ வேண்டாம் விடுகின்றேன் என்பது பொருள்.]

65. பேறு - பெறுவது, பெறுதல்.

33-65. [பூத பௌதிகங்களாகிய சடபதார்த்தங்களின் சலனங்களினும் அசைவுகளினும் விளங்கும் அருள் விசேடத்தை இவ்வரிகள் காட்டுகின்றன.]

67. ஓவாப்பாடு - ஒழியாத் துன்பம்.

68. இவ்வடிப்பொருள் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால், உழந்தும் உழவே தலை'— குறள் அதி. 104. செய் 1. 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்'— குறள் அதி. 104. செ. 3 என்ற குறள்களை நினைப்பூட்டுவதாம்.

73. வேதித்து - பேதித்து, வேறுபடுத்தி.

81. விழு - சிறந்த.

82- துதிக்கலம் - போற்று கிறோமில்லை.

66-82. [கிருமி கீடாதிகளாகிய அற்ப சீவசந்துக்களிடத்திலும் பேரருள் அமைவுற்றிருப்பதை விளக்க எடுத்த இவ்வரிகள், கேவலம் ஓரறிவுயிராகிய நாங்கூழ்ப் புழுவின் செய்கை விசித்திரத்தை வருணிக்கின்றன. புற்பூண்டு கூடவும், முளைப்பதற்குத் தகாத சாரமற்ற மண்ணினையும் நாங்கூழ்புழு மென்று பசைப்படுத்தி வெளிப்படுத்துகின்றதென்பது (உயிர்நூற் றுணிபு) அங்ஙனம் வெளிப்படுத்திக் குழிகள் மறையும்போது தன் கீழ்ப்பக்கத்தில் ஒட்டியிருக்கும் ஒரு உருளை மண்ணால் நாங்கூழ்ப்புழு அக்குழித் துவாரத்தை அடைத்துக் கொள்வது கவனித்தால், யாரும் காணலாம்.]

85. வாணாள் என்னே - வாழ்நாள் பயனற்றது என்றபடி.

86. அலகு - எல்லை. இலகிய - விளங்கிய.

87. கதிர் - கிரணம்.

88. சிற்றுடி - சிறு கண்ணாடி. [சூரிய கிரணங்களை ஒன்று சேர்த்து அக்கினி விளைவிக்கும் சிறுகண்ணாடி. (Hand Lens) மையம் - நடுவிடம் (Focus).]

86-89. உலகில் பரந்துகிடக்கும் பொருள் தன்மைகளாகிய வெய்யோன் கதிர்களைத் திரட்டிக் கூடும்படி வைத்ததொரு சிற்றுடியின் மையத்தை ஒத்த மனத்தையும் உடம்பையும் பெற்றும் சிலர் தீயநெறி செல்கின்றனர்.

90. தீயன் - பலதேவன்.

91. சினக்கனல் - கோபத்தீ.

92. கிருபணன் - லோபி. தீனன் - ஏழை.

93. மங்குல் - மேகம்.

94. படாம் - துகில்.

96. பொதியில்-பொதியமலை: பொதுவில் என்பதன் போலி. பொற்பு - அழகு. கரு - பொன் உருக்கி வார்க்கப்படுமிடம், ஈண்டு முகடே கருவாம்.

97. ஆடகம் - பொன்.

100. துவண்டு - அசைந்து; துவள் : பகுதி.

101. பதாகையின் தொகுதி - கொடிக் கூட்டம்.

வஞ்சித் தாழிசையாவது இருசீரலாகிய அடி நான்கையுடைய செய்யுள், ஒரு பொருள்மேல் மூன்றாய் வருவது.

வஞ்சித் தாழிசை 1. அரிகாள்- பகைவர்களே! **சஞ்சிதம்** - மிஞ்சியிருப்பது. ஒருயிர் செய்த வினைப்பலன்களை அவ்வுயிர் நுகரும் பொருட்டு எடுக்கும் பிறப்பில் நுகரக்கொடுப்பதாகிய பலன் **பிராரத்துவம்** என்றும், அப்பிறப்பிற்செய்யும் வினைப் பலன் **ஆகாமியம்** என்றும், எடுக்கும் பிறப்பில் நுகரக் கொடுக்கப்பட்டதுபோக மிஞ்சியிருக்கும் பலன் **சஞ்சிதம்** என்றும் சொல்லப்படும்.

2. மஞ்சுளம்-அழகு. கடிஞை- பிச்சைப் பாத்திரம்.

3. எள் - தர்ப்பண எள். துஞ்சிய பிதிர்க் கூட்டம் - இறந்துபோன மாதா பிதாக்கள் முதலியோர்.

109. வயம் - வெற்றி.

111. **வஞ்சித்தொடை** - வஞ்சிப் பூமாலை, இது போருக்குச் செல்வோர் அணியும் மாலை, தொடை - தொடுக்கப்படுவது. தண்ணுமை - மத்தளம்.

112. பொருவு - ஒத்த.

113. உருவு இடி.

117. வேட்டல் - மணத்தல்; வேள் : பகுதி.

118. குரம் - காற்குளம்பு.

120. விலோதனம் - கொடி.

122. அசலத்திரள் - மலை போன்ற தேர்க்கூட்டம்.

119-122. கொய்யுளைத் திரைக் கடற்கூட்டம் - குதிரைகள் கூட்டம். மதம்பெய் மைம்முகி லீட்டம் - யானைக் கூட்டம்.

123. நெல்லை - நெல்வேலி. மரூஉ.

124. அந்தோ அந்தோ: அடுக்கு, இரக்கம்பற்றியது.

144. ஆதித்தவாரம் - ஞாயிற்றுக்கிழமை.

147. ஆமைப்பலகை - ஆமை வடிவாகச் செய்யப்பட்ட பலகை, கூர்மாசனம். கூர்மம் - ஆமை.

172. காக்கைச் சுப்பன்-(இரும்படி ராமன்) கிராமாந்தரப் பெயர்.

185. குடகன் - சேரன்.
192. படியோர் - உலகினர்.
197. திருவார் : ஆர் ஒப்புப் பொருள்.
202. தேற்றம் - தெளிவு.
203. சுகம் - கிளி.
209. அங்காடி-கடைத் தெரு.
211. புரை - ஓட்டை, துவாரம், துளை.
213. அந்தரங்கம் - இரகசியம், அருமறை.
215. உழையுளார்-பக்க மிருப்போர், மந்திரி முதலியோர்.
[இக்களத்தில் சூரியாத்தமனமும், சராசரங்களிற் றோற்றும் திருவருள் வைபவமும் ஒருவாறு வருணித்தமை காண்க.]

மூன்றும் அங்கம்

மூன்றும் களம்

1. நள்ளிரா - நடுநிசி.
4. இருப்பல்-இருப்பேன்: அல் சுற்று வினைமுற்று.
11. கையறு - செயலற்ற, மிகுந்த துன்பநிலை.
13. அரவம் - சத்தம்.
15. கிண்டல்-கிளறுதல், கிள் : பகுதி.
23. கண்ணுளார்-கண்ணுக்குளிருக்கின்றார்.
25. எண்ணவும் படா அர் - நினைக்கப்படவு மாட்டார். எண்ணுளும் உளார் - நினைக்கப்படவுமிருக்கின்றார், மதிக்கப்படுமுள்ளவர்.
29. சித்திரரேகை - சித்திரலேகை: வாணாசுரன் மகள் உஷையின் தோழி.
32. பாடு - துன்பம்.
34. உளை - உள்ளாய்.
34. [கண்டுபழகும் பாக்கியம் நாம் பெற்றிலேம் என்பது கருத்து.]
36. தேக்கிய - தங்கிய.
37. ஒவ்வும் - பொருந்தும்.

சிவகாமி சரிதம் உரை

1. மௌனம் - வாய் பேசாமையும் மனம் விடயத்திற் செல்லாதிருத்தலும். இது மோனம் என்று வழங்கப்பெறும். ‘மோனம் என்பது ஞான வரம்பு’ என்பது ஔவை அருண்மொழி. தவம்-தபம்: தபித்தல் அதாவது ஒறுத்தல், வருத்துதல்; மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கலும் கோடைக் காலத்தில் வெய்யிலில் நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதல் தவமாம். சுழன்று - சுற்றி; சுழல்: பகுதி. தான் உண்மைக் காதலனை வெறுத்துப் பொய்க் காதலரை விரும்பித்

துன்புற்ற கொடியன் ஆதலின் 'பாவி யொருவனே' என்றான். உறவை : ஐ விகுதிபெற்ற முன்னிலை ஒருமை வினைமுற்று. அடவி - காடு.

2. தான் பகல் முழுதும் வழி நடந்து அலைந்தும் அடவியைக் கடத்தற்கு வழி காணாமையால், 'வளரும் அடவி' என்றார். ஒருவன் தன் நிழலைக் குறிக்காமல் அளக்கப் புகின் அளக்குந்தோறும் அது நீளுமாதலின், 'தன் நிழலை அளக்குந் தன்மையென' என்று உவமை கூறினார். இதில் அஞ்ஞானத்திற் சிக்குண்டு கடப்பதில்லை; உடல் ஒழிந்து முத்தியடையும் வழி யுளதேல் அதனைக் காட்டி யருள்வாய் எனப் போக்குரையும் காண்க. அவ்வுரைக்கேற்ப மோனைத்தொடை கருதாது 'மாறும்' எனப்பிரித்துக் கொள்க. ஆரிருள் - அருமையிருள்: பண்புத்தொகை; கடத்தற்கரிய இருள் என்றும் பொருள் கொள்ளலாம். வரை - இடம், எல்லை. ஆர் - நிறைந்த. வீடு - விடுவது வீடு : முதனிலை திரிந்த தொழிலாகு பெயர். பந்தம் விட்ட இடம் முத்தி, களைப்பு விட்ட இடம் வீடு.

3. இச்செய்யுளில், உலகப் பற்றுடையார் இக் ககனமாகிய வெளியை அணையார் என்றும், இதிற்சென்று உறையின் அறியாமை யில்லை என்றும் இந்த அறிவு வெளியே என் வீடென்றும், அகப்பற்றுப் புறப்பற்று ஒழிந்த பெரியோர்க்குப் பந்தம் அடைதல் இல்லை யென்றும் உள்ளுறைப் பொருள் தோன்றுதல் காண்க. சிந்தையற - மனத்திற் பொருந்தும் அகப் பற்றுப் புறப்பற்றுக் கெட. இக் கருத்து, "சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" என்ற தாயுமானவர் வாக்கினுங் காண்க. ககனம் - காடு.

4. காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களையும் ஒழித்துச் செம்பொருள் காண்பதாகிய அறிவுடையராதலின், 'அறங்கிடந்த சிந்தையர்' என்றார். பிறப்புக்கு ஏதுவாகிய ஈடணாத்திரயங்களை யொழித்தவர் என்பார், 'ஆசையெலாம் துறந்த அதிவீரர்' என்றார். பணி - பாம்பு. பணிப்பாய் என்றால் அது திருமால் பள்ளி கொள்ளுகிற ஆதிசேடனாகிய பாயைக் குறிக்கும். இதில் அவர் பணிப்பாயும் பூவணையும் உன்னார் என்றமையால் ஆதி சேடனாகிய திருமால் பள்ளி கொள்ளுகிற இடத்தையும், அயன் தங்கியிருக்கிற தாமரை மலரையும் விரும்பாது வீட்டின்பம் (முத்தி) ஒன்றையே விழைகுவர் என்று உள்ளுறையாகப் பொருள் கொள்ளக் கிடத்தல் காண்க.

5. ஆகும் என்பது ஆம் என நின்றது; போகும் - போம் என்பதுபோல. இதனை "முற்றேல், உயிருமுயிர் மெய்யு மேகலு முளவே" (நன். சூ. ௩௪௧) என்பதனாலறிக. சலிப்பு - களைப்பு. விடியும் - நீங்கும்.

6. அம்முனிவனது வாய்ச் சொற்கள் அன்போடு கலந்து வஞ்சனையில்லாதனவாய்க் கேட்

டார்க்கு இன்பம் பயத்தலின், 'என்றுரைத்த இனியமொழி யிரு செவியுங் குளிர' என்றார். இனிய : குறிப்புப் பெயரெச்சம்; இனிமை: பகுதி, அ: குறிப்புப் பெயரெச்ச விகுதி. இரு செவியும் என்புழி உம்மை முற்றுப் பொருளது. பழ நினைவாவது சிவகாமி என்னும் ஆண்மகன் தன் மாமன் மகளொடு இளமையில் அவன் நிழல்போற் பிரியாமற் கூடியிருந்த தன்மையாம். வணங்கா - வணங்கி: செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம் செய்து என்னும் பொருளில் வந்தது. அறிவுடையனைப் பிறப்பினை யஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத் துறந்தானுக்குரிய அறத்தை மேற்கொண்டுளனாதலின், 'நல்முனிவன்' என்றார். பனித்து - நீர் துளித்து. நனி - மிகுதி.

7. இந்திரசாலமாவது மந்திரம் மருந்து முதலியவற்றால் ஒன்றினை மற்றொன்றாக் காட்டுதலாம். இந்திரசாலம் (Black - Magic) செய்வோன் தன் வித்தையைக் காட்ட மேடையில் இட்ட திரைச்சீலையைப்போல் எட்டுத்திசையிலும் இருள் பரவியது என்பதாம். நகை-சிரிப்பு: தொழிற்பெயர்; நகு: பகுதி, ஐ: தொழிற்பெயர் விகுதி. இழைக்க - செய்ய. அந்தரம் - ஆகாயம். அறை - தெரிவி.

8. அன்றில் என்பது ஒரு பறவை. அஃது எப்பொழுதும் ஆணும் பெண்ணுமாக இணைபிரியாது நிற்கும். இரவில் கணப்பொழுது ஒன்றைவிட்டு ஒன்று பிரிய நேர்ந்தக்கால் அத்துன்பந் தாழாது இரண்டு மூன்று முறை கத்திக் கூவியும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும் என்பது கவி மரபு. அன்றில் வடமொழியிற் கிரௌஞ்சம் என்றும், தமிழில் குருகு என்றும் வழங்கப்பெறும். ஆண் அன்றிற் பறவை 'அகன்றில்' என வழங்கும். இணை - இரண்டு. பிரிய - பிரிதலால் என்பது பிரிய எனத் திரிந்தது. இணை - இணைதல்: முதனிலைத் தொழிற்பெயர். இணைபிரிய - இணைதலினின்றும் நீங்க. இடையிடையே - அடுக்குத்தொடர். இவ்விருவருடைய அன்பின் நிலையை எவர் அறிபவர் என்று தெரிவித்தல்போல மரங்கள் கண்ணீர் சொரிவன என்க. கண்ணீர் என்பதற்கு உவமானப் பொருள் கொள்ளும்போது கள் நீர் எனப் பிரித்துத் தேனாகிய நீர் எனவும் உவமேயப் பொருள் கொள்ளும்போது கண் நீர் எனப் பிரித்துக் கண்ணினின்று வரும் நீர் எனவும் இரட்டுறமொழிக. அவ்வாறே, அகமுடைந்து என்பதற்கு உவமானப் பொருள் கொள்ளும் போது பூவின் அகம் நெகிழ்ந்து எனவும், உவமேயப் பொருள் கொள்ளும்போது உளம் வருந்தி எனவும் இரட்டுறமொழிக. மரங்கள் தங்கள் பூக்களிலிருந்து தேனைச் சொரிதலானது இணைபிரிந்த அன்றிற் பறவைகளின் கூவுதலைக்கேட்டுக் கண்ணீர் விட்டு அழுதல்போன்றிருக்கின்றது என்று ஆசிரியர் கூறுகின்றார். என்பு - எலும்பு. அகம் - உள். தூவ - சொரிய.

9. சால வித்தையாகிய ஜேவடிக்கையைத் தெரிவித்து ஆங்காங்குள்ளவர்களை அழைப்பவர்போல வௌவாற் பறவைகள் அக்காடு முழுவதும் இரவில் அங்குமிங்குமாய்த் திரிந்தன என்பார், 'விந்தை நடப்பது தெரிக்க விளிப்பவரின் வாவல் விரைந்தலைய' என்றார். இருள் செறிந்த அக்காட்டில் அழைப்பவரது பின்னே விளக்கேந்திச் செல்பவனைப்போல, 'மின்மினியும் விளக்கொடு பின்னுட' என்றார். மின்மினியும் விளக்கொடு பின்னுட - மின்மினிப் பூச்சியும் ஒளியுடன் பறக்கவும் எனலும் ஆம். விளிப்பவரில் என்பதில் இல் ஐந்தனுருபு ஒப்புப்பொருளது. விந்தை - வித்தை. அந்திமாலைப்பொழுது. இறு - தங்கு.

10. இருள் சூழ்ந்த அக்காட்டில் (பாம்பின் சுடிகையிலுள்ள மாணிக்கத்தின்) நாகரத்தின ஒளியும், யானைக்கொம்பின் ஒளியும், புலியினது கண்ணின் ஒளியும் அன்றி வேறு எவ்வித ஒளியும் இல்லை என்பதாம். கறையடி - யானை: அன்மொழி. கறை - உரல், உரல் போன்ற அடியையுடையது. பொலன் - அழகு. உழுவை - புலி. பொறி- புள்ளி. சுடிகை - உச்சிக் கொண்டை.

11. ஊசி சென்ற வழியே அதிற்கோத்த நூல் செல்லுதல் போல முனிவன் சென்ற வழியே அம்மைந்தன் சென்றான் என்க. புதல் - புதர்: ஈற்றுப் போலி. புதல் - குத்துச் செடி. அக்காட்டில் புதர்கள் நெருங்கிக் கிடக்கின்றமையால் இடையிடையே அகற்றிச் சென்றனர் என்க. பேர் அயர்வு; பெருமை+ அயர்வு: தொழிற்பெயர், அயர்வு - தளர்ச்சி.

12. அம்முனிவனும் மைந்தனும் செல்லும் வழியில் முட்காடுகள் ஒன்றோடொன்று நெருங்கிக் கிடத்தலால் அவற்றை யொதுக்கிச் சென்றனர் என்பார், 'ஒருங்கார நிறைமுளரியுழை யொதுக்கி நுழைந்தும்' என்றும், அவ்விருவர் செல்லும் வழியில் மலைகளின் குகைகள் ஏற்றிழிவு முதலாயின குற்றங்களுள்ளனவாதலின் 'உயர்மலையின் குகை குதித்தும்' என்றும் கூறினர். முளரி - முட்காடு. ஆர - செறிய: செயவெனச் சம் காரணப் பொருட்டு. ஆர் : பகுதி. கானம் நதி-காட்டாறு.

13. அம்முனிவனால் மூட்டிய நெருப்புக் கொழுந்துவிட்டுக் காற்றால் வளைந்து அசைதல் ஆங்கு வருபவரை அழைத்தல் போலுளதென்பார், 'தன் நுண்ணிறுவுதலை வளைத்து அழைக்கும் நெருப்பொன்றும்' என்றார். அம்முனிவன் தங்கிய இடம் சிதாகாசவடிவமாதலின், மனைக்குரிய வாயில், பூட்டு, மதில் முதலியனவின்றி விளங்கியது என்றார். ஒன்றும் - சிறிதும். நுண் - நுண்மை. மரபு - முறைமை.

14. வேம்பு, தான்றி முதலிய விறகுகளை யொழித்துத் தவத்திற்குரிய ஆல், அரசு முதலிய விறகுகள் என்பார், 'விமல விறகு' என்றார். பத்தரில், இல்: ஐந்தனுருபு; ஒப்புப் பொருள். விமல- தூய்மையான.

15. பனிப்பு - நடுக்கம்: தொழிற்பெயர். பல மூலம் - பலத்தைத்தரும் கிழங்கு, பல வாகிய மூலங்கள் எனினுமமையும்: இது தொகுதி யொருமை.

16. தம்முடைய நாவினாலே குண்டலியை எழுப்பி ஒரு வீரற்கடை தூரத்தைக் கடந்து, அமுத கலையை யுண்ண வகை யறியாது, முத்தியைப்பெறக் கடலையும் பல மலைகளையும் கடந்து சென்று திரிகின்றமையால் யாதொரு பயனுமில்லை யென்பதாம். சாகரம் - கடல். சகர புத்திரரால் தோண்டப்பட்டது: தத்திதாந்த நாமம். மதி - அறிவு. கந்தம்-கிழங்கு. அனந்த- அளவற்ற. வகுத்து - ஒழுங்குபடுத்தி.

17. உறைதி - தங்குவாய்: ஏவல் முன்னிலை வினைமுற்று; உறை பகுதி: இ: ஏவல் முன்னிலை வினைமுற்று விகுதி: த் எழுத்துப்பேறு, இகர விகுதியே எதிர்காலத்தைக் காட்டிற்று. திருந்த - செம்மையாக.

18. முனிவர் தம்முன்மையுணர்வாராயின் எங்ஙனம் சபித்திடுவாரோ என்னும் அச்சத்தால், 'அருகே ஏகாமல் எதிர் ஒன்றும் இசையாமல் தனியே மனமிறந்து, புறம் ஒதுங்கி வறிதிருந்த மகன்' என்றார். இறந்து - கடந்து. ஈண்டுக் குழைதல் மேற்று. மலைவு - மயக்கம். பகர்- கூறு.

19. முனிவர் பெண்ணென்று தெரிந்துகொள்ளாதபடி பாதி முகமதியை ஒரு கைப் பதுமமலரால் மறைத்ததாகும். முகமதி என்பதும் கைப் பதுமமலர் என்பதும் உருவகம். சூரியனைக் கண்டால் தாமரை மலர்வதும் சந்திரனைக் கண்டால் கூம்புவதும் இதனால் அறியக்கிடந்தது.

20. பூனைக்குட்டி எலியைப் பிடிக்கும்போது அவ்வெலியைப் பிடிப்பதும் விடுவதும் இயல்பாதலால் அங்ஙனமே அக்கினியும் கொழுந்துவிட்டெரியுங்கால் விளங்கியும் தணியுங்கால் அடங்கியும் இருத்தலால், 'எலி பிடித்தலைக்கும் சிறு பூனை' உவமை கூறப்பட்டது. சிறு பூனை என்றது பூனைக்குட்டியை. இது முதல் நூலிற் கண்டது. அக்கினி சடசட வென்னும் ஒலியோடுகொழுந்துவிட்டு எரிதலை, 'விந்தையொடு நடம்புரிந்து' என்றார். வீங்குதல் - அதிகரித்தல்; வாங்குதல் - உட்கொள்ளல், வளைதலும் ஆம். திகழ்ந்து - விளங்கி.

21. இத்தகைய அன்புடைய மௌன முனியை வெறுத்தமை பற்றித் தனக்குண்டான வருத்தத்தாலும் நாணத்தாலும், 'மொழியாதும் புகலாது விழி மாரி மொழிய முகங்கவிழ' என்றார். குறி என்றது முகக்குறியை. குறி - அடையாளம். எல்லாப் போகங்களும் அனுபவித்தற்குரிய பருவம் இளமையாதலால் 'எழிலாரும் இளமையினில்' என்றார். இடையூறு - துன்பம்: முதனிலை திரிந்த தொழிற்பெயர். புகல் - சொல். வதிந்த - தங்கிய. எழில் - அழகு. இவண் - இவ்விடம்.

22. இருப்பது : வினைமுற்று, பெயர்த் தன்மை யடைந்தமையால் ஒன்றன்பாற் படர்க்கை

வினையாலணையும் பெயர். ஓதாய் -சொல்லாய்: ஏவல் வினைமுற்று, ஓது பகுதி : ஆய் : ஏவல் வினை முற்று விகுதி, எதிர்காலத்தை யுணர்த்திற்று. கழறாய் என்பதும் அது. இழந்தனையோ வரும் பொருளை என்று கொண்டுவரும் பொருள் என்பதற்குக் கிடைக்க வேண்டிய பொருள் என்று கூறினு மமையும். மெய்விடுத்துக் கழறாய் - அதாவது உன் உடம்பின் உண்மை இயலை வெளிப்படையாகக் காட்டிச் சொல் எனலும் ஆம்.

23. அஞ்ஞானம் நிறைந்த இவ்வுலகத்தில் தோன்றும் சுகம் துக்கமேயாதலானும் அச்சுகம் இன்பம் பயப்பதாயினும் ஒரு கணப்பொழுதும் நிற்காமல் அழியும் ஆதலானும், 'இவ்வையகத்தில் அமைந்த சுகம் அனைத்தும் அழலால் இங்கெழுந்தடங்கு நிழலாக நினையாய்' என்றார். அழல் கொழுந்துவிட்டெழும்பொழுது அதைச் சூழ்ந்துள்ள மரங்கள் முதலியவற்றின் நிழல் பலவாகத் தோன்றுதல் போல இன்பம் பலவாகத் தோன்றினும் அவ்வழல் தணிந்தபோது நிழல் தோன்றாமை போலச் சுகமுந் தோன்றாதென்பதாம். இலவுகாத்த கிளியென்பது முள்ளிலவின் பழம் செக்கச்செவேலென்று கொவ்வைக் கனிபோலத் தோன்றுதலால், அதனைக் கொவ்வைக்கனி என்று கருதிக் கிளி தின்னும் பொருட்டுக் காத்துக்கொண்டு இருக்கையில் அக்கனி வெடித்து அதினின்றும் பஞ்சு வெளிப்படக் கிளிப்பிள்ளை நாணும் என்க.

24. முயற்கொம்பு (கோடு) இல் பொருள் ஆதலால், பெண்கள் பிறர்பால் ஆசை கொண்டவர்போலக் காணப்படினும் அது பொய்ம்மையேயாம். ஆகாயத் தாமரை, ஆமை மயிர்க் கம்பளம் என்பனவும் இல்பொருளேயாம். பெருங் கபடம் இடுகலன் என்றது, எளிதிற் கண்டுபிடிக்க முடியாத வஞ்சகத்தை இட்டுவைத்த பாத்திரம் எனற்கு. கலன் : கலம் என்பதன் போலி. நறு நெய் - மணம் பொருந்திய நெய். பிறங்கும் - விளங்கும்.

25. ஆண்வேடம் தரித்திருக்கும் சிவகாமி தன் காதலனை வெறுத்தமையால் அம்முனிவர் சொல்லிய மொழிகளெல்லாம் சுடுதலால் 'இசைத்த வசையுட் கொண்டு' என்றார். கனவு-எதிர்மொழி நனவு. அதாவது கண் விழிப்பிற்றோன்றுந் தோற்றம். கனாத்தோற்றத்தினும் உண்மையாக நெடும்பொழுது தோன்றிய தனால்'நீள்கனவு'என்றார்.நாணத்தால் முகம் வெளுத்து மனம் நொந்து நின்றமையால், 'வெயிலில் விளக்கொளியும், மின்னொளியிற் கண்ணும், வெளிப்பட்ட கள்வனும் போல் வெட்கி முகம் வெளுத்தான்' என்றார். வறிஞன் கனவிற் கண்ட பொருள் நினைவில் கை கூடாமையால் வருந்துதல்போல முனிவன் சொல்லிய சொற்களால் தன் செய்கை வெளிப்பட்டமையால், வெயில் முன் விளக்கொளியும் மின்னொளிமுன் கண்ணும் பலர் முன் கள்வனும் ஒளி மங்குதல்போல நாணத்தால் முகம் வெளுத்தான் என்க. எதிலன் என்றது ஈண்டு

வறிஞனை ; பொன் சிறிதும் இல்லாமையால். அடிகள் - முனிவர். வசை - பழிமொழி.

26. வெட்ட வெளியான என்பது வெளிப்பட்டு விட்டன என்னும் கருத்துள்ள குறிப்புமொழித் தொடர். இரகசியங்கள் எல்லாம் என்றது பெண் ஆண் வேடம் தரித்தமையும் தன்னுடைய பந்து என்பதையும் என்க. யதி - முனிவர். இறும்பூது - வியப்பு.

27. கற்பம் அநுகற்பம் உபகற்பகம் என்று சொல்லப்படும் விபூதியுள் ஒன்றை யணிவார்க்குப் பகை, பிணி, பேய், குனியத்தாலாம் தோடம் முதலியவை யுண்டாகாவென்பார், 'நின்மல விபூதி' என்றார். பொன்மயமெய் விபூதியுள்ளே தோன்றி என்பது உபமேயம். நீறுபடி நெருப்பெனவே நிலாவி என்பது உபமானம். குருவாகிய முனிவன் தன் கண்ணால் முகத்தை நோக்கினமையால், ஆண் வேடம் தரித்த பெண்மகள் மனம்கூசி நாணத்தால் தன் இரண்டு விழிகளும் மெய்ந்நெறியை விட்டுத் தான் பெண் என்பதைத் தெரிவித்தன என்பதாம்.

28. தன் உண்மையை முனிவர் தெரிந்துகொண்டார் என்னும் மகிழ்ச்சியால் கூசிய முகம் பெண்மைக்குரிய குணமாகிய நாணத்தோடு கோணி எழில் வீசுதலையும், சடைக்கோலம் ஒழிந்து குழற்பாரஞ் சரிதலையும், வெய்துயிர்ப்பையும், ஆண் வேடம் ஒழிந்து பெண் வேடம் தோன்றுதலையும் கண்டார் முனிவர் என்பதாம்.

29. முனிவர் வசிக்குமிடம் பரிசுத்தமுடைய தாதலானும், வேதமோதுதல், ஓமம் வளர்த்தல் முதலியன உடையதாதலானும், அவிர்ப்பாகம் பெறத் தேவர்கள் நெருங்குதலானும், 'தெய்வமொடு நீ வசிக்குந் திருக்கோயில்' என்றார். செமித்தருள்வை : முன்னிலை வினைமுற்று. செமித்தருள்: பகுதி, ஐ : விகுதி, வ்:எதிர்கால இடைநிலை.

30. காவிரிப்பூ மாநகர் என்றது காவிரி நதி கடலொடு சங்கமமாகுமிடத்திலுள்ள பட்டினத்தை. குற்றமில்லாத குலமும், விருந்தினரை யுபசரித்தலும், யாவரிடத்தும் அன்பும் நாயகனது குறிப்பறிந்து ஒழுகும் ஒழுக்கமும், வாய்மையும், கோபமின்மையும், கற்பும், பெற்றதைக்கொண்டு உவக்கும் உவப்பு முடைமையால், 'எண்ணரிய குணமுடையாள்' என்றார். நற்குணமுடைய பெண் ஒருத்தியுண்டு, அவள் வயிற்றில் இரண்டு பெண்களும் ஒரே பிள்ளையும் பிறந்தார்கள் என்பதாம்.

31. சாப்பிள்ளையே பெறுதலும், ஒரே பிள்ளை பெறுதலும், பெண்களையே பெறுதலும், எதையும் பெறாதிருத்தலுமாகிய நால்வகை மலடியுள், சிவகாமியின் சிற்றன்னை ஒரு மகவும் பெறா மலடியாதலால், 'முழு மலடி' என்றார். சிவகாமி சிற்றன்னை மலடியாயினும் ஈடு எடுப்பற்ற செல்வமுடையாள் என்பார், 'செகமனைத்தும் அவள் படைத்த செல்வமென

மொழிவர்' என்றூர். செப்பரிய - சொல்லற்கரிய.

32. ஒருவனது நிழல் தன்னைப் பிரியினும் அவனைவிடாது வந்து அடியினிடத்தே தங்குந் தன்மைபோலச் சிறிது நேரம் அவரைப் பிரியினும் சகியாது அவரைத் தேடி யுடன் கூடி விளையாடி யொன்றுக வளர்ந்தேன் எனத் தன் இளமைப் பருவத்தின் செய்தியைக் கூறினுள் என்க. அறைவேனே என்புழி ஓ விஞவொடு எதிர்மறை. அடல் - வலிமை; அலகு- அளவு.

33. எடுத்தனள் முன்தொடுத்து என்பதை முன் எடுத்துத் தொடுத்தனள் என விகுதி பிரித்துக்கூட்டி அம்முனிவன் முன்னே விரிவாக எடுத்துச் சொல்லத்தொடங்கினள் எனப் பொருள் கோடலும் ஒன்று. பிடி - பெட்டையானை.

34. சிறிய தாய் எனக்குக் கொடுத்த செல்வத்தால் மதிமயங்கித் தலைதடுமாறி என் நிலைமையையும் என் தலைவனது தன்மையையும் தகைமையையும் மறந்தேன் என்க. படிறு- வஞ்சகம். தகைமை . என்றது கல்வி, அறிவு, அன்பு, அருள், அழகு முதலிய குணங்களை. மடமகள் - இளம்பெண். தமியள் - தனித்தவள்.

35. அத்தலைவர் குறிப்பு மொழியால் உணர்த்தியும் என் குறும்பு மதியால் கொள்ளாது விடுத்தனன் என்க. குறிப்பு, வெளிப்படை என மொழிகள் இரண்டு வகைப்படும். குறிப்புச் சொற்கள் பொருளைக் குறிப்பால் உணர்த்துவன. அவை ஒன்ருெழி பொதுச்சொல், விகாரம் முதலாயின. குறும்பு - பொல்லாங்கு.

36. அதிபர் அவர் - அதிபராகிய அவர்: இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகை. அயர்ந்திருந்தேன்-அயர்ந்தேன்; ஒரு சொன்னீர்மைத்து. அரும்பி-உதித்து.

37. காணேன் : எதிர்மறைத் தன்மை யொருமை வினைமுற்று, காண் : பகுதி, என் : தன்மை யொருமை வினைமுற்று விகுதி, ஆ:எதிர்மறை விகுதி புணர்ந்து கெட்டது. இனி, எதிர்மறை விகுதி புணர்ந்து கெடாமல், விகுதியின் காரணமே எதிர்மறையை யுணர்த்திற்று என்பர் சேனுவரையர். என் ஆராமையைத் தோழியர்களிடத்து முறையிட, அவர்கள் யான் செல்வச் செருக்கினுல் வெறுத்த தலைவரைக் குறித்து இது பொழுது வருந்துதலால் என் அறியாமையைக் கண்டு பரிகசித்தனர் என்க. உன்னி-நினைந்து. சேடியர் - தோழியர். தேயம் - இடம்.

38. ஆயத்தார் - மகளிர் கூட்டத்தினர். தான்:அசை. விரகவேதனை யுடையார்க்குக் கடலொலி துன்பத்தைச் செய்யுமாதலின், 'அவ்வேலை - அகோராத்திரம் கெடுத்து எறியும்' என்றூர். வேலை - கடல் (ஆகுபெயர்), வேலை - கரை, சினைப்பெயராகிய இது முதற்பெயராகிய கடலுக்கு வந்தமையால் சினையாகுபெயர். எறியும் : செய்யும் என்னும் வாய்பாட்டு வினை

முற்று; இது காரணத்தைக் காரியமாக உபசரித்தல். காதலுடையாரைச் சந்திரனும் தென்றலும் வருத்துமாதலான், 'நமன் உயிர் தின்னும்' என்றார். மதியும் காலும் என்புழி உம்மை எண்ணும்மை. உமிழ்தல்-கக்குதல். மதி - சந்திரன், கால் - காற்று. திரிந்துலவுங்கால் என்றதனால் தென்றற் காற்றையுணர்த்திற்று. தென்றற்காற்று மெல்லிய நடையும் குளிர்ச்சியும் நறுமணமும் உடைமையால், 'திரிந்துலவுங்காலும்' என்றார். அகோராத்திரம் - இரவு பகல். கால் - காற்று.

39. காசிப முனிவர்க்குப் பரசுராமரால் தானஞ் செய்யப்பட்டமையால், 'காசினி' எனப் பூமிக்கு ஒரு பெயர். யூகம் - ஆலோசனை. உள்ளபடி-உள்ளவளவு.

40. உண்டெனிலோ என்புழி ஓகாரம் கட்டுரைச் சுவைபட வந்த அசைநிலை. இல்லை எனில் என்பதனிடத்தும் அவ்வோகாரம் கூட்டப்பட்டது. கண்டுயிலுமில்லிடம் தீக்கதுவ வெளியோடுங் கணக்கு - என்பதை "நித்திரைசெய் வீட்டில் நெருப்பும் பெரும்படையும், முற்றிப் புறப்பட்டார் முற்றத்தே - பித்தரைப்போல், நில்லென்று சொன்னாலும் நிற்பரோ அப்படிக்காண், இல்லறத்தை நீத்தார் இயல்பு" என்ற ஒழிவிலொடுக்கச் செய்யுளோடொப்பு நோக்குக. ஒல்லை - விரைவு. தேறி - தெளிந்து. கதுவ-பற்ற. கரந்து - மறைந்து.

41. தன் தலைவரும் அவ்விடங்களில், சென்றிருப்பார் என்ற துணிபால் ஆங்காங்குச் சென்று பார்த்தும் அவரைக் காணாமையால், 'பார்த்துடலஞ் சலித்தேன்' எனவும், அவர் இல்லறந் துறந்த பெரியாராதலான், குருக்கள் மடத்திற்றங்கி ஞான நூல் ஆராய்ச்சி செய்வார் என்னுங் கருத்தால் அவ்விடத்துச் சென்று பார்த்தும் பயனற்றமையால், 'மடந்திரிந்து மனம் அலுத்தேன்' எனவும், யோக நிலையுடையவராதலால் யோகியர்கள் வாழ்கின்ற குகைகளிற் றங்கித் தாமும் வசிப்பரெனக் கருதிப் பார்க்கையில் மீண்டும் அவர் இல்லாமையால், 'யோகியர் போய் வாழ் குகையும் பாழே' எனவும் கூறினாள் என்க. திருக்கு-அஞ்ஞானம், வஞ்சகம். குருக்கள்-இருளை யொழிப்பவர் எனக் காரணக் குறியாயினும் ஈண்டுத் 'திருக்கறு' என்னும் அடை மொழியால் வாளா பெயராய் நின்றது, 'சேற்றில் முளைத்த பங்கயம்' என்றாற் போல. மன்று - சபை.

42. தன் நாயகனைக் கண்டதுண்டோ என்று மான் முதலியவற்றை விளித்துக் கேட்டாள் என்க. மான் என்றது பெண் மானை, கலை என்றது ஆண் மானை. பிடி - பெண் யானை, மா - ஆண் யானை. பிகம்-குயில், குயில் தன் முட்டையைக் காகத்தின் குடம்பையுள் இட்டுக்குஞ்சு பொரிக்கும் வரைக்கும் காத்துக் கொண்டிருந்து குஞ்சு வெளிப்பட்டவுடன் அதனைக் காகத்தை விட்டுப்பிரித்துத் தான் அழைத்

துக்கொண்டு செல்கின்றமையால், 'வன்பிகமே' என்றார். அறிவீரோ என்புழி ஓகாரம் வினாப்பொருளது. தொடர்ந்து என்னும் எச்சம் கழித்தேன் என்னும் முற்றொடு முடிந்தது. அஞ்ஞான மயக்கம் விடாத அறுபத்து நான்கு கலை ஞானங்களே! பிடிவாதமே வாழ்க்கையாகக் கொண்ட மதச் சச்சரவுகளாலெழும் ஆரவாரமே! அனித்த சடதுக்க ரூபமாகிய இகலோகமே! சுகம் சுகம் என்று கூறப்படும் இந்திராதி பதமோட்சங்களாகிய பரலோகமே! என்னும் தத்துவார்த்தம் ஒருவாறு தொனித்தல் காண்க.

43. கண்டிலன் : எதிர்மறைத் தன்மை வினைமுற்று. எ : அசைநிலை. நண்ண உண்ண என்பன அகரவீற்று வியங்கோள் வினைமுற்றுக்கள். அருவருப்பு - வெறுப்பு: தொழிற்பெயர். காயம் - உடல்.

44. பலவிடத்துத் தேடியும் தலைவரைக் காணாமையால், 'அலைந்த தத்தனையும்பொய்யோ' என்றார். எனக்கும் என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்பு. அவர் தந்த போதமாவது செல்வநிலையாமை, கயவரைச் சேராமை முதலியன. அறிவுளதோ : ஓகாரம் வினாவோடு ஐயம் என்க. புனிதர் - தூயர். போதம்-அறிவு.

45. வந்திலரோ என்புழி ஓகாரம் பிரித்து என் என்னும் வினாவுடன் கூட்டப்பட்டது. எவன் என்பதன் மரூஉ என் என்றாயது. ஓகாரம் வினாவுடன் ஐயம். நலம் - நன்மை. எதிர் - நேர்.

46. தன்னைக் காதலித்தவரெல்லாம் பொய்க்காதலுடையவராதலானும் இவர் ஒருவரே மெய்க்காதலுடையவராதலானும் 'உயிர்த்துணைவர்' என்றார். பால் - இடம். சாயை - சாயல்.

47. இவ் வழலே கதியென்றது இவ் வழலில் விழுந்து இறத்தலை மூதுருவம்-முதுமை+உருவம் - ஈறு போதல் என்றதனால் மை கெட்டு, ஆதிநீடல் என்றதனால் மூது என்றாய் 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்'— என்றதனால் மூதுருவம் என்றாயது. குளறி - தடுமாறி.

48. முனிவன் சிவகாமியின் மாமன் பிள்ளையாதலால்,'உனது சிதம்பரனே' என்றான். அன்பின் ஆராமையால் ஒருவர்க்கொருவர் முற்பட்டுத் தழுவிக் கொண்டமையால், 'எவர்தாம் முன் அணைந்தனர் என்றிதுகாறும் அறியோம்' என்றார். அறியோம் என்னும் பயனிலைக்கு எழுவாய் வருவிக்கப்பட்டது. அறியோம் என்றது வாணி கூற்று. நான்கு வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ப.

49. உமாதேவியார் பர்வதராசன் புத்திரியாதலால் 'பார்வதி' எனப்பட்டாள். பாரதி-சரசுவதி. பார்க்கவி என்பது உமாதேவிக்குப் பெயராயினும் 'கஞ்சப்பார்க்கவி' என்றமையால், இலக்குமியை யுணர்த்தியது. நாயகனிடத்து அன்பிற் சிறந்த 'அருந்ததியும் பெண்களுள் இவ்வளவு அன்புடையாளை இதுகா

றும் காணாது கண்டமையால் 'அருந்ததியும் அம்ம இஃதருங் கதி யென்றஞ்ச' என்றார். இவ் விருவருடைய அன்பின் நிலைமையைக் கண்டு உலகமும் அன்புடையாராயினமையின், 'ஆர்வம் உலகார்க' என்றார். உலகு : ஆகு பெயர். ஆர்க: வியங்கோள் வினை முற்று.

50. ஆழி - கடல், ஆழ்தலை யுடையது ; இ : வினை முதற் பொருள் விகுதி. புடை - பக்கம். அறம் - தருமம். அறத்தை நீர்த் துறையாக உருவகித்தமைக் கேற்ப அன்பை வெள்ளமாக உருவகித்தனர். இஃது இயைபு உருவகம். பந்தனைகள் - கட்டுகள் ; ஈண்டு மனத்துன்பங்களை யுணர்த்தின. மனத்துன்பங்களாவன: வாணியின் தகப்பனாகிய சகடன் தன் மகளை அவள் காதலனாகும் நடராஜனுக்கு வாழ்க்கைப்படாமல் குடிலன் புத்திரனாகிய பலதேவனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று வற்புறுத்த அதற்கு அவள் உடன்படாமையாலுண்டான வருத்தங்கள் என்க. வாணி முடிவில் தான் விரும்பிய நடராஜனையே மணக்கின்றமையால், 'பரிந்து அருள் சுரந்தமை நிரந்தரமும் வாழ்க' என்றாள். நிரந்தரம் - எப்பொழுதும்.

மூன்றும் அங்கம் மூன்றும் களம்

தொடர்ச்சி

40. படர்ந்து - சென்று.
50. எதிர்ச்சையா - நினைத்திராதபடி, திடீரென்று.
58. தீம்புனல் - இனிய நீர்.
61. காவி - குவளை மலர்.
64. முகந்திலன்-மோந்திலன்; வாசனை யறிந்தேனில்லை.
66. மான - போல.
67. மாடு - பக்கம். எழனுருபு.
83. போதம் - அறிவு.
87. துவக்கு இந்திரியம் - தொட்டறியும் உணர்வு, பரிசம்.
89. சேய்த்து - தூரத்திலுள்ளது, சேய்மை : பகுதி.
95. வடக்குநோக்கி - திசை காட்டும் யந்திரம். இதில் முள் எப்பொழுதும் வடபக்கத்தையே நோக்கி நிற்கும் (Mariner's Compass).
104. எய்ப்ப - போல.
115. அனுமான ஆதியால் - அனுமானம் முதலிய அளவுகளால்.
121. சீதம் - குளிர்ச்சி.
133. வெஞ்சரம் - கொடிய அம்பு.
134. நிற்கலை - நிற்கவில்லை.

[இக்களத்தில் சந்தியாவருணனையும் மனோன்மணியின் சோக நிலையும் பத்தியின் சுபாவமும் உபயார்த்தமுடைய சிவகாமி சரிதமும் சொல்லப்பட்டமை காண்க.]

மூன்றும் அங்கம்

நான்காம் களம்

1. மயக்கம் - கலக்கம்; மயங்கு: பகுதி.
2. வேதாந்தம்-வேத + அந்தம் - மறை முடிவு.
3. இமையாது : இமை யென்னும் வினையடியாகப் பிறந்த எதிர்மறை வினையெச்சம்.
4. பரிதபித்திருந்தீர் - வருந்தியிருந்தீர்; பரிதாபம், பெயர்.
13. விரூபம் - வி + ரூபம் - ரூபமற்றது, அவலட்சண வடிவம்.
15. அல் - இருள்.
16. பேழ்வாய் - பெரிய வாய்.
21. இசித்துக் கறிக்க - இழுத்துக் கடிக்க.
23. பஞ்சாசத் கோடி-ஐம்பது கோடி.
36. அலகில்ல - அளவில்லாதது.
38. உந்தியந் தடாகம்-கொப்பூழாகிய குளம். முளரி-தாமரை முள்ளோடு கூடிய தண்டையுடையது.
41. நான்முகச்சிலந்தி-நான்கு முகங்களையுடைய பிரமனாகிய சிலந்திப்பூச்சி. நாற்றிய-தொங்கவிட்ட; நால்: தன்வினைப்பகுதி; இதனுடன் 'று' என்ற பிறவினை விகுதி சேர்ந்து நாற்று என்ற பிறவினைப் பகுதியாகும்.
45. பேய்த்தேர் - கானல்நீர்.
49. மகோததி-மகா + உததி - (குணசந்தி) பெருங்கடல்.
50. புற்புதம் - நீர்க்குமிழி.
52. தாங்குநர் - தாங்குபவர்.
54. இந்திரஜாலம் இவ் எந்திர விசேடம் - [மாயா காரியமாகிய பிரபஞ்சம்.]
56. திரிகை - திரிக்கும் இயந்திரம்.
64. [ஆர்க்கும் - வருந்தி இரைகின்ற.]
66. மீக்கொளும்-மேலாகும்.
71. பிரத்தியக்பிரபோதோதயம் - உள் முகமான மெய்ஞ்ஞானத் தோற்றம்.
73. அகண்ட - எல்லையற்ற. சித் - அறிவு.
80. [சுதமாம்-சுவத சித்தமாம் - தானே பலிக்கின்ற].
83. மோனம்-ஞானவரம்பு.
104- சினகரம் - கோவில்.
116. அகம் உடைந்தும்-மனம் வருந்தியும்.
123. விடும் பரிசு - விடுந்தன்மை.
133. சங்கேதம் - குறியீடு.
144. கரதலாமலகம் - அங்கை நெல்லிக்கனி. நெல்லிக்கனியின் உட்புறம்போன்ற தன்மையே அதன் வெளிப்புறத்தும் காணப்பெறும்; இதன் உண்மையைக் கையிற்கொண்டே தெளியலாம் என்றபடி. கரதல + ஆமலகம்: தீர்க்கசந்தி.
155. விண்டிடா வண்ணம் வீக்கிய பாசம் - பிரிந்திராத விதம் கட்டிய கயிறு.
156. ஆகருஷணம் - இழுத்து நிற்கும் சக்தி.
160. குயிற்றிய - செய்த, குயிற்று : பகுதி.
163. அக்கரம் பயில்வது-அட்சரம் பழகல், எழுதப்படிப்பது.
176. உள்ளுவர் - நினைப்பர், உள்: பகுதி.

179-182. [பாரிஜாதம் முல்லை முதலிய பூக்கள் வெண்மை நிறமும் சுகந்தமும் உடையனவாயிருப்பதற்கு அவை இராக்காலம் அலர்தலே காரணம் என்பது ஜீவ சாத்திரிகளின் கொள்கை.]

184. உசிதம்-மேன்மை. நிசி-இரவு.

196. உறுகண்-துன்பம், இடுக்கண். ஏது - காரணம்.

208. அல்லல் - துன்பம்.

222. சாத்தியம்-முடியக் கூடியது.

227. [பந்தம் - சம்பந்தம்.]

236. எய்ப்பினில் வைப்பு - இளைத்த காலத்து உதவும் பொருள்.

239. சமுசயம் - ஐயம்.

250. அரற்றி - வாய்விட்டுச் சொல்லி, அழுது.

259. முகமன்-நயவுரை, முகத்துதி.

277. [நீர் பிரபஞ்சத்தை அருள் வடிவாகப் பார்க்கும் பார்வையும் முடிந்த நிலமன்று. ஆயினும் உமக்குப் பந்த நிவர்த்தி சமீபமாய் விட்டது என்பது இவ்வரியின் குறிப்புப் பொருள்.]

231. சமயிகள் - சமயத்தைச் சார்ந்தவர்கள், மதத்தோர்.

கலித்துறை:—ஆபதம் - ஆபத்து. கற்படை - சுருங்கை. மாற்றம் - சொல்.

[முடிவில் வரும் கலித்துறை சுந்தரர் சமைத்த சுரங்கத்தைத் தத்துவோபதேசமாக உருவகப் படுத்தி அனுபூதியாலன்றி உபதேசார்த்தம வெளிப்படாதென்று வற்புறுத்துகிறது.]

நான்காம் அங்கம்

முதற் களம்

8. மடு - தடாகம், குளம்.

11. ஒன்றிய - பொருந்திய.

20. கடம்பாடு - கடன்படுதல், கடமை.

31-32. "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து" (குறள் அதி. 49, செ. 10) என்ற குறட் கருத்து.

38. சம்பவம் - காரணம், சங்கதி - வரலாறு.

46. இதக்கேடு - நன்மைக்குக் கேடு.

50. பாற்றினம்-பருந்துக் கூட்டங்கள்.

51. பிணைத்து - பருத்து.

61. கலினம் - கடிவாளம்.

66. மும்மதம் - கன்னமதம், கபோலமதம், கோசமதம் என்ற மூன்று மதம்.

68. கறுவி - கோபித்து.

69. வெந்நிட்டு-முதுகுகாட்டி, புறங்கொடுத்து.

[இவ்வரி உக்கிரகுமார பாண்டியன் இந்திரன் முடிமேல் வளை

யெறிந்த திருவிளையாடலைக் குறிப்பிக்கின்றது.]

70. புரந்தரன் கைப்படாப் பொருப்புகள் - இந்திரன் சிறகரியும் வச்சிராயுதத்துக்குத் தப்பி மறைந்த மைநாக பருவதம் போன்றமலைகள்.

78. நாற்படை-கரி, பரி, தேர், காலாள்; சதுரங்கம்.

88. கொடுந் தொழில் - கொடுமையான செயல், கோடுந்தொழில் என்பதன் குறுக்கமாக்கின் வளைக்குஞ் செயல்.

91. [பாண்டி - பாண்டி நாடாகிய மாதா.]

100. அன்னியன் கைப்படா நீர்—தாம்பிரபன்னி நீர், திருநெல்வேலிச் சில்லாவிலேயே பாய்ந்து முடிதலால் என்க.

101. சோரி - இரத்தமழை.

102. பொன்றிடும் அளவும் - இறக்கும் வரையும்.

106. விந்தம் அடக்கினேன் - அகத்தியன், விந்தமடக்கிய செய்தி அவர் தம் வயத்தன்மையைக் குறிப்பதாம். தந்த நற்றமிழ் மொழி - அவரால் முதலிலக்கணமாகிய அகத்திய இலக்கண நூல் ஏற்பட, அதனால் செம்மையாய்ப் போற்றப்படலான தமிழ் மொழியும் அடுத்த மொழிகளினுதவியில்லாமலே தனித்தியங்கும் ஆற்றலுடையது என்பதைக் குறிக்க நிற்பது. தந்த என்ற சொற்பொருள், 'அழற்புரை நிறக் கடவுள் தந்த தமிழ்' என்ற கம்பர் வாக்கானும், 'அகத்தியன் பயந்த செஞ்சொல்' என்ற வில்லிபுத்தூரர் வாக்கானும் அறியப்படும்.

108. கிழமையும்-உரிமையும்.

108-117. தமிழ்நாட்டு மக்கள் சிறு பருவத்தினராய்த் தொட்டிலில் நித்திரை புரியுங்காலத்து அவர்கட்கு நல்ல நித்திரை வர வேண்டித் தாய்மார்கள் தாலாட்டிப் பாராட்டியது தமிழ் என்றபடி. அத்தகைய தமிழ்மொழியாளர் இப்பொழுது வீரமும் ஆண்மையும் அற்றோம் என்று கூறுதல் இழிவாம் என்பது.

119. சிறுகால் - இளங்காற்று, மென்மையாக வீசும் தென்றற் காற்று.

122. நாட்டபிமானம் - தேசாபிமானம். நடைப்பிணம் - நடையை மட்டும் கொண்டு மற்றவற்றில் பிணம் போன்றவர்.

124. திருவனையார் - இலக்குமியை யொத்த மனைவிமார்கள்.

132. அரி - சிங்கம்.

136. செந்தழல் - ஓமத்தீ.

140. இந்தனம் - விறகு.

144. திருந்தலீர் : திருந்தலர் என்பதன் விளி. திருந்தலர் - மனம் திருந்தப் பெறாதவர், பகைவர்.

148. காயம் - வடு, மாறாத் தழும்பு.

151. "விழுப்புண் படாத நாளெல்லாம்வழுக்கினுள், வைக்குந் தன்னாளை யெடுத்து"(குறள் அதி, 78 செ. 6) என்ற குறட் கருத்து.

154. அனந்தம் - எல்லையற்ற.

158. கோட்டக்கது - கொள்ளத் தக்கது. கொள் என்னும் பகுதி கோள் எனத் திரிந்து தொழிற்பெயராயிற்று.

163. கணம் கணம் - கணந்தோறும்; அடுக்கு தொறுப் பொருட்டு.

165. உதும்பர தரு - அத்தி மரம்.

166. இறும் மசகம் - இறக்கும் கொசுகு.

172. அழுக்காறு - பொறாமை, அழுக்காறு : பகுதி.

183. சேமமாய் - சுகமாய் அல்லது காவலாய்.

துறளடி வஞ்சிப்பா :—தமர் - சுற்றத்தவர். நந்தா - கெடாமல். நிந்தா நெறி - நிந்தித்தலாகிய வழி. தந்தா வளி சிந்தாவிழ - பல் வரிசை உதிர்ந்து கீழ் விழும்படி. பெயருமின் - பெயருங்கள், புறப்படுங்கள்.

இக் கலித்தாழிசை நான்கு அடிகளால் ஒரு பொருண்மேல் மூன்று அடுக்கி வந்து ஈற்றடி அறுசீராய் மிக்கு ஏனையடிகள் நாற்சீராய் நிற்கப்பெற்றது.

கலித்தாழிசை : [க. சின்னம் எமன் அதிசயிக்கும் எனக் கருதிச்செருக் கொழிமின். அங்ஙனமன்றித் திரும்புவது சொற்ப புத்தி. எங்கள் வஞ்சியரசன் வெல்வான் என வெண்ணிச் செருக்குவீராயின், என்பது அடி மடக்கின் பொருள்.

உ. விசயலட்சுமி வீரர்புயமே தனது குடியிருப்பாக உடையாள். ஆதலால் ஒடுமின், விடம் போல் உயிருண்ணும் இவ் வீரர் வாளாயுதத்திற்கெதிரே ஒடாது நிற்பீராயின், என்பது பொருள்.

ங. தம் மனையைக் காக்க உருவிய வாளுக்குப் பின்னிடும் படியான உறையில்லை. அஃதாவது மத்தியில் சமாதானப் படுகையில்லை. இதனைக் கருதாது போருக்கு வந்தபின்னர் திரும்புதல் முறையன்றென் றெண்ணி நிற்பீராயின் என்பது கருத்து.]

[இக் களத்தில் நாற்படை வருணனையும் நாட்டபிமான விளக்கமும் வீரரசமும் வந்தமை காண்க.]

நான்காம் அங்கம்

இரண்டாம் களம்

12. பஞ்சாய்ப் பறத்துவன் - பஞ்சைப்போற் பறக்கச் செய்வேன்.

15. ஊட்டுவன் குருதி-இரத்தத்தைக் குடிக்கச்செய்வேன்.

20. [சடையன் - குடிலனுடைய சேவகன் பெயர்.]

23. சபதம் - சூள்மொழி, வஞ்சினம்.

27. வகிர்ந்து, பிளந்து என்பதன் முதனிலைகள் வகிர், பிள என்பன.

30. ஒன்றார் - பொருந்தமாட்டார்.

42. பிணக்கு - மாறுபாடு, கோபம்.

43. குரோதம் - கோபம்.

55. சுதேசானுராகத் தொடர்பு - சுதேசாபிமான சம்பந்தம்.

75. ஏலும் - பொருந்தும் அல்லது போதும்.

97. [ஆம் பொழுது-வேண்டும் பொழுது] வாம் பரி-வாவும்பரி, தாவுகின்ற குதிரை.
105. வாளா - சும்மா: இடைச் சொல்.
107. உழை - இடம்.
111. வீதல் - கெடுதல்; வீ: பகுதி.
135. செம்மல் - அரசன்.
இக்களத்தில் தருமயுத்தத்தின் நீதியும், படைக்குள் குழப்பம் பிறக்க அரசனுக்கபாயம் நேர்ந்த வழி நாராயணன் காக்கச்சென்ற கதையும் குறிப்பிக்கப் படுகின்றன.]

நான்காம் அங்கம்

மூன்றும் களம்

15. சாகசம்-துணிவுச்செயல்.
30. இரிந்து - பின்வாங்கி.
35. கார்முகம்-வில். கடிவாள்-கூரிய வாளாயுதம்.
54. அஞர் - துன்பம்.
75. "செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம், அந்தரஞ்சேர் செங்கதிரோற்கல்லாலலராவால்" என்ற பெருமாள் திருமொழியடியின் கருத்தமைதி கொண்டது.
85-87. 'நீரளவே யாகுமாம் நீராம்பல்' இது, "வெள்ளத் தனைய மலர்நீட்டம்" (குறள் அதி. 60. செ. 5.) என்ற அடிக் கருத்து. அம்புயம் - அம்பு+ ஜம் - நீரில் தோன்றுவது.
89. எவ்வும் - உயரும், எழும்.
96. ஊழையும் - வினைப்பயனையும்.
112. தேறுமாறு - தெளியும் விதம்.
185. மடங்கல் - சிங்கம்.
208-209. அருள் முதலியன அகம் முதலியனவாக உருவகிக்கப் பட்டுள்ளன.
219. நிம்பமாலை-வேப்பந்தார், இது பாண்டியர்க்குரிய மாலை.
222. மட்பரி - மண் குதிரை.
212-213. நொச்சி-பகைவர்க்கு எதிரில் நிலைநின்று தம் மதில் காப்போர்க்கு உரிய பூமாலை. உழிஞை - மதிலை முற்றுகை செய்யும் வீரர் அணியும் பூ.
263. ஒல்கலை - தளராதே.
264-265. "சிதைவிடத்தொல்கார் உரவோர் புதையம்பின் பட்டுப்பா டூன்றுங் களிறு" (குறள் அதி. 60. செ. 7.) உம்பல் - ஆண் யானை.
270-271. "நாணகத் தில்லாரியக்கம் மரப்பாவை, நாணால் உயிர்மருட்டி யற்று" (குறள் அதி. 102. செ. 10.)
272-273. "ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று" (குறள் அதி. 97. செ. 7.)
282. இருமுறை-போர்க்களத்திலும், தற்கொலை புரிய எத்தனித்த போதும். தப்பிலி-தப்புதலுள்ளவன், தப்புதலில்லாதவன்.
290. பகைக்கலை - விரோதம் பண்ணுதே.

291. [பிரியப்படுகை - காமித்தல். காமவழி நேரிட்ட பகையாதலால்.]

296. நிணம்படும்-கொழுப்புப் பொருந்திய.

297. மிண்டலை வறிதே - வீணைப் பேசாதே. மிண்டுதல் - மதத்தால் அடர்த்தல்.

302. உபாயமிங்கிது - நாராயணன் மீது குற்றம் ஏற்றுதலை.

[இக்களத்தில் ஜீவகன் சோகமும் குடிலனுடைய தந்திர நடவடிக்கையும், பலதேவனுடைய கீழ்ப்படியாத் தூர்க்குணமும் ஒருவாறு விளங்கலாம்.]

நான்காம் அங்கம்

நான்காம் களம்

1. ஆதி - முற்காலம்.

2. தொழுகுலம் - எவரும் வணங்கத்தக்க சிறந்த குலம்.

5. [தையலர் - மனோன்மணியின் செவிலி முதலிய அந்தப்புரத்தார்.]

6. அகழ் - கிடங்கு, தோண்டப்பட்டது.

9. களைகுதும் - களைவோம்; தும்: ஈற்றுத் தன்மைப்பன்மை.

16. ஆதியர் - முதன்மையானவர், தலைசிறந்தவர்.

23. கருதலர்-கருதமாட்டார்.

69. இவுளி - குதிரை.

70. கடகயம் - மதயானை.

71. கைக்குட்கனி - கையிலிருக்கும் நெல்லிக்கனிபோல் தெளிவாய்.

89. குடிலன் - வஞ்சகன்.

90. பகடி - கேலி.

106. [இது பலதேவனுடைய சோர காதலியின் சகோதரன் பலதேவனை வேலால் குத்தியபோது கூறிய மொழி.]

107. உரத்து - மார்பில்.

108. பொன்றினன் - இறந்தான்; பொன்று: பகுதி.

112. கூலி-கைக்கூலி.[Bribe]

124. மேவரும்-பொருந்துதற்கரிய.

126. ஓவலில் - நீங்குதலில்லாத.

144. ஒவ்வும் - பொருந்தும்.

160. [கொக் கொக் : சடையனுடைய விக்கலால் எழும் ஓசை.]

193. நடுமயிர்த் தூக்கின் - நடுவிற் கட்டியிறக்கிய மயிர் உரியைப் போலும்.

220. இரந்தேன் - வேண்டினேன்.

231. அற்றம் - ஈறு, முடிவு.

253. வல்லை - விரைவு.

277. சேய் - குழந்தை.

[இக்களத்தில் குடிலன் நாராயணன்மேல் பொய்க்குற்றம் சாட்டி நிலைநிறுத்திய தந்திரமும், இராஜ பக்தியின் இயல்பும் வெளியாகின்றன.]

நான்காம் அங்கம்

ஐந்தாம் களம்

1. வளையும் வேய் - வளையுந் தன்மையுடைய மூங்கில். நெடு மரம்-பெருமரம்-வளையாத மரம்.

2. கிளை - கிளைகள், பெருங் கொம்பு, கிளைத்தலையுடையது: தொழிலாகு பெயர். கிளர் காற்று - பெருங்காற்று. வலிய பகைவர் முன் வணங்கியவர் பின் ஒரு காலத்தில் உயர்வு பெறுவர் என்ற உபதேசத்தை விளக்குவது 1-2 அடிகளின் உப மானம்.

3. மூளை - மூங்கில், புறக்காழ தாதலின் புல்லினத்தைச் சார் வது. மரமானது அகக்காழது.

6. இறினும் - கெடினும்.

8. காழ் - வைரம், உறுதி. நாணமில் நாணல் - அபாயம். வரும்பொழுது வணங்குதலால் நாணமில்லாத நாணற்புல். நதி வேகத்தில் எதிர்ப்படும் நாணல் என்பது அறிஞர் உரை.

23. மலைவு - மயக்கம். மான - போல.

26. துயர்க் கணம் - கணம் - கூட்டம், பல துயர்கள் என்ற படி.

30. மாநிதிவழிஞர் - பெருஞ் செல்வத்தோடு பிரயாணஞ் செய்யும் வர்த்தகர்கள்.

31. ஆர்கலன் - பொருந்திய மரக்கலம். புயல்கால் - மழைக் காற்று அல்லது பெருங்காற்று.

32. தியங்குமேல் - தியங்குமா னல், கலங்குமானல். மீகான் - மீகாமன், கப்பலோட்டி.

35. வதிந்து - தங்கி.

37. ஒன்றுவன் - பொருந்து வன்.

38. உழையுளார் - பக்கமுள்ள வர் அல்லது கலத்திடமிருப்ப வர்கள்.

44. திமில் - மரக்கலம் (அர சாட்சி.)

46. பாய்மரம், ஈண்டுக் குடி லன்.

49. [கைவழி (Channel) - சிறுபாதை, கை - சிறுமை.]

50. தொல் - பழமை.

51. துவாத சாந்தத்துறை - பூலோக வடிவாம் விராட்புருட னுக்கும் பிரமரந்திரத்துக்கும் மேலுள்ள தோரிடமாகிய மதுரை. துவா + தச + அந்தம் = இரண்டு + பத்து + முடிவு— புருவமத்திக்குமேல் பன்னி ரண்டு விரற்கிடையுள்ள இடம்.

52. நிவாதம் - வாதம் இல்லா தது, காற்றற்ற இடம், நிவாஸம் என்ற சொல்லின் திரிபாகக் கொள்ளின் உறைவிடம் என்க.

54. நயப்பு - அன்பு.

55. [பொதுவாகக் கூறிய முனிவர்மொழிக்கு, நாராயணன் கழுவேற வுடன்பட்டதைச் சுட்டுவதாக ஜீவகன் பொருட் படுத்திக் கொள்ளுகிறுன். குடி லனைச் சுட்டிக் கூறிய பாய்மர மும் நாராயணனுகவே மயங்கு கின்றுன்.]

59. தெருட்டிட - தெருளச் செய்ய, தெளிவுபடுத்த.

60. [வேற்றுமை யுருவாய் - மாறுபாடு செய்தலே இலக்கண மாகவுடைய.]

66. மேதை - அறிவு.

70. இயல் - அரசியல்.

73. காலக்கரப்பே-காலவசத்தாலுண்டாகும் மறைப்பு.

79. புரி - திருநெல்வேலி நகரம்.

81. பொறித்த - தாபித்த, நிறுவிய.

83. கவந்தம் - உடற்குறை.

94. தொடரியல் - சங்கிலித் தொடரி னியல்பு.

100. மனக்கோள் - மனத்தின் கொள்கை.

107. தாதான்மியம் - ஒற்றுமைப்பட்டிருத்தல். பலம்-பயன், இதனால் அரசன் திருநெல்வேலிக் கோட்டையில் மனமொன்றி வாழ்ந்த தன்மையின் பயனை விளக்கியவாறு. சீவகன் குடிலன் வசத்தனாகியே ஒழுகும் நிலைமையைக் குறித்தபடியுமாம்.

108. வெங்கரா - கொடிய முதலை. "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பது கருத்து.

111. பிற்கிளை - மகவு முதலியன.

112. பிராந்தி - மயக்கம்.

116. ஒரு மலர் - ஒப்பற்ற மனோன்மணியாகிய பூ.

124-127. "நெடும் புனலுள் வெல்லு முதலை யடும்புனலி னீங்கி னதனைப் பிற"—(குறள் அதி. 50 - செ. 5.) என்ற கருத்து இவ்வரியிற் காணப்படும்.

135. சாலிபுரம் - நெல்நகர், நெல்வேலி; புரம்-சரீரமுமாம். புலம் - இடம், ஐம்புலம். மாபதி-மதுரை; பரம்பொருள்.

157. மறலி - எமன்.

161. தனையள் - மகள், தனையன் ஆண்பால்.

163. வியாகுலம் - துக்கம்.

167. [சிறுகொடி - மனோன்மணி]

166 - 168. பாதகாவலையுடைய இந்நகரமாகிய நெருப்பிலகப்பட்டு வருந்துகின்ற உன்னுடைய சிறிய பூங்கொடி போன்ற மனோன்மணியை வேறிடத்திற்கு மாற்றுவோம். அக்கொடி சிறந்த எல்லையில்லாத பல பாண்டியர்களை உண்டாக்கிச் சந்ததியை விருத்தி செய்ய உரியது.

173. பரசியம் - பலர்க்கும் வெளிப்படையாவது. இதன் எதிர்மொழி இரகசியம்.

175. பிரதிபந்தம் - தடை.

178. இமைக் கொட்டும் - இமையாடும் பொழுதும்.

179. குருநாள் - அமாவாசைத் தினம்.

180. பரவை - கடல், பரவையின் பாடாவது அமாவாசை நாளில் மழையோடு கூடிய பெருங் காற்றால் வீசப்பட்ட கடல்படும் குழப்பம்.

185. எவன் - எவ்விதம்.

186. சமழ்ப்பு - நாணம்.

190. நளி - தேள்.

191. வாற்புற நஞ்சால் - வாலின் இடத்திலுள்ள விடத்தினால்; "இருந்தேளுக்கு வாய்த்த விடம் கொடுக்கில் வாழும்" என்பது கவி.

193. சுதந்தரம் - உரிமை.

195. பிரை உறுபாலென - பிரை இடப்பெற்ற பால் தோய்தல் போல. உதிரம் - இரத்தம், குருதி.

197. தொடு-தோண்டப்பட்ட.

209. நலிதல் - வருந்துதல்.

234. செவ்வே வடக்கு - நேர் வடக்கு.

முறி - அரை, முறிக்கப்பட்டது. அஃதாவது அறுக்கப்பட்டது.

230-235. [இக் கேள்விகளால் குடிலன் சுருங்கை இருக்க வேண்டுமிடம் இன்னதென்று ஊகித்து நிச்சயித்துக்கொண்டு தான் அதனை முன்னமே கண்டுணர்ந்தவன் போலப் பாவனை காட்டுகிறான்.]

242. புந்தி - புத்தி.

245. பாங்கோ - முறையோ: நலமோ.

[பண்டே - கோட்டை காண அழைத்த நாளில்.]

255. தேன் ஆர் தெரியல் சூடு முன் - தேன் வண்டுகள் மொய்க்கின்ற மணமாலை சூடுவதற்கு முன், அஃதாவது கலியாணமாகுமுன். தேன் - மதுவுமாம்.

256. அந்நியர்பால் - அயலாரிடம்.

268. சதி - வஞ்சனை.

271. கருநா-விடநாக்கு, கருநாவுடையவர் சொல்லும் தீமொழி பலிக்கும்.

277. குழாம் - கூட்டம்.

280. காண்டும் - காண்போம்.

285. அல் - இரவு.

287. நுவல்தரு - சொல்லப்படும்.

293. [இதுபோல் - இச்சேனது தூர்க்குணம்போல்.]

303. [பாண்டம் - மட்கலம், கடையிற் கொண்ட பொருள்களைக் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். அப்படியன்றே விவாகத்தில் கொள்ளல், இது ஒரு கிராமியப் பழமொழி.]

306. உசாவி - விசாரித்து, கேட்டு, ஆராய்ந்து.

324. விருத்தமாய் - வீணாய்.

325. கலுழுநள் - அழுகின்ருள், கலுழ் : பகுதி.

337. [அதுவும் தன்னயம் கருதல் மாத்திரமன்றி அங்ஙனம் கருதுவதாகப் பிறர்க்குத் தோற்றத்தக்கதும்.]

334. மிகை - மிகுதியானது.

351. ஓவா - நீங்காத.

353. மீட்டுதும்-மனோன்மணி

366. ஆய்வு - ஆராய்ச்சி. [யை

364. [குறியே இதனை 366-ல் உள்ள ஆய்விடும் என்பதோடு சேர்க்க.]

369. [எண்ணினன் - மூனிவன் : எழுவாய்.]

370. ஊகம் - ஊகிக்கும் கருத்து.

380. [துணிந்தன : எழுவாய். டைஞராகிய நாய்கள்.]

382. [எளியன் - நாரணன்.]

கலித்துறை

விராகம்-வி+ராகம், ஆசையின்மை. ஆணவம் - அகங்காரம், டெயர்ந்து - நீங்கி.

[இக் களத்தில் அரசர் கடமையும்ஆண்மையும் ஜீவகனது எழைமையும் குடிலனுடைய சமயோசிதசாமர்த்தியமும் விளங்கலாம். அங்கமுடிவில் வரும் கலித்துறை தேகாபிமான பலத்தையும் ஞானமில் வைராக்கியம் நன்றன்று' என்னும் தத்துவநூலின் கொள்கையையும் அவ்வங்கத்து நடந்த கதையால் விளக்குகின்றது.]

ஐந்தாம் அங்கம்

முதற் களம்

2. இருசரம்-இருவழி, ஈரம்பு.
5. கோள் - கொள்கை.
6. ஒருங்கே-ஒருசேர, முற்றும்.
7. [இன்றேல் - இசைகுவது இன்றேல்.]
12. பாண்டில் - வண்டி.
15. (நம்மகன் - பலதேவன்.)
18. கேளொடு கிளைஞர்-அன்போடு தோழர். கேண்மை-நட்பு, அன்பு. கிளைஞர் என்பதில் ஞ்: பெயரிடை நிலை.
28. வான்காடு - ஆகாயமாகிய காடு.
29. மீன்காள்-நாள்களே! நட்சத்திரங்களே: மின்னுவது-மீன்: காரண இடுகுறிப்பெயர்.
28-35. இவ்வரிகளில் சோதிடப் பயிற்சி இகழப்படுகிறது.
36. பாசறை - படைவீடு.
37. பொங்குங் கால் - வீசுகிற காற்று.

குறள்வெண் செந்துறை

1. உள்நினைவு - மனக்கருத்து.
2. அவத்தை - நிலைவேறுபாடுகள். அவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி.
3. அலமாக்க-அலைய, அலமா: பகுதி. கரணம் - கருவி.
43. மருள்தரு மதனன் - மயக்கஞ் செய்கின்ற மன்மதன்.

குறள்வெண் செந்துறை

4. புலன் ஊர - கட்புலன் நுகரும்படி. போதம்-அறிவு. புன்மை - அற்பம்.
5. பெத்த மனம்-கட்டுப்பட்ட மனம். பெத்தம் என்பதற்கு எதிர்மொழி முத்தம். கற்பிதம்-உண்டாக்கப்படுவது.
6. தேராது - தெளியாமல். ஊழ் - விதி. [குறள் வெண்செந்துறையில் கடைசியடியொழித்து மற்றவை ஞான சமாதியில் விளங்கும் பிரமானுபூதிக்கும் புருடோத்தமன் கனாக் கண்ட மனோன்மணியின் காதல் வடிவிற்கும் பொருந்துவது காண்க.]
56. இறுத்த - தங்கிய.
57. கௌவை - துன்பம், சோகம்.
69. [இப்புவி-பாண்டி நாடு.]
81. முயக்கம் - சேர்க்கை, முயங்கு—பகுதி.
87. [அறமேயாயினும் - எழுவாய் காதல்.]
101. பொருநர் - போர் வீரர்.
102. வயவர் - வீரர்.
104. நொந்த சூலினர் - வருந்திய கருவுடைய மகளிர்.
105. மள்ளர் - வீரர்.
108. செயிர் உற - வலிமையாக.
114. வெறியன்-வெறிபொருந்தியவன். வெறி - மயக்கம்.
117. மண்டு அமர்-நெருங்கிய யுத்தம்.
124. உறு துயர்-பொருந்தும் துன்பம், மிக்க துன்பம். இப்பொருளில் உறு : உரிச்சொல்.
126. கரதலம் - கையிடம். கௌசலம் - சாமர்த்தியம்.
133-135. [பாண்டி நாடு பரம்பரையாக அரசர் ஆண்டுவந்த

பூமியாதலினால், நாட்டார் திருப்திக்காக எனக்கு அரசன் என்ற வெறும் பட்டம் மாத்திரம் நீ தருவையாயின்.]

142. ராகவன் - ராமன், ரகு வம்சத்தில் தோன்றியவன். தத்திதாந்த நாமம். பழம் பகை - பழைய பகைவனான இராவணன். செற்று - அழித்து.

143. விபீஷணன் - இராவணன் இளைய சகோதரன், இராகவனைச் சரணடைந்தவன்.

149. கைதவன் - பாண்டியன்.

150. உதியன் - சேரன்.

152. கைத்தளை-கைவிலங்கு - தளை - தடுப்பது.

154. அணிதே - அண்ணிதே- சமீபத்திலுள்ளது.

164. [உறுதி - பாண்டிக்கு அரசனுக்குவேன் என்ற உறுதி மொழி.]

166. விஜயன் - வெற்றி.

168. நச்சிடில் - விரும்பினால்.

169. சித்திரவதை - உறுப்புறுப்பாய் வதைத்தல், வதை - வருத்து.

[இக் களத்தில் புருடோத்தமனுடைய காம நிலைமையும், குடிலன் அகப்பட்டுக்கொண்டகதையும் கூறப்படுகின்றன.]

ஐந்தாம் அங்கம்

இரண்டாம் களம்

1. எதுக்கும் - எந்தக் காரணத்தை முன்னிட்டும்.

9. கின்னரம் - இசைக் கருவியிலொன்று. இதனையுடையவர் கின்னரர், கின்னரக்காரர் எனப்படுவர்.

26. பாங்கு - பக்கம்.

35. துணிபு - துணிச்சல்.

41. கோட்டி - வளைத்து.

53. அவசரம் - அவசியம்.

54. ஆஞ்ஞை - ஆணை.

43 - 61. [மனோன்மணிக்கும் பலதேவனுக்கும் மணவினை நடத்துவிக்க ஜீவகன் துணிந்துகொண்டு, அச்செய்தியை மனோன்மணிக்கு அறிவிக்க அதற்கு அவள் கூறிய மறுமொழிகளை இங்ஙனம் 1-ஆம் தோழி 2-ஆம் தோழிக்குத் தெரிவிக்கின்றாள்.]

70. சுரத்து - காய்ச்சலில்.

71. [அன்று - கனுக்கண்டு காமங்கொண்ட அன்று.]

75. ஆடி - கண்ணாடி, முகம் பார்க்க உதவுவது.

84. வழங்கவும் - சொல்லவும்.

90. [இது வாணிக்கும் நடேசனுக்கும் மனோன்மணி வேண்டிக்கொண்ட மணவினை.]

101. [பொருந்தீர்: எழுவாய்- நீயும் பலதேவனும்.]

102. பெருந்துயர் - பலதேவனை மணக்கலாகும் துன்பம்.

114. இச்சையாதி - ஆசை முதலியன.
117. மண்ணிய - கழுவிய.
119. சேக்கை - இடம்.
122. தொழும்பு - அடிமை.
124. அரண் - காவலுள்ள இடம்.
125. [செந்தீயைந்து-பஞ்சாக்கினி, அவை நான்கு திசைகளிலும் நான்கு தீக்குண்டமும், மேலே சூரியனும்.]
130. போனகம் துறந்து - உணவை விட்டு.
150. வெள்ளில்-விளா. இங்கு முதலாகு பெயராய் விளங்கனியென்க. 'யானையுண்ட விளங்கனி' என்பது பழமொழி. இதில் வெளித்தோற்றம் முன் போலதாகக் காணப்படினும் உள்ளே உள்ளீடில்லாதிருக்கும்.
151. வேதகம் செய்த - வேறுபடுத்திய, போதகம் - யானைக் குட்டி. யூதபம்-அரச யானை.
163. வாஞ்சாவசம் - அன்பின் வசம்.
164. உணர்வு - அறிவு.
165. கடவுள் என்ற ஒன்று இல்லாமற் போமாயின்.
166. வேண்டிய விளைக - வேண்டியபடி யெல்லாம் செயல்கள் உண்டாகுக.

(இக் களத்தில் மனோன்மணியின் பரிபக்குவ நிலைமையும் உத்தம தவசின் இலக்கணமும் ஒருவாறு கூறப்பட்டன.)

ஐந்தாம் அங்கம்

மூன்றாம் களம்

3. அரிவை-பெண்; 19-வயது முதல் 25 வயது வரையுள்ள பெண்கள்; இது பெண்கள் எழு பருவங்களில் ஒன்று. மற்றவை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, தெரிவை, பேரிளம் பெண் என்பன. இங்கு அரிவை பொதுவாய்ப் பெண்களைக் குறிப்பது.
12. மணிக்கே - மனோன்மணிக்கே.
22. காட்டல் - பாவனை செய்தல்.
29. அவ்வுழி - அந்த இடம், உழி: எழனுருபு. இங்கு இடத்தைக் குறித்தது.
38. [பிழைத்தல்-உய்தல், குற்றப் படுதல்.]
40. வெந்தது வீடு-குடி கெட்டது.
44. நமர்காள் - நம்மவர்களே!
45. கொலு-அரசு வீற்றிருக்குமிடம்.
52. [பாடு - உழைப்பு. நாராயணன் பாடு என்பதற்குக் கேடு எனப் பொருட்படுத்தி விடை கூறுகிறான்.]
65. கோலாகலம் - ஆடம்பரம்.
77. எள்ளரும் - இகழ்தலில்லாத.
80. மானும்-ஒக்கும், போலும்.
83. படும் - பொருந்தும்.

93. [பெரியள் - வயிற்றிற் பெரியள், பக்குவவதி.]
100. கொற்றவை-அரச சபை.
102. இறும்பூது - வியப்பு.
104. வன்திறல் - வலிய திறமை, மிக்க வலிமை. திறல் - வெற்றியுமாம்.
105. ஆரா - நீங்கா.
108. ஆள்வினை - முயற்சி.
112. தற்புகழ்-தன்னைப் புகழ்தல்.
124. பலிதம் - பலனைத் தருவது.
131. அயிர்ப்புறூர் - ஐயமடையார்.
137. தாபதம் - தவப்பள்ளி.
142. கவ்விய - பற்றிய.
144. தீச்செறி - நெருப்பிற் பொருந்தும்.
148. தெருள்-அறிவு. சூழ்ச்சி-ஆலோசனை.
154. புலையன் - நீசத்தன்மையன்.
167. தினமணி - சூரியன்.

கொச்சகக்கலிப்பா

1. கரி - கஜேந்திரன் என்னும் யானை. ஆர் துயர அளக்கர் - நிறைந்த துன்பக்கடல்.
2. தெரிவை - துரோபதை.
3. மார்க்கண்டன்-மிருகண்டு முனிவர் மகன். தத்திதாந்த நாமம். வெறி கமழி - கலக்கம் பொருந்தி. பொறியழியும் - ஐம்பொறி யுணர்வும் அழியப்பெற்ற.

[கொச்சகக்கலிப்பா மூன்றும் பொதுவான பிரார்த்தனையாகவும், மனோன்மணியின் கனக் காட்சிக்கும் காம நிலைக்கும் ஏற்றதாகவும் நிற்பது காண்க.]

177. ஏற்புடை - தக்க.
180. வாங்குதி - வாங்குவாய். பெறுவாய்.
184. கண் அளவில்லாது நீர் பெருகி உள்ளே வறட்சி யடைந்தது என்பது இவ் வரிப் பொருள்.
185. நாட்டம் - கண்.
193. [மூன்றும் அங்கம் நான்காம் களத்துள் நடந்த சம்பாஷணைப்படி கருணைவிலாசம் கண்டேன் என்பது பொருள்.]
202. வஞ்சியான் வஞ்சியான்-வஞ்சி மன்னனாகிய சேரன் வஞ்சிக்கமாட்டான்.
211. பண்ணியல்-பண்பொருந்திய.
213. அருமருந்தை - அரிய தேவாமிர்தம் போல்வாளாகிய மனோன்மணியை.
229-230. நாளைக்குப் போர் செய்ய விரும்புவாயானால் போரின் வலிமையைப் பார்ப்போம்.
225. [தாரா - தாராக, மணமாலையாகத் தன் கை யிரண்டும் சூட்டி.]
229. கண்வளர்தல் - நித்திரை செய்தல்.
233. [திடுக்கிட்டு விழித்ததைப் பிரிவிற்கஞ்சி நடுங்கினதாகக் கருதி ஜீவகன் கூறிய மொழி.]

[இக் களத்தில் மனோன்மணி தெய்வ அருளால் புருடோத்தமனைச் சந்தித்து மாலை சூட்டினதும், அஃதுடன் இந் நாடகத்துடன் எடுத்துக் கொண்ட கதை உபகதை முதலியன முடிவு பெறுவதும் காண்க.]

கலித்துறை

[திருக்கு-வஞ்சகம், மாறுபாடு. இவ் வங்க முடிவில் வரும் கலித்துறை தற்சுதந்தரம் விடுத்து அருள்வழி நின்ற போதம் அதீதப் படுமுறையை விளக்குகின்றது. கலித்துறை ஐந்தும் அந்தாதித் தொடர்.]

அருஞ்சொற் பொருளகராதி

அகம் - உள்ளிடம்.
அகழ் - தோண்டப்பட்டது, கிடங்கு.
அகழ்க்கணம்-கிடங்குக் கூட்டம்.
அகோராத்திரம்-இரவும் பகலும்.
அங்கங்கள் - உறுப்புகள்.
அங்கணம் - முற்றம்.
அங்காந்து - வாயைத் திறந்து.
அங்கி - அக்கினி, நெருப்பு.
அசலத்திரள் - மலைக்கூட்டம்.
அசைத்து - கட்டி.
அஞர் - துன்பம்.
அடல் - வலி.
அடு - கொல், சுடு, கெடு.
அடையலர் - பகைவர்.
அடையவும் - முழுவதும்.
அணங்குறல் - வருந்தற்க.
அணிதாய் - அணித்தாய், சமீபமாக.
அண்டயோனி - சூரியன், கடவுள்.
அண்ணிதே - சமீபத்திலுள்ளது.
அந்தர மார்க்கம் - ஆகாயவழி.
அந்தியங்காடி - மாலைக்காலக் கடை.
அமளி - படுக்கை.
அம்புலி - சந்திரன், மதி.
அயத்து-ஆட்டின் அல்லது குதிரையின்.
அயிராவதத்தன்-ஐராவதமென்னும் யானையையுடைய இந்திரன்.
அயிர்த்து-சந்தேகித்து, ஐயுற்று.
அயினிநீர் - ஆலத்தி நீர்.
அரந்தை - துன்பம்.
அரணடைந்து - காடடைந்து.
அரவம் - சத்தம், ஒலி.
அரற்ற - சத்திக்க, பேரொலி செய்ய.
அரியணை - சிம்மாசனம்.
அரியேறு - ஆண்சிங்கம்.
அரிவார் - வெட்டுகின்றவர்.
அலகில் - அளவற்ற.
அலகை - பேய்.
அலக்கண் - துன்பம்.
அலமரும் - வருந்தும். அலமா பகுதி.
அலமுகம் - கலப்பை நுனி.
அலவன் - நண்டு.
அல் - இருள்.
அவயவம் - உறுப்பு.
அவை - சபை.
அளக்கர் - கடல்.
அளி - வண்டு.
அளித்த பலன் - காப்பாற்றிய பயன். அழுக்காறு-பொறாமை. அழுக்கறு: பகுதி.
அழுங்கலே - வருந்தாதே.
அறத்தாறு-அறநெறி, தருமவழி.
அற்றம் - சமயம், காலம்.
அனவரதம் - ஒவ்வொரு நாளும்.
அனுமானாதி - அனுமானம் முதலிய அளவை.
ஆகருஷணம் - கவர்ச்சி.
ஆகுலம் - வருத்தம்.
ஆசி - நன்மொழி.
ஆசிரமம்-துறவிகள் தங்குமிடம்.
ஆஞ்சனேயன் - அஞ்சனா தேவியின் மகன்; அனுமான்.
ஆடகம் - பொன்.
ஆடி - கண்ணாடி, முகுரம்.
ஆதரவு - அன்பு.
ஆதித்தவாரம் - ஞாயிற்றுக் கிழமை.

ஆபதம் - ஆபத்து.
ஆமலகம் - நெல்லிக்கனி.
ஆயத்தார் - பெண்கள் கூட்டத்தார், தோழியர்.
ஆரணங்கள் - வேதங்கள்.
ஆரம் - சந்தனம்.
ஆரா ஆர்வம் - தணியாத அன்பு
ஆலவாய் - மதுரை.
ஆள்வினை - முயற்சி.
ஆழி - ஆழமுடையது, கடல்.
ஆறலைகள்வர்-வழிப்பறி திருடர்.
ஆற்றவும் - மிகவும்.
ஆன்றவர்-நற்குணம் நிரம்பியவர்.
இகம் - இம்மை, இவ்வுலகம்.
இக்கும் - கரும்பும்.
இசித்து - இழுத்து.
இசைப்பது - சொல்வது.
இச்சகத்து - இச்சையுடன், இப் பூமியில்.
இஞ்சி - மதில்.
இடும்பை - துன்பம், இடுக்கண்.
இதக்கேடு - நன்மைக் கெடுதி.
இந்தனம் - விறகு.
இந்து - மதி, சந்திரன்.
இயக்குதற்கு - செலுத்துதற்கு.
இயை - பொருந்து.
இரணம் - உப்பு.
இரவி - ஞாயிறு, சூரியன்.
இரிந்திட - முறிந்தோட.
இருசரம் - இரண்டம்பு, ஈருபாயம்.
இருள்வயின் - இருளில்.
இலகாது - விளங்காது.
இலக்கு - குறி.
இல்லவர்க்கு - மனைவியர்க்கு.
இல்லாள் - மனைவி.
இவுளி - குதிரை.
இழிந்தும் - இறங்கியும்.
இழுக்கு - குற்றம், ஆசு.
இழுது - நெய்.
இறுத்து - தங்கி.
இறும் - கெடும்.
இறும்பூது - ஆச்சரியம், வியப்பு.
இன்னல் இழை-துன்பஞ்செய்.
ஈட்டம் - கூட்டம்.
ஈண்டினன் - நெருங்கினன்.
ஈரம் - அன்பு, இரக்கம்.
ஈர்த்து - இழுத்து.
ஈனன் - இழிவானவன்.
உகுத்து - சிந்தி.
உசாவி - கேட்டு.
உசிதன் - பாண்டியன்.
உதயனும் - சூரியனும்.
உதியன் - சேரன்.
உதும்பரதரு - உதும்பர மரம்.
உந்த - தள்ள.
உம்பல் - யானை.
உயிர்ப்பது - மூச்செறிவது.
உரமாய் - பலமாக.
உரம் - மார்பு.
உருமு - இடி.
உரைஞ்சிடு - உராய்ந்திடு, தேய்ந்திடு.
உலண்டு - ஓர் பூச்சி.
உலப்பறு - கேடற்ற.
உவர்க்கடல் - உப்புக்கடல்.
உவாமதி - பூரணசந்திரன்.
உழிஞை - பகைவர் அரணை முற்றுகையிடுபவன் அணியும் மாலை.
உழுவல்-எழுமையும் தொடர்ந்த அன்பு.
உழுவை - புலி.
உழை - பக்கம், இடம்.
உறுகண் - துன்பம்.
உறுத்துவது - வருத்துவது.
உறையுளா - இருப்பிடமாக.
உனி - உன்னி, நினைத்து.
உன்மத்தன் - பித்தன்.
உன்னுன் - கருதான்.
உன்னுபு - நினைத்து

ஊர்கோள் - பரிவேடம்.
ஊழையும் - விதியையும்.
எஞ்சல் - குறைதல்.
எயிலினம் - மதிற்கூட்டம்.
எவ்வும் - உயரும்.
எழிலி - மேகம், எழுதலையுடையது.
எற்பாடு - முன்மாலைக்காலம்.
எற்றுண்டு - மோதப்பட்டு.
ஏதிலன் - அயலான்.
ஏந்தல் - அரசன்.
ஏமாப்பு - இன்பம்.
ஏய்ப்ப - ஒக்க.
ஏலும்-பொருந்தும், மேற்கொள்ளத்தகும்.
ஐயுறல் - ஐயுறுதே.
ஒத்தறுத்து - இசைக்குத்தகுந் தாளமிட்டு.
ஒட்டார் - பகைவர்.
ஒல்கலை - தளராதே.
ஒல்கும் - தளரும்.
ஒல்லை - விரைவு, உடன்.
ஒவ்வும் - பொருந்தும்.
ஒன்றார் - பொருந்தார்.
ஒன்றிய - பொருந்திய.
ஒன்னார் - பகைவர்.
ஓதிமம் - அன்னம்.
ஓம்புபு - ஓம்பி, பேணி.
ஓரான் - ஆராயமாட்டான்.
ஓவல்-நீங்குதல், இடையறுதல்.
ஓவாப்பாடு - நீங்காத் துன்பம்.
ஓவியம் - சித்திரம்.
ஓவிறந்து-மதகு நீர் தாங்கும் பலகையைக் கடந்து.
ககனம் - ஆகாயம், விண்.
கஞ்சம் - தாமரை.
கஞ்சனம் - கண்ணாடி.
கடகயம் - மதயானை.
கடபட - குடம் துணி.
கடம்பாடு - கடமை.
கடாவி - செலுத்தி.
கடிஞை - பிச்சைப்பாத்திரம்.
கடிபுரி-காவலமைந்த புரி, நகர்.
கடிமலர் - மணப்பூ.
கடிவாள் - கூரிய வாளாயுதம்.
கடு - நஞ்சு.
கடுகி - விரைந்து.
கட்செவி - கண்ணையே காதாகவுடையது, பாம்பு.
கண்படும் எல்லை-தூங்கும் அளவு.
கதிர் - கிரணம்.
கதுப்பு - கன்னம்.
கதுவும் - பற்றும்.
கந்தம் - கிழங்கு.
கபோலம் - கன்னம்.
கமலை - கமலத்திலிருப்பவள், இலக்குமி.
கயம் - ஆழம்.
கயவன் - கீழ்மகன்.
கரணம் - கருவி.
கரதலாமலகம்-உள்ளங்கை நெல்லிக்கனி.
கரந்தான் - மறைத்தான்.
கரி - பெரியது, யானை.
கரு - பொன்னுருக்கி வார்க்கப்படும் இடம்.
கருஅறுத்து-கருவைக்கெடுத்து.
கருப்போ - கரும்போ.
கலன் - காண்டம், கலம்.
கலினம் - கடிவாளம்.
கலுழுநள் - அழுகின்றாள்.
கவடி - சோவி.
கழல் - கழற்சிக்காய்.
கழறிய - சொல்லிய.
கழை - கரும்பு.
கழன்றனன் - நீங்கினன்.
களைகுதும் - களைவோம்.
கள்ளலம் - களவு செய்கிலேம்.
கறங்கும் - ஒலிக்கும்.
கறி - கடி.
கறுவி - கோபித்து.

கறையடி - உரல்போன்ற கால் களையுடைய யானை.
கற்பனை - கட்டளை.
கனிசம் - மதிப்பு.
கன்றும் -கோபிக்கும்.
காணிய - காணும்பொருட்டு.
காண்குதும் - காண்போம்.
காண்டகும் - பார்க்கத் தகுந்த.
காம்படு - மூங்கிலை வென்ற.
காரா - காரான், எருமை.
காரிகை - பெண்.
கார்முகம் - வில்.
காலும் - உமிழும்.
காழ் - வயிரம், உறுதி.
காற்றளை - கால் விலங்கு.
கிணைப்பறை - மருதநிலத்துப் பறை.
கிருபணன் - லோபி.
கிளத்தில் - சொன்னால்.
கிளைஞர் - சுற்றத்தார்.
கிறிகள் - வஞ்சக விழிகள்.
கீண்டு - கிழித்து.
கீறிய வரை - கிழிந்த கோடு.
குகுநாள் - அமாவாசை.
குக்கன் - நாய்.
குடங்கை - உள்ளங்கை.
குடம்பை - முட்டை.
குடிலன் - வஞ்சகன்.
குணப்பிரதம்-நன்மை தருவது.
குமுதம் - ஆம்பல்.
குயிற்றிய - செய்த.
குரத்து - குதியில்.
குரவை - ஓசை.
குருதி - இரத்தம்.
குரோதம் - கோபம்.
குளிகை - உருண்டை.
குறும்பர் - சிற்றரசர்.
கூடம் - மறைவு.
கூடல் - நான்மாடக் கூடலாகிய மதுரை.
கூற்றின் - எமனின்.
கூற்றுவர் - எமனார்.
கேதகை - தாழை.
கேள்வன் - நாயகன்.
கை - செயல்.
கைக்கும் - கசக்கும்.
கைதவன் - பாண்டியன்.
கையறு - செயலற்ற.
கைரவம் - ஆம்பல்.
கொண்மூ - மேகம்.
கொய்யுளை - கத்தரிக்கப்பட்ட பிடரி மயிர்.
கொன்னே - வீணே.
கோடற்கது - கொள்ளத் தக் கது.
கோட்டி - வளைத்து, திருப்பி.
கோட்பறை - கொள்ளுதற்கு இசைவாக அடிக்கப்படும் பறைக்கொட்டு.
கோலம் - அழகு, வடிவு.
கோள் - குற்றம்.
கோற்றொடி - அழகிய வளையல்.
கௌசலம் - சாமர்த்தியம்.
கௌவை - துன்பம்.
சங்கேதம் - குறிப்பு.
சஞ்சிதம் - எஞ்சிய வினைப்பயன்.
சந்தம் - அழகு.
சந்தி - சமயம்.
சமயிகள் - மதத்தவர்.
சமழ்ப்பு - குற்றம்.
சமர் - அமர், யுத்தம்.
சரதம் - உண்மை.
சருவம் - எல்லாம்.
சலனம் - அசைவு.
சழக்கு - பொய்.
சாகசம் - துணிவுச்செயல்.
சாக்கியம் - சாட்சி.
சால - மிக.
சாலி - நெல்.
சாலிபுரம் - நெல்வேலி.
சான்று - சாட்சி.
சிட்ட - கற்றறிவுடைய.

சிக்கனமாம் - அறிவுவடிவாய்.
சித்திரரேகை-உமையின் தோழி.
சிந்தாவிழ - சிந்திவிழும்படி.
சிந்துரம் - சிவப்பு.
சிலே - வில்.
சிறை - அணே.
சிற்றில் - சிறுவீடு.
சினகரம் - கோயில்.
சீதம் - குளிர்ச்சி.
சீரிது - சிறப்பானது.
சீலம் - ஒழுக்கம்.
சுகம் - கிளி.
சுக்கான் - கப்பலோட்டுங் கருவி.
சுடிகை - உச்சிக்கொண்டை.
சுணங்கு - தேமல்.
சுதமாம்-தானே யுண்டாவதாம்.
சுதேசானுராகம் - சொந்த நாட்டுப் பற்று.
சுரகுரு - வியாழன்.
சுரும்பு - வண்டு.
சுவானம் - நாய்.
சூதகம் - தீட்டு.
சூலினர் - கருப்பமுடையவர்.
சூல் உளேந்து - கருப்பத்தால் வருந்தி.
சூழ் - சூழ்ச்சி, யோசனே.
சூழ்ச்சி - தந்திரம், யோசனே.
சூள் - சபதம்.
செகுத்து - கெடுத்து
செக்கர் - சிவப்பு, செவ்வானம்.
செமித்தருள்வை-பொருத்தருள்வாய்.
செம்புனல் - சிவந்த நீர்.
செம்மல் - சிறந்தவன்.
செய்கோ - செய்வேன்.
செல்லலே - செல்லாதே.
செவிலி - வளர்ப்புத்தாய்.
செவ்விதாம் - செம்மையாகும்.
செவ்வே - நேரே.
சேக்கை - படுக்கை, பள்ளி.
சேயினும்-குழந்தையைப் பார்க்கிலும்.
சேய்த்தது - தூரத்திலுள்ளது.
சௌரியம் - வீரம்.
ஞாட்பு - போர்க்களம்.
தகைத்து - தகுதியுடையது.
தடம்பணே - பெரிய பள்ளத்தாக்கு.
தண்ணுமை - மத்தளம்.
ததையும் - நெருங்கும்.
தத்துறு - தடுமாறுகின்ற, தத்தளிக்கின்ற.
தந்தாவளி - பல்வரிசை.
தரணி - பூமி.
தரளம் - முத்து.
தருணம் - சமயம்.
தவிலடி - மத்தளக்கொட்டு.
தனேயள் - மகள்.
தாதான்மியம் - அதுவதுவாதல்.
தாது - பூம்பொடி, மகரந்தம்.
தாபதம் - தபசு செய்யுமிடம்.
தாரகைகள் - நட்சத்திரங்கள்.
தாரா - மாலேயாக.
தாரு - மரம்.
திகிரியுருட்டி - ஆணேசெலுத்தி.
திமில் - மரக்கலம்.
திருக்கு - வஞ்சகம்.
திருந்தலீர் - பகைவர்களே.
திரைத்தது - சுருங்கிற்று.
திரைபொரல் - அலேமோதுதல்.
திவலே - துளி.
திளேப்பர் - அனுபவிப்பர்.
தினமணி - சூரியன்.
தினவு - ஊரல்.
தீனன் - ஏழை.
துகிர் - பவளம்.
துகிலுரிய - உடையைக் களேய.
துச்சம் - அற்பம், புன்மை.
துஞ்சிய - இறந்த.
துஞ்சும் - தங்கும்.
துணேமருப்பு - இரண்டு கொம்பு.

துணையறும் - நாயகனில்லாத.
துப்பிதழ்-பவளம்போன்ற உதடு.
துலே - தராசு.
துவக்கிந்திரியம் - பரிசக்கருவி.
துவண்டு - அசைந்து.
துவாதசாந்தத்துறை - துவாத சாந்த (புருவத்தின் நடுவிட) மாகிய மதுரை.
துறப்பனே - செலுத்துவானே.
துனிபடு - வெறுப்புற்ற.
துன்று - நெருங்கிய.
துன்னலர் - பொருந்தாதவர்.
தூக்கு - தராசு.
தூணி - அம்புக்கூடு.
தூமம் - புகை.
தூரியம் - எழுதுகோல்.
தூவி - இறகு.
தேத்து - சுவீகாரம்.
தெரிவை - பெண், துரோபதை.
தெருட்ட - தெளிவிக்க.
தெருளுறு - அறிவுறு.
தேற்றம் - தெளிவு.
தேனார் தெரியல் - தேன் வண்டுகள் மொய்க்கின்ற மாலே.
தொகுதி - கூட்டம்.
தொட்டிட - தோண்டிட.
தொழும்பு - அடிமை.
தோடம் - தோஷம், குற்றம்.
நச்சினேன் - விரும்பினேன்.
நச்சியது - விரும்பியது.
நட்டிலன் - சிநேகித்திலன்.
நண்பகல் - நடுப்பகல்.
நந்தாவுறை - கெடாத இடம்.
நயனம் - கண்.
நலம் - நன்மை.
நலிதல் - வருந்துதல்.
நலிந்து - வருந்தி.
நவ்வி - அழகு.
நளி - பெருமை.
நளியும் - தேளும்.
நள்ளிரா - நடுக்கத்தைத் தரும் இரவு.
நறவு - தேன்.
நறை ஆர் - தேன் நிறைந்த, மணம் பொருந்திய.
நனவு - நினைவு.
நாட்டம் - கண்.
நாட்பே - வலிமை.
நாணம் - வெட்கம்.
நாப்பண் - மத்தி, நடு.
நாலி - முத்து.
நாற்றிய - தொங்கவிட்ட.
நிகாதர் - வஞ்சகர்.
நிசி - இரா.
நிசித - கூர்மையான.
நிசியலர் - இருளில் மலர்கின்ற.
நிதனம் - அழிவு.
நிணப்புலால் - கொழுப்பு மாமிசம்.
நிண்ணயம் - உறுதி, வரையறை.
நிமல - குற்றமற்ற.
நிமித்திகர் - குறிகூறுவோர்.
நிம்பம் - வேம்பு.
நிருபாதிகம் - காலதேச இயல்புகளைக் கடந்து நிற்கும் நிலே.
நிரை - வரிசை.
நிலவிய - விளங்கிய.
நிவாதம் - காற்றில்லாதது.
நீவிடில் - தடவினுல்.
நுதி - கூர்மை.
நேரார் - உடன்படார், பொருந்தார்.
நொச்சி - முற்றுகை யிடப்பட்டோர் சூடும் மாலே.
நோற்று - தவம்புரிந்து.
பகடி - கேலி.
பங்கம் - குற்றம்.
பச்சாத்தாபம் - கழிந்தற்கிரங்குதல்.
பஞ்சாசத்கோடி - ஐம்பதுகோடி.
படாம் - துகில்.

படிறு - பொய்.
பணிப்பாய் - பாம்புப்படுக்கை.
பணைத்து - பருத்து.
பண்ணியல் - இசைபொருந்திய.
பதாகை - கொடி.
பதுமமலர் - தாமரைப்பூ.
பந்தம் - கட்டு, பற்று.
பரசியம் - வெளிப்படையானது.
பரணசூத்திரம்-பரிபாலன நூல்.
பரற்கல் - கூழாங்கல்.
பராகம் - தூள், பொடி.
பரிசு - தன்மை, விதம்.
பரிணமித்து - பெரிதாகி.
பரிதி - சூரியன்.
பரிபுரம் - சிலம்பு.
பரிவு - அன்பு, இரக்கம்.
பவபாசம் - பிறப்பைத்தரும் பந்தம்.
பள் - பண், இசை.
பனிப்பு - நடுக்கம்.
பனிவரை - பனிமலை: இமயம்.
பாசறை - படைவீடு.
பாண்டில் - வண்டி.
பாரதி - சரசுவதி.
பாவனை - எண்ணம்.
பாழ்த்த - பாழான.
பாற்றினம்-பருந்துக்கூட்டம்.
பிசிதம் - வேம்பு.
பிடி - பெண்யானை.
பிணக்கு - மாறுபாடு, கோபம்.
பிதிர் - தென்புலத்திலுள்ளவர்.
பிரசுரன் - அசுரகுரு, சுக்கிராச்சாரி.
பிரதிமை - பதுமை.
பிரத்தியக் பிரபோதயம் - உள்முகமான மெய்ஞ்ஞானம்.
பிராந்தி - மயக்கம்.
பிரையுறு - மோரூற்றப்பட்ட.
பிறகிடல் - பின்வாங்குதல்.
பிறங்கும் - விளங்கும்.
பிறழ் - மாறு.
பீடை - துயர்.
புகர் - கபிலநிறம்.
புக்குழி - புக்கவிடம்.
புங்கவர் - மேலானவர், தூயர்.
புணரி - கடல்.
புரந்தரன் - இந்திரன்.
புரிசை - கோட்டை.
புரை - குற்றம், துவாரம், ஒத்த.
புலம் - வயல்.
புற்புதம் - குமிழி.
பூரிய - அற்பமான.
பேட்பு - விருப்பு.
பெண்ணையந்தார்-பனம் பூமாலை.
பெத்தமனம்-கட்டுப்பட்ட மனம், முத்தியடையாத மனம்.
பேய்த்தேர் - கானல்.
பேழ்வாய் - பிளந்தவாய், பெரிய வாய்.
போங்குகால்-பெருகும் காற்று.
பொருதல் - போர் செய்தல்.
பொருது - போர்செய்து.
பொருப்பு - மலை.
பொருவு - ஒப்பு.
பொலம் - பொன்.
பொலிவுறல் - விளங்குதல்.
பொறி - புள்ளி.
பொறையன் - சேரன்.
பொற்றொடி-பொன்வளையல்.
பொன்றிடும் - அழிந்திடும்.
பொன்வரை-பொன்மலை, இமயமாகிய மேரு.
பொன்னகர் - தேவலோகநகர், அமராவதி.
பொன்னி - காவிரி.
போதகம் - யானை.
போது - மலர்
போத்து - ஆண்மயில்.
போந்தை - பனை.
போனகம் - உணவு.
போன்ம் - போலும்.
பௌவம் - கடல்.

மகோததி - பெருங்கடல்.
மங்கலநாண் - தாலிக்கயிறு.
மங்குல் - மேகம்.
மசகம் - கொசுகு.
மஞ்சு - வெண்மேகம்.
மஞ்சுள - அழகுள்ள.
மடங்கல் - சிங்கம்.
மடுவுள் - குளத்தில்.
மண்ணுள் - கழுவாள்.
மண்ணிய - கழுவிய.
மம்மர் - மயக்கம்.
மரபு - முறை.
மருந்து - அமிர்தம்.
மருவரும் - பொருந்தாத.
மருவா - பொருந்தா.
மருளும் - மயங்கும்.
மலையம் - பொதியமலை.
மலையன் - சேரன்.
மலைவு - மயக்கம்.
மள்ளர் - வீரர்.
மறலி - யமன்.
மறுக்கலை - மறுக்காதே.
மனமிறந்து - மனமழிந்து.
மன்றல் - மணம்.
மாகுலம்-ஆண்யானைக் கூட்டம்.
மாடு - பக்கம்.
மாண்ட - மாட்சிமைப்பட்ட, மாண்: பகுதி.
மாற்றம் - சொல்.
மாற்றலர் ஏறு - பகைவராகிய யானைக்குச் சிங்கம் போன்றவன்.
மாற்றொலி - எதிரொலி.
மான - ஒக்க.
மானும் - ஒக்கும்.
மிஞ்சலை - மிஞ்சாதே.
மிண்டலை - பேசாதே.
மிழற்றி - சொல்லி.
மீகாமன்-மீகான், கப்பலோட்டி.
மீக்கொளும்-மேற்கொள்ளும்.
மீனம் - நட்சத்திரம்.
மீன்காள் - நட்சத்திரங்காள்.
முகடு - உச்சி.
முகை - மொட்டு, அரும்பு.
முசிப்பு - முடிப்பு.
முந்நீர்-மூன்று தன்மை (அல்லது) நீரையுடையது, கடல்.
மும்மை - அறிவு, ஆண்மை, பெருமை.
முயக்கம் - சேர்க்கை.
முயன்றுழி-முயற்சித்தகாலத்து.
முருகு - மணம், தேன்.
முளரி - முட்காடு.
முழவு - மத்தளம்.
முறி - அறை.
முறுவல் - சிரிப்பு.
முனை - போரிடம்.
மூதுருவம் - பழைய வடிவம்.
மூலம் - கிழங்கு.
மேதை - அறிவு.
மேலிடும் - மேம்படும்.
மேவலர் - பகைவர்.
மோன - மௌன.
யதி - முனிவர்.
யாண்டும் - எங்கும், எப்பொழுதும்.
யூதபம் - தலைமை யானை.
வகிர்ந்து - பிளந்து.
வஞ்சியான் - சேரன்.
வடக்குநோக்கி - வடக்குத்திசையையே காட்டும் கருவி.
வடதளம் - ஆலிலை.
வடு - மாறாத் தழும்பு.
வண்டானம் - நாரை.
வதனம் - முகம்.
வதிந்த - தங்கிய.
வதுவை - திருமணம்.
வயப்படை - வெற்றியாயுதம்.
வயின் - இடம்.
வருந்துபு - வருந்தி.
வரை - எல்லை.
வல்லை - உடன், விரைவு.

வழுவா - தவருத.
வறிதாக்கினை - வீணுக்கினுய்.
வற்கலை - மரவுரி, வலியவுடை.
வன்பிகம் - வலிய குயில்.
வாகு - தோள்.
வாதவூரர்-திருவாதவூரிற் ருேன்றிய மாணிக்கவாசகர்.
வாம்பரி - தாவுகின்ற குதிரை.
வாயசம் - காகம்.
வாயில் - வழி.
வாரம் - ஓரம்.
வாரி - கடல்.
வாரிசம் - தாமரை, நீரில் தோன்றுவது.
வார் - நீண்ட.
வால்வளை - வெள்ளிய சங்கு.
வாவல் - வௌவால்.
வாளா - வீணே.
வாழ்மதி - வாழ்வாய்.
வான்காடு - வானமாகிய காடு.
விதிர்த்து - நடுங்கி.
விதுகுலம் - சந்திரகுலம்.
விந்தம் அடக்கினேன் - விந்திய மலையைத் தாழ்த்திய அகத்தியன்.
வியர்த்தம் - வீண்.
விரசமாய் - சுவையற்றதாய்.
விராகம் - ஆசையின்மை.
விரூபம் - விசேடவடிவம்.
விரைதரும் - மணந்தரும்.
விலங்கு - மிருகம்.
விலோதனம் - கொடி.
விழவறு - திருவிழா நீங்காத.
விழுப்புகழ் - சிறந்த கீர்த்தி.
விழுமம் - துன்பம்.
விழை - விரும்பு.
விளி - முழக்கம்.
விளிப்பவரில் - கூப்பிடுவாரைப் போல்.
விள்ளா - விடாத.
விஜயம் - வெற்றி.
விஜயீபவ - வெற்றியுண்டாக.
விஜயை - வெற்றி மடந்தை.
வீக்கிய - கட்டிய.
வீதல் - கெடுதல், சாதல்.
வீவுறும் - கெடும்.
வெங் கரா - கொடிய முதலை.
வெஞ்சரம் - கொடிய அம்பு.
வெந்நற - முதுகுகாட்ட.
வெய்துயிர்த்து - பெருமூச் செறிந்து.
வெருட்டினுல்- பயமுறுத்தினுல்.
வெருவலை - பயப்படாதே.
வெருவும் - அஞ்சும்.
வெருளுவர் - பயப்படுவர்.
வெள்ளில் - விளாங்கனி.
வெறி - மயக்கம்.
வெறுக்கை - செல்வம்.
வேட்டல் - மணத்தல்.
வேட்டவை - விரும்பியவை.
வேதகம் - மாறுதல், பேதம்.
வேதித்து - மாற்றி, பேதித்து.
வேல்கொள் - மூங்கிலை யொத்த.
வேய்ந்தோன் - சூடியவன்.
வேழம் - யானை.
வையாய் - வைப்பாய்.
வைவேல் - கூரியவேல்.
வௌவலம் - பற்றிக்கொள்கின்றிலம்.

மேற்கோள் விளக்கம்

க. பழமொழி

பக்கம்	வரி	
ரு	23	'எள் விழற் கிடமில்லை'
கஉ	17-18	'எருதீன் றெனுமுன மென்னகன் றென்று திரிபவ ரொப்ப'
,,	32	'தலைவிதி தடுக்கற் பாற்ரே?'
கங	38	'முதலையின் பிடிபோல்' என்பதை 'முதலையும் மூர்க்கனுங் கொண்டது விடா' என்பத ஞேடு ஒப்புநோக்குக.
கசு	147	'நெருப்பையுங் கறையான் அரிக்குமோ?'
கஅ	39	'எடுப்பார் கைப்பிள்ளை'
,,	46	'மணற் சோற்றிற் கற்றேடுதல்'
உக	110	'பூவையை வளர்த்துப் பூனைக் கீயவோ?' (கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்கவா?)
,,	119	'பேயனுக் களிக்கவோ பெற்றனம் பெண்ணை?' (பிள்ளையைப் பெற்று பேய்க்குக் கொடுக்கவா?)
,,	126	'அழகிருந் தென்பயன்?' 'தொழிலெலாம் அழிவே' (ஆளைப் பார்த்தால் அழகு போல, வேலையைப் பார்த்தால் இழவு போல.)
உங	173	'எரிமேலிட்ட இழுது' (அனலிற்படு நெய்போல்)
உரு	7	'தாய்க்கு மொளித்த சூலோ?' (தாய்க் கொளித்த சூலா?)
உசு	37-38	'பரிதி வந்துழியகலும் பனியென' (சூரியனைக் கண்ட பனிபோல; இன்பனிக்கு இனன் என).
உஎ	76	'நேசமில் வதுவை நாசகா ரணமே'
உஅ	114-15	'கன்னியா யிருப்பாய் என்றும் சம்மதம்'
,,	120	'நான் பிடித்த முயற்கு மூன்றுகால்'
ங0	169	'புளியம் பழமுந் தோடும் போலாம்'
ஙஉ	1	'புத்தியே சகல சக்தியும்' (Knowledge is Power) (Bacon) 'புத்திமானே பலவான்'

பக்கம்	வரி	
௫௨	9	'பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம்'
௫௫	46	'போர்வந்திடிலிவண் நேர்வந்திடும் எலாம்' (கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்)
௫௭	39	'ஆத்திரந் தனக்குச் சாத்திர மென்னே ?' 'Necessity has no law'
௬௨	226	'கால விளம்பனஞ் சாலவுந் தீதே' (Delay is Dangerous)
௬௬	260	'அங்கைப் புண்ணுக் காடியும் வேண்டுமோ' (கைப் புண்பார்க்கக் கண்ணாடி வேண்டுமா ?)
௬௭	283	'கரும்பு கைப்ப துன்வாய்க் குற்றமே'
,,	286	'வெளுத்த தெல்லாம் பாலா' 'மின்னுவ தெல்லாம் பொன்னா ? (All that glitters is not gold)
,,	304	'நெருப்பாறும் மயிர்ப்பாலமும்'
௭௬	9	'சித்தம் மத்துறு தயிரில் திரிந்து'
௭௮	118-19	'வண்டு மலரிடை யணையஉன் னாட்டில், கொண்டு விடுவரே போலும்' (பலாப்பழத்துக்கு ஈப்பிடித்து விடவா ?)
௯௦	179-180	'அப்பந்தின்னவோ, அலால்குழியெண்ணவோ செப்பியதனக்கு' (எச்சிலை எடுக்கச் சொன்னதா ? எத்தனை பேரென் றெண்ணக் கேட்டதா ?)
௯௧	14	'கெஞ்சிடின் மிஞ்சுவர், மிஞ்சிடிற் கெஞ்சுவர்'
௯௭	144- 5	'புலி வேட்டைக்குப் பொருந்துந் தவிலடி, எலி வேட்டைக்கும் இசையுமோ'
௯௯	162	'கள்ள மனந்தான் துள்ளும்'
,,	163	'தன்னுளந் தன்னையே தின்னும்' (தன்னெஞ்சே தன்னைச் சுடும்)
,,	164	'குற்றம் உள்ளோர் கோழையர்'
௱௧	131	'கைதொடின் மஞ்சளும் கரியா கும்மே'
௱௪	208	'ஜனமொழி தெய்வ மொழி'
௱௫	23	'இலவு காத்த கிளி'
,,	24	'நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணல்' (மொய்க்கு நெய்க் குடந்தன்னை யெறும் பென்னவே— திருவாசகம், நீத்தல் விண்ணப்பம்.)

பக்கம்	வரி	
அச	84	'இரவியை நோக்கற்கேன் விளக்குதவி' ('யானை பார்க்க வெள்ளெழுத்தா ?)
அக	67	'சுட்டதோர் சட்டிகை விட்டிடல் என்ன' (சட்டி சுட்டதும் கைவிட்டதும்)
கச	244	'நெருப்பிடை இழுதென நெக்கு நெக்குருகி'
கஅ	31-32	'மீனுண்ணக் குளக்கரை யிருக்கும் கொக்கென அடங்கி' (ஓடுமீ னோட உறுமீன் வருமளவும் வாடி யிருக்குமாங் கொக்கு). 'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்த விடத்து' —(குறள் 49-10)
ககஉ	4	'நெருப்பிடை நெய்சொரிந்தற்று' (எரிகிற வயிற்றில் எண்ணெய் ஊற்றினாற்போல்)
ககச	47	'இருதலைக் கொள்ளியில் எறும்பானேன்' (இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து) திருவாசகம், நீத்தல் விண்ணப்பம்.
,,	49-50	'ஓர்சிறு மயிரினை இழக்கினும் மாயுமே கவரிமா' 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்' —(குறள் 97-9)
ககரு	75	'பருதிகண் டன்றோ பங்கயம் அலரும் ?'
ககஎ	135-6	'கண்ணிடு மணல்போல் உறுத்துவ' (கண்ணில் மண்ணள்ளிப் போட்டதுபோல்)
கஉரு	24-25	'வேலியே தின்னில் தெய்வமே காவல் செய்பயிர்க்கென்பர்' (வேலியே பயிரைத் தின்றால்...)
,,	31-32	'எலிப்பகை தொலைக்க இருந்த தன் வீட்டில் நெருப்பினை இடல்போல்'
கடிக	183	'கெட்டார்க் குலகில் நட்டார் இல்லை' 'கெட்டார்க்கு நட்டாரில்' —(குறள் 130-3) 'கெட்டார்க்கு நட்டாரோவில்' (பழமொழி 50)
கடிஉ	191	'எரியிடுவானோ இல்லிடை ?'
கடிடி	216-7	கருமருந் தறையிற் சிறுபொறி சிதறினும் பெருநெருப்பன்றோ' (காட்டுத் தீப்போல் பரவியது)
கசக	174	'கைக்கெட்டியது தன் வாய்க் கெட்டுதற்குள்' (கைக் கெட்டினது வாய்க் கெட்டாமற் போதல்) 'Many a slip between the cup and the lip'

பக்கம்	வரி	
௧௪௭	364	'சம்மதக் குறியே மௌனம்' (Silence implies consent)
௧௫௧	9	'கிழவிபேச் சேற்குமோ கின்னரக் காரிக்கு' (ஏழை சொல் அம்பல மேறுமோ?')
௧௫௭	30	'நொந்த புண் அதனிலே வந்திடும் நூறிடி' (பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்) 'Misfortune never comes single'
,,	33	'மூடிடில் தீயும் மூளும் மடங்காய்'
௧௬௫	40	'வைத்ததா ராயினென்? வெந்தது வீடு' (யார் வைத்த தீயோ வீடு வெந்தது சரி)
௧௬௯	75-76	'ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே' 'பாடையின் சிறப்பெலாம் பயில்வோர் சிறப்பே' (ஆட்பாதி யாடைபாதி) (செந்தமிழும் நாப்பழக்கம்.)

உ. திருக்குறள்

௫௨	16	'கருவியுங் காலமும் அறியில் அரியதென்' 'அருவினை யென்ப வுளவோ கருவியாற் காலம் அறிந்து செயின்.' (அதி, 49, செ. 3)
௪௧	170-1	'வினைதெரிந் துரைத்தல் பெரிதல அஃது தனைநன்கு ஆற்றலே ஆற்றல்.' 'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்." (அதி, 67-செ. 4)
,,	172-78	'அன்பும் குடிமைப் பிறப்பும் அரசவாம் பண்பும் அறிவும் பரவுநூ லுணர்வும் தூய்மையும் மன்னவை யஞ்சாத் திண்மையும் வாய்மையும் சொல்லில் வழுவா வன்மையும் துணிவும் காலமும் களமும் துணியுங் குணமும் மந்திரத் தலைவர் துணைமையும் உடையனே வினையாள் தூதன்' "அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் பண்புடைமை தூதுரைப்பான் பண்பு."(அதி.69 செ.1)
௪௫	233	'என்னே! இவன்மதி முன்னிற் பவையெவை?' "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம் யாவுள முன்னிற் பவை." (அதி, 64-செ. 6)

பக்கம் வரி

சச 268 "மூக்கிற் கரியர் உளர்என நாயனூர்
தூக்கிய குறளின் சொற்படி'
"புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து." (அதி 28. செ. 7)

" 278-80 'தீரா இடும்பையே தெளிவில் ஐயுறல்.
எனைவகை தேறியக் கண்ணும், வினைவகை
கோடிய மாந்தர் கோடியின் மேலாம்'
"தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவும்
தீரா விடும்பை தரும்." (அதி, 51-செ. 10.)

சரு 312 'அரசர்க்கு அமைச்சர் அவயவம் அலரோ?'
"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு" (அதி. 39, செ. 1.)

சஅ 50-1 'உளத்தோடு உளஞ்சென்று ஒன்றிடிற் பின்னர்
வியர்த்தமே செய்கையும் மொழியும்' [சொற்கள்
"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்
என்ன பயனு மில" (அதி. 110, செ. 10)

ருக 111-12 'காதலா மூழிக் கனன்முன் வையாய்
மாதரார் கட்டுரை மாயா தென்செயும்?'
"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" (அதி. 44, செ. 5)

ருஉ 164-65 'குணமு முளார்இல் துணைவ ராயின்
இல்லது என் உலகில்'
"இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணக் கடை" (அதி. 6, செ. 3)

கூச 107-8 'தினைத்துணை தீங்கவன் செய்யின்என் மகட்குப்
பனைத்துணை செய்ததாப் பழிபா ராட்டுவன்'
"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்" (அதி. 44, செ. 3)

கூக 68-69 'உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிகும்
"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனல்
உழந்து.முழவே தலை" (அதி. 104, செ. 1)

பக்கம் வரி

அச 78-80 'உளமும் உளமும்
நேர்பட அறியா என்றோ நினைத்தாய்?
ஓர்வழிப் படரின் உணருமென் றுரைப்பர்'
"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்" (அதி. 79, செ. 5)

கூஉ 172-76 'இத்தனி யுலகில் எத்துயர் காணினும்
அத்தனை துயரும்நம் அழுக்கெலாம் எரித்துச்
சுத்தநற் சுவர்ணமாச் சோதித்து எடுக்க
வைத்தஅக் கினியென மதித்தலே உயிர்கட்கு
உத்தம பக்தியென்(று) உள்ளுவர்'
"சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" (அதி. 27, செ. 7)

கூஅ 31-32 'மீன் உண்ண
குளக்கரை இருக்கும் கொக்கென அடங்கி'
"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து" (அதி. 49, செ. 10)

" 36 'எண்ணார் துணிந்தபின் பண்ணார் தாமதம்'
"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு" (அதி. 47, செ. 7)

கoஉ 153-164 'போர்க்குறிக் காயமே புகழின் காயம்.
யார்க்கு அது வாய்க்கும் ஆ! ஆ; நோக்குமின்!
அனந்தந் தலைமுறை வருந்தனி மாக்கள்,
தினந்தினம் தாம்அனு பவிக்குஞ் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் எண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்
என்றால் அப்புண் 'இரந்துகோட் டக்கது'
அன்றோ? அறைவீர் ஐயோ! அதுவும்
புண்ணோ? புகழின் கண்ணே. எவரே
புண்படாது உலகிற் புகழுடம்பு அடைந்தார்?
புகழுடம்பு அன்றிஇவ் இகழுடம் போமெய்?
கணங்கணம் தோன்றிக் கணங்கணம் மறையும்
பிணம்பல. இவரெலாம் பிறந்தார் என்பவோ!'

பக்கம் வரி

"விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து" (அதி. 78, செ. 6)
"சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து" (அதி. 78, செ. 7)
"புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து" (அதி. 78, செ. 10)

௧0௨ 167 "பிறந்தார் என்போர் புகழுடன் சிறந்தோர்"
"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" (அதி. 24, செ. 6)

௧0௯ 84-85 'எண்ணுமின் நன்றா யேற்குமின்! பின்புநீர்
பண்ணுந் தவறுநம் பாலாய் முடியும்'
"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு" (அதி. 47, செ. 7)

௧௧௪ 49-51 'ஓர் சிறு
மயிரினை யிழக்கினும் மாயுமே கவரிமா
பெருந்தகை பிரிந்தும் ஊன்சுமக்கும் பெற்றி
மருந்தாய் எனக்கே இருந்ததே நாரணா'
"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்" (அதி. 97, செ. 9)
"மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து" (அதி. 90, செ. 8)

௧௧௫ 80 'மும்மையில் இம்மியும் உண்மையில் இழந்திலம்'
"செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்" (அதி. 47, செ. 6)

„ 85-87 'அழகார் அம்புயப்
பூவின துயர்வு பொய்கையின் ஆழத்து
அளவுஆ வதுபோல்'
"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு" (அதி. 60, செ. 5)

௧௧௯ 191 'மீண்டோம் என்றுனித் தூண்டிலின் மீனென
ஈண்டவன் இருக்குக : இருக்குக.'
"வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று" (அதி. 94, செ. 1)

பக்கம் வரி

கஉக 263-4 'மானமே பெரிது
சிதைவிடத் துரவோர் பதையார் சிறிதும்'
"சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பின்
பட்டுப்பா டூன்றுங் களிறு" (அதி. 60, செ. 7)

கஉஉ 270-1 'நாணு துலகம் ஆளல்போல் நடித்தல்
நாணுற் பாவை உயிர்மருட் டுதலே.'
"நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு லுயிர்மருட்டி யற்று" (அதி. 102, செ. 10.)

௩. புறநானூறு

சஎ 12 'சூட்டுடைச் சேவல் சுரைக்கொடி படர்ந்தஅவ்
வீட்டுச் சியின்மேல் வீம்பாய் நடந்துபின்'
"தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரும் அல்குல்
ஏந்தெழில் மழைக்கண் இன்னகை மகளிர்
புன்மூசு கவலைய முள்மிடை வேலிப்
பஞ்சி முன்றிற் சிற்றில் ஆங்கண்
பீரை நாறிய சுரையிவர் மருங்கின்
ஈத்திலைக் குப்பை ஏறி உமணர்
உப்பொ யொழுகை எண்ணுப மாதோ"
(புறநானூறு - 116)

௪. சிலப்பதிகாரம்

உஉ 157-8 'துணைபுண ரன்னத் தூவி யணைமிசைக்
கண்படு மெல்லே'
"துணைபுண ரன்னத் தூவியிற் செறித்த
இணையணை மேம்படத் திருந்துதுயில் பெறுஅது"
(அந்திமாலைச் சிறப்புச்செய் காதை 4, 66-7)

௩க 110 'வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம்
ஓமென வோவிறந் தொலிக்க'
"கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்குங்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கும் ஒலியே யல்லது"
(நாடுகாண் காதை 10, 107-109)

பக்கம் வரி

௩௧ 118-26 'துகிர்க்கா லன்னமும் புகர்க்கால் கொக்கும்
செங்கட் போத்துங் கம்புட் கோழியும்
கனைகுரல் நாரையும் சினமிகு காடையும்
பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
என்றிவை பலவும் எண்ணில குழீஇச்
சிரஞ்சிறி தசைத்துஞ் சிறகை யடித்தும்
அந்தியங் காடியின் சந்தங் காட்டித்
தத்தங் குழூஉக்குரல் தமைவிரித் தெழுப்பும்
பேரொலி யொன்றுமே யார்தரு மொருசார்'
"கம்புட் கோழியுங் கனைகுரல் நாரையும்
செங்கா லன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்
வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்
பல்வேறு குழூஉக்குரல் பரந்த ஓதையும்"
(நாடுகாண்காதை 10, 114-119)

௩௧ 127-30 'வீறுடை எருத்தினம் வரிவரி நிறுத்தி
ஈறிலாச் சகரர் எண்ணில ராமெனப்
பொன்னேர் பூட்டி நின்றவர் தம்மைப்
போற்றிய குரவையே பொலிதரும் ஒருசார்'
"பாருடைப் பனர்போற் பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோர் ஏர்மங் கலமும்"
(நாடுகாண்காதை 10, 134-135)

௩அ 91-3 'கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தற் பூந்தளிர் குளிர
மேய்ந்தகல் கர்ரா தீம்பால் துளிக்கும்'
"பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிறல் ஊர்களும்
பொங்கழி ஆலைப் புகையொடும் பரந்து
மங்குல் வானத்து மலையிற் றோன்றும்
ஊரிடை யிட்ட நாடுடன் கண்டு."
(நாடுகாண்காதை 19, 148-153)

பக்கம் வரி

"விளைவறா வியன்கழனிக்
கார்க் கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச் செறுவில் நீணெய்தற்
பூச்சாம்பும் புலத்தாங்கட்
காய்ச்செந்நெற் கதிரருந்தி
மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியும்"

(பட்டினப்பாலை: 8-15)

ரு. மணிமேகலை

எ 60 'பின்னொரு வாயசம் கவிழ்த்த பொன்னியும்'
"கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப் பெய்துதி"

(காதை 9, வரி, 52-53)

கஉ 26 'செறித்திடுஞ் சிறையினை யுடைத்திடும் புனல்போல்'
சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழீஇ"

(காதை 5, வரி 19)

எஎ செ. 4 'அறங்கிடந்த சிந்தையரா யாசையெலாந் துறந்த
அதிவீர ரொழியளவ ராயினுமிங் கடையார்'
"மாரனை வெல்லும் வீர நின்னடி"

(காதை 11, 61)

ககஎ 28-19 'தன்னுயிர் ஈவர் தக்கோர் சார்ந்த
மன்னுயிர் காத்திடு மார்க்கமற் றஃதேல்!'
"தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பு
மன்னுயிர் முதல்வ னறமுமீ தன்றால்"

(காதை 25, வரி 116-117)

சா. திருவாசகம்

க 46-47 'தென்பாண்டி நாடே சிவலோக மாமென
முன்வாத வூரர் மொழிந்தனர்.'
"அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பார் சடையப்பன்."

(திருவம்மானை-கக)

பக்கம் வரி

கக 39-41 'யாரொடு நோவேன்? யார்க்கெடுத் துரைப்பேன்?
வார்கட லுலகில் வாழ்கிலன்.
மாளுவன் திண்ணம் மாளுவன் வறிதே'
"யாரொடு நோகேன் யார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே"
(வாழாப்பத்து-க)

ருச 9-10 'சித்தம் மத்துறு தயிரில் திரிந்து
பித்துறச் செய்த'
"மத்துறு தண்தயி ரிற்புலன் தீக்கது வக்கலங்கி [சிக்
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண் டலைமிலைச்
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னாரச்செஞ் சாந்தணி சச்சையனே."
(நீத்தல் விண்ணப்பம்-கo)

சுக 78-79 'குறும்புசெய் எறும்புங் கோடி கோடியாப்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை'
"எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்டாய் வெய்யகூற் றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே."
(நீத்தல் விண்ணப்பம்-உரு)

எக 187 'தாயினுஞ் சிறந்த தயாநிதி மனோன்மணி'
"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே."
(சிவபுராணம், வரி-61)

எக செ. 24 'நறுநெயுறு குடத்தெறும்பு நண்ண லென'
"உள்ளன வேநிற்க இல்லன செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண்டாய் வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலனின்கட்
போதலொட்டா
மெள்ளன வேமொய்க்கு நெய்க்குடந் தன்னை
யெறும் பெனவே."
(நீத்தல் விண்ணப்பம்-உஎ)

பக்கம் வரி

கூசு 236 'எய்ப்பினில் வைப்பா யிருந்தபே ரருளே'
"காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க."
(திருவண்டப்பகுதி, வரி-க0௫)

ககசு 47 'இருதலைக் கொள்ளியில் எறும்பா னேனே'
"இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து
நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னு முத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல னேந்திப் பொலிபவனே"
(நீத்தல் விண்ணப்பம்-க)

களக வாழ்த்து :—
'பள்ள வுவர்க்கடலிற் பாய்ந்தோடும் வெள்ளமென
உள்ள மூவந்தோடி ஒன்றுனுய்'
"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர் நிற்க"
(சுட்டறுத்தல், செ-க)

எ. கம்பராமாயணம்

கஉ 28-29 'எனிது எனிது வாணீ! எட்பூ
ஏசிய நாசியாய் இயம்புக
"எட்குலா மலர் ஏசிய நாசியாய்'

" 34 'தந்தையுங் கொடியன் தாயுங் கொடியள்'
"மந்தரை பின்னரும் வரைந்து கூறுவாள்
அந்தரந் தீர்ந்துல களிக்கு நீரினல்
தந்தையுங் கொடியன்நற் றயுந் தீதளால்
எந்தையே பரதனே யென்செய்வா யென்றுள்"
(அயோத். மந்தரை சூழ்ச்சிப் படலம்-60, செ. 12)

ககூ 143 'போதுநீத் தெம்மனை புகுந்தநற் றிருவே'
"பிடிபுக் காயிடை மின்னொடும் பிறங்கியமேகம்
படிபுக் காலெனப் படிதரப் பரிபுரம் புலம்பத்

பக்கம் வரி

துடிபுக் காவிடைத் திருமகள் தாமரை துறந்து
குடிபுக் காலெனக் குடிபுக்கார் கொடியன்ன மடவார்"
(பால. வரைக்காட்சிப்படலம், செ. 12)

கடு 115 'தாமரைத் தூமுகை தூமயில் விளக்கா'

"தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவினேங்கக் குவளைகண் விழித்து
நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகரயாழின்
வண்டுக ளினிதுபாட மருதம்வீற் றிருக்கு மாதோ"
(பால. நாட்டுப்படலம்,-செ. 4)

௬௦ 140-44 'தூவியால் தம்முடல் நீவிடிற் சிரிக்கும்
சிறுமியர் என்னவச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல்குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்!

"உடுத்தநீர் ஆடையள் உருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றிவண்
அடித்தலம் தீண்டலின் அவனிக் கம்மயிர்
பொடித்தன நிகர்க்குமாற் புல்லென் றுன்னுவாள்"
(ஆரணிய. சூர்ப்பணகைப் படலம், செ, 19)

௯௬ 38-40 'தேவ கன்னியர் முதலாந் தெரிவையர்
யாவரே யாயினும் என்கண் தனக்கு
மைந்தரா மாற்றுமிச் சுந்தரி யார்கொலோ?'

"ஏகநாயகன் தேவியை எதிர்ந்ததற் பின்னை
நாகர்வாழ்விட முதலென நான்முகன் வைகும்
மாகமால்விசும் பீறென நடுவண வரைப்பில்
தோகை மாதர்கள் மைந்தரில் தோன்றினர்சுற்ற"
(சுந்தர. பிணிவீட்டுப்படலம், 45)

கக 75 'கொடிக் கரங்காட்டி அழைப்பதுங் காண்டி'

"மையறு மலரி னீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிகள் என்னும்

பக்கம் வரி

கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா"
(பால. மிதிலைக்காட்சிப் படலம், செ. 1)

கOO 92-93 'அலையெறிந் திதோ ஆர்த்தனள் கேண்மின்
முலைசுரந் தூட்டிய முதுநதி மாதா'
"இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
உரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம்"
(பால. ஆற்றுப்படலம், செ. 12)

அ. வில்லி பாரதம்

க 21-24 திருவடி தீண்டப் பெற்றஇச் சிறுகுடில்
அருமறைச் சிகரமோ ஆலநன் னீழலோ
குருகுல விஜயன் கொடித்தேர்ப் பீடமோ
யாதென ஓதுவன்?'
"முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ எய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றான்"
(கிருஷ்ணன் தூதுச்சருக்கம்-80)

கOO 106-7 'விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரமறும் அற்பர்வாய்ப் படுமோ'
"அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு"
(பாயிரம் 1)

கூ. நைடதம்

எ 64-8 'வேழவெண் மருப்பும் வீசிக் காழகிற்
சந்தன டவியுஞ் சாடி வந்துயர்
குங்கும முறித்துச் சங்கின மலறும்
தடம்பணை தவழ்ந்து, மடமயில் நடம்பயில்
வளம்பொழில் கடந்து குளம்பல நிரப்பி'

பக்கம் வரி

"வேழ வெண்மருப் பெறிந்துவெண் ணித்திலம் வரன்றிக்
காழ கிற்றுணி சந்தொடு கையரிக் கொண்டு
கோழ ரைச்செழுங் குங்குமத் தடஞ்சினை சாடி
ஆழ்தி ரைக்கடல் அகடுகீண் டொழுகிய தன்றே"
"கங்கை யென்றுல கேத்திய கடவுள்மா நதிவெண்
சங்கு சூலுளைந் தலறிய தடம்பணை தவழ்ந்து
கொங்கு யிர்த்தபூந் தடத்துலாய்க் குளம்பல நிரப்பி
அங்கண் மாநிலத் தமிழ்தெனப் பரந்ததை யன்றே"
(நாட்டுப்படலம்-4, 5)

கக 116-17 'நிலவொளி முத்துங் கவடியும் பணமா
அலவன் பலவிர லாலாய்ந் தெண்ண'
"வரிவ ளைக்குலக் குவையினுல் மணிகளால் மணிகள்
தெரித ருங்கர வலவனுல் வயின்வயிற் றிரண்ட
விரிக ருப்புர வெண்மணற் குன்றினுல் ஒளியால்
பொருவில் ஆவணம் மறிதிரைக் கடலினைப் பொருவும்"
(நகரப்படலம்-14)

கக 65-66 'நிணங்கமழ் கூன்பிறைத் துணைமருப் பசைத்து
மம்மர் வண்டின மரற்ற மும்மதம்
பொழியும் வாரணப் புயலினம் தத்தம்
நிழலொடு கறுவி நிற்பதும் அழகே'
"நிழலொடு கறுவிப் பாகெறிந் தூன்பெய்
நிணத்தொடு பழகுகூன் பிறைக்கோட்
டழிகவுட் கடாத்த தறுகண்மால்யானை"
(சுயம்வரப் படலம்-61)

கo. நளவெண்பா

கஎ 3-5 'துன்றாக்'
கவ்விய முழுமதிக் காட்சியிற் செவ்விதாம்
பின்னிய கூந்தற் பேதையின் இளமுகம்'
"சிறுக்கின்ற வாள்முகமும் செங்காந்தட் கையால்
முறுக்குநெடு மூரிக் குழலும்—குறிக்கின்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
அரும்பாம் பணைமுலையா யாம்"
(நளவெண்பா, கலிதொடர் காண்டம் - 16)

பக்கம் வரி

அ௨ செ. 48 'சிவகாமி யானுனது சிதம்பரனே யென்னச்
செப்புமுனம் இருவருமற் றோருவம் ஆனார்
எவர்தாமுன் னணைந்தனரென் றிதுகாறு மறியோம்
இருவருமொன் றாயினரென் றேயறையுஞ் சுருதி'

"ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி
இருவர் எனுந்தோற்றம் இன்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலானும், காரிகையும் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று."

(சுயம்வர காண்டம் - 167)

கக. திருநாவுக்கரசர் தேவாரம்

௫௧ 168 'பெரும்போர் இலாநாள் பிறவா நாளே'

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
... ...
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

(ஆறாந்திருமுறை, கோயில். பெரிய திருத்தாண்டகம், செ. க)

க௨. பெரியபுராணம்

௪எ 12 'சூட்டுடைச் சேவல் சுரைக்கொடி படர்ந்தஅவ்
வீட்டுச் சியின்மேல் வீம்பாய் நடந்துபின்'

"மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயல்மருங்கு பெருங்குலையிற்
சுற்றம்விரும் பியகிழ்மைத் தொழிலுழவர் கிளைதுவன்றிப்
பற்றியபைங் கோடிச்சுரைமேற் படர்ந்தபழங் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி"

(திருநாளைப்போவார் புராணம், செ. 6)

க௩. திருவிளையாடற் புராணம்

௩அ 85-7 'கேதகை மலர்நிழல் இனமெனக் கருதித்
தாராத் தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடும் கோங்கலர்த் தாதே'

பக்கம் வரி

"கழிந்த தெங்கினொண் பழம்பரீஇ முட்பலாக்கனிகீண்
டழிந்த தேன் உவர்க் கேணிபாய்ந் தகற்றுவஉவரை
வழிந்த தேன்மடற் கேதகை மலர் நிழல் துருகேன்
றொழிந்த தாமரைப் போதுபுக் கொளிப்பன கெண்டை"
(மதுரைக்காண்டம், திருநாட்டுச் சிறப்பு-40)

௧௪. திருவிசைப்பா

"யாதுநீ நினைவ தெவரையா
தெவர்களும் யாவையும் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்தென்
பனிமலர்க் கண்ணுணின் றகலான்
கேதகை நிழலைக் குருகென மருவிக்
கெண்டைகள் வெருவு கீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துள் நின்றுடும்
மைந்தனென் மனம் புகுந்தானே"
(கருவூர்த்தேவர் திருவிசைப்பா - திருக்கீழ்க்கோட்டூர்
(மணியம்பலம் 9)

௧௫. தாயுமான சுவாமிகள்

௧௬௧ 164-165 'உடலலால் உயிரும் விழியலால் உணர்வும்
கடபட சடமலால் கடவுளும் இலையேல்'
"கற்றதுங் கேட்டதுந் தானே ஏதுக்காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட அன்றோ"
(நின்றநிலை - 3)

௧௬. பட்டினத்துப்பிள்ளையார் பாடல்

௬அ 40-44 'தன்வலிக் கடங்கிய மண்கல் புல்புழு
இன்னதென் றில்லை யாவையும் ஈர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகுமிவை யெனவோர்ந் துருட்டி'

பக்கம் வரி

"கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டி முழக்கி அழுவார் மயானங் குறுகிஅப்பால்
எட்டி அடிவைப் பரோஇறை வாகச்சி யேகம்பனே"
(திருவேகம்பமாலை, செ. 2)

கஎ. நீதிநெறி விளக்கம்

ஙரு 165-68 'இல்லதென் உலகில் இவற்றுடன் கல்விசேர்
நல்லறி வுளதேற் பொன்மலர் நாற்றம்
பெற்றவா றன்றோ?'

"எத்துணைய வாயினுங் கல்வி இடமறிந்
துய்த்துணர் வில்லெனில் இல்லாகும்-உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னாம் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து"
(நீதிநெறி விளக்கம், செ. 4)

கஅ. நீதி வெண்பா

சகூ 305-309 'விழிப்பா யிருக்கிற் பிழைப்பர். விழியிமை
கொட்டிற் கோடி பிறழுமே கொட்டும்
வாலால் தேளும் வாயால் பாம்பும்
காலும் விடமெனக் கருதி'

"ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங் கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனர்க்
கங்கமுழு தும்விடமே யாம்"
(நீதி வெண்பா, செ. கஅ)

கக. பாடுதுறை

கஙo கு வெ. 'பொறிகளறி யாதுள்ளே புகும்பொருள்கள்
துறை-3. இலையென்பர் பொருளே யுன்னை
அறியஅவா வியகரணம் அலமாக்க அகத்திருந்தாய்
அச்சோ அச்சோ'

பக்கம் வரி

"துடித்துமனம் புலன்வழியே தூறுசெய்து
மாறுபடுந் துணையி லேனை
அடித்தடித்துப் பாலூட்டி ஆனந்த
மெனக்களித் தான் அச்சோ அச்சோ"
(பாடுதுறை 50-வது அச்சோ, செ. 2)

உ௦. ஒழிவிலொடுக்கம்

க௮ நே-வெ 'வெறும் எலும்பை நாய்கௌவும் வேளைநீ செல்ல
உறுமுவதென் நீயே யுரை'

"பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பரவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடர்—வெட்ட
வெறு எலும்பை நாய்கரண்ட வேந்தர்வர நாய்பார்த்
துறுமுவதைக் காட்டுவோ மோ' (துறவு-௬)

௬௦ 168-9 'களிமிகு கன்னியர் உளமும் வாக்கும்
புளியம் பழமும் தோடும் போலாம்'

புளிசேர் பழமானூற் போற்புறம்போ டுள்ளின்
மூளை தானும் வேறாய் மூளைபோய்."
(சத்திநிபாதத்துத் தமரோழிபு, உக)

௮க செ-40 'கண்டுயிலும் இல்லிடந்தீ கதுவவெளி யோடுங்
கணக்காஇவ் வேடமொடு கரந்துபுறப் பட்டேன்'

"நித்திரைசெய் வீட்டில் நெருப்பும் பெரும்படையும்
முற்றிப் புறப்பட்டார் முற்றத்தே—பித்தரைப்போல்
நில்லென்று சொன்னாலும் நிற்பரோ அப்படிக்காண்
இல்லறத்தை நீத்தார் இயல்பு." (துறவு-கடு)

உக. புகழேந்திப்புலவர்

உ௦ நே-வெ 'மாற்றலர்தம் மங்கையர்க்கு மங்கலநா ணங்கவிழ
ஏற்றியநாண் விற்பூட்டும் ஏந்தலே—சோற்றதற்காய்த்
தன்மகவை விற்றஅரிச் சந்திரனும் உன்அவையில்
என்மகிமை உள்ளான் இனி'

"தென்னவன் தென்னர் பெருமான் திறல்மதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநா
டாலிக்கும் வேந்தாம் அபய குலமகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை."

(தனிச்செய்யுட் சிந்தாமணி)

வரலாற்று விளக்கம்

[Allusions Explained]

பாயிரம்

அகத்தியர் கடல்குடித்த கதை

இந்திரன் முதலிய தேவர்கள் தங்கள் பகைவனாகிய விருத்திராசுரன் மற்றும் பல அசுரர்களுடன் கடலில் ஒளித்துக்கொண்டபோது அகத்திய முனிவரை யடுத்து முறையிட, அவர் அக்கடலின் நீரைத் தமது ஒரு கையால் முற்றும் முகந்து பருகியருளினர். அங்கு மறைந்திருந்த விருத்திராசுரனை இந்திரன் கொன்றனன். பின் இந்திரன் முதலியவர் வேண்டுகோளின்படி மீண்டும் உமிழ்ந்தனர் என்பது.

குடமுனிவர் வரலாறு

ஒரு காலத்தில் கடற்கரையிலிருந்த மித்திராவருணர் என்பவர்கள் ஊர்வசி என்னும் அப்சரசைக்கண்டு காம மீக்கூர்தலின், தங்கள் வீரியத்தை ஒருவர் கும்பத்திலும் ஒருவர் தண்ணீரிலும் விடுப்ப, கும்பத்தினின்று அகத்தியரும், தண்ணீரினின்று வசிட்டரும் தோன்றினர் என்னும் நூல்கள். இதனால் அகத்தியர் குடமுனி, கும்பமுனி முதலிய திருநாமங்களை யெய்தினர்.

கடல் சாகரமெனப்படுதல்

சூரியகுலத்துச் சகரமகாராசன் அசுவமேத யாகம் (பரிவேள்வி) செய்தபொழுது பூமி வலம்புரிய அனுப்பிய குதிரையைப் பொறாமை கொண்ட தேவேந்திரன் மாயையால் ஒளித்துக்கொண்டு சென்று பாதாள லோகத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த கபிலமுனிவர் பின்னே கட்டிவைக்க, அவ் வேள்விக் குதிரையை நாடிச் சென்ற சகரபுத்திரர் அறுபதினாயிரவரும், பூமி முழுவதும் தேடிக் காணாமல் பாதாள லோகத்திற்குப் போகும் பொருட்டு, பரதகண்டத்தின் கீழ்ப்பாகத்தில் தோண்டிச் சென்ற பெரும் பள்ளம், பின் பகீரதன் கொண்டுவந்த கங்கை முதலிய நதிகளின் நீரால் நிறைந்து சாகரம்

என்னும் பெயர் பெற்றக் கடலோடு கூடித் தானும் கடலின்பாற் பட்டது. (சகரரால் தோண்டப்பட்டது சாகரம்.)

நக்கீரர் அரனுர் கதை

மதுரையில் சண்பகமாறன் என்னும் பாண்டியன் தன் மனைவியுடன் உய்யான வனத்து மாளிகை உப்பரிகையில் தனித்திருந்தான். அப்பொழுது அடித்த காற்றில்மனையாளின் கூந்தலில் நறுமணந் தோன்றிற்று. இதனை யுணர்ந்த மன்னன் இத்தகைய நறுமணம் இவள் கூந்தலுக்கு இயற்கையில் அமைந்ததோ, பூச்சூடுதல் அகிற்புகை காட்டல் பரிமளத் தைலந் தேய்த்தல் முதலிய செயற்கையால் ஆகியதோவென்று ஐயுற்று வீடு வந்தும் தெளியானாய், சங்க மண்டபஞ் சென்று ஆயிரம் பொன்னை ஒரு கிழியில் முடிப்பாகக் கட்டித் தொங்க வைத்து என் ஐயத்தைத் தீர்ப்பவர் இப் பொற்கிழியைப் பெறுகவென்று யாவர்க்கும் அறிவித்தான். நக்கீரர் முதலிய சங்கப் புலவர்கள் யாவரும் தத்தம் கவிகளால் அரசனை யடுத்துத் தெரிவித்தும் ஒன்றும் அவனைத் திருப்தி செய்யவில்லை ; ஐயமுந் தீரவில்லை ; பொற்கிழியும் எடுபடவில்லை.

ஆலவாய்க் கடவுளை அருச்சனை புரிந்த வறிஞனுகிய தருமி தனக்கு மணமுடித்தற்குப் பணம் வேண்டுமென்று எண்குணக்கடவுளை இறைஞ்சி வந்தனன். அரனும் இது சமயம் நழுவவிடாது தருமிக்கு 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்னும் பாடலைப் பாடிக் கொடுத்து மன்னனிடந் தெரிவித்துப் பொற்கிழியும் அறுத்தெடுக்க என்றனுப்ப, அவனும் அங்ஙனமே போய் அறுத்தெடுக்க முற்படுதலும், நக்கீரராகிய புலவர் 'கிழி அறுக்காதே ; நினது பாடல் குற்றமுடையது,' என்று தடுத்தனர். கைக்கெட்டியது வாய்க் கெட்டாமையிற் கவன்ற தருமி விரைந்து இறைவனிடம் முறையிட்டனன். கேட்டதும் வெகுண்ட நுதற் கடவுள் புலவனுருக்கொண்டு சங்க மண்டபமடைந்து கவிக்குக் குற்றங்கூறியவர் யாவர் எனலும், நக்கீரர் துணிந்து அது தாமே யென்றும், கூறிய கவியில் பொருட்குற்ற முண்டென்றும், பெண்கள் கூந்தற்குச் செயற்கை மணமன்றி இயற்கை மணம் இன்றென்றும் வாதிக்க, இறைவனும் புலவன் வெகுண்டு நெற்றிக் கண்ணைத் திறந்து நிற்கவும், கீரர் நெற்றிக்கண் திறப்பினும் குற்றங் குற்றமே என்றனர்.

ஏடு எதிரேறியது

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் சமணர்களை வென்று சைவ மதத்தை நிலைநிறுத்தும் பொருட்டு மதுரை சென்றபொழுது சமணர் வைத்த தீயால் பாண்டியன் வெப்புநோய் கொள்ள, அதனைச் சம்பந்தர் நீற்றுப் பதிகத்தால் மாற்றியபின் நிகழ்ந்த அனல் வாதத்திலும் தோல்வியுற்ற சமணர் புனல்வாதம் புரியவேண்டுமென்று தென்னவனை வேண்ட, அவனும் இசைந்ததற்கு இணங்க, இருதிறத்தாரும் தத்தம் சமய சித்தாந்தத்தை எழுதிய ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றி லிட்டதில் எதிரேறும் ஏடே மெய்ப்பொரு ளுடையதென்று துணியப்படுவதாயிற்று. இம்முறையில் சம்பந்தர் 'வாழ்க அந்தணர்' என்னும் பாடலை எழுதிவிட்ட ஏடு வேகவதியாற்றில் எதிர்ந்து நீரைக் கிழித்துக்கொண்டு சென்று சோழவந்தானை யடுத்துள்ள திருவேடகம் என்னும் இடத்தை யடைந்தது. தொடர்ந்து சென்ற குலச்சிறையாம் மந்திரி எடுத்துவந்து சம்பந்தர் வெற்றியைச் சிறப்பித்தனர். கூன்பாண்டியனும் தென்னவனும் இச் செய்யுட் சிறப்பால் உடற்கூனும் உளக்கூனும் நிமிர்ந்து நின்றசீர் நெடுமாறனுயினுன்.

வாசகத்தில் ஒரு பிரதி கருதியது

திருவாதவூரராகிய மாணிக்கவாசகர், அரிமர்த்தன பாண்டியன் அமைச்சராயிருந்து அவன் விருப்பப்படி பரி வாங்கிவரச் சென்ற திருப்பெருந்துறையில் சிவகுருநாதன் திருவருள்பெற்றுப் பாண்டியற்கு வேண்டிய பரிகளை இறைவனுல் கொணர்வித்துப் பாண்டியன் தண்டனைக்கு ஆளாயிருந்து, பின் பாண்டியனையும் ஆட்கொள்ளக் கருதிய சிவபெருமான் அருள்வழி பெருகிய வைகை வெள்ளநீரைத் தடுக்கச் செய்த அணைக்கு வந்தியின்பொருட்டு மண்ணெடுத்துப் பிட்டுண்ட பிரானுர் மகிழப் பெரும்பொருள் நிரம்பிய பாக்கள் பாடி மகிழ்வித்து வந்தனர். இவர் சிதம்பரத்தி லெழுந்தருளியிருக்கையில் சிவபெருமான் பாண்டிய நாட்டில் இவரோடு முன்பழக்கமுள்ள ஓர் அந்தணனது வடிவத்தை எடுத்துவந்து இவரது அனுமதி பெற்று இவர் பாடிய திருவாசகத் திருப்பதிகங்களை எழுதினுரென்பது.

சங்கத்தார் சிறு பலகை

இது கடைச்சங்கத்துப் புலவர்களின் வேண்டுகோட்படி அவர்கட்கு மதுரைச் சோமசுந்தரக் கடவுளால் கொடுத்தருளப்பெற்றது. இப்பலகை இரண்டுசாண் அளவிற்குச் சதுரமாயிருப்பது. கலைமகள் வடிவினராம் உண்மைப் புலவர் எத்தனை பேர் வந்தாலும் ஒவ்வொரு முழம் விழுக்காடு விரிந்து ஏறி வீற்றிருக்க இடங்கொடுப்பது. சங்கப் புலவர்கள் இதனால் தங்களுக்கும் மற்றைத் தமிழ்ப் புலவர்களுக்குங் கல்வித் திறத்திலுள்ள வேறுபாட்டை அளந்தறிய எளிதாயிருந்தது.

சாநவி வரலாறு

பகீரதன் தவப்பயனால் தேவலோகத்திலிருந்து வந்த புண்ணிய நதியாகிய கங்கை வருகிற வழியில் சந்நு முனிவர் செய்துகொண்டிருந்த யாகத்தை அழிப்பதாவதை யுத்தேசித்துத் தாம் அதனை யுட்கொண்டார். பின் பகீரதன் தன் மூதாதையர்களான சகர புத்திரர்களை நற்கதி செலுத்தும் பொருட்டுக் கொண்டுவரப்படுதலின் அதனை விடுத்தருள வேண்டுமென்று வேண்டியதற்கேற்பச் சந்நு முனிவர் தம் காது (சந்நு) வழியாக விடுத்தமையின் சாநவி என்ற பெயரைப் பெறுவதாயிற்று. பகீரதனாற் கொண்டுவரப்பட்டமையால் பாகீரதி யென்றும் வழங்கப்படும்.

காவிரி வரலாறு

காவிரி, அகத்திய முனிவர் கமண்டலம் கவேரகிரியில் விநாயகரால் கவிழ்க்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. இந்நதியின் வளத்தினால் சோழநாடு புனல் நாடு எனப்படும். கவேர முனிவர் என்னுஞ் சிறந்த முனிவர் பிரமதேவரைக் குறித்து அருந்தவம் புரிந்து அவரருளால் விஷ்ணுமாயையைத் தம் புத்திரியாக அடைந்து முத்தி பெற்றனரென்பதும், பின்னர் அக்கன்னி பிரமதேவர் கட்டளைப்படி நதி வடிவாகிப் பெருகி கவேரகன்னி, காவிரி எனப் பெயரேற்றனள் என்பதும் ஆக்கிநேய புராணம்.

இந்திரன் நந்தவனம் தழைக்கும் பொருட்டு அவன் வேண்டுகோட்கிணங்கிய விநாயகர் காக வடிவங்கொண்டு அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்த்துப் பெருகச் செய்தார் என்பதும் ஆம்.

மன்மதன் நீருயினமை

சிவபிரான் ஒரு காலத்துத் தம்மை யடுத்து ஞானநிலையுணர்த்த வேண்டிச் சனகாதி முனிவர் நால்வர்க்கும் கல்லால மரத்தடியில் தென்பால் நோக்கி ஞான நிட்டையி லிருந்தபொழுது, அவன் தாபத்தைப் பொறுக்கமாட்டாத பிரமன் முதலிய தேவர்களால் திருமாலின் மானத புத்திரனாகிய கருவேளாகிய மன்மதன், சிவபிரானிடம் அனுப்பப்பட்டனன். அவன் கைலையம் பருப்பதத்தை யடுத்து யோகத்திலிருக்கும் சிவபெருமான்மீது பஞ்ச மலர்ப்பாணங்களையும் செலுத்தினான். செலுத்தவே, யோகங் கலைவுற்ற சிவன் கோபத்தோடும் பார்த்தனன். நெற்றிக்கண்ணாற் பார்க்கப்பட்ட மதன் சாம்பரானான். பின் இரதியின் வேண்டுகோட்படி இரதிக்கு மட்டும் உருவத்தோடிருக்க அருள் செய்யப்பட்டனன்; மற்றவர் பார்க்க முடியாத வடிவினனாதலால் அநங்கன் என்று அழைக்கப்படலானான்.

கடுவுண்ட கண்டர்

தேவர்கள் நரை திரை யடையாதிருக்க, திருப்பாற்கடலினின்றும் அமுதம் கடைந்தெடுக்கும்பொழுது அதிற் றோன்றிய பல பொருள்களில் ஆலகாலவிடமும் ஒன்று. இதைக் கண்ட தேவர்கள் யாவரும் பதை பதைத்து இறந்துவிடுவோமென் றஞ்சி, திருக்கயிலையி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்தார்கள். தஞ்சம் புகுந்தவர்க்கு அஞ்சல் அளித்து, ஆலாலசுந்தரரை அனுப்பி அவ்விடத்தை யெடுத்துவரச் செய்து தம் வாய்க்குட் போடுவாராயினர். பக்கமிருந்த பார்வதி தேவியார் பகிரண்டத்தைப் பாதுகாக்க உட்கொள்ளப்படும் நஞ்சு அந்தரண்டங்களை அழித்துவிட லாகாதே என்று உடன் கண்டத்தை இறுகப் பிடித்தனர். பிடித்த அளவில் அக் கடு உட்செல்லாது அக் கண்டத்தளவே நின்றது. நின்றவிடம் காளகண்டம், கறைக்கண்டம், நீலகண்டம் என்று யாவராலும் போற்றும்படி விளங்கியது.

சிவபிரான் பிட்சாடனமூர்த்தி யானமை

தாருகாவன வாசிகளாகிய முனிவர்கள் தங்கள் தவ மகிமையினால் செருக்குற்றிருந்தமையை அறிந்த பரமசிவன், அவர்களது

தபோபலத்துக்குக்காரணம் அவர்கள் பத்தினிமார்களின் கற்பென்று அறிந்து, அதை யறியவேண்டிக் கங்காளநாதராகப் புறப்பட்டு அவர்தம் ஆச்சிரமங்களிற்போய்ப் பிச்சையெடுப்பாராயினர். சிவபெருமானைக் கண்ட பத்தினிமாரெல்லாம் தம்மை மறந்து மையலடைவாராயினர்.

அரிச்சந்திரன் வாய்மை

விசுவாமித்திரன் முதலில் அரிச்சந்திரனிடத்தில் வந்து யாகத்திற்காகச் சில பொருளை யாசித்து வாங்கி அதை அரிச்சந்திரனிடத்தேயே கொடுத்துப்போயிருந்தான். வசிட்டருடன் தாம் கொண்டிருந்த சபதத்தை முடிக்கும்பொருட்டு நாட்டியப் பெண்களை அனுப்பி அரிச்சந்திரனிடத்துக் கடைசியாய் அரசுரிமையைப் பெற்றுக்கொண்டபொழுது, அரசன் தன் குழுவோடு காட்டுக்குப் போகும்போது மறித்துக்கொண்டு, தாம் முன் அடைக்கலமாகவைத்த பொருளையும் தந்து போகக் கட்டாயப்படுத்த, அதன்பொருட்டு அரிச்சந்திரன், மனைவியாளாகிய சந்திரமதியையும் மகனாகிய தேவதாசனையும் விலைப்படுத்தித் தானும் விலைப்பட்டும் சுடலைக் காத்தும் இன்னோரன்ன துன்பங்களை வாய்மையின் பொருட்டே அனுபவித்தானென்பது.

இந்திரன் வேடனாகியது

அத்திரிமுனிவர் குமாரர் துருவாச முனிவர், ஒருகால், சிவார்ச்சனை செய்துவிட்டு வரும்போது இந்திரன் ஐராவதத்தின்மீது அமர்ந்து பவனி வருவதுகண்டு அவனிடம் தம் கையிலிருந்த மாலையைக் கொடுத்தனர். அவன் அம் மலர்மாலையைப்பேணாது தன் யானை மத்தகத்தின் மேல்வைக்க, அது கீழே தள்ளித் தன் காலால் மிதித்தழித்தது. இதனைக் கண்டு பொறாத துருவாசர் சினந்து, "சேட்டானை வானவரின் சென்னி செழியரிலோர், வாட்டானை வீரன் வளையாற் சிதறுகவின், கோட்டான நாற்கோட்ட வெண்ணிறத்த குஞ்சரமும், காட்டானையாக" எனக் கடுஞ்சாபமிட்டார். இதன்படியே இந்திரன் வேடனாகித் திரிந்து மதுரையடைந்து சிவலிங்க பூசை செய்து தன் வடிவ மடைந்தனன்.

இந்திரன் முடிமேல் வளை யெறிந்தது

பாண்டிய நாட்டிலும் அயல்நாடுகளிலும் மழைப்பெயல் இல்லாதுபோகச் சேர சோழ பாண்டியர் மூவரும் தேவலோகஞ் சென்று இந்திரனை வணங்க, மற்றிருவருக்கும் மழைவர ஈந்து பாண்டியனை மதியாது இகழ்ந்து அனுப்பிவிட்டான். பாண்டியன் மேகங்களைப் பிடித்துக் கட்டிச் சிறையிட, இந்திரன் பாண்டியனோடு போருக்கெழுந்து பொருதபோது பாண்டியன் வளையைவிட்டு இந்திரன் முடியைத் தகர்த்துவிட்டான். அவ்வளவில் இந்திரன் அடங்கிச் சமாதானங் கேட்க, பாண்டியன் மறுத்தான். வேளாளர் தாம் பிணையாகி மேகங்களைச் சிறைவிடுத்தார்கள்.

வடகோடு தென்கோடு சமமானது

சிவபெருமான் இமயமலையரசன் மகள் பார்வதியை இமயமலையில் மணம்புரிய விருந்தபொழுது, முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மற்றுமுள்ள தேவகணங்களும் அவ்விடத்துக்குத் திருக்கலியாணங் கண்டுகளிக்கப் போயிருந்தார்கள். அப்பொழுது, பூமியினது வடகோடு தாழ்ந்து தென்கோடுயர்ந்துவிட்டது. சிவபெருமான் வடமுனை தாழ்ந்து தென்முனை உயர்ந்திருப்பது தெரிந்து அகத்திய முனிவரைத் தென்திசைக்கு அனுப்பி உலகைச் சமநிலை யடையச் செய்தனர் என்பது.

விந்த மடக்கிய வரலாறு

அகத்தியர், தென்னாடு நோக்கிவருகையில் தேவர்களுடைய வேண்டுகோட்படி விந்தமலையின் வீறு குன்றும்படி நிலத்தில் அழுத்தினர் என்ப. இம்மலை தென்னிந்தியாவையும் வட இந்தியாவையும் பிரிக்கும் எல்லையாக வுள்ளது. மேருமலையோடு இகலி யுயர்ந்து ஆகாயம் அளாவிச் சூரிய சந்திரர் இயக்கத்தைத் தடுத்துவந்தது. இத்தடை நீக்கக் கருதியே தேவரும் வேண்டினர்.

இந்திரன் ஆயிரங்கண்ணன் ஆனது

ஒருகால் வானவர்கோனாகிய இந்திரன் கௌதம முனிவர் பத்தினியாகிய அகலிகையை இச்சித்து அவளைக் கரவிற் புணர்ந்து, அம்முனிவர் சாபத்தால் உடல் முழுதும் பெண்குறி யடையப்பெற்ற

னன். தன்னங்கமெங்கும் பங்கமான குறிகண்ட வாசவன் தேவர் முன்னிற்க நாணினன். தேவர்கள் இந்திரன் பொருட்டுக் கௌதம முனிவரை யண்மி இந்திரன் பிழைகளைப் பொறுத்துச் சாபவிடை தருமாறு வேண்டினர். இவ்வேண்டுகோட் கிணங்கிய முனிவர் அக் குறிகள் இந்திரனொழிந்த ஏனையோர் கண்களுக்குக் கண்களாகவே விளங்குமென்று அருள்பாலித்தார். இதனால் இந்திரன் ஆயிரங் கண்ணன் என்ற பெயர் பெறுவானாயினன்.

மலைச் சிற கரிந்தமை

முற்காலத்தில் மலைகள் சிறகுகள் உடையனவா யிருந்து ஓரிடத்தினின்று மற்றோரிடத்திற்குக் காலா காலத்திற் பறந்து செல்வனவாய் உலகினர்க்குத் துன்பு செய்து வந்தன. இந்திரன், தேவர் மானுடர் வேண்டுகோட்கிணங்கித் தன் வச்சிராயுதத்தால் மால் வரைகளைச் சிறகரிந்தான். இதனால் இவன் கோத்திரபித்து என்னும் காரணப் பெயர் பெற்றனன். இந்திரன் கைக்குத் தப்பிய மைநாக பருவதம் ஒன்றே கடலுள் மறைந்தது.

உஷையின் தோழி சித்திரரேகை

சித்திரரேகை வாணாசுரன் மந்திரியாகிய கவந்தன் புத்திரி. சித்திரமெழுதுவதில் வல்லவள். இவளே அநிருத்தன் படமெழுதி, வாணாசுரன் மகள் உஷையினிடம் காட்டி, உஷை அநிருத்தனை மஞ்சத்துடன் வருவித்து இன்ப நுகர்வித்தவள்.

யாத்திரைக்காரர் சோறு பொங்கியது

ஒன்றாய்ச் சோறு பொங்க எண்ணின சில யாத்திரைக்காரரில் ஒருவன் மற்றவர் உலையில் பெய்த அரிசியோடு தன் பங்குக்கு மணலையிட்டு விட்டால் யாரும் அறிவதற் கிடமின்றித் தன் பங்குக்குள்ள சோறு செலவில்லாமல் கிடைக்கு மென்று நினைத்து, மணலைச் சோறு அடும் பாத்திரத்தில் சொரிய, அப்படியே யாவரும் தனித்தனி எண்ணி நடத்தினார்கள் என்பது ஒரு கதை.

கசேந்திரன் வரலாறு

இந்திரத் துய்மனன் என்னும் பாண்டியன் அகத்திய முனிவரைக் கண்டு பணியாதிருந்தமையின் அவர் சினந்து 'யானையாக்க'

எனச் சபிக்க, அங்ஙனமே யானையாகித் தன் இயற்கையான விஷ்ணு பக்தியோடு யானைகட்கு அரசாய் அனேக பெண் யானைகளோடு (சலக்கிரீடை) நீர் விளையாட்டுச் செய்துகொண்டிருக்கையில், சாபத்தால் முதலை வடிவேற்றிருந்த ஊகூ என்னும் கந்தருவன் யானையின் காலைப் பற்றி இழுக்க, அனேக காலம் இரண்டும் போர்புரிந்து யானை சகிக்கமுடியாது 'ஆதிமூலமே' என்று கூவ, திருமால் ஆண்டு எய்திச் சக்கரத்தால் முதலையைச் சங்கரித்துக் காத்தனர்.

துரோபதை வரலாறு

திருதராட்டிரன் புத்திரரில் ஒருவனான துர்ச்சாதனன் பாஞ்சாலியாகிய துரோபதையின் கூந்தலைப்பிடித்திழுத்துச் சென்று துரியோதனன் சபையில் பாண்டவர்கள் முன்னிலையில் அவள் ஆடையை யுரிந்து மானபங்கஞ் செய்ய முற்பட்டனன்; அவள் கண்ணனைப் பிரார்த்தித்து ஆடை வளரப் பெற்றதனாற் பல சேலைகள் ஒன்றன் பின்னொன்றாக வரக்கண்டு அஞ்சி விடுத்தகன்றான்.

மார்க்கண்டேயர் வரலாறு

மிருகண்டு முனிவர் புத்திரராகிய இவர் தமக்கு வயது பதினாறென்ப துணர்ந்து நாடோறும் சிவார்ச்சனை செய்து வரும்போது அவ்வயதில் தம்மைப் பற்றும்படி யமபடர் வரத் தாம் அர்ச்சித்து வந்த சிவலிங்கப்பெருமானை இறுகத் தழுவிக்கொள்ளச், சிவபிரான் அவ் இலிங்கத்தினின்றும் புறம் போந்து எமனை உதைத்து வீழ்த்தி இவருக்குத் தீர்க்காயுள் அளித்தனர். இவர் எழு சிரஞ்சீவிகளுள் ஒருவர்.

பின்னிணைப்பு

பக்கம் வரி

௧௧ 140-43 'தாயே வந்துபார் நீயே வளர்த்த
முல்லையும் நறுமுகை முகிழ்த்தது-வல்லை
காதலிற் கவிழ்வை போலும்!
போதுநீத் தெம்மனை புகுந்தநற் றிருவே!'

சகுந்தலை அங்கம் I

சகுந்தலை:—பருவமல்லாத பருவத்திலும் இக் குருக்கத்தி (மாதவி)க் கொடி அடிமுதல் நுனிவரை இனிய பூக்கள் பூத்து அழகாயிருக்கின்றதே!

(இருவரும் அக்கொடியை விரைந்து நெருங்கி) அன்பான தோழீ, உண்மையாக அப்படித்தானா?

சகுந்தலை:—அப்படித்தான். நீயும் கவனித்துப் பார்.

பிரியம்வதை:—(ஆத்திரத்துடன்) சகுந்தலா! இந்த நற்குறியால் உன்னைத் தக்க வரன் விரைவில் கைக்கொள்வான் என்று கூற விழைகின்றேன்.

௧அ 39-ஆம் வரிக்குப் பின்வரும்

'கொல்லா யெனப்பகைஞர் கோற்றேடியார் கும்பிட்டுப்
பல்லிளிக்கக் கண்சிவக்கும் பார்த்திபனே—பொல்லா
வெறும் எலும்பை நாய்களவும் வேலைநீ செல்ல
உறுமுவதென் நீயே உரை'

என்ற நேரிசை வெண்பாவுக்கு நூலாசிரியரவர்கள் தந்த ஆங்கிலக் குறிப்பு:—

" Exacty as the silly dog, engaged complacently in crunching a dry and useless bone, snarls with suspicious jealously at the aproach of a crowned Sovereign like yourself who could not have the least intention of contending for it, so does ambitious Kudila feel jealous of the Muni's influence with you, suspecting it may be used for depriving Kudila of his power or possession and turning them to his own account, forgetting that all his worldly pomp & power must appear to the Muni even worse

than a dry marrowless bone to a king. It is to be seen than that நீ refers to the King in its primary sense and to Sundara Munivar in its application when the dog must be taken as Kudila and the bone his power. Narayanan thus wishes to warn his master against the backbiting, of his minister. நீ refers to Jivaka in one sense."

உ0 95-ஆம் வரிக்குப் பின்வரும்

"மாற்றலர்தம் மங்கையர்க்கு மங்கலநா ணங்கவிழ
எற்றியநாண் விற்பூட்டும் எந்தலே—சோற்றதற்காய்த்
தன்மகவை விற்றஅரிச் சந்திரனும் உன் அவையில்
என்மகிமை உள்ளான் இனி"

என்னும் வெண்பாவில் 'சோற்றதற்கா' என்னும் தனிச்சொல் சகடனைக் குறிக்குங்கால் சோற்றுக்காக என அவனது பொருளாசையையும், அரிச்சந்திரனைக் குறிக்குங்கால் 'சொற்றதற்கா' என்பதன் நீட்டல் விகாரமாய் அவனது தவறு மொழியையும் சுட்டிநிற்கின்றது.

இவ் வெண்பாவுக்கு ஆசிரியரவர்கள் தந்த ஆங்கில உரைக் குறிப்பு:—

"The meaning of சோற்றதற்கா:—In the case of Harichandra, it is சொற்றதற்கா; that is, for the word he pledged to the முனி (Viswamitra) he gave up his worldly enjoyments to the extent of surrendering his child. In the case of சகடன், it is 'சொற்றதற்கா'; that is, for the sake of சோறு. சகடன் is preparing himself for similar sacrifices. So says Narayana, of course in allusion to the avarice which prompts him to give his lovely daughter in marriage to one she hates from the bottom of her heart.

Harichandra is introduced to expose the falsity of the plea raised by சகடன் that he would retire to Kasi in case he should fail to keep up his word, as if he were another Harichandra, with குடிலன் to whose son really through ambition he wishes to wed his daughter."